2415





சிந்திக்கத் தூண்டும்

# ஜேர்மனிய கலாச்சாரம்

க. பாக்கியநாதன், B.A.
திருமதி. ஜ. பாக்கியநாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்கத்தூண்டிய ஜேர்மனிய கலாச்சாரம்

# German Culture – A Source of Inspiration

பொது சன நூலக
நல்லூர் பிரதேச
கொக்குவில்.
2415

ஜேர்மனிய, இலங்கை மக்களின்
வாழ்க்கை முறை பற்றிய
ஒரு ஆய்வுக்கண்ணோட்டம்.

ஆசிரியர்கள்:

சு. பாக்கியநாதன் B. A. (Geography)

திருமதி. வி. பாக்கியநாதன் B. A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title:- **German Culture**
**— A Source of Inspiration**

Authors: **S. Packiyanathan** B. A. (Geography)
**Mrs. V. Packiyanathan** B. A.

Publisher: **Mr. S. Packiyanathan** B. A. (Geography)
Untere Hirschgasse -3,
7157, Murrhardt - West Germany.

Size of the book: **Crown 1/8**

No of Pages: **236**

Price: **Rs. 20/-**

First edition: **January 1984**

Copyright Reserved.

Printed by: CHITRA ACHCHAKAM, JAFFNA, SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

**கலாநிதி கா. இந்திரபாலா**
*கலைப்பீடாதிபதி, யாழ் - பல்கலைக்கழகம்,*
இலங்கை

தமிழிலே பிரயாண வர்ணனை நூல்களும் பிறநாட்டு அனுபவங்களைக் கூறும் நூல்களும் குறைவாகவே இருக்கின்றன. ஆனால் உலகத்தின் மூலைமுடுக்குகளுக்கெல்லாம் முன்னொரு போதும் இல்லாத வகையில் தமிழர்கள், குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள் இன்று செல்கின்றார்கள். இப்படிச் செல்பவர்கள் பலதரப்பட்ட அனுபவங்களைப் பெறுகிறார்கள். இந்த அனுபவங்களுள் ஒரு சிலவாவது தமிழில் நூல் வடிவைப் பெற்றால் தமிழ்ப் பிரயாண இலக்கியம் வளர்வதுடன், எத்தனையோ இளைஞர்கள் அத்தகைய நூல்களாலே பயனடையவும் முடியும். எங்கள் மாணவர் திரு. சு. பாக்கியநாதனும் அவரது பாரியாரும் எழுதியுள்ள ஜெர்மனி பற்றிய இந்நூல் மேற்கூறிய நோக்கங்களுக்கமைய எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது. இது பாராட்டத்தக்கது,

பட்டதாரியாகிய பின் ஜெர்மனிக்குச் சென்ற திரு. பாக்கியநாதன், பிற நம்நாட்டு இளைஞர்களைப் போலல்லாது, தான் பெற்ற அனுபவங்களை நல்ல முறையிலே பிறர் அறிய வைப்பதற்கு இந்நூலைப் படைத்துள்ளார். இரண்டாவது மகாயுத்த காலத்தில் உலகம் காணாத கொடூரங்கள் இடம் பெற்ற நாடாகப் பலராலும் அறியப்பட்ட ஜெர்மனி, விமானத்திலிருந்து போடப்பட்ட பல்லாயிரக் கணக்கான குண்டுகளால் தரைமட்டமாக்கப்பட்ட ஜேர்மனி, இன்று புதிய ஒரு நாடாக மாறி நிற்கின்றது, 1964 இல் அங்கு பல நகரங்களுக்கு நான் சென்றிருந்த போது, மகாயுத்தத்தின் கோர நினைவுகள் மாறாதிருந்தன. ஆனால் இன்று ஒரு புதிய தலைமுறை தோன்றி அந்த நாட்டை அனைவரும் விரும்பி நாடும் இடமாக மாற்றியிருப்பது மகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ழ்ச்சிக்குரியது. அத்தகைய நாட்டிலிருந்து நாம் படித்துக் கொள்ளக் கூடியவை எவை, தள்ளிவிட வேண்டியவை எவை என்பதைத் தமது மதிப்பீட்டின் அடிப்படையில் திரு. பாக்கியநாதனும் அவரது மனைவியாரும் கொடுத்துள்ளார்கள். இவற்றை எல்லாம் வாசித்தறிந்து நம்மவர் பயனடைவார்கள் என எண்ணுகிறேன். மேலும் சில ஆண்டுகள் ஜெர்மனியில் அனுபவம் பெற்று இந்நூலை விரித்து, மறு பரிசீலனை செய்து ஆசிரியர்கள் எழுதுவார்கள் என எதிர்பார்க்கின்றேன். அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

14-2-1984 கா. இந்திரபாலா

பொது சன நூலகம்
கொக்குவில்.
பதிவு எண் 6229
வகுப்பு எண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FORE WORD

It was in 1981 when I first met SUBRAMANIAM PAKIANATHAN in my home - town, Murrhardt. He was searching for help to learn the German language and he was eager, either, to get more information of the country he has been staying at and which is in so many regards different from his home - country Sri - Lanka.

He immediately asked me if I could help him to understand Germany and the German people. During the following months we met rather regularly every week and talked and discussed life in Germany, and we became friends in that time. Pakianathan's intelligent questioning was a great help for me, either, because it forced me to reflect our daily life more precisely and more objectively than I might have done before. So I hope that my explanations about Germany could help to get a real good impression of my country although they never coulp bo free from my own personal opinions. It was my special intention to make clear that industrial civilization doesn't only have advantages but often has to be payed with a lack of sociol connections and with an alienation to nature, religion, tradition and even to the daily working.

Subramaniam Pakianathan took very great intreest in the different aspects of looking at the German people and I wish his book about his experiences in Germany to be very successful in giving all readers an objective and critical view of my home - country.

Detlef Neumann
Teacher at Welterichtchule
Murrhard in summer 1983
WEST GERMANY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஞ் சென்ற

யாழ். பல்கலைக்கழகப் புவியியற்றுறைப் பேராசிரியர்

# சோ. செல்வநாயகம் அவர்களுக்கு

இந்நூல்

# சமர்ப்பணம்

யாழ். பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் (1976 — 1979), எமது வழிகாட்டியாகவும் இருந்து சாவகச்சேரிப் பிரதேசத்தில் ஒரு புவியியல் ஆய்வினைச் செய்துகொண்டிருக்கும் போது, எதிர்பாராது காலன் வசம் சிக்கிய அமரர், சோ. செல்வநாயகம் அவர்களை எம்மால் என்றும் மறக்க முடியாது. பேராசிரியரின் திடீர் மறைவு யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு மட்டுமல்ல, அகில இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பெரியதொரு இழப்பாகும். அன்னார் எம்மை விட்டு நீங்கிச் சென்ற போதும், அவரது மாணவர் நினைவுகளில் இன்றும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இளம் பராயத்திலேயே தனது இவ்வுலக வாழ்வை முடித்து, எமையெல்லாம் கண்ணீர் வெள்ளத்தில் ஆழ்த்திச் சென்றுவிட்ட பேராசிரியர் அவர்களுக்கு இந்நூலைச் சமர்ப்பிப்பதில் ஆறுதல் பெறுகின்றோம்.

ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர். சோ. செல்வநாயகம்

B. A. Hons. (Cey.), M. A., Ph. D. (Lond.), F. R. G. S.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமதுரை

உலக நாடுகளை நோக்கும்போது பண்டுதொட்டு இன்று வரை பல்வேறு வகையான கலாச்சாரங்களை நாம் இனங் காணக்கூடியதாயுள்ளது. அடிப்படையில் இவை அந்தந்த நாடுகளின் புவியியல் காரணிகளினால், குறிப்பாகத் தரைத் தோற்றம், காலநிலை என்பவற்றினால் நிர்ணயிக்கப்பட்டன; நிர்ணயிக்கப்படுகின்றன. இவற்றோடு அரசியல், பொருளா தார வரலாற்றுச் சூழ்நிலைகளும் கலாச்சாரங்களை நிர்ணயிப் பதில் செல்வாக்குச் செலுத்தி வந்திருக்கின்றன. இன்றும் செலுத்தி வருகின்றன. இந்த வகையிலேயே மேற்கு ஐரோப் பிய நாடுகளில் ஒன்றான ஜேர்மனியின் கலாச்சாரமும் அமைந்துள்ளது. சகல துறைகளிலும் அபிவிருத்தியும் செல் வச் செழிப்பும் பொருந்திய முதலாளித்துவ நாடுகளில் ஒன்றாகிய ஜேர்மனியின் கலாச்சாரம் பற்றிப் பல நூல்களைப் படித்து நாம் அறிந்திருக்கிறோம், ஆயினும் அந்நாட்டுக்கு நேரடியாகச் சென்று அந்நாட்டின் கலாச்சாரம் பற்றி நேரடி யாக அறியக்கூடிய ஒரு வாய்ப்பும் எமக்குக் கிட்டியது. அந் தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒரு சிறு ஆய்வினை மேற் கொண்டு அதனை ஒரு கட்டுரை வடிவில் அமைக்கத் துணிந் தோம்.

சிந்திக்கத் தூண்டிய ஜேர்மனிய கலாச்சாரம் எனும் இக் கட்டுரை ஒரு ஆய்வு ரீதியில் அமைந்துள்ளது. இக்கட்டுரைக் கான தரவுகள், விபரங்கள், தகவல்கள், குறிப்புக்கள் என் பன ஒழுங்கான முறையில் பெறப்பட்டுத் தகுந்த முறையில் தொகுக்கப்பட்டுப் புத்தக வடிவில் வாசகர்களாகிய உங்கள் முன் வைக்கப்படுகிறது. உண்மையில், பழமைவாய்ந்த எமது கலாச்சாரத்தின் கண்மூடித்தனமான சில போக்குகள் எந்த அளவுக்கு நமது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளன என்ற எமது சிந்தனையின் வெளிப்பாடே இக்கட்டுரையாகும்.

உலகப் போரினால் ஏற்பட்ட பேரழிவு, ஜேர்மனியின் செழிப்பை மிகவும் பாதித்தது. அரசியல், பொருளாதார,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டு நிலைமைகள், குறிப்பிட்ட ஒரு அந்தஸ்தினை இழந்து குழப்ப நிலையில் இருந்ததை வரலாறு நன்கு எடுத்துக் கூறுகின்றது. அவ்வாறான ஒரு சீர்கெட்ட நிலையில் இருந்த ஜேர்மனி போருக்குப் பின்னர் மிகவும் குறுகிய காலத்தில் வியக்கத்தகுந்த முறையில் வளர்ச்சியடைந்து, இன்று முன்னணியில் நிற்கின்றது. இத்தகைய விரைவான ஒரு வளர்ச்சியே எம்மை இந்தளவுக்குச் சிந்திக்கத் தூண்டி விட்டது. அத்தகைய தூண்டுதலின் வெளிப்பாடாகவே இக் கட்டுரை அமைகிறது.

ஜேர்மனி என்று நாம் பொதுவாக குறிப்பிட்டபோதும் இங்கு, அது மேற்கு ஜேர்மனியையே குறிக்கின்றது. இக் கட்டுரையின் மூன்றாவது அத்தியாயத்தில் மேலைத்தேயக் கலாச்சாரம் கீழைத்தேயக் கலாச்சாரத்துடன் ஒப்பிடப்படுகிறது. இங்கு மேலைத்தேயம் என்பது மேற்கு ஜேர்மனியைக் குறிக்கின்றது. கீழைத்தேயம் என்பது பொதுவாக இலங்கை, இந்தியா போன்ற ஆசிய நாடுகளைக் கருதினாலும் குறிப்பாக இலங்கையையே அது குறிக்கின்றது.

கலாச்சாரம் பற்றி அறியவும், ஒப்பீடு செய்யவும், ஜேர்மனியை ஏன் தேர்ந்தெடுத்தோம் என்று சிலர் அபிப்பிராயப்படலாம். அதற்கான விடை நாம் முன்னர் கூறியது போல ஜேர்மன் கலாச்சாரத்தை நேரடியாகப் பார்த்தும் கேட்டும் அறியக்கூடிய சிறிய வாய்ப்பு எமக்கு இருந்தமை என்பதுதான். ஜேர்மன் நாட்டின் கலாச்சாரத்தை எமது நாட்டுக் கலாச்சாரத்துடன் ஒப்பிட்டு அவற்றின் வேறுபட்ட போக்குகளை அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பும் இதனால் எமக்கு ஏற்பட்டது. இவ்வாறு நாம் அறிந்தவற்றை மற்றவர்களுக்கும் தக்க முறையில் உணரவைத்து, நமது கலாச்சாரம் ஏன் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாக உள்ளது, எந்தளவுக்கு அதை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும், என்ற வகையில் ஒரு விழிப்புணர்ச்சியை ஓரளவுக்கேனும் தோற்றுவிக்க வேண்டும் என்பதுதான் இச்சிறு ஆய்வின் நோக்கமாகும். எமது கலாச்சாரம் பண்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறிக்கொண்டு எம்மால் கடைப்பிடிக்கப்படும் கண் மூடித் தனமான மூடக் கொள்கைகளைக் கைவிட்டு மேலை நாட்டுக் கலாச்சாரத்தின் சிறப்பான அம்சங்களை நாம் கடைப்பிடிப்பதன் மூலம் எமது சமுதாயத்தில் காணப்படும் சில அடிப்படைக் குறைபாடுகள் தீர்க்கப்படலாம் என்பதை ஓரளவுக்கு எமது சமுதாய மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்ற எமது அடிப்படை விருப்பத்தின் பேரில் நாம் இந்நூலை ஆக்கினோம்.

சிந்திக்கத் தூண்டிய ஜேர்மனிய கலாச்சாரம் எனும் இக் கட்டுரையினை எழுதுவதற்கு வேண்டிய ஆய்வினை மேற் கொள்வதில் சில இடையூறுகள் ஏற்பட்ட போதும் நண்பர் கள் பலரின் உதவியுடன் அவ்விடையூறுகள் நீக்கப்பட்டன. தேவையான தரவுகளை மனமகிழ்ந்து உதவிய ஜேர்மனிய உயர் கல்லூரி ஆசிரியர் திரு. நொய்மன் (Mr. Neumenn) விசேடமாக இந்நூலின் ஆக்கத்திற்கு உதவியவர்களில் குறிப் பிடத் தக்கவராவர். மேலும் எமது முயற்சியினை திறம்படச் செய்து முடிக்க வேண்டும் என்ற விதத்தில் ஆலோசனை களும், ஊக்கமும் அளித்த எமது சகோதரர்கள், நண்பர் களின் உதவியையும் எம்மால் மறக்க முடியாது. ஒரு வரு டத்திற்குள் இவ்வாய்வினைச் செய்து முடித்து ஓரளவுக்கா வது எமது கருத்துக்களை நல்ல முறையில் வெளிப்படுத்தி யுள்ளோம் என நம்புகிறோம். இக் கட்டுரை உங்கள் சிந்த னைக்கு விருந்தாக அமைந்து அதன்வழி உங்களையும் சிந்திக் கத் தூண்டினால் அவற்றையே நாம் இக்கட்டுரை எழுதிய தன் பலாபலனைக் கருதிக் கொள்வோம். இறுதியாக எமது சிந்தனைகள் நூல் வடிவில் வெளிவர உதவி செய்த சகலருக் கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

Untere Hirschgasse - 3
7157, Murrhardt,
west Germany.
22-12-1983

இங்ஙனம்
ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AUTHORS NOTE

Looking at the countries of the world, we see that from ancient times, cultures had varied from country to country. Basically the geographical factors namely physical features and climate determine the culture of a country. Besides this, historical, political and ceonomic factors also have had their own influence in the culture of a particular country. The same factors had played an important role in moulding the culture of west Germany - one of the west European countries

We have already learnt from books about the Culture of the developed and prosperous capitalist country - west Germany we ere really fortunate in living in this country and observing for ourselves the cultural life of the Germans as a result of which we became interested in undertaking a study. The book titled "German culture - a source of inspiration" is a research study. This book has been presented to the readers after a thorough study of varied sources of information. This book has been really the outcome of our reflection which made us realise how the conservative and traditional false beliefs prevalent in our own society have hindered the progress of our Culture.

Destruction and devastation caused by the world wars affected the prosperity of Germany. History tells us clearly that Germany was brought to such a chaotic state as a result of which she lost her position politically and economically. But it is so surprising to note that she regained her status within a short period. Now she is one of the most developed countries in the world. The rapid progress made in developing the country kindled our thoughts to such an extent resulting in this piece of research study.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Even though, we generally speak of Germany, we refer in parti ular to west Germany, In the third chapter of this book, a comparative study of the western and Eastern culture has been attempted. western culture refers to that of west Germany. Eastern culture although refers to the south Asian countries like India and Sri Lanka - special emphasis is given to Sri Lanka. some may wonder why we have chosen west Germany for the comparative study of cultures. As we mentioned earlier, we were able to live with the Germans, study their culture and thereby make a comparative Study of our culture with that of west Germany. We were able to observe the differences betwen these two cultures.

The main objective of this study is to enlighten the readers about the fect how our own culture has been an obstacie to the progress of our society and how this drawback could be overcome we want to emphasise that we have to abandon our false beliefs and tradition and follow the best ideas of the western culture


We were able to overcome the initial difficulties in carrying out this research study, with the assistance of our friends particularly Mr. Neumann who helped us in every way. We believe that we have placed before you, meaningful ideas and we hope that these ideas would make you think.

Authsrs.

untere Hirschgasse - 3
7157 Murrharrat
WEST GERMANY.
23-23, 1983.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜேர்மனியின் எல்லைப் பிரதேசங்களும்
## முக்கிய நகரங்களும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாச்சாரமும் அதன் அம்சங்களும்

கலாச்சாரம் என்ருல் என்ன? என்பது பற்றிச் சரியான வரைவிலக்கணம் கொடுப்பது மிகவும் கடினம். பலர் பலவாருக அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். ஆனல் பெரும்பாலாேேரின் முடிவு மக்கள் தம் வாழ்க்கை நலன் கருதி, சமுதாய நலன் கருதிச் செய்யப்படும் தத்தம் சொந்த வாழ்க்கையின் அபிவிருத்தி நடவடிக்கை என்பதாகும். (Stage of Intel-lectual Development or Civilization) மேலும் கடந்துபோன கலாச்சாரத்தினைக் கொண்டே அக்காலத்து மக்களின் வாழக்கைநிலைகளை ஓரளவுக்கு அறிந்துகொள்ளமுடியும். அதேபோல நிகழ்கால கலாச்சாரத்தைக் கொண்டே எதிர்காலத்தில் மக்

கள் வாழ்க்கைத்தரம் எத்தகையது? என்பதனை அறிந்துகொள்ளமுடியும். மக்கள் வாழ்க்கையுடனே சம்பந்தப்பட்டதால் கலாச்சாரம் என்றும் சமுதாயத்தில் நன்மையையோ தீமையையோ ஏற்படுத்தியே தீரும் என்பதை மறுக்கமுடியாது. மேலும் ஒரு நாட்டுக் கலாச்சாரம் மற்றநாட்டுக் கலாச்சாரத்தினின்றும் பலவகைகளில் வேறுபட்டே காணப்படும். இது அவ்வப் பகுதியினதும் மக்களினதும் தன்மைகளைப் பொறுத்தது. எனவே ஒரு நாட்டுக் கலாச்சாரத்தை இன்னோர் நாடு அப்படியே பின்பற்றுவதோ, மற்ற நாடுகளிடம் திணிப்பதோ சிக்கலானதும் கடினமானதுமான காரியமெனலாம். மேலும் ஒரு சமுதாயம் மாற்றங்களை மனம்வைத்து ஏற்கவேண்டும். அதேவேளை வேண்டியவிடத்துச் சில மாற்றங்களைக் கடைப்பிடிக்கவும் தயாராக இருக்கவேண்டும். ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரை 15ம் நூற்றாண்டையடுத்த காலகட்டங்களில் ஐரோப்பியர் ஆட்சிசெய்தபோது அவர்தம் கலாச்சாரங்கள் சில எமது கலாச்சாரத்துக்குத் திணிக்கப்பட்டன, இவற்றை மக்கள் தாமாகவே ஏற்கவேண்டிய நிலையிலிருந்தனர். இன்னும் சிலர் முற்றாகவே விரும்பியேற்றனர். இதன் பிரதிபலனாக இன்றும் எம்நாட்டில் மேலைத்தேய கலாச்சாரம் எமது கலாச்சாரத்துடன் இணைந்து பிரிக்கமுடியாத நிலையில் பிணைந்துள்ளது எனலாம்.

பண்பாடு, கலாச்சாரம், பாரம்பரியம் என்பன ஏறக்குறைய ஒரு கருத்தினை வெளிப்படுத்தும் சொற்களாகும். ஒரு நாட்டினது கலாச்சாரத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் இன்னொரு நாட்டுக் கலாச்சாரத்துக்கும் நிறைய வேறுபாடு இருப்பதற்குக் காரணம் அந்தந்த நாட்டுப் பௌதிகப் புவியியல் நிலைமை, அரசியற் பொருளாதார, வரலாற்று நிலைமைகள் என்பனவாகும். எனவே ஒரு நாட்டினது கலாச்சாரத்தினைப்போல் இன்னோர் நாட்டுக் கலாச்சாரமும் அமைந்திருக்கும் என எதிர்பார்க்கமுடியாது. அத்துடன் அவ்வாறு மாற்றியமைக்கவும் முடியாது. ஒவ்வொரு மக்களும் தமது வசதிகருதி, தமது வாழ்க்கை இன்பம் கருதி, நாட்டு பௌதிக நிலைமை ஏனைய அரசியற் பொருளாதாரக் காரணிகளுக்கு இயைய தம்மை மாற்றிக்கொண்டும் சிலவேளைகளில் இக்காரணிகளைத் தமக்கு மாற்றியமைத்துக் கொண்டு ஏதோ ஒருசில ஒழுக்கமுறைகளை, நெறிமுறைகளை, நடவடிக்கைகளைத் தாமே ஏற்படுத்தி அவற்றை ஒரு கட்டுக்கோப்பாகக் கொண்டு ஒழுகி வரும் நிலைமையைக் கலாச்சாரம்என்று மேலெழுந்தவாரியாகக் கூறமுடியும். இக்கட்டுக் கோப்புகள் பரம்பரை பரம்பரையாக ஒரு மனிதன் கருவில் இருக்கும்போதே அவனை அறியாமலேயே ஒட்டிக் கொண்டு விடுகின்றன எனலாம். வழிவழியேவந்த பண்பாட்டு நடவடிக்கைகளாக சந்ததிக்குச் சந்ததி தொடர்ந்து நீடித்துவருகின்றன. இது காலதேச வர்த்தமானத்துக்கு ஏற்ப கொள்வன கொண்டு தள்ளுவன தள்ளி காலங்காலமாகப் பேணப்பட்டுவருகின்றது. வளர்ச்சியடைந்துவரும் விஞ்ஞான யுகத்திலே சிலநாடுகளைப் பொறுத்தவரையில் பழமையில் ஊறிப்போன, அர்த்தமற்ற கண்மூடித்தனமான செய்கைகள் என்பன தகர்த்தெறியப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றன. இதற்கு எமது நாடும் விதிவிலக்கல்ல வளர்ச்சிபெற்ற செல்வமிக்க நாடுகளில் அர்த்த மற்ற முறையில் பண்பாட்டைக் கடைப்பிடிக்கும் தன்மையையோ, என்னதான் அபிவிருத்தி ஏற்பட் டாலும் எமது பாரம்பரியத்தை நாம் கைவிடோம் என்ற நிலைமையையோ காணமுடியாது. அபி விருத்தி முறைக்கு, வாழ்க்கை வசதிக்கு, விஞ்ஞா னத்துடன் இணைந்த தமது வாழ்வுநெறிகளுக்கு எவையெவை சாதகமாக அமைகின்றனவோ அவற்றையே காலத்துக்கு ஏற்றமாதிரி கடைப்பிடிக் கின்றனர். இது காலப்போக்கில் அவர்களின் இரத்தத்துடன் ஊறி ஒரு கலாச்காரமாக உரு வெடுக்கின்றன. இதற்கு உதாரணமாக மேலைத் தேசத்தை குறிப்பாக ஜேர்மனியையே எடுத்துக் கொள்ளலாம். கலாச்சாரம் என்பது இறைவனால் தங்களுக்கு வழங்கப்பட்ட விதிமுறையல்ல. மனி தன் தானே ஏற்படுத்தி தானே அதற்கு மரியாதை கொடுத்து அதன்வழி ஒழுகிவருகிறவன். ஆதலால் கலாச்சாரத்துக்கு ஏற்றமாதிரி புதுப்புது அம்சங் களைச் சேர்த்துக்கொள்ளாமல் பழமையையே பேணி வரும் எமது சமுதாயத்தில் எவ்வாறு ஒரு புதிய அபி விருத்தியைக் காணமுடியும்? இது சிக்கலானதும் கேள்விக்குரியதுமான விடயமாகும். இதற்குத்தக்க முறையில் காலம்தான் பதில்சொல்லவேண்டும்.

கலாச்சாரம் என்றால் என்ன? என்பதுபற்றி பலர் பலவாறு அபிப்பிராயப் படலாம். இந்தஇடத் தில் கலாச்சாரம் என்றால் என்ன? என்பதுபற்றி ஒவ் வொருவரும் அவரவர் அறிவுக்கு எட்டியபடி அறிந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவைத்துள்ளனர் என்றே கூறலாம். எனவே கலாச்சாரம் என்பதன் பொருள் என்ன என்பது பற்றி அதிக விளக்கம் தேவையில்லை. மொழி, கல்விமுறைமை, கலையம்சங்கள், நடையுடைபாவனை பழக்க வழக்கம், கொண்டாட்ட நடவடிக்கைகள், சமயம், உணவுமுறை கருத்துத் தொடர்புச் சாதனங்கள், விளையாட்டு என்பன நாட்டுக்கு நாடு வேறுபட்டுக் காணப்படுகின்றன. இவை யாவற்றையும் ஒன்றுசேர்த்தே கலாச்சாரம் என்ற பெயரைச் சூட்டியுள்ளனர் ஆன்றோர். அதாவது சுருங்கச்சொல்லின் மேற்கூறப்பட்ட அம்சங்களே கலாச்சாரத்தின் பிரதான அம்சங்களாகும் இவை ஒன்றையொன்று பாதிப்பனவாய் அமைந்துள்ளன. எனவே நாம் ஜேர்மனியின் கலாச்சாரத்தில் கண்ணோட்டமிடும்போது இந்த முக்கிய அம்சங்களில் கவனம் செலுத்தியேயாகவேண்டும். அவ்வாறிருந்தாற்றான் ஓரளவு நாம் ஜேர்மன் கலாச்சாரம் என்னும் களஞ்சியத்திற்குள் புகுந்து ஆய்வினை நடத்தியுள்ளோம் என்பது புலப்படும். பொதுவாக எந்த ஒரு நாட்டு கலாச்சாரத்தினையும் நாம் நோக்குவோமாஞல் அந்நாட்டு பௌதிக பண்பாட்டு புவியியல் நிலைமையையும் கவனத்துக்கெடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் பௌதிக பண்பாட்டுப் புவியியல் அம்சம் ஒரு நாட்டைப் பலவிதத்திலும் பாதிக்கின்றது என்பதை எவரும் மறுக்கமுடியாது. எனவே கலாச்சாரத்திலும் பௌதிகப் புவியியல் நிலைமைகளின் செல்வாக்கு பாதிப்பை ஏற்படுத்தியே தீரும். பௌதிகப் புவியியல் நிலைமை என்னும்போது தரைதோற்றம் காலநிலை' என்பவற்

றைக் குறிக்கும். பண்பாட்டுப் புவியியல்நிலைமை என்னும்போது மனித நடவடிக்கைகள் பழக்கவழக் கங்கள் என்பவற்றைக் குறிக்கும். மேலும் பௌதி கப் புவியியலின் தன்மைக்கு ஏற்பவே ஒரு நாட்டுப் பொருளாதாரம்: மக்கள் நடவடிக்கைகள் என்பன அடங்கியுள்ளன. எனவே ஈண்டு ஜேர்மனியின் பௌதிகப் புவியியல் நிலைமையை ஓரளவுக்குத் தெரிந்திருந்தாற்றான் அது கலாச்சாரத்தை எந்த அளவுக்குப் பாதிக்கின்றது எனப் புரிந்துகொள்ள முடியும்.

பௌதிகப் புவியியலின் அம்சங்களான தரைத் தோற்றம், காலநிலை என்பனவற்றை முதலில் நோக்கின் முறையே தரையமைப்பு, மலைத்தொடர் பள்ளத்தாக்கு மேட்டுநிலங்கள் இவை மக்க ளின் நடவடிக்கைகளை மாற்றியமைக்க அது கலாச்சாரத்தையும் பாதிக்கிறது. அதேபோல் மழைவீழ்ச்சி, வெப்பம், பனிவீழ்ச்சி என்பனவற்றை உள்ளடக்கிய காலநிலையே பெரிதும் ஒரு நாட்டினது உயிரின தாவர வளர்ச்சிக்கும், அவற்றின் செயற் பாட்டிற்கும் முக்கிய காரணியாகஉள்ளன. மக்கள் நடவடிக்கையை இக்கால நிலையேநிர்ணயிக்கின்றன. அத்துடன் அந்நாட்டு கலாச்சாரத்தையும் இது பாதிக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். உதா ரணமாக குளிர்ப்பகுதிகளில் வாழும் மக்கள் குளி ரைத் தாங்கக்கூடிய உடைகளையும் இருப்பிடங்களை யும் உணவு முறைகளையும் கைக்கொள்ளுகின் றனர். அதேபோல் வரண்ட பாலைவனப்பகுதி களில் வாழும் மக்கள் வெப்பத்தைக் கடத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைகளையும் வீட்டு அமைப்பு முறைகளையும் கையாளுகின்றனர். இவ்வாருக ஒருநாட்டு பௌதிகப் புவியியல் நிலைமை ஒரு நாட்டுக் கலாச்சாரத்தைப் பாதிக்கின்றது என்பதை திட்டவட்டமாகக் கூறலாம். இதன் அடிப்படையிலேயே நாம் ஜேர்மனியின் பௌதிக பண்பாட்டுப் புவியியல் நிலைமைக்கேற்ப கலாச்சாரம் பாதிக்கப்படுகின்றது என்பதை நினைவிலிருத்திக்கொள்ளவேண்டும். பொதுவாக ஜேர்மனியினுடைய காலநிலையை நோக்கின் இங்கு நான்கு பருவகாலங்கள் உள்ளன. அவை யாவன.

| | | |
|---|---|---|
| வசந்தகாலம் | — Spring | — பங்குனி – வைகாசி |
| கோடைகாலம் | — Summer | — ஆனி — ஆவணி |
| இலையுதிர்காலம் | — Autumn | — புரட். ... கார்த். |
| மாரிகாலம் | — Winter | — கார்த். ... மாசி |

இவற்றுள் மாரி, கோடை என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இங்கு சராசரியாக மாரிகால வெப்பம் $0^{c}$ – $5^{c}$ கோடைகால வெப்பம் $10^{c}$ - $16^{c}$ ஆகும் இங்குள்ள மழைவீழ்ச்சி வருட சராசரியாக (1000 m. m.) 40 அங்குலமாகும். மேலும் இங்கு அதிக வெப்பம் கோடைகாலத்தில் உண்டு. இதனை மக்கள் தாங்கிக்கொள்ள மாட்டார்கள். மிக மெல்லிய ஆடைகளை அணிவர். இவர்களிடையே உள்ள முக்கிய பழக்கம் என்னவெனில் கோடைகாலத்தில் ஒருவித ஆடையணிகளும், மாரிகாலத்தில் இன்னோர் ஆடையணிகளும் அணிவர். கோடைகாலத்தில் பகற்பொழுது நீண்டு இராப்பொழுது குறுகிக் காணப்படும். சூரியன் மறைவதற்கு இரவு 9 மணி செல்லும். மாரிகாலத்தில் இராப்பொழுது நீண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகற்பொழுது குறுகிக்காணப்படும். சூரியன் 4 மணிக்கு அல்லது 5 மணிக்கு மறைந்துவிடும். இத்தகைய காலநிலையை அனுபவித்துவரும் இந்நாட்டு மக்கள் வெள்ளை நிறத்தவராக இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காலநிலையின் பாதிப்பால் பொருளாதார நிலைமைகள், தொழில்முறைகள் என்பனவும் மாற்றம் பெறுகின்றன என்பதைக் கூறத்தேவையில்லை. இவற்றோடு நவீன விஞ்ஞான வளர்ச்சி, தொழில் நுட்ப முன்னேற்றம் என்பன ஜேர்மனிய மக்களின் வாழ்க்கையில் முக்கிய பங்கெடுத்து மக்கள் பண்பாட்டு நடவடிக்கைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்திவருகிறது. அதாவது மக்களின் தேவையைப் பெருமளவு இயந்திரங்களே நிறைவேற்றிக் கொள்ளுகின்றன. இயந்திர யுகத்தை ஜேர்மனியிலேயே நேரடியாகக் காணக்கூடியதாகவுள்ளது. இந்த அமைப்பு மக்களுக்கு நேரத்தை மிச்சப்படுத்துவனவாயும் சுறுசுறுப்பை வழங்குவனவாயும் தத்தமது தேவையைத் தாமே நிறைவேற்றிக்கொள்ளக்கூடியதாகவும் அமைந்திருக்கின்றது இதனுல் வாழ்க்கைச் செலவு குறைவடைகிறது. மேலும்மக்களிடையே உள்ள தொடர்பு முறையும் குறைவாகவுள்ளது. ஒருவரில் ஒருவர் தங்கிவாழும் நிலைமையே இல்லை. இதனுல் ஒருவருக்கு இன்னொருவர் பாரமாமாக இருக்கும் பண்பு இங்கில்லை. தாம் விரும்பியபடி தமது வாழ்க்கையை மேற்கொள்ளும் பண்புதான் இவர்களின் வாழ்க்கையில் அமைந்துள்ளது. இதற்கு சேவைத்துறை. துணைத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்றுறைகளின் அபரிமித வளர்ச்சியே காரண மாகும்.

முதற்றுறை எனும்போது பாரிய கைத்தொழில் வளர்ச்சி, கைத்தொழில் நிலையங்கள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் குறிப்பிடத்தக்கவை. வங்கிகள் பாடசாலைகள், தபாற் கந்தோர்கள், கடைகள், வயோதிபர் விடுதி, வைத்திய வசதி, போக்கு வரத்து வசதி என்பன சேவைத்துறைகளாகும். நவீன விவசாயம், பயிர்செய்கை, மீன்பிடி, மந்தை வளர்ப்பு, குடிசைக் கைத்தொழில், மரம்வெட்டும் தொழில் என்பன துணைத் துறைகளாகும். இவை யாவும் ஜேர்மன் கலாச்சாரத்தில் ஆதிக்கத்தைச் செலுத்துகின்றன. அவற்றை விரிவாக நோக்குவது எமது அறிவுக்கும் ஆற்றலுக்கும் எட்டக்கூடிய விட யமல்ல. இருந்தும் கலாச்சாரத்தில் இவை தமது பங்களிப்பினைச் செய்கின்றன என்பது ஓரளவுக்கு இக்கட்டுரையில் கூறப்பட்டிருக்கின்றது,

மேலும் எமது கலாச்சாரத்துடன் இவற்றை ஓரளவுக்கு ஒப்பிட்டு எவ்வளவு தூரம் நாம் பின் னுக்கு நிற்கின்றோம் என்பதையும் இனங்கண்டு கொள்ளவேண்டும். தனியே ஒரு நடவடிக்கை யையோ, ஏதாவது ஒரு பொருளையோ நோக்கினால் அதன் உண்மையான உள்ளார்ந்தமான தன்மையை அறிந்துகொள்ள முடியாது. இன்னொன்றுடன் ஒப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடும்போதுதான் அறியலாம், அதேபோல் இங்கு எமது கலாச்சாரத்தை ஜேர்மன் கலாச்சாரத்துடன் ஓரளவுக்கு ஒப்பிட்டு நோக்குவது ஈண்டு மிகப் பொருத்தமானதும், பயன்மிக்கதுமான விடயம் என்றே சொல்லவேண்டும். ஜேர்மனிய மக்களின் வாழ்க்கை முறை, நடவடிக்கைகள் என்பன எந்தளவுக்கு அபிவிருத்தி யடைந்திருக்கின்றனவோ அந்தளவுக்கு அவர்களது கலாச்சாரமும் வளர்ந்துள்ளது என்று கூறமுடியும். இதுபற்றி மக்கள் நடவடிக்கைகளும் அவற்றில் கலாச்சாரத்தின் தாக்கமும் என்ற தலைப்பில் சிறிது நோக்குவோம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் நடவடிக்கைகளும் அவற்றில் கலாச்சாரத்தின் தாக்கமும்

இன்றைய உலகில் மனிதன் ஒவ்வொருவனும் தனது வாழ்க்கை வசதி கருதி சூழலைத் தனக்கு இயைய மாற்றிக்கொள்கின்றான். முன்னைய காலங்களில் மனிதன் இயற்கைச் சூழலுக்கு அடிமையாகித் தனது வாழ்க்கையை அமைத்துக்கொண்டான். சகல தேவைகளையும் பூரணமாகப் பெற்று வாழ விரும்பும் மனிதன் தனக்குச் சாதகமான முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றான். மேலும் துரித வளர்ச்சி பெற்றுவரும் இன்றைய காலகட்டத்தில் அவனது தேவைகளும் நடவடிக்கைகளும் வித்தியாசமானதாகவும் முன்னேற்றகரமானதாகவும் இருக்கின்றன என்பதை நேரடியாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியக்கூடியதாக இருக்கின்றது. இதே ரீதியில் ஜேர்மனிய மக்களது நடவடிக்கைகளை நாம் நோக்கினல் அவர்களது வாழ்க்கைத் தரத்தையும் அதன் வழியே அவர்களது கலாச்சாரத் தன்மைகளையும் அறிந்துகொள்ளமுடியும்.

ஐரோப்பாக் கண்டத்திலே சிறப்பான ஒரு அமைவிடத்தில் ஜேர்மனி அமைந்திருப்பது அதன் வளத்துக்கு ஒரு காரணி எனலாம். ஜேர்மனி தனது எல்லையாக வடக்கே வடகடல், டென்மார்க், பால்டிக், கடலையும், கிழக்கேபோலந்து, செக்கோசிலாவாக்கியா நாடுகளையும், மேற்கே பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பேக் நாடுகளையும், தெற்கே ஒஸ்திரியா, சுவிற்சலாந்து நாடுகளையும் கொண்ட இயற்கைவளம் நிரம்பிய ஒரு பூமி எனலாம். ஜேர்மனியின் தலைநகராக பொன் அமைந்துள்ளது. இது மத்தியில் அமைந்துள்ளதால் இங்கு சிறப்பிற்குக் காரணம் எனலாம், ஜேர்மனி பதினெரு நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (அவை தற்போதைய வசதி கருதி ஜேர்மனிய மொழியிலேயே குறிப்பிடப்பட்டுள்ளதை அவதானிக்கவேண்டும்.) அவையாவன Scleswig, Holstein, Hamburg, Bremen, Niedersachsen, Berlin, Norddrhein, West Falen, Hessen, Rheinlandpfalz, Saarland, Baden, Wurttemberg, Bayern என்பனவாம். சுதேசிகள் மட்டுமன்றி வெளிநாட்டவர்களும் இங்கு வாழ்கின்றனர். விஷேசமாக உலகப் போரின்போது ஜேர்மனியில் கணக்கிடமுடியாத உயிர்ச் சேதங்களும் பொருட்சேதங்களும் ஏற்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன. மேலும் ஜேர்மனியைப் பழைய நிலைக்கு சீர் திருத்த நிலைக்குக் கொண்டுவர எஞ்சியுள்ள ஜேர் மன் மக்களால் இயலாமற்போகவே வெளிநாட்டவ ரின் வரவை ஜேர்மனி எதிர்பார்த்தது. இதைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு பல நாட்டினர் இங்கு வந்து குடியேறி ஜேர்மனியின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதே காலகட் டத்தில் ஜேர்மனி மக்களுக்குத் தொழிலுரிமையை வழங்கி அவர்களுக்குத் தற்காலிக குடியுரிமையையும் அளித்தது, இவர்களைவிட, காலம் செல்லச்செல்ல சிலருக்கு இவ்வுரிமை மறுக்கப்பட்டு தற்காலிக வேலைசெய்யும் அனுமதிமட்டும் வழங்கப்பட்டது. மேலும் ஏறக்குறைய 1970ம் ஆண்டுக் காலகட்டத் தின்பின் ஆசியாப் பகுதிகளிலிருந்து மக்கள் தொழில் வாய்ப்புக் கருதி ஜேர்மனிக்குப் பெருவாரி யாக இடம்பெயர்ந்தனர். குறிப்பாக சீன, ஜப் பான், இந்தியா, இலங்கை, வங்காளதேசம்போன்ற இடங்களிலிருந்து வந்து தற்காலிகக் குடிகளாகக் குடியேறியுள்ளனர். இவ்வாறாக ஜேர்மனி வேற்று நாட்டு மக்களைத் தன்னகத்தே கொண்டு தனது இயற்கைச் செழிப்பாலும் விஞ்ஞான அறிவாலும் குறிப்பிடக்கூடிய ஸ்திரமான அரசியலைப் பெற்றுத் தனது பொருளாதாரத்தையும் வளம்படுத்திக் கொண்டது. உலகநாடுகளின் கண்களைக் கவரும் வண்ணம் பொருளாதாரத் துறையில் வளர்ச்சி பெற்று அபிவிருத்தியடைந்த நாடுகள் என்ற பட்டி யலிற் சிறப்பான இடத்தைப் பேற்று இன்று நிமிர்ந்து நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகப் போரின்போது சமாதானத்தை உலகில் நிலைநாட்டுவதற்கென ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை இனிமேல் உலகப்போர் ஏற்படக் கூடாது என்றும் எந்தவேளையிலும் ஒருநாட்டுக்கு ஒரு பிரச்சினை ஏற்படும்போது அதிற் தலையிட்டுத் தீர்த்துவைக்க வேண்டுமென்றும் 53 நாடுகளைத் தனது அங்கத்துவ நாடுகளாகக் கொண்டதாக 1954ம் ஆண்டு அக்டோபர் 4ம் திகதி ஸ்தாபிக்கப் பட்டது. இதன் தலைமைக் காரியாலயம் நியூயோர்க் கில் அமைந்துள்ளது. அரசியற் தஞ்சம் கோரு வோர், வறுமைப் பிணியால் வாடுவோர் போன்ற நிலையை நிவர்த்திசெய்யும் பொருட்டு பலபிரிவுக ளாக U.N.O. செயற்படுகின்றது. இவ்வாறன நிலைமையில் ஜேர்மனியில் அரசியற் தஞ்சம் கோரிப் பலர் வந்தபோது ஜேர்மனி அவர்களுக்குப் புகலிடம் அளித்துச் சகல உதவிகளையும் செய்துவருகின்றது. இவ்வாறு அரசியற் தஞ்சம் கோரிப் புகலிடம்பெற் றுள்ள மக்கள் பலர், எனவே ஒட்டுமொத்தமாக கூறின் ஜேர்மனியில் இன்று பெருந்தொகையாக வெளிநாட்டவர் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இது காலம் செல்லச் செல்லப் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தலாம் என அரசு அச்சமடைந் துவருகின்றது.

ஜேர்மனியில் வாழும் வெளிநாட்டவர்களால் சனத்தொகைப் பாதிப்பு மட்டுமன்றி பல்வேறு மொழி, கலாச்சாரம், மதம் என்பன வந்துசேர்ந் தன. துருக்கி, இத்தாலி, யூகோசிலாவியா, ஒஸ் திரியா, ஸ்பெயின், போத்துக்கல் போன்ற நாடுகளி லிருந்து மக்கள் இங்கு குடியேறியதுடன் விவாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலப்புகளும் ஏற்பட்டன. 1980ம் ஆண்டுக் கணிப் பின்படி மேற்கு ஜேர்மனியில் உள்ள சனத்தொகை 61·439 மில்லியன் ஆகும். வெளிநாட்டவர்களில் துருக்கியரே இங்கு பெரும்பான்மையினராகக் காணப்படுகின்றனர். வெளிநாட்டார் யாவரும் இங்கு வேலைவாய்ப்புக் கருதியே இடம்பெயர்ந்தனர் துருக்கியைத் தவிர ஏனைய இந்நாடுகள் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவை. ஜேர்மனியும் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தமையால் மதரீதியில் அவ்வளவு தாக்கங்கள் ஏற்படவில்லை. ஆனல் துருக்கி இஸ்லாம் மதத்தைச் சார்ந்தமையால் அவர்களின் மதத்திற் கும் ஜேர்மனிய மதத்திற்கும் வேறுபாடுகள் இருந் தன. ஆனல் வேற்றுநாட்டு மொழியோ, மதமோ எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. அவ் வளவுக்கு ஜேர்மனியசமூகம் இறுக்கமானதனது கட் டுக்கோப்பை எவ்விதத்திலும் கைவிடத் தயாராக இருக்கவில்லை. ஆனல் தற்போது ஜேர்மனியில் ஏறக்குறைய 3 மில்லியன் வெளிநாட்டு மக்கள் வேலையற்று இவர்களுக்குச் சுமையாக இருக்கின் றனர். இதனல் பொருளாதார ரீதியிலும், சனத் தொகை ரீதியிலும் அரசாங்கத்துக்குப் பெரிய தலை யிடியைக் கொடுத்துவருவதால் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு இன்றைய அரசாங்கம் தீவிர முயற்சிகள் எடுத்துவருகின்றது.

கலாச்சாரம் எனும்போது அது மக்கள் வாழ்க் கையோடு பின்னிப் பிணைந்தவொன்றாகும், எனவே சனத்தொகைபற்றி நோக்குதல்வேண்டும். ஜேர்ம னிய குடியிருப்பு அம்சங்களை நோக்கும்போது கல் லாற் கட்டப்பட்ட பாரிய தொடர் மாடிகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட கட்டடங்களாகவே இருக்கின்றன. சிறிய சிறிய வீடுகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. இவை யாவும் குளிரினை உள்ளே நுழையவிடாத வகையில் கட்டப்பட்டிருக்கின்றன. மேலும் ஒவ்வொரு வீடுகளிலும் மின்சார வெப்பமூட்டிகள் பொருத்தப்பட்டுள்ளன. அத்துடன் குளிரினைத் தாங்கும் விதத்தில் ஒவ்வொரு கட்டிடங்களுக்கும் அடியில் சுரங்க அறைகள் (Under Ground) அமைத்திருக்கின்றூர்கள். இங்குள்ள கட்டிடங்களில் முக்கியமான அம்சம் 100க்கு 95% இரண்டு தொடக்கம் ஐந்து மாடிகளைக் கொண்டதாக அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு கட்டிடத்திலும் ஏறக்குறையப் பல குடும்பங்கள் வாழ்கின்றன. பணம்படைத்த மக்கள் சிலர் வீடுகளைக் கட்டி வாடகைக்கு விடுகின்றனர். அரசாங்கமும் குடியிருப்புத் தேவைகருதி வீடுகளைக் கட்டி வாடகைக்குக் கொடுக்கின்றது. இத்தகைய பல காரணங்களால் இங்கு மக்கள் வாடகை வீட்டிலேயே வசிக்கின்றனர் எனலாம். அத்துடன் சொந்தமாக வீடு வைத்திருக்கவேண்டிய அவசியம் இங்குள்ளவர்களுக்கு இல்லை, காரணம் தாம்வாழ்வதற்கு ஒருவிடு இருந்தாற் போதுமென்ற கொள்கையிலேயே வாழ்கின்றனர். எமது சமுதாயத்தைப்போல் தமது வாழ்க்கைமுடிய பிள்ளைகளுக்குத் தேவை என்று அதற்காக வீடு சொந்தமாக வைத்திருக்கவேண்டும் என்ற நியதி இல்லை. பிள்ளைகள் வளர்ந்தால் அவர்களும் வாடகை வீட்டிலேயே வளர்வர். எனவே பெற்ருேர் பருவம் அடையாத பிள்ளைகளுடன் வாழ்வதற்கு சகல வசதிகளும்பெற்ற வாடகைவீட்டில் வசிப்பர். பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் வளர்ந்தால் அவர்களிடம் வீட்டை ஒப்படைத்துவிட்டு சோஷல் நிலையம், வயோதிபர் விடுதி என்பவற்றுக்குச் சென்றுவிடுவர். இவர்களை இந்நிலையங்கள் கைகொடுத்து வரவேற்று ஆதரிக்கும் எனவே இங்குள்ள மக்களுக்குச் சொந்தமாக வீடு வைத்திருக்கவேண்டும் என்றதேவை ஏற்படுவதற்கு நியாயம் இல்லை. இவ்வாருக இங்குள்ள குடியிருப்பு அம்சம் எமது நாட்டுடன் ஒப்பிடும்போது எவ்வளவு சிறப்பாயுள்ளது என உணரமுடிகின்றது. பாரிய கட்டிடங்களைவிட சிறியசிறிய வீடுகள் கிராமியப் பகுதிகளிலே ஆங்காங்கே காணப்படுகின்றன. கோடைகாலத்திற் தமது பொழுதை உல்லாசமாகக் கழிப்பதற்காக இவ்வீடுகளை நாடிவருவர். அவ்வாறு வந்து வீட்டை அண்டிய பகுதிகளில் மரக்கறிப் பயிர்ச் செய்கையையும், பூஞ்செடி வளர்ப்பையும் மேற்கொள்வர். கோடைகாலம் முடியும்வரை இச்சிறிய வீடுகளில் அக்கோடைகாலப் பொழுதை உல்லாசமாகக் கழிப்பர். இதைச் Summer Garden என அழைப்பர். சிறிய வீடுகள் என்ருலும் எல்லா வசதிகளையும் கொண்ட வீடாக அமைந்துள்ளன. மேலும் சுகாதார வசதி கருதியும் இவ்வீடுகளை கோடைகாலத்தில் விரும்புவர். மேலும் இங்குள்ள மக்கள் எப்போதும் சந்தோசமாகவே வாழ்க்கையைக் கழிக்கக்கூடிய வகையில் சூழ்நிலைகளும் இங்கு சாதகமாக அமைந்துள்ளன.

எமது நாட்டை, எமது சமுதாயத்தைப் பொறுத்தவரை சனத்தொகைக் கட்டுப்பாடு பற்றிய அறிவு மிகக் குறைவாயுள்ளது. அத்துடன் அதுபற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிய அக்கறையும் ஆர்வமும் இல்லை. இதனுற்குடும் பங்களிற் பிள்ளைகள் தொகை சராசரியாக இரண்டு தொடக்கம் பத்துவரையும் அமைந்துள்ளது, அதாவது குடும்ப அங்கத்தவர் அதிகமாக உள்ளனர். சனத்தொகைக் கட்டுப்பாடுபற்றிய போதிய அறிவு இல்லாமை எமது பொருளாதார அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாக உள்ளது. மேலும் எமது சமுதாயத்தில் பெற்ருேர் பிள்ளைகளைச் செல்வமாகவே கருதுகின்றனர். காரணம் ஏற்கனவே கூறியபடி தமது பிற்கால வாழ்க்கைக்கு உறுதுணையாகப் பிள்ளைகள் வேண்டும். அவர்களுக்கு தமது செல்வத்தை முதலிட்டு வளர்க்கவேண்டும் என்ற கொள்கையுண்டு. மேலும் பல பிள்ளைகளிருந்தால் தமது பிற்கால வாழ்க்கையில் ஒவ்வொரு பிள்ளையிடமுமிருந்து உதவியைப்பெற்று தமது தேவையை நிறைவேற்றிக்கொள்கின்றனர். இதனுற் குடும்பத்தில் கூடிய பிள்ளைகளையே விரும்புகின்றனர். இருந்தும் படித்தவர்கள், உயர்மட்டத்தினர் குடும்பக்கட்டுப்பாடுபற்றிப் பூரண விளக்கம் பெற்று அதைக் கடைப்பிடிக்கின்றனர். இப்போது ஓரளவுக்கு இதன் அறிவு வளர்ச்சிபெற்று வருகின்றதென்றே சொல்லவேண்டும்.

மக்கள் உறவு, பாசப்பிணைப்பு என்பனவற்றை நோக்கும்போது இங்கு குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு பொருளாதாரமே அடிப்படையான மறைமுகக் காரணி எனலாம். மேலும் விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியில் இங்கு இயந்திரங்களின் உபயோகம் நிறைந்து காணப்படுகின்றது. இருந்த இடத்தில், குறுகிய நேரத்தில், வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையைப் பூர்த்திசெய்யக்கூடிய விதத்தில் எலக்ரோனிக் (Electronic) கொம்பியூற்றர் (Computer) முறைகள் அமைந்துள்ளமையால் மற்றவர்களை நம்பியோ, உதவிகோரியோ வாழவேண்டிய அமைப்பு இல்லை. அதாவது மக்கள் தமது தேவையை நிறைவேற்றுவதற்கு மற்ற நபர்களின் உதவி தேவையில்லை எனலாம். எனவே மக்களிடையே உள்ள உறவுமுறை, அன்புத் தொடர்பு, எமது சமுதாயத்துடன் ஒப்பிடும்போது மிகக்குறைவாகக் காணப்படுகின்றது: அன்பே தெய்வம் என்ற பண்பு எமது பண்பாட்டில் ஊறிப்போனதொன்றாகும், எமது சமுதாயத்தில் பெற்றோர் பிள்ளைகளுக்கு இடையே உள்ள அன்பு உன்னதமானதும் இறுக்கமானதுமாகும். இதற்குக் காரணம் என்ன என்று உற்று நோக்கினால் பொருளாதாரந்தான் என்பதை உய்த்துணரமுடியும். இருப்பினும் இது ஓர் சர்ச்சைக்குரிய விடயமாகும். எமது சமுதாயத்திற் பெற்றோர் தம்மைத் தமது பிள்ளைகளே பார்ப்பார்கள், அவர்களே பராமரிக்க வேண்டுமென்ற நமபிக்கையில் அவர்களைப் பேணிவளர்ப்பார்கள். அவர்களது தேவைகளை நிறைவேற்றுவார்கள். அதாவது பிற்காலத்தில் அவர்களிடமிருந்து உதவியைப்பெறும் எதிர்பார்ப்பினாலேயே அன்பு இவர்களிடம் ஆதிக்கம் பெறுகின்றது எனலாம். இந்த எதிர்பார்ப்பு ஜேர்மனிய பெற்றோரிடையே இல்லை வயதுமுதிர்ந்த நேரத்தில் வயோதிபர் விடுதி இவர்களைப் பராமரிக்கும். இதற்கான பணத்தை ஏற்கனவே இவர்கள் உழைக்கும் காலகட்டத்தில் கட்டாயமாக ஒதுக்க வேண்டியவராகின்றனர். அதாவது அவர்கள் அனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியுடன் மாதவருமானத்தில் இதற்கென மாதா மாதம் கழிபடும். இவ்வாருக இங்கு வயோதிபர் தமது பிற்கால வாழ்க்கையில் மற்றவர்களை நம்பி வாழவேண்டிய அவசியமே இல்லையெனலாம்.

ஜேர்மன் மக்களிடையே குறிப்பிடக்கூடிய அம்சமென்னவெனில் கூட்டுக்குடும்ப அமைப்பின்மையாகும். அதாவது கீழைத்தேயத்தவராகிய எமது குடும்ப நிலைமைகளைப்போல் ஒருவரில் ஒருவர் தங்கி வாழும் தன்மையின்மையாகும். இதற்கும் முக்கிய காரணம் பொருளாதாரம் எனின் மிகையாகாது. எமது சமுதாயத்தைப் பொறுத்தவரை பெற்ரோர்கள் பிள்ளைகளில் தங்கியே வாழும் பண்புண்டு. பிள்ளைகள் மட்டுமல்ல நெருங்கிய உறவினர் பலர் தங்கி வாழ்கின்ற அமைப்பும் காணப்படுகின்றது. ஜேர்மனியை நோக்கும்போது பிள்ளைகள் பராயமடைந்து தத்தமது வாழ்க்கையை அவர்களே அமைத்துக்கொள்கின்றனர். பெற்ரோர்கள் அவர்களது வாழ்க்கையில் அதிககாலம் அக்கறைசெலுத்த மாட்டார்கள். எமது சமுதாயத்தில் பெற்ரோர்கள் தமது பிற்கால வாழ்க்கைக்குத் தமது பிள்ளைகளையே நம்பியிருப்பதால் பிள்ளைகளை ஒரு சொத்தாகக் கருதுகின்றனர். இதனுல் அவர்களுக்கு மெய்வருத்தம் பாராது உடலை ஓடாக்கி உழைக்கவேண்டியவராகின்றனர். இதனுல் இவர்களுக்கு வாழ்க்கையில் நிம்மதியில்லாமற்போகின்றது. மேலும் பிள்ளைகளுக்காக சேமிப்பு, வீடு, காணியென்று தேடிவைக்க வேண்டிய பொறுப்புடையவராகின்றனர். வயோதிப நிலையடைந்தவர்க்கு எமது சமுதாயத்தில் எது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித ஆதரவும் இல்லை. இவர்களது பிள்ளைகள்தான் ஆதரவாக இருக்கின்றனர், பணம், சேமிப்பு என்று பிற்காலத் தேவைக்கு இவர்களிடம் இருப்பது அரிதிலும் அரிதெனலாம். எனவே பொருளாதாரம் வசதியான முறையில் அமைந்திருக்கும்போது மற்றவர்களுடைய ஆதரவையோ, உதவியையோ நாட வேண்டிய அவசியமேயில்லை. இதே நிலைமையே ஜேர்மன் மக்களிடையே உண்டு. மேலும் ஆண்களுக்கு 65 வயதிலும் பெண்களுக்கு 60 வயதிலும் உபகாரச்சம்பளம் வழங்கப்படுகின்றது, மேலும் காப்புறுதிபோன்ற அமைப்புமுறைகள் பற்றிப் பூரணமாக மக்கள் அறிந்திருப்பதால் அதில் நம்பிக்கை வைக்கிறுர்கள். இதனுல் தமக்குக் காப்புறுதிசெய்துகொண்டுள்ளனர். அத்துடன் அக்கறையுடன் வேலைசெய்த இடங்களின் உத்தரவாதத்துடன் காப்புறுதி செய்வார்கள். இவ்வாறு முதியோர் இங்கு நன்கு மதிக்கப்படுகின்றனர். வயோதிபர் புகலிடம் இவர்களுக்குத் தேவையான அனைத்தையும் வழங்கத் தயாராக இருக்கின்றது. இவர்களுடைய பொழுதுபோக்குகளாக தமது வயதினருடன் உரையாடுவர். புத்தகங்கள் வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல் என்பன முக்கியமானவையாகும். பணம் படைத்த வயோதிபர் சிலர் தமது மக்களின் பராமரிப்பில் வாழ்கின்றனர். ஆனுல் இவர்கள் பிள்ளைகளுக்கு எந்தவிதத்திலும் சுமையாக இருக்கமாட்டார்கள். இவ்வாறுன முற்போக்கான அமைப்புகள் ஜேர்மனியில் இருப்பதாலேயே ஒருவரில் ஒருவர் தங்கிவாழும் நிலைமை இல்லாமற் போகின்றது. எமது சமூதாயம் இதற்கு எதிர்மாறுனது எனச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லத் தேவையில்லை ஜேர்மனியில் முதியோர்கள் அன்புரீதியாக, உளரீதியாக அன்றிப் பொருளாதார ரீதியாக அவர்களுக்கு உரிய மதிப்பினைப் பெறுகின்றனர் எனலாம்.

ஒரு சமுதாயம் எனும்போது அதற்குள் ஆண்களும் பெண்களும் அடங்குகின்றனர். ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாக ஆணும் பெண்ணும் சமம் என்ற நிலைமையில் இருத்தல்வேண்டும். அதாவது சம அந்தஸ்து இருக்கவேண்டும் என்பதாகும். இதுவே வரகவி பாரதியாரின் தீராத ஆசையாகும். எமது சமுதாயத்தில் இந்தப் பண்பைக் கொண்டுவரவேண்டும் என்று அரும்பாடுபட்டு வெற்றி காணுதவராய் இவ்வுலகினின்றும் விலகிச் சென்றுவிட்டார். ஆனால் அவரது எண்ணங்கள், கனவுகள் இப்போது எமது சமுதாயத்தில் பரிணமித்தபோதும் பூரணமாக அவரது கனவுகள் ஈடேற யுகம்தான் செல்லும். இதுவே எமது சமுதாயத்தின் அக்கறையென யோசிக்கவேண்டியுள்ளது. ஆனால் ஜேர்மனிய சமுதாயத்தில் ஆண்களுக்குப் பெண்கள் சரிநிகர் சமானமாக வாழ்கிறார்கள். ஆண்களுக்குரிய அதே அந்தஸ்து பெண்களுக்கும் உண்டு. அதாவது ஆண்கள், பெண்கள் என்று எதுவித பேதமில்லையெனலாம். இந்த அமைப்பினாலேயே இங்குள்ள சமுதாயம் சீரடைந்து முன்னேற்றமான நிலையில் அபிவிருத்திப் பாதையில் முன்னணியில் நிற்கின்றது, மக்களிடையே உயர்ந்தவர், தாழ்ந்தவர், பணக்காரன், ஏழை என்ற எதுவித பேதமுமில்லை. எல்லோரும் சமம் என்றபண்பு இங்கு இழையோடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றது எனலாம் நாமெல்லாம் இந் நாட்டு மன்னர், ஒன்றே குலம், ஒருவனே தேவன், தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத் தினை அழித்திடுவோம் என்ற பாரதியாரின் அறை கூவலை எமது சமுதாயம் செவிமடுக்கவில்லை. ஆனால் ஜேர்மனிய சமுதாயத்தினர் தான் அதைச் செவி மடுத்தனரோ என்னவோ அவர்களிடையே இத் தகைய பண்பைத் தாராளமாகக் காணக்கூடியதா யுள்ளது. இது பெருமைப்படக்கூடிய விடயமல் லவா?

ஜேர்மனியின் பொருளாதார அமைப்பு இங்குள்ள சனத்தொகைக்கு ஈடுசெய்யக் கூடியதாயுள்ளது. எனவே சனத்தொகைப் பிரச்சினையோ, நிலப்பிரச் சினையோ இங்கில்லை. ஜேர்மனியினுடைய மொத்த நிலப்பரப்பு 137,385 சதுரமைல்கள். 1971ம் ஆண் டுக் கணக்கெடுப்பின்படி ஜேர்மனியினுடைய மொத்த சனத்தொகை 75,371,000 ஆகும். இங் குள்ள ஸ்திரமான பொருளாதார அமைப்பே எல் லாவற்றுக்கும் காரணமெனலாம். எமது நாட்டி லே பொருளாதாரம் ஈடாட்டமான நிலையிலிருப்ப தால் சனத்தொகைப் பிரச்சினை பெருந்தலையிடியைக் கொடுத்துவருகின்றது. இலங்கையினுடைய மொத்த நிலப்பரப்பு 25332 சதுரமைல்கள். மொத் தச்சனத்தொகை ஏறக்குறைய 1 1/2கோடிஎனலாம் இவ்வாறுசனத்தொகைஅதிகரிப்பால் நிலப்பிரச்சினை நிலக்கூறுபாடுகள் என்பன பிரச்சினைகளைக் கொடுக் கின்றன. ஜேர்மனியைப் போன்று சனத்தொகைக் கட்டுப்பாடு பற்றிய பூரண விளக்கமும் அதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துழைப்பும் இங்கில்லை. அதேவேளை மக்களுக்கு வெளிப்படுத்தக்கூடிய குடும்பக் கட்டுப்பாட்டு ஆலோசனைச் சங்கங்கள், நிலையங்கள், வைத்திய வசதிகள் என்பனவும் இருந்தால் சனத்தொகைப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வுகாணலாம். சுருங்கச் சொல்லின் எந்தவொரு நாட்டிலும் பொருளாதார அமைப்பு ஸ்திரமானதாக இருந்தால் அங்கு பிரச்சினைகள் தலையெடுப்பது குறைவு. இந்த ரீதியிலேயே ஜேர்மனி அமைந்துள்ளமை அதன் வளர்ச்சிக்குக் காரணமாயுள்ளது எனலாம்.

ஜேர்மனியின் பொருளாதார அமைப்புமாத்திரமல்ல அரசியல், வரலாற்று நிலைமைகளும் இந்நாட்டு அபிவிருத்திக்குக் காரணம் எனலாம். 1917ம் ஆண்டு நடைபெற்ற ருஷ்யப் புரட்சியைத் தொடர்ந்து 19.8ம் ஆண்டு ஜேர்மனி குடியரசு நாடாகியது. இருந்தும் 1910-15 காலகட்டத்திலும், 1938-45ம் ஆண்டுக் காலகட்டத்திலும் ஏற்பட்ட உலகப் போரினால் ஜேர்மனி நலிவுற்றது. பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது, மக்கள் போரினாலே வறுமைப்பட்டனர். தொழில் நிலையங்கள் சேதமுற்றன. வளர்ச்சியற்ற நிலையில் மற்றநாடுகளின் உதவியை எதிர்நோக்கியவண்ணம் இருந்தது. நாட்டைச் சீரடையச் செய்வதற்கு பிரான்ஸ், பிரித்தானியா போன்ற நாடுகளிடமிருந்து பணஉதவி பெற்றது. வேற்றுநாட்டவர் இங்கு வர அனுமதியளித்தது. தொழில் நிலையங்களின் அழிவினால் வேலையில்லாப் பிரச்சினைகள் ஏற்பட்டன. 1ம் உலகப் போரின் பின் இவையெல்லாவற்றையும் ஒரு சுமூகமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்குக் கொண்டுவர ஹிட்லரின் சலுகைகள் கிடைத்தபோதும் அது சர்வாதிகார ஆட்சியின் அறிகுறியாக இருந்தமையால் மக்கள் திருப்திபெற வில்லை. இரண்டாம் உலக யுத்தத்தின்போதுதான் அமெரிக்காவின் பாதுகாப்பிலே ஜேர்மனி ஒருஸ்திர மான ஆட்சியைப் பெற்றது. மேலும் போரினால் ஜேர்மனி பல்வேறு வகையிலும் பாதிப்படைந்த போதும் அதனால் சில நன்மைகளும் ஏற்பட்டன. என்பதை மறக்கமுடியாது. போரின் தாக்கத்தி னாலே கல்வி விழிப்புணர்ச்சி, அரசியல் விழிப் புணர்ச்சி, கைத்தொழில் அபிவிருத்தி ஏற்பட்டு மக்கள் யாவரும் தம் தாய்நாட்டில் மேன்மேலும் அக்கறைகொள்ளத் தொடங்கினர். சுருங்கச் சொல்லின் ஜேர்மனியினது சரித்திர சம்பவங்களே இன்றுள்ள சகலதுறை அபரிதவளர்ச்சிக்குக் காரண மெனலாம். அதாவது ஜேர்மனியினது போர்ச் சரித்திரமே ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது எனக் கூறின் பொருத்தமுடையதாகும்.

விஞ்ஞான வளர்ச்சியால் தொழில்நுட்ப அறிவு வளர்ச்சிபெற்றது. இயற்கை மூலவளங்கள் இங்கு கிடைக்கின்றன. உதாரணமாக இரும்பு, நிலக்கரி முதலிய கனிப்பொருட்கள் இங்கு பெறமுடிகின்றது உலகப் பிரசித்திபெற்ற ரூர் (Ruhr) நிலக்கரிவயல் ஜேர்மனியிலேயே உண்டு. பாரிய கைத்தொழில் கள், சிறு கைத்தொழில்கள், விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள் என்பவற்றை இங்கு சிறப்பாகக் காண லாம். வானளாவிய கட்டிடங்களையும், இயந்திரங்க ளையும்கொண்ட தொழிற்சாலைகள் பிரமாண்டமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றத்தைக் கொண்டனவாகக் காட்சியளிக்கின்றன. ஒரு தொழிற்சாலையை நிறுவுதற்குத் தேவையான ஓரிடப்படுத்தும் காரணிகளான மூலப்பொருள், வேதனம், நிலம், தொழிலாளர் வசதி, சந்தைவசதி, போக்குவரத்து, நீர், என்பன யாவும் குறைவின்றிக் காணப்படுவது குறிப்பிடக்கூடிய அம்சமாகும். ஜேர்மனியில் பாயும் நதி இதன் வளர்ச்சிக்கும் ஏனைய போக்கு வரத்து வசதிகளுக்கும்துணையாக இருக்கின்றது. இரும்புருக்குத் தொழில்,மரம் வெட்டும் தொழில், தோற்கைத்தொழில், கண்ணடித் தொழிற்சாலை என்பன சிறப்பாக இயங்குகின்றன.

கைத்தொழில் சிறப்பாக அமைவதற்கு போக்குவரத்து முக்கியமானது. ஜேர்மனியினது போக்குவரத்து அமைப்பு மிகச்சிறப்பான முறையில் தொழில்நுட்ப ரீதியில் அமைந்துள்ளது. விமானப் போக்குவரத்து, புகையிரதப் போக்குவரத்து, கடல்வழிப் போக்குவரத்து, தெருவீதிகள் என்பனயாவும் சிறப்பான முறையில் அமைந்துள்ளன. உலகத்திலே மிகப் பெரியதும், பிரசித்தி பெற்றதுமான புகையிரதப்பாதைகள் வலைப்பின்னலான முறையில் அமைந்திருக்கின்றன.விரைவாகவும் நேரத்தை மிச்சம்பிடிக்கக்கூடியதாகவும் கடுகதிப் புகையிரத வண்டிகள் உள்ளூர், வெளியூர் போக்குவரத்தில் திறம்படச் செயற்படுகின்றன,புகையிரதங்கள் மணித்தியாலத்திற்கு ஒன்றுவீதம் குறிப்பிட்ட இடத்திலிருந்து சென்றுகொண்டிருக்கின்றன.எனவேஇங்கு Intercity என அழைக்கப்படும் கடுகதிப் புகையிரதம் முக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக நேரத்தை மிச்சப்படுத்துகின்றது. புகையிரதங்கள் யாவும் ஏறக்குறைய பதினைந்து தொடக்கம் இருபது பெட்டிகளைக்கொண்டு நீளமுடையனவாகக் காணப்படுகின்றன. புகையிரதங்கள் யாவும் தரிப்பிடங்களில் நிற்கும்போது அதன் கால அளவு சராசரியாக 3 அல்லது 5 நிமிடங்களாகும். பிரயாணிகள் வசதியான முறையில் பிரயாணம் செய்வதற்குரிய அத்தனை வசதிகளும் புகையிரதத்தில் உண்டு. மேலும் நிலக்கரி போன்ற சுமைகள் ஏற்றுவதற்கும் புகையிரதங்கள் துரிதசேவையில் ஈடுபடுகின்றன. ஆனால் எமது நாட்டில் இத்தகைய நிலைமை இல்லை எனலாம். மிக மலிந்த செலவில் பாரமான பொருட்களை ஏற்றிச் செல்வதற்கும் ஏனைய போக்குவரத்துத் தேவைகளுக்கும் கப்பற் போக்குவரத்து சிறப்பாக அமைந்துள்ளது. நிலக்கரி. மணல், கட்டிடப் பொருட்கள் என்பன இவ்வாறு ஏற்றிச்செல்லும் பொருட்களில் முக்கியமானவை. கொள்ளளவு சக்தியிற் கூடியதாகவும் பாரமான பொருட்களை ஏற்றியிறக்கவும் வசதியான முறையில் கப்பல்கள் அமைந்து நீர்வழிப் போக்குவரத்தில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. மிகவும் நல்லமுறையிலும் செலவு சுருக்கமான முறையிலும் இப்போக்குவரத்துமுறை அமைந்துள்ளது. நாட்டின் உட்பகுதிகளில் ஆறுகள். சிற்றாறுகள், கடலுடன் இணைந்துள்ளமையும் இப்போக்குவரத்துக்கு இலகுவாக அமைந்துள்ளது.

தெருவழிப் போக்குவரத்தில் கார், பஸ், லொறி, எஸ்பான், ட்ராம், பாரமேற்றும் ஏனைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்கள், துவிசக்கர வண்டிகள், நிலம்வெட்டும் இயந்திர வாகனங்கள், தெருக்களைச் சுத்தப்படுத்தும் வண்டிகள், மோட்டோர் சைக்கிள்கள், உழவு யந்திரங்கள், அறுவடை யந்திரங்கள் போன்ற வாகனங்கள், முக்கியமானவையாகும். ஜேர்மனியின் குடித்தொகையில் இருநபருக்கு ஒரு மோட்டோர் வண்டி என்ற வீதத்தில் அமைந்திருக்கின்றது. பஸ்வண்டிகளில் சில தனியார்பஸ்களாகவும் பெரும்பாலானவை அரசாங்க வண்டிகளாகவும் இருக்கின்றன. என்ன நேரத்துக்கு குறிப்பிட்ட ஒரு இடத்தில் பஸ்சேவை உண்டு என்றால் அந்த உரிய நேரத்தில் பஸ் வந்துவிடும். எந்தவித தாமதமோ ஏற்படாது. இங்கு நேரத்துக்கு முக்கியமான உயர்ந்த இடம் கொடுக்கப்படுகின்றது. பஸ்சேவையில்மட்டுமல்ல மக்களின் அன்றாட அலுவல்களிற்கூட நேரத்திற்கு முக்கிய இடம் அளிக்கப்படுவதை அவதானிக்கலாம். இதுபற்றிப் பின்னர் விரிவாக நோக்கலாம். எஸ்பான், ட்ராம் எனக் குறிப்பிடப்படும் வண்டிகள் புகையிரதத்தின் அமைப்புப் போன்று நீளத்திற் சிறியதாக இருக்கும். இவை மக்களை ஏற்றிச்செல்ல உதவுகின்றன. வெகுவிரைவிற் செல்வனவாகவும் உள்ளன: பொருட்களை ஏற்றியிறக்கும் வண்டிகள், லொறிகள் என்பன பொருட்களை ஏற்றிக்கொண்டுபோய் புகையிரத நிலையத்திற் சேர்ப்பிக்கின்றன. பின்னர் புகையிரத நிலையத்திலிருந்து அப்பொருட்கள் தொழிற்சாலைக்குக்கொண்டுவரப்படுகின்றன. வசதிபடைத்த மக்கள் இவ்வண்டிகளைச் சொந்தமாக வைத்திருக்கின்றனர். சிலவேளைகளில் பாரமான பொருட்கள் நேரடியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச் சேர்ப்பிக்கப்படுகின்றன. அதிபாரமான பொருட்கள் பாரமேற்றும் வண்டிகளின் உதவியுடன் புகையிரத நிலையத்துக்குமட்டும் கொண்டுசெல்லப்படுகின்றன. பின்னர் அவற்றைப் புகையிரதங்களே தொழிற்சாலைகளுக்கு ஏற்றிச் செல்கின்றன. கடந்த இருபது வருடங்களாக இவ்வண்டிகள் முக்கிய இடம்பெற்றுவருகின்றன. புகையிரதங்கள் செய்துவந்த வேலையை இந்த லொறிகள் நிறைவேற்றுவதால் புகையிரதப் பகுதிக்கு நட்டமேற்பட்டுள்ளது. மனித சக்தியையும் நேரத்தையும் மிச்சம் பிடிப்பதற்கு இப்போக்குவரத்து உதவியாயுள்ளது. ஏனைய வாகனங்கள் சில தனிப்பட்டவர்களின் பிரயாணத்துக்கு வசதியாக அமைந்துள்ளன. இங்குள்ள மக்கள் நடந்து எந்த இடத்துக்கும் செல்லும் வழமையில்லை. மோட்டார் பைசிக்கிள், கார், துவிசக்கர வண்டிகளிலாவது செல்வார்கள். ஆண்களும் பெண்களும் சமமான முறையில் கார், பஸ், ட்ராம், மோட்டார் பைசிக்கிள், பைசிக்கிள் என்பவற்றைச் செலுத்துவார்கள். மேலும் இங்குள்ள தெருவீதிகளைக் கடப்பது மிகவும் கஸ்டமாகும். சாரிசாரியாக வாகனங்கள் போய்க்கொண்டே இருக்கும். தெருவீதிகளில் இவ்வாகனங்கள் ஒன்றுக்கு ஒன்று விலத்தி பாதையை விட்டுக்கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் தெருவீதிகள் அகலமானதாக வாகனங்கள் போவதற்கும் வருவதற்கும் உரியமுறையில் அமைக்கப்பட்டுள்ளன, அதாவது ஒரு பாதையிலேயே ஒருபகுதி நேர்த்திசையாகவும், மறுபகுதி எதிர்த்திசையாகவும் போகும் வாகனங்களுக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளன, அத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் நடைபாதை, பைசிக்கிள் வண்டிக்கென எல்லையிட்டு அப்பாதையில் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் வீதிகள் யாவும் குன்று குழிகள் அற்ற முறையில் துப்பரவாக அழகாகக் காணப்படும். தெருக்கள்தோறும் குப்பைத் தொட்டிகள் பொருத்தப்பட்டுள்ளன. இதனால் தெருவீதிகளில் கழிவுப்பொருட்களை ஒருவரும் வீசமாட்டார்கள். துப்பரவுடன் காணப்படும். நெருக்கமான முறையில் அதிக வாகனங்கள் ஓடுவதால் வீதியைக் கடப்பது கடினம். எனவே வாகன நிறுத்த அறிகுறிகள் சந்திகள், சனநெருக்கடியான இடங்கள் ஆகியவற்றில் பொருத்தப்பட்டுள்ளன, அதாவது (Signal Lights) நிறுத்த வெளிச்சங்கள் பொருத்தப்பட்ட இடத்தில் காத்துநின்று, கடப்பதற்குரிய அடையாளம் விழுந்தபிற்பாடுதான் கடக்கவேண்டும். இது உயிர்ச்சேதங்கள் ஏற்படாவண்ணம் அமைந்துள்ளது. அவசியமற்ற முறையில் ஏற்படும் மோதல்கள், சேதங்கள் என்பன இங்கு ஏற்படுவது குறைவு. மேலும் இதற்கு இன்னொரு காரணம், ஒரு புதிய காரோ, பழைய காரோ இரண்டு வருடங்கள் ஓட அனுமதியுண்டு, பின்னர் அக்கார் இயந்திரங்களைப் பரிசோதித்தபின்னர் மீண்டும் ஓட அனுமதியுண்டு. இதனாலேயே உயிர்க்கொலைகள், சேதங்கள் ஏற்படுவது தவிர்க்கப்படுகின்றன எனலாம்.

ஜேர்மனியின் போக்குவரத்துச் சேவையில் மிக முக்கியமானதொன்று விமானப் போக்கு வரத்து ஆகும். மூன்றுநிமிடத்துக்கு ஒரு விமானம் போக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரத்தில் ஈடுபடுகின்றன. பிரசித்திபெற்ற ஒன்பது விமான நிலையங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் 1. ஸ்ருட்காட் (Stuttgart) 2. பிராங் போட் (Frank Fort) 3. (Koiln) 4. கனோவர் (Hanover) 5. பேர்ளின் (Berlin) 6. முன்ஞ்சன் (Munchen) 7 டுஸில் டோர்வ் (Dusil Dorf) 8. பொன் (Bonn ) என்பவை குறிப்பிடத்தக்கவை, இங்குள்ள விமானங்களில் Lufthansa என்ற பெயரையுடைய விமானம் பிரசித்திபெற்றது.

ஜேர்மனியைப் பொறுத்தவரை அரசியல், நிர்வாகம் என்பன சிறப்பாகவும் ஒழுங்காகவும் நடைபெறுகின்றன. உலகிலேயே குறிப்பிடக்கூடியளவுக்கு பொருளாதார வளர்ச்சி பெற்று முன்னணியில் ஜேர்மனி நிற்கின்றது எனலாம். இதற்கு இங்குள்ள மக்களின் சுறுசுறுப்பும், விரைவு நடவடிக்கைகளும், நாட்டுப்பற்றும், உண்மை பேசும் பண்பும் மூலகாரணம் எனலாம் இதற்கு அடுத்தபடியாக அரசியல் வளர்ச்சி, தொழில்நுட்பம், மூலப்பொருள், இயற்கை வசதி என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். சுருக்கமாக, மேலோட்டமாகப் பார்க்கும்போது வங்கிகள், தபால் நிலையங்கள், ரெலிபோன் நிலையங்கள், வைத்தியசாலைகள், பொலீஸ் நிலையங்கள், கச்சேரி, பாடசாலைகள், சமூக நலன் நிலையம், கூட்டுறவுச் சங்கங்கள், கடைகள், வயோதிப விடுதிகள் என்பனவற்றின் தொழிற்பாடுகள் எந்தளவுக்கு சேவைத்துறை வளர்ச்சிக்கு நிர்வாகத் திறமைக்கு ஒத்துழைக்கின்றன என்பதை அறிந்துகொள்ளல் அவசியமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கிகள் மிக நெருங்கிய முறையில் இடத்துக்கிடம் அமைந்துள்ளன. அவற்றுள் Sparkase Bank Commercial Bank, Douetch Bank, Volks Bank, Raiffeisen Bank, Dresder Bank போன்ற பல வங்கிகள் குறிப்பிடத்தக்க பெரிய வங்கிகளாகும். சேமிப்பு, வைப்பு, கடன் கொடுப்பனவுகள் என்பன சுலபமான முறையில் மிக எளிதாகவும் விரைவாகவும் செய்து வாடிக்கையாளர்களைக் கவர்கின்றன. மேலும் இங்கு வேலைபார்க்கும் உத்தியோகத்தர்களுக்கு Computer வேலைப்பழுவைக் குறைப்பதோடு துரிதகதியில் வேலையைச் செய்து முடிக்க உதவுகின்றன. உதாரணமாக ஒரு குறிப்பிட்ட நபருடைய பெயரில் எவ்வளவு பணம் இருக்கின்றது என்பதை அறிய அவரது தஸ்தாவேஜுகள் அனைத்தையும் வங்கிகளிற் புரட்டிப்பார்க்கவேண்டிய அவசியமில்லை. Computer என்ற உபகரணத்தின் உதவி கொண்டு பணம் இருக்கின்றதா எனப் பார்க்கமுடியும். இவ்வாறுகப் பல சேவைகளுக்கும் இப்பேர்ப்பட்ட உபகரணங்கள் பலவிதத்தில் பலவிதமான சேவைகளைச் செய்கின்றன. வங்கிகளில் வேலை செய்யும் உத்தியோகத்தர்கள் யாவரும் மற்றவர்கள் தம்மை இனங்கண்டுகொள்ளக்கூடிய முறையில் குறிப்பிட்ட வங்கியின் பெயர் குறிக்கப்பட்ட ஒரு அடையாளச் சின்னத்தை (Batch) அணிந்துகொள்வார்கள். வங்கிகள் எந்நேரமும் அமைதியாகவும் சனசந்தடியற்று துப்பரவாகவும் இருக்கும். வங்கிகளில் பூச்செடிகள் உட்புறம், வெளிப்புறம் எனப் பேதமின்றி அலங்கரிக்கின்றன. பெரும்பாலும் பெண்களே கூடுதலாக வேலைகள் செய்கின்றுர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களுக்குச் சளைக்காத வகையில் சகலவேளையி லும் வேலைசெய்துவருகிறார்கள். இது குறிப்பிடக் கூடியதும் பாராட்டக்கூடியதுமான விடயமாகும்,

வங்கிகளில் களவு நடவடிக்கைகள், பொய் சொல்லல், கொள்ளைஎன்ற பதங்களுக்கே இட மில்லை. பொய்சொல்லி எவரும்தமது திறமையைச் சாதிக்கமுடியாது. யாவற்றையும் Computer X-Ray என்பன காட்டிக்கொடுத்துவிடும், எனவே எமது நாட்டைப்போல் ஜேர்மனிய மக்களிடையே களவு, கொள்ளை இல்லை. இவர்கள் சட்டத்திற்குப் பயந்தவர்கள், அதற்குரிய மதிப்புக் கொடுப்பவர் கள். நேர்மையானவர்கள். எனவே பிறர்பொ ருளை அபகரித்து வாழ்வதை விரும்பமாட்டார்கள். அத்துடன் எமது நாட்டைப்போல் வங்கிகளில் சன நெருக்கடியோ, இரைச்சலோ இல்லாமைக்குக் கார ணம் வாடிக்கையாளர்களைக் காத்து நிற்கவைக்காத முறையில் வேலைகள் துரிதமாக நடைபெற்று குறிப் பிட்டஐந்து பத்து நிமிடங்களில் தங்கள் வேலையை முடித்துக்கொண்டு திரும்பிவிடுகிறார்கள். மேலும் பணத்தைக் கூடிய தொகையாக, கட்டாக ஒருவர் எடுத்துச்செல்லும்போது அவருக்குப் பக்கத்துணை யாக ஆயுதம் தாங்கியவர்கள் வரத்தேவையில்லை. தனியே கொண்டு செல்லக்கூடியளவுக்கு வழிப்பறி யோ, உயிர்க்கொலையோ, கொள்ளையோ இல்லை. இவற்றைவிட எமதுதேசத்தைப்போல் வங்கிகளில் துப்பாக்கி ஏந்திய கரங்களுடன் பொலிசார் வங்கி முகப்புகளில் நின்று காவல்புரிவதும் இல்லை அதற் கான அவசியமே இல்லை. இவற்றுக்கெல்லாம் மூல

பொது சன நூலகம்
நல்லூர் பிரதேச சபை
கொக்குவில்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
245

காரணம் என்னவென்று பார்த்தால் அங்கு பொரு ளாதாரந்தான் காரணமென்ற முடிவை எடுக்க வேண்டியுள்ளது. எமது நாட்டைப்போல் பொரு ளாதாரப் பிரச்சினை, வறுமை, பசி, பட்டினி என் பன இங்கு மருந்துக்கும் கிடையாது. ஆதலால் மற்றவர் பொருளில் ஆசையோ, அதை அபகரிக்க வேண்டுமென்ற எண்ணமோ, கொலையோ ஏற்பட முடியாதென்பதை ஒப்புக்கொள்ளத்தான்வேண்டும் பொருளாதாரப் பிரச்சினை எமது நாட்டில் தலை விரித்து ஆடுவதால் மேற்கூறிய குற்றநடவடிக்கைக ளேற்படுகின்றன என்பதை ஒப்புக்கொள்ளும் அதே வேளை ஜேர்மனிய மக்கள் உண்மைக்கு, சட்டத் துக்கு மதிப்புக்கொடுக்கிறார்கள் என்பதையும் கருத் திற்கொள்ளவேண்டும். அதாவது வெறுமனே பொருளாதாரம்மட்டுமல்ல இங்குள்ள மக்களின் சிறப்பான பழக்க வழக்கங்களும் இதற்குக் காரண மெனலாம். எமது நாட்டு மக்கள் சட்டத்துக்கு, உண்மைக்கு எவ்வளவு மதிப்புக்கொடுத்து நடக்கி றார்கள் என்பதை இங்கு சுட்டிக்காட்டவேண்டிய அவசியமில்லை.

வங்கிகள் எவ்வாறு ஆங்காங்கேயமைந்து தமது சேவையைத் திறம்படச் செய்கின்றனவோ அதே போல் தபாற்கந்தோர்களும் இயங்குகின்றன என லாம். பெரிய தபாற்கந்தோர், உபதபாற்கந்தோர் என்பன இடத்துக்கிடம் அண்மையாக அமைந்துள் ளன. கடிதங்கள், பொருட்கள் என்பவற்றை அனுப்புவதோ விநியோகிப்பதோ சிறப்பாக இயங் குகின்றன. மேலும் எமது தேசத்தில் பொதுவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமான தபாற்பெட்டியின் நிறம் சிவப்பாகவே உண்டு இங்கு தபாற்பெட்டியின் நிறம் மஞ்சள் ஆகும். தபாற்கந்தோர் எதுவெனக் கண்டு பிடிப்பதற்குப் Post எனும் பதம் எழுதப்பட்டிருக்கும். இது ஆங்கிலச் சொல்லாக இருந்தபோதும் ஜேர்மன் பாஷையையே இங்கு குறிக்கின்றது. மக்களின் வசதி கருதி தபாற்பெட்டிகள் சந்திக்குச் சந்தி, வீதிகளுக்கு அண்மித்ததாக, இடத்துக்கிடம் அமைந்திருக்கின்றன. இதைவிடத் தபாற்கந்தோர்கள் மூடப்பட்டுள்ள நேரங்களில் முத்திரை வாங்க முடியாது. எனவே அந்தநிலையைப் போக்கும்வகையில் முத்திரையைப் பெறுவதற்கு உரியமுறையில் முத்திரைப் பெட்டிகளும் இடத்துக்கிடம் இருக்கின்றன. ஜேர்மன் நாணயப்படி 10 பெனிக், 20 பெனிக், 50 பெனிக், 80 பெனிக், 90 பெனிக் என்ற ஒழுங்கில் முத்திரைகளின் விலைப்பெறுமதி பொறிக்கப்பட்டுள்ளன. ஒருவருக்கு எந்தவிலை முத்திரை வேண்டுமோ அந்தவிலை முத்திரைக்கு நேரே முத்திரைப்பெட்டியில் குறிக்கப்பட்ட கொள்கலத்தில் பணத்தைப் போட்டுப் பொத்தானை அமுக்கினல் குறிக்கப்பட்ட முத்திரை தானுக வெளிவரும். இவ்வாறுக ஏனையவற்றையும் பெறலாம். அதாவது தபால்நிலையம் பூட்டப்பட்டுள்ள நேரத்திலே உடனடி முத்திரை அவசியம் என்ருல் இத்தகைய முத்திரைப் பெட்டிகள் பயன்படுகின்றன.

உள்நாட்டு வெளிநாட்டு தபாற்தொடர்புகள் என்பன சிறப்பான முறையில் இயங்குகின்றன. மற்றும் புகையிரத நிலையங்களில் மக்களின் அவசர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை கருதி இரவுபகல் என்ற பேதமின்றி சேவை யாற்றும் தபால்நிலையம் அமைந்துள்ளது. அவசரக் கடிதங்கள் எந்நேரமாக இருப்பினும் உடனே உரிய வர் விலாசத்திற்குக் கொண்டுபோய் ஒப்படைப்பர். இது சிறப்பான அம்சமாகும். தொலைபேசித் தொடர்புகளுக்கு தபாற்கந்தோரை நாடவேண்டிய அவசியமில்லை. தொலைபேசிப் பெட்டிகள் இடத் துக்கிடம் அமைந்துள்ளன. உடனுக்குடன் ஒருவருடன் தொடர்புகொள்ளக்கூடிய முறையில் இவை சேவையாற்றுகின்றன. இதைவிட வீட் டுக்கு வீடு தொலைபேசி ஒரு அத்தியாவசியப் பொரு ளாக மக்களின் பாவனையில் இருக்கின்றது என்றால் அதன் சேவையை நாம் அறிந்துகொள்ளமுடியும். சுருங்கச்சொன்னால் தொலைபேசி எங்கும் பரவலாக உண்டு. இங்கு உள்ளூர்க் கடிதங்களில் ஏதாவது விலாசத் தவறுதல்கள் ஏற்பட்டால் எவ்வளவுகாலம் சென்றபோதும் அது உரியவரைப் போய்ச்சேரும். அல்லது அனுப்பியவரின் விலாசத்துக்கே வந்து சேரும். கடிதங்கள் காணமற்போவது இங்கு மிக அருமையென்று சொல்லலாம். இன்னுமொரு குறிப்பிடக்கூடிய விடயமென்னவெனில் இங்கு பஸ், ட்ராம் வண்டிகளுக்கான ரிக்கற்றும் தபாற்கந்தோ ரில் விநியோகிக்கப்படுகின்றன. இங்கு தபாற்கந் தோரோ, வங்கிகளோ, ஏனைய சேவை நிலையங் களோ என்றும் அமைதியான முறையில் ஒழுங்கான முறையில் சனசந்தடியற்றிருக்கும். காரணம் துரித கதியில் மக்கள் தேவைகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்படுவதால் மக்கள் அங்கு தரித்திருக்கவேண் டிய தேவையோ களைப்பதற்குரிய சந்தர்ப்பமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. உடனுக்குடன் திரும்பிவிடுவதே இதற்குக் காரணமெனலாம்.

உலகத்திலேயே வைத்தியத்துறையில் இரண்டாவது இடத்தைப் பெற்றுவரும்நாடு ஜேர்மனியாகும். உலகப்புகழ்பெற்ற வைத்திய நிபுணர், நவீனவைத்தியச் சிகிச்சைமுறைகள் மூலம் மக்களைப் பேணிக்காத்து உயிரளித்து வருகின்றனர். இங்கு நவீன வைத்தியவசதிகள் மூலம் மக்கள் நீண்டநாட்கள் உயிர்வாழ்வதோடு உடல்வலுப்பெற்று சுகதேகிகளாய் சந்தோஷமாக வாழ்கின்றனர். ஒரு சிறு நோயாயினும் அதை வேரோடு களைந்து ஆரோக்கியமாக மக்களை வாழவைப்பதே இங்குள்ள வைத்திய சேவையினதும் அரசாங்கத்தினதும் முக்கிய குறிக்கோளாகும். ஆண்டவனின் துணை முதல்நிற்க அடுத்தபடியாக இவர்கள் நோயினின்று, இறப்பினின்று உயிர்களைக் காப்பாற்றும் ஆற்றல்பெற்றவர்களாயிருக்கிறார்களென்றால் இங்குள்ள வசதிபற்றி அதிகம் விளக்கத் தேவையில்லை. சிசுக்களுக்கும் வயோதிபருக்கும் விசேடமான முறையில் குறிப்பிடக்கூடிய வகையில் வைத்திய பராமரிப்பு வழங்கப்படுகின்றது. இத்தனைக்கும் இங்கு இலவசவைத்தியந்தான் நடைபெறுகின்றது என்பதில்லை. இது வெளித்தோற்றத்துக்கு இலவச வைத்தியமாகத்தான் தோற்றமளிக்கும். உண்மையை நோக்கும்போது இங்கு பெரும்பாலும் மக்கள் ஏதோ ஒரு வேலையைச் செய்கின்றார்கள். அவ்வாறு அவர்கள் வேலைசெய்யும்போது அவர்களுக்குரிய சம்பளத்தில் வைத்தியச் செலவுக்கென குறிப்பிட்ட ஒரு தொகை கழிக்கப்படுகின்றது. இத்தகைய முறையில் பணத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைக் கழித்துக்கொண்டு மூன்று மாதத்திற்குப் பயன்படக்கூடிய வைத்திய சிகிச்சைக்கான ஒரு எழுத்துமூலப் பத்திரம் வழங்கப்படும். இதன் மூலம் வேலைபார்க்கும் நபரோ அல்லது அவரது குடும்பத்தினரோ சிகிச்சை பெறலாம். இதைப் போலவே இவர்களிடமிருந்து பெறப்படும் பணத்திலேதான் இவர்கள் வயோதிப நிலையை எய்திய போது வயோதிப சேமலாபநிதி என்றமுறையில் வயதான காலத்தில் வைத்திய வசதி நடைபெறுகின்றது. சிலவேளைகளில் குறிப்பிட்ட நபர் ஒருவர் பலவருடகாலம் நோயற்று சுகதேகியாக இருந்தால் அவரது பணத்தொகை ஏனைய வயோதிபரின் அல்லது சிசுக்களின் வைத்தியச் செலவுக்குச் சென்றுவிடும். மேலும் இங்குவந்து தற்காலிகமாகக் குடியேறி வேலைபார்க்கும் வெளிநாட்டவரிடம் இருந்து மிதே தொகை சம்பளப்பணத்தில் கழிக்கப்படுகின்றது. இவ்வாறாக வெளிநாட்டு நபர் ஒருவர் நோய் இன்றி ஐந்து பத்து வருடம் இங்கிருந்து சொந்த நாட்டுக்கு மீண்டால் அவருக்குரிய வைத்தியப் பணம் ஜேர்மன் மக்களுக்கே சென்றுவிடும். இவ்வாறாகப் பெறுகின்ற வைத்திய சிகிச்சைக்கான பணம் இன்னொரு முறையிலும் செலவாகின்றது. ஜேர்மனியில் அரசியற் தஞ்சம் புகுந்த வெளிநாட்டினர்க்கு அரசு இலவச வைத்திய வசதியை வழங்கி வருகின்றது. இந்த வெளிநாட்டவர்க்கும் மூன்று மாதம் பயன்படுத்தக்கூடிய கால எல்லையுடைய வைத்திய சிகிச்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டவர் இங்கு நோய்வாய்ப்பட்டால் இங்குள்ள மக்களுக்கு என்னென்ன சௌகரியங்கள் உண்டோ அதேமுறையில் பேதமின்றி வெளிநாட்டவர்க்கும் சிகிச்சையளிக்கப்படுகின்றது. நோயாளிகளை அன்புடன் வரவேற்று அவர்களுக்கு ஆதரவளித்து நோயைத் தீர்த்துவைப்பதில் ஜேர்மன் வைத்தியருக்கு, வைத்திய உத்தியோகத்தருக்கு, ஊழியருக்கு நிகர் எவருமில்லையென்று சொல்லலாம் மேலும் இங்கு வைத்திய நிலையத்தில் வழங்கப்படும் மருந்தைவிட வேறு மருந்துவகைகளை மருந்துக் கடைகளில் வாங்கும்படி வைத்தியர் சிலவேளைகளில் கூறுவார். அந்த மருந்துக்கான பெயரையும் வைத்தியரின் பெயர் விலாசத்தையும் குறித்த மருந்துக் கடைகளில் கொடுத்தால் அந்த நோயாளி குறிப்பிட்ட மருந்தை இலவசமாகவே பெறுவான். மருந்துக்கடை உரிமையாளர்கள் தமக்குரிய பணத்தை அரசாங்கத்திடமிருந்து வைத்தியத் தலைமையகத்தினூடாகப் பெற்றுக்கொள்வார்கள். வைத்தியரின் கைத்துண்டு இல்லாது தனிப்பட்ட முறையில் இவர்கள் மருந்துவகைகளை மருந்துக்கடைகளில் வாங்கும்போது அதற்குரிய பணத்தைச் செலுத்தித்தான் வாங்கவேண்டும், இவ்வாறு நோக்கும்போது தனிப்பட்ட தனியார் வைத்தியந்தான் உண்டு என்று எண்ணக்கூடாது, ஒவ்வொருவரும் வேலைபார்க்கும் தொழிற்சாலைகளிலோ அலுவலகங்களிலோ ஏனைய நிர்வாக நிலையங்களிலோ வைத்தியத்துக்கான பத்திரம் மூன்று மாதகால வரையறையுடன் வழங்கப்படும். அப்பத்திரம் மூன்று மாதத்தில் முடிந்தால் மீண்டும் புதிய பத்திரம பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பத்திரத்தைப் பெற்றபின்னர்தான் வைத்தியர் நோயாளியை அனுமதிப்பார். இதன்பின்னர் இவர்களுக்குரிய மருந்துவகைகள் இல்லாத போது கடைகளில் வாங்கும்படி வைத்தியர் சிட்டை கொடுத்தால் இலவசமாகக் கடைகளில் வாங்கமுடியும். இவ்வாறாக இங்குள்ள வைத்திய முறை தனியார், இலவசம் என்ற பேதமின்றி கூட்டாக இயங்குகின்றது எனலாம்.

வைத்தியசாலைகள் எப்பொழுதும் துப்பரவாகவும் தூய்மையானதாகவும் துர்நாற்றம் அற்றனவாகவும் அழகாகவும் இருக்கின்றன: வைத்தியசாலை என்று அறிவதற்குரிய எதுவித மருந்து மணங்களோ, ஏனைய நாற்றங்களோ இல்லை. எப்போதும் அமைதியாகவும் சுருங்கச் சொல்லின் ஒரு புனிதமான இடமெனலாம். நோயாளிகளுக்கென சகல வசதிகளையும் செய்துகொடுத்து அவர்களைச் சந்தோஷப்படுத்தி நோயினின்றும் காப்பாற்றி அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படுகின்றது. மேலும் நோயாளிகள் மனம் நோயினாலே அவதிப்படாமல் அவர்கள் மனதை வேறு உணர்வுக்கு, மகிழ்ச்சிக்கு கொண்டுவர ஒவ்வொரு வாட் (Ward) டிலும் (Television) தொலைக்காட்சிச் சேவையும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. அதாவது நோயாளிகள் படுத்துக்கொண்டு பார்ப்பதற்கு ஏற்ற முறையில் தொலைக்காட்சிப்பெட்டி இணைக்கப்பட்டுள்ளது. சிலருக்கு அதன் சத்தம் பிடிக்காமல் வேதனையை மேலும் கூட்டுவதாக இருக்கலாம். எனவே சத்தம் இல்லாத வகையில் காட்சிகள் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தத்தைக் கேட்கவிரும்பும் நோயாளிகள் விரும்பி ஞல் குறிப்பிட்ட ஒருசிறு தொகைப் பணத்தைக் தைக் கொடுத்து செவிப்புலன் கருவியைக் காதுக ளில் பொருத்துவதன்மூலம் கேட்கலாம். இவ்வாருக நோயாளிகளைச் சந்தோஷப்படுத்த, வேதனையில் இருந்து ஓரளவு மனதை மாற்ற இக்காட்சிச் சேவை கள் இருக்கின்றன. உணவுவகைகளும் இலவச மாக வழங்கப்படுகின்றன. இவற்றுக்கான செலவு கள் ஏற்கனவே இவர்களுடைய சம்பளத்திலிருந்து அறவாக்கப்பட்டிருக்கும் என்பதை மறத்தல் கூடாது. மேலும் இவர்களுக்குத் தேவையான ஏனைய உபகரணங்களை வாங்குவதற்கு அரசு ஓரளவு உதவி செய்கின்றது. உதாரணமாக மூக்குக்கண் ணுடி, ஊன்றுகோல் என்பனவற்றை வழங்கி அவர் களுக்கு உதவிசெய்கிறது. இவ்வாருக இங்குள்ள வைத்தியசேவை மிகச்சிறப்பான முறையில் நடை பெற்றுவருகின்றது. உலகிலேயே மிகவும் சிறப் பான முறையில் சகலவசதிகளையும் செய்து நோயா ளிகளைச் சிநேகபூர்வமான முறையில் அன்புணர்ச்சி யுடன் பழகும் விசேட பண்பை இங்கு காணக்கூடிய தாயுள்ளது, இது மிகவும் மெச்சக்கூடிய விடய மென்றே சொல்லவேண்டும். இதைவிட மாற்ற முடியாத நோயால் அவதிப்படும் வேற்றுநாட்டு நோயாளிகள்கூட இங்கு அனுப்பப்பட்டு தகுந்த சிகிச்சை பெற்று சுகதேகிகளாக மாறுகின்றனர். நவீன வைத்திய சாதனங்கள், சிகிச்சைகள் என் பன இங்கு கையாளப்பட்டு பலவித நோய்களும் எளிதில் கண்டுபிடிக்கப்பட்டு நிவாரணமளிக்கப்படு கின்றன. எனவே மனித ஆரோக்கியத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணும்வகையில் இங்கு வைத்திய வசதி பரா மரிப்பு முறைகள் அமைந்துள்ளன.

கீழைத் தேயத்தில் குறிப்பாக இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், கிழக்கிந்திய தீவுகள் போன்ற இடங்களில் 15ம் நூற்றாண்டுக் காலகட்டங்களில் ஐரோப்பியரின் ஆட்சியின்போது அவர்களதுநாட்டு நீதிபரிபாலன முறையே நிலவிவந்தது. உரோமன் டச்சுச் சட்டம், தேசவழமைச் சட்டம் என்பனவற் றின்கீழ் நீதிபரிபாலனம் நடைபெற்றது என்பதை இந்நாடுகளின் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும் போது அறிந்துகொள்ளமுடியும். தற்போதுள்ள இலங்கையின் நீதிபரிபாலனத்துக்கு இலங்கை உரோ மன் டச்சுசட்டமே அடிப்படை எனலாம். தற் போதுஐரோப்பிய தேசத்தில் ஓரளவுக்கு மாற்றமும் திருத்தமும் பெற்று நீதிபரிபாலனமுறை அமுலில் உள்ளது.

ஜேர்மனிய நீதிச்சட்டங்கள், ஒழுங்குகள் என் பன பொதுமக்களை எவ்விதத்திலும் பாதிக்காத முறையில் தத்தமது உடமைகளைப் பேணிக்காத்து சந்தோசமாக அவர்களை வாழவைக்கின்றது. இங் குள்ளவர்கள் உண்மையே பேசி நேர்மைக்குத் தலை வணங்கி நீதிச்சட்டங்களுக்குஉரியமதிப்பளிக்கின்றூர் கள், நீதி ஒழுங்குகளைத் துச்சமாக மதித்தோ அல்லது அவற்றை மீறியோ வாழமாட்டார்கள். உண்மையே பேசி ஒற்றுமையாக வாழ்கிறூர்கள் என லாம். மேலும் இங்கு குற்றவாளி எனக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தீர விசாரித்த பின்னரே தண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டனையைப் பெறுவர். இதைவிட ஊர்காவலரால் குற்றவாளிகள் எனச் சந்தேகிக்கப்பட்டால் அவர்க ளாற்தாம் சித்திரவதைப் படப்போகிறோமே என அஞ்சத்தேவையில்லை. பொலிசார் குற்றவாளிகளைப் பௌத்திரமாகப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண் டுபோய்ச் சேர்ப்பர். அதற்குமுன்னர் குற்றவாளி களுக்கு எவ்வித தொந்தரவும் கொடுக்கமாட்டார் கள். மேலும் குற்வாளிகள் எனக் கருதப்படும் பட் சத்தில் குற்றம்புரிந்தோர் தகுந்த தண்டனையைப் பெறுவர். அபராதம், சிறைவாசம், நிலக்கீழ்ச் சுரங்கச் சிறை என்பனவற்றை அனுபவிப்பர். குறிப்பாக இங்கு கூடுதலாக பண அபராதம்மூலம் குற்ற நடவடிக்கைகள் குறைக்கப்படுகின்றன. கை கலப்பு, பொருட்சேதங்கள் என்பவற்றுக்கு மிகக் கூடிய பணத்தை அபராதமாக விதிக்கும் நிலையுண்டு உதாரணமாக மோட்டோர் வண்டிக்கென உள்ள தரிப்பிடத்தில் மோட்டார் வண்டியை நிறுத்தா விட்டால் சொந்தக்காரருக்கு குறிப்பிட்ட தொ கைப் பணம் அபராதமாக விதிக்கப்படும், இவ்வா றுன அபராதத்துக்கு அஞ்சி இங்குள்ள மக்கள் சட் டத்தைச் செவ்வனே மதிப்பார்கள் எனலாம். மேலும் சிலவேளை இரு வாகனங்கள் ஒன்றை யொன்று மோதி சேதமேற்படலாம். யார்மீது குற் றமோ அவரே சேதப்பட்ட காருக்கான அத்தனை செலவுகளையும் பொறுப்பேற்கவேண்டும். அத்துடன் கார்கள் மோதுப்பட்ட அன்றே பொலிஸ் வந்து யாவற்றையும் விசாரித்து இந்தத்தீர்ப்பை வழங்கி அப்பிரச்சினையை அன்றுடனே முடித்துவிடுவர் தீர்வு காணுத பட்சத்தில் வழக்குமூலம் தீர்வுகாணப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் நாட்டிலென்றால் இது வழக்குத் தொடரப்பட்டு நீதிமன்றம்வரை சென்று மூன்று மாதமோ, ஆறுமாதமோ சென்று இந்தத் தீர்ப்புகள் வழங்கப்படும். இங்கு உடனுக்குடனே யாவும் சுமுகமாக நிறைவேறுகின்றன. பெரும்பாலான குற்றங்களுக்கு இங்கு பண அபராதமே விதிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட இருவரிடையே கலகலப்பு ஏற்பட்டால் அப்பிரச்சினைகளுக்கும் பண அபராதமே விதிக்கப்படுகின்றது, பாரதூரமான குற்றங்கள் செய்தால் கடுமையான தண்டனைகள் வழங்கப்படும். குற்றங்கள். விசாரணைகள் தக்கமுறையில். நிதானமான முறையில் விசாரணை செய்யப்பட்டே தீர்ப்பு வழங்கப்படும். அதாவது குற்றவாளிதானு என முடிவெடுப்பதற்கு தீர விசாரணை நடைபெற்றபின் உரிய தண்டனையைப் பெறுவர். இவ்வாறு இங்கு சட்டம் மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது எனலாம்.

ஜேர்மனிய பொருளாதாரத்தில் சந்தைமுறைகள், கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் கடைகள, உணவு விடுதிகள் என்பன முக்கியமான வியாபார நடவடிக்கைகளாகும். கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்கு மலிந்தசெலவில் பொருட்களை வழங்கிவருகின்றன. பாரிய கட்டிடங்களையும், மாடிகளையும் கொண்டனவாக இங்குள்ள வியாபார நிலையங்கள் அமைந்துள்ளன. கூட்டுறவுச் சங்கங்கங்களில் உணவுப் பொருட்கள்முதல் ஆடம்பரப் பொருட்கள் ஈருக விற்பனை செய்யப்படுகின்றன. பெரும்பாலான கடைகளை நோக்கும்போது எல்லாவற்றிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பொருட்களும் உண்டு. இங்கு பெரும்பாலான கடைகளில் குறிப்பிட்ட எல்லாப்பொருட்களும் உண்டு. உதாரணமாக பிடவைக்கடை ஒன்றின் ஒரு பகுதியில் உணவுவிடுதி இருக்கும், பிடவைக்கடைகளில் சில இடங்களில் நகைகளும் விற்பனையாகின்றன. உதாரணமாக ஒரு கூட்டுறவுக் கடைக்குள் நுழைந்தால் ஒருவருக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் வாங்கலாம். பாரிய கட்டிடங்களைக்கொண்டு இவை அமைந்திருப்பதால் ஒவ்வொரு பகுதியிலும் பொருட்கள் வகைப்படுத்தப்பட்டு ஒழுங்கான முறையில் அடுக்கப்பட்டுள்ளன. இவை நுகர்வோர்க்கு இலகுவாகப் பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடியதாயும் பார்ப்பதற்கு அழகாயும் இருக்கின்றன.

கூட்டுறவுக் கடைகள், ஏனைய தனியார் கடைகள், அன்றாடத் தற்காலிக கடைகள் போன்றவற்றில் பெண்களே அதிகம் வேலைசெய்கின்றார்கள். அதாவது வியாபார நடவடிக்கைகளில் ஆண்களைவிடப் பெண்கள்தான் அதிகம். இங்கு வியாபாரப் புகழ்பெற்ற கடைகள்முதல் உணவு விடுதிகள் வரை பெண்கள்தான் பெருந்தொகையாக வேலை செய்கின்றனர். அத்துடன் பெரும்பாலான கடைகளில் வேலைசெய்யும் பெண்கள், ஆண்கள் ஒரே நிற கோட் அல்லது சட்டை அணிந்திருப்பர். இங்குள்ள வியாபார நிலையங்களில் களவுகள் நடைபெற வாய்ப்பில்லை. காரணம் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு தொலைக்காட்சிப்பெட்டி பொருத்தப்பட்டுள்ளன. யாராவது களவெடுத்தால் அந்

தத் தொலைக்காட்சிப் பெட்டிகாட்டிக் கொடுத்துவிடும். மேலும் சிலகடைகளில் ஒவ்வொரு பொருளிலும் விலையுடன்கூடிய ஒரு உலோகம் இணைக்கப்பட்டிருக்கும். அந்த உலோகத்தை ஒருவித கருவியால் தேய்த்தபின்னரே அப்பொருளை வாடிக்கையாளருக்குக் கொடுப்பர். அவ்வாறன்றி யாராயினும் ஒருவர் அங்குள்ள ஒரு பொருளைத் திருடிக்கொண்டு கடைவாயிலைத் தாண்டும்போது வாயிலில் பொருத்தப்பட்ட ஒரு கருவி அதைக்கண்டுபிடித்து ஒருவித ஓசையை எழுப்பும். இதிலிருந்து களவெடுத்த நபர் கையும் மெய்யுமாகப் பிடிபடுவர். இவ்வாறாக புதுவகைச் சாதனங்களுடன் கூடியனவாய் இங்குள்ள வியாபாரஸ்தலங்கள் அமைந்துள்ளன, இவை ஆச்சரியத்துக்குரியதும் பாராட்டுக்குரியதுமான விடயமாகும். இத்தகைய சிறப்பான முறையில் நவீன அமைப்புகளுடன் இங்குள்ள வியாபார நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இவற்றைவிட வீதிகள்தோறும் சிகரட், இனிப்புவகைகள் என்பனவற்றை உள்ளடக்கிய பெரிய கொள்கலங்கள் பொருத்தப்பட்டுள்ளன. தேவையான சிகரட்டை அதற்குரிய பணத்தை அக்கொள்கலத்தில் இணைக்கப்பட்டுள்ள பணம்செலுத்தும் பகுதிக்குள் போட்டுவிட்டு ஒரு பொத்தானை அழுத்திஞல் ஒரு சிகரட் பெட்டியைப் பெற்றுக்கொள்ளலாம். அதேபோல இனிப்புவகைகளுக்கான பணத்தையும் போட்டு இனிப்பு, ரொபி என்பனவற்றைப் பெறலாம். இவ்வாறாக வியாபாரிகள் இல்லாமலேயே சுயசேவை (Self Service) முறையில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் இது நேரத்தை மிச்சம் பிடிப்பதுடன் மனிதஉழைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையும் மீதப்படுத்துகிறது. அதாவது மனிதர் செய்யும் வேலையைப் பெருவாரியாக ஏனைய தன்னியக்க கருவிகளே செய்கின்றன. இதனால் வேலைகள் துரிதமாக, செம்மையாக நடைபெறுகின்றன.

வயோதிபர் விடுதிகள், சமூக நலன்புரி சங்கம் என்பன மக்கள் நலன்கருதி தம்மாலான தொண்டுகளைச் செய்துவருகின்றன. வயோதிபர்களுக்குத் தேவையான சகல உதவிகளையும் அவர்கள் தேவைக்கேற்றவாறு இவ்விடுதிகள் தொண்டாற்றுகின்றன. சமூக நலன்புரிச் சங்கம் (Social Centre) இங்குள்ள மக்களின் குறைநிறைகளைக் கண்காணித்து அவர்களுக்கு வேண்டிய தேவைகளை நிறைவேற்றுகின்றன. மற்றும் அரசியற் தஞ்சம் கோரிய வெளிநாட்டவர்க்கும் ஏனைய ஆதரவற்றவர்கட்கும் இந்நலன்புரிச் சங்கம் தனது சேவையை வழங்குகின்றது. உதாரணமாக இவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், வைத்தியவசதி யாவற்றையும் இந்நலன்புரி நிலையங்கள் சொந்த மக்களுக்குச் செய்வதுபோல் வேற்று நாட்டு மக்களுக்கும் செய்து வருகின்றதென்றால் இதன் பெருமையைச் சொல்லவேண்டியதில்லை. சேவைத்துறைகளை நோக்கும்போது அதன் அபரித செயற்பாட்டையும், பலாபலன்களையும் நேரடியாகப் பார்க்கும்போது எல்லாம் வியப்பாகவே இருக்கும் பொதுவாகக் கூறின் இங்குள்ள அரசியற் பொருளாதார, நீதி, நிர்வாக அமைப்புகளை நோக்கும் எம் போன்றோர்க்கும் மலைப்பாகவே இருக்கும். அந்தளவுக்கு யாவும் துரிதகதியில் வியத்தகு முறையில் செயற்படுகின்றன. இந்த நிலையுடன் நமது நாட்

டையொப்பிட்டு நோக்கும்போது நாம் எவ்வளவு தூரம் பின்னிலையில் நிற்கிறோம். இது தற்போதைய நிலையில் எமது நாட்டுக்குச் சாத்தியமாகாத தொன்று என்ற முடிவை எடுக்கக்கூடியதாயுள்ளது. அத்துடன் எமது நாட்டுக்கும் ஜேர்மனிய நாட்டுக்கும் இடையேயுள்ள ஏற்றத் தாழ்வை அடையாளங் காண முடிகின்றது. பொருளாதார வலுப்பெற்றதாக ஒரு நாடு இருக்குமாயின் அந்தநாட்டை எந்தவொரு சக்தியாலும் ஒன்றுஞ்செய்ய முடியாதென மேலோட்டமான முறையிற் கூறலாம்.

இடைவெப்பக்காலநிலைப் பிரதேசமாகிய ஜேர்மனியில் விவசாயம் ஓரளவுக்குச் சிறப்பான முறையில் நடைபெறு, கின்றது விவசாயம் செய்வதற்குரிய நிலம் குறைவாக இருந்தபோதும் இங்கு கோதுமை, சணல், றைத்தானியம், சோளம் போன்ற தானியப் பயிர்களும், பழவகைச் செய்கையும், உருளைக் கிழங்கு கோவா, வெண்காயம், சோயா, அவரை, கரட், பீற்றூட் போன்ற காய்கறி வகைகளும் இங்கு செய்கைபண்ணப் படுகின்றன. நவீன விவசாய முறைகளைப் பயன்படுத்தி இங்கு பயிர் செய்கைபண்ணப் படுகின்றன. முக்கியமாக கோதுமையே இங்குள்ள முக்கிய விளைபொருளாகும் என்பதைக் குறிப்பிட்டாகவேண்டும். அடுத்ததாக றைத்தானியம் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதியாகின்றன. ஆண்டு தோறும் 50,00000 தொன் றைத்தானியம் இங்கு உற்பத்தியாகின்றது. இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தி நவீன கிருமிநாசினி உரவகைகளைப் பயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகின்றது, நிலத்தை உழுது பண்படுத்தல், விதை விதைத்தல். நீரிறைத்தல், பசளையிடுதல், அறுவடை செய்தல், களஞ்சியப்படுத்தல் போன்ற வேலைகள் இயந்திரங்களின் உதவியுடனேயே செய்யப்படுகின்றன. உதாரணமாகக் கோதுமை அறுவடையின் போது அறுவடை செய்யும் இயந்திரம் கோதுமைக் கதிர்களை வெட்டியெடுத்து தானியம் வேறாக (பதர்) உமி, வேறாக உடனே தரம் பிரித்து சேகரித்துக் கொண்டுவிடும், பின்னர் கோதுமைத் தாள்களைப் (வைக்கோல்) பிறிதோர் இயந்திரம் கட்டுக்கட்டான சுமைகளாக்கி அவற்றை ஏற்றிச் சென்று விடும். இவ்வைக்கோல்கள் காகிதத் தொழிலுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறாக அறுவடைக்கு நவீன தொழில்நுட்ப இயந்திரங்களே பயன்படுத்தப்படுகின்றன.

செயற்கைப் பசளைகளைவிட நவீனமுறையில் விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்பட்ட இயற்கைப் பசளைகளே இங்கு சிறப்பாக உபயோகிக்கப்படுகின்றன. புதுவகைக் கிருமிநாசினிகள், களைகொல்லிகள் என்பன இங்கு தயாரிக்கப்படுகின்றன. இத்தகைய நவீன வசதிகள் இருப்பதால் இங்கு பயிர்ச்செய்கை நிலம் குறைவாக இருந்தபோதும் மாற்றுப் பயிர்ச்செய்கை, படிக்கட்டு வேளாண்மை என்பவற்றின்மூலம் சிறப்பான விளைச்சலைப் பெறமுடிகின்றது, விவசாயம் செய்யமுடியாத மலைப்பாங்கான இடங்களின் சாரல்களில் நிலத்தைச் சமப்படுத்தி விவசாயம் செய்யப்படுகின்றது. இங்குள்ள தரையமைப்பு ஒரே சீரானதாக இல்லை. திடீரென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ச்சியுடைய மலைப்பகுதியும் அதை அடுத்தாற் போல் பள்ளத்தாக்கும் உடையதாய் ஒரு சமமற்ற அமைப்பைக் கொண்டுள்ளது. மலைப்பகுதிகளில் மரங்கள் அடர்த்தியாக வளர்ந்து காடுகளாகக் காட்சியளிக்கின்றன. ஓரளவுக்குச் சரிவாக உள்ள பகுதிகளில் உள்ள சிறுமரங்கள் வெட்டப்பட்டு அந்நிலத்தில் உருளைக்கிழங்கு, கோவா, பெரிய வெண்காயம், சோளம் என்பன செய்கைபண் ணப்படுகின்றன. இங்கு மழையை நம்பிப் பயிர் செய்யவேண்டியதில்லை. நிலத்துக்குக் கீழ் நீர்க் குழாய்கள் பொருத்தப்பட்டு நீர்ப்பாய்ச்சப்படுகின் றது. றைன்நதி, எல்ப் நதி, மெயின் நதி, டொனே நதி முதலிய நதிமூலம் நீர் பெறப்பட்டு நீர்ப்பாய்ச் சப்படுகின்றது. இங்கு பனிகாலத்தில் ஏறக்குறைய ஆறுமாதம் பனிவீழ்ச்சி நிகழ்ந்துகொண்டிருக்கும் ஆனல் பனிகாலத்தில் குளிர்காலத்தின்போது தாவ ரங்கள் யாவும் இலையுதிர்த்து காய்ந்தமரங்கள்போல் இருக்கும். இக்காலத்தில் பயிர்செய்ய முடியாது எனவே கோடைகாலத்தில் (Summer) தான் பயிர்ச் செய்கை நடைபெறுகின்றது. குளிர்காலத்தில்இலை யுதிர்த்த மரங்கள் யாவும் பங்குனி சித்திரை மாதங் களில் இலை துளிர்க்க ஆரம்பிக்கும். ஆடி, ஆவணி மாதங்களில் எங்கும் ஒரே பச்சைப் பசேலெனக் காட்சியளிக்கும். மரங்கள்மட்டுமல்ல சிறு பற் றைத் தாவரங்கள், பூஞ்செடிகள் என்பனவும் கோடை காலத்திலேயே இலை துளிர்த்துப் பூத்துக் குலுங்கும். மற்றும் முக்கியமாக இங்கு பூஞ்செடி வளர்ப்புசிறப்பிடம்பெறுகிறது.ஜேர்மனிய மக்களின் கொண்டாட்டங்கள், பிறந்ததின திருமண வைபவத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின்போது பூக்கள் வரவேற்புச் சின்னமாக அன்பளிப்புப் பொருளாக முக்கியத்துவம் பெறுகின்றது அத்துடன் பூக்கள் இங்கிருந்து வேறுநாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன. வாசனைப் பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன.

ஜேர்மனியில் மீன்பிடித் தொழில் சிறப்பாக நடைபெறுகின்றது எனக் கூறமுடியாது. அதாவது மிகவும் குறைவாகவே மீன்பிடிக்கப்படுகின்றது, இங்குள்ள மக்களின் தேவை பூர்த்திசெய்ய முடியாமையினால் பதனிடப்பட்ட மீன் கருவாடு, குளிரூட்டப்பட்ட மீன் தகரங்களில் இறக்குமதி செய்யப்பட்டு இங்கு விற்பனையாகின்றன. மீன். இறால், நண்டு போன்ற மீனினங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன, ஜேர்மனியின் கிழக்கு, மேற்கு, தெற்கு எல்லைகள் தரையாற் சூழப்பட்டிருக்கின்றன, இதனால் இங்கு மீன்பிடிப்பதற்கான வாய்ப்பு இல்லையெனலாம். உள்நாட்டுக்கடல்களும் இல்லை. ஜேர்மனியின் வட எல்லை ஓரளவுக்குக் கடலாற் சூழப்பட்டிருக்கின்றது. இதன் வடமத்திய பகுதியில் டென்மார்க் எல்லையாக உள்ளது. வடகிழக்குப் பகுதியில் பால்டிக் கடலும், வடமேற்குப் பகுதியில் வடகடலும் எல்லைகளாக இருந்தபோதும்இங்கு பிடிக்கப்படும் மீன்வகைகள் இங்குள்ளோர்க்குப் போதியதாக இல்லை, எனவேதான் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. குறிப்பாக தாய்லாந்திலிருந்து இங்கு மீன், நண்டு என்பன இறக்குமதியாவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மனியில் மந்தைவளர்ப்பும் ஓரளவுக்கு வருவாயைத் தேடிக் கொடுக்கின்றது. இங்குள்ள தாவரவகைகளில் பெரும்பகுதி புல்நிலங்களாகவும் உணவுப் பயிர்ச்செய்கை நிலங்களாகவும் இருக்கின்றன. மற்றேர் பகுதி கூரான இலைகளையுடைய ஊசியிலைக்காடுகளாக விளங்குகின்றன. புல்நிலங்களில் மந்தைவளர்ப்பு நடைபெறுகின்றது. இங்கு மந்தை வளர்ப்பில் பெருந்தொகையாக மாடுகளே சிறப்பிடம் பெறுகின்றன. ஆடு, கோழி, பன்றிபோன்றவையும் சிறிய அளவில் வளர்க்கப்பட்டு இங்குள்ள மக்களின் தேவையையே பூர்த்திசெய்யப் போதாமையால் இறக்குமதியும் செய்யப்படுகின்றன. ஆனல் இறைச்சி உற்பத்தித் தொழிலில் மாடுகளே பொருளாதார ரீதியில் நல்லவருமானத்தைப் பெற்றுக்கொடுக்கின்றன. இங்கு ஆண்டு தோறும் 10,00,000 தொன் மாட்டிறைச்சி உற்பத்திசெய்யப் படுகின்றன. இவ்வாருக ஜேர்மனியில் குறிப்பிடத்தக்க எல்லாத் தொழில்களும் ஓரளவுக்கு இடம் பெறுவதால் பொருளாதார ரீதியில் சிறப்புற்று பணம்படைத்த நாடாக விளங்குகின்றது. இத்தகைய நாட்டில் வசிக்கும் மக்கள் வாழ்க்கைத்தரம் என்றும் உயர்வுடையதாகவே இருக்கும். இதனல் இவர்களுடைய கலாச்சாரம் அபிவிருத்திப் பாதையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் என்பது தெளிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீழைத் தேய மேலைத்தேய கலாச்சார ஒப்பீடு

கீழைத்தேய கலாச்சாரத்தையும் மேலைத்தேய கலாச்சாரத்தையும் ஒப்பிட்டு எமது நாட்டுப் பண்பாட்டின் தாரதம்மியத்தை அறிந்துகொள்ளுதல் இவ்விடத்தில் அவசியமாகின்றது. மேலும் கீழைத் தேசம் என்னும்போது நாம் இங்கு நமது தேசமாகிய இலங்கையையும் மேலைத்தேசம் என்னும்போது ஜேர்மனியையும் கருத்தில் கொள்ளுதல் அவசியமாகின்றது. இங்கு ஒப்பீடு என்பது இலகுவான செயலல்ல. இருப்பினும் ஒரளவுக்கு ஒப்பிட்டு இவ்விரு நாடுகளின் கலாச்சாரங்களின் தன்மைகளை வெளிப்படுத்த முயல்கின்றோம். கலாச்சார அம்சங்களாக மொழி, கல்விமுறை, சமயம், கருத்துத்தொடர்புச் சாதனங்கள். விளையாட்டு, நடையுடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனை, பழக்க வழக்கங்கள், உணவுமுறை என்பன விளங்குகின்றன எனலாம். இவை யாவும் ஒன்றுடனொன்று தொடர்புடையனவாகப் பின்னிப் பிணைந்துள்ளன. உதாரணமாக மொழியைமட்டும் நோக்கினுல் அதற்குள் கல்வியும் வந்து சேர்ந்துவிடுகிறது. கல்வி முறைமைக்குள் கருத்துத் தொடர்புச் சாதனங்கள், விளையாட்டு என்பனவும் அடங்குகின்றன. இவ்வாருக ஒன்றையொன்று பாதிப்பனவாய் உள்ளன என்பதை அறியமுடிகிறது.

ஒருவர் தமது கருத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தவும், மற்றவர் கருத்தைத் தாம் அறிந்துகொள்ளுவதற்கும் உதவும் சாதனமே மொழி எனப்படும். இவற்றைச் சைகைகள் மூலமும் வெளிப்படுத்தி தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளலாம். மனிதர்மட்டுமல்ல ஏனைய உயிரினங்களும் தமக்குள்ளே ஏதோ ஒருவிதத்தில் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளுகின்றன. மக்கள் தத்தமது கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளப் பயன்படும் மொழி பல்வேறு இடங்களில், பல்வேறு இனமக்களால், பல்வேறு விதமாகப் பேசப்படுகின்றன. ஆனுல் சர்வதேச மொழியாக ஆங்கில மொழியே உலகெங்கும் பேசப்பட்டு வருகின்றது. நம்நாட்டில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்ற மூவகை மொழிகளும் பேசப்பட்டு வருவது யாரும் அறிந்த விடயமே. இந்தியாவில் இருப்பவை ஏறக்குறைய 20 மொழிகளுக்கு மேலாகும். ஜேர்மனிய நாட்டில் டொச் (Douetch) எனப்படும் ஜேர்மன் பாஷையையே மக்கள் பேசுகின்றனர்கள். சுதேச மொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக டொச் மொழி அமைந்துள்ளபோதும் இங்கு வேறு மொழிகளும் பேசப்படுகின்றன. அதாவது ஜேர்மனியில்குடியேறிய வேற்றுநாட்டு மக்களாலும் தற்காலக் குடியேற்றக்காரர்களாலும் பேசப்படும் வெவ்வேறு மொழிகள் இங்கு நடைமுறையில் குறை வாகக் காணப்படுகின்றன, குறிப்பாகத் துருக்கி, பிரான்சிய மொழி, இத்தாலிய மொழி, ஸ்பெயின் மொழி, யுகோசிலோவியா மொழி, ஆங்கில மொழி ஆகியவற்றை இதில் விசேடமாகக் கூறலாம். இவை யாவும் பேச்சுவழக்கில் இப்போது காணப்படுகிறது. ஆனல் இங்கு சுதேசமக்களால் சுதேச மொழியான ஜேர்மன் மொழியே பேசப்படுகிறது. குடியேறிக ளால் மற்றைய மொழிகள் இங்கு வழக்கில் இருந்த போதும் ஜேர்மனியர்கள் சுயமொழியில் பற்றுடை யவர்களாக அம்மொழியையே பேசிவருகின்றனர். அத்துடன் உத்தியோக மொழியாக ஜேர்மன்மொழி இருப்பதால் ஏனைய மொழிகளைக் கற்கவேண்டிய அவசியமில்லை. ஆங்கில மொழி குறைவாகவே உயர்பதவி வகிப்போரிடமும், உயர்கல்வி கற்போ ரிடமுந்தான் காணப்படுகிறது. தற்போது இளம் சமுதாயம் ஓரளவு ஆங்கிலம்கற்றுவருகின்றது. ஆங் கில மொழியை இவர்கள் பேச விரும்பாமைக்கு முன்னைய அரசியற் காரணியுமுண்டு. அதாவது இரண்டாவது உலகப்போரில் ஆங்கிலேயரின் வெற் றியும் ஜேர்மனியின் வீழ்ச்சியும் என்று கூறலாம்.

அரசாங்க அலுவல்கள், நிர்வாக அலுவல்கள் போன்ற ஏனையவை அரசகரும மொழியாகிய ஜேர் மன்மொழிமூலமே நடைபெறுகிறது.எனவேவேற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி கற்கவேண்டிய அவசியமோ தேவையோ இவர்களுக்கில்லை. நமது நாட்டைப் பொறுத்த வரையில் மூன்று மொழி பேசப்படுகிறது. சிங்களம் தமிழ் என்பன பூர்வீக மொழிகளாகவும் ஆங்கில மொழி இடையில் வந்து புகுந்த மொழியாகவும் காணப்படுகிறது. இலங்கை ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தபோது ஆங்கில மொழியே அரச கரும மொழியாக இருந்தது. அதன்பின் இலங்கை 1948ம் ஆண்டு சுதந்திரம் பெற்றபின்பும் தொடர்ந்து 1958ம் ஆண்டுவரை அரசகருமக மொழியாகவே அது காணப்பட்டது அதன்பின்பு சிங்கள மொழியே அரசாங்க மொழியாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. அத்துடன் இரண்டாவது மொழியாக தமிழ் ஆங்கிலம் என்பன இடம்பெறுகின்றன. சிங்களம் அரசாங்க மொழியாக இருப்பதால் தமிழ்மொழி பேசுவோர் சிங்கள மொழியைக் கற்கவேண்டிய தேவை ஏற்படுகிறது. மற்றும் உத்தியோக வாய்ப்பு, நிர்வாக வேலைகள் போன்ற சகல வேலைகளுக்கும் ஆங்கிலம் சிங்கள, தமிழினத்தின் பொதுமொழியாகச் சிறப்பிடம் பெற்றுள்ளது. வேலைவாய்ப்பு வசதிக்கு ஆங்கில மொழி அத்தியாவசியமாகிறது. எனவே சிங்கள மொழியைக் கற்காவிட்டாலும் ஆங்கில மொழியைக் கற்கவேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. பெரும்பான்மை மொழியாகச் சிங்கள மொழி இருப்பதால் அவர்கள் பெறும் அந்தஸ்து உரிமைகளைப்பெறத் தமிழர் சிங்களம் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக இருந்தாற்றான் இங்கு மொழிப்பிரச்சினையினைச் சமாளித்துக்கொள்ள முடியும். இதனால் தமிழர்கள் மொழி கற்பதில் தங்கள் நேரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைச் செலவிடவேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். ஆனால் சிங்கள இனத்தவர்கள் சிறுபான்மை மொழியான தமிழ்மொழியைக் கற்கவேண்டிய அவசியமில்லை. தமது மொழியான சிங்களமே அரசாங்க மொழியாக இருப்பதால் அம்மொழிமூலமே தமது கருமங்களை நிறைவேற்றிக்கொள்ளக் கூடியதாகவுள்ளது. ஆனால் சர்வதேசமொழியாக ஆங்கிலமொழி இருப்பதால் இரு இனத்தவருக்கும் இரண்டாவது மொழியாக அரசு அதனைப் பிரகடனப்படுத்தியுள்ளது. இதனால் பாடசாலைகள்தோறும் ஆங்கில மொழி கட்டாய மொழியாக அமுலில் உள்ளது.

ஆங்கில மொழியின் உபயோகம் இங்கு அவசியமற்றதால் ஜேர்மனியில் ஆரம்பக் கல்வியின்போது ஆங்கில மொழி கற்பிக்கப்படுவதில்லை இலங்கையில் பாலர் வகுப்பிலேயே ஆங்கிலமொழி குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது. அத்துடன் நமது சமுதாயத்தைப் பொறுத்தவரையில் ஆங்கில மொழி பேசுவதை நமது மக்கள் நாகரிகமாகக் கருதுகின்றனர். இதனால் சுயமொழியுடன் ஆங்கில மொழியைக் கலந்து பேசுவதனால் தம்மை உயர்வானவர்கள் எனக் கருதிக்கொள்ளும் பண்பும் உண்டு. இதிலிருந்து நாம் எமது தாய்மொழியில் எவ்வளவு பற்றுள்ளவர்கள் என அறியமுடிகிறது. அதாவது தாய்மொழியைப் பேசும்போது இடைக்கிடை ஆங்கில மொழியை வலிந்து இழுத்துத் தமது பேச்சில் கலந்து பேசுவதில் பெருமை கொள்கிறார்கள். இத்தன்மையை ஜேர்மன் மக்களுடன் ஒப்பிட்டு நோக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்போது சுயமொழிப் பற்றுள்ளவர்களாகத் தூய சுயமொழியையே பேசுகின்றார்கள், ஜேர்மன் மக்களில் ஆங்கில மொழியைச் சரளமாகப் பேசக்கூடிய ஒருசிலர் கூடத் தேவையான அவசியமான நேரங்கள் தவிர ம்ற்றைய நேரங்களில் மறந்தும் ஆங்கிலம் பேசமாட்டார்கள். அப்படிப் பேசினால் அவர்கள் அதை அநாகரிகமாகவே கருதுகின்றார்கள். மேலும் எமது நாட்டைப் பொறுத்தவரையில் அலுவலகங்களில் வேலைசெய்யவோ உத்தியோக வாய்ப்புப் பெறவோ ஆங்கிலமொழி அவசியமாயுள்ளது. இதனால் ஆங்கில மொழியைச் சரளமாகப் பேசுபவர் சமுதாயத்தில் உயர்வாக மதிக்கப்படும் நிலைமையுமுண்டு. இதனால் நாம் ஆங்கில மொழிக்கு மதிப்புக்கொடுத்து அதைப் பேசவும் எழுதவும் கற்றுக்கொள்கின்றோம். மேலும் 1798ல் ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பகுதியை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றி ஆட்சிசெய்தனர். அப்போது தமது சமயத்தைப் பரப்புவதோடு இலங்கையின் வாசனைத் திரவியங்களில் கண்வைத்து அவற்றைத தமது நாட்டுக்கு எடுத்துச் சென்றனர். இலங்கை அந்நியர் ஆட்சியால் அடிக்கடி பாதிக்கப்பட்டு ஸ்திரமான அரசியலின்றி நலிவுற்று இருந்தது. இதனால் அந்நிய ஆட்சியாளர் சொல்கிறபடி தலையாட்டவேண்டியிருந்தது. ஆங்கிலேயர் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பியதோடு மட்டுமன்றித் தமது மொழியான ஆங்கிலமொழியைக் கற்றவர்களுக்கு அரசாங்கத்தில் உயர்பதவிகளைக் கொடுத்தனர். மற்றும் பல சலுகைகளையும் வழங்கினர். இதனால் ஆங்கில மொழியை இவர்கள் உத்தியோக வாய்ப்புக் கருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றனர். அதைத் தொடர்ந்தே இன்றும் இலங்கையில் ஆங்கிலமொழி முக்கியத்துவம் பெற்றுவருகின்றது.

ஜேர்மனியில் ஆங்கிலமொழி மிக அருமையாகவே பேசப்படுகின்றது. பாலர் வகுப்பின்போது இங்கு பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வி கற்பிக்கப்படுவதில்லை. உயர்கல்வி நிலையையடையும் மாணவர்களுக்கே ஆங்கிலக்கல்வி அநேகமாகக் கற்பிக்கப்படுகிறது. மேலும் கட்டாயக் கல்வியாக இங்கு ஆங்கிலக் கல்வி போதிக்கப் படுவதில்லை. விரும்பியவர்கள் ஆங்கிலக் கல்வியைக் கற்கலாம். ஏனைய மொழிகள் வந்து குடியேறிய மக்களால் பேசப்படுகின்றன. இவர்கள் இங்கு குடியேறியமையால் ஜேர்மனியர் அவர்களது மொழியைக் கற்பதில்லை. தமது மொழியிலேயே பற்றுள்ளவர்களாக ஏனைய மொழி பேசுவோரையும் தமது மொழியைக் கற்கவேண்டிய தேவையை ஏற்படுத்தினரேயன்றித் தமது மொழியின் கட்டுக்கோப்பை எந்தளவுக்கும் விட்டுக்கொடுக்கவில்லை. ஏனைய மொழிக் கலப்பும் ஜேர்மனியில் இல்லை. ஆங்கில மொழி எழுத்துகளைப் போலத்தான் ஜேர்மன்மொழி எழுத்துக்கள் இருக்கின்றன. ஆங்கில மொழியில் 26 எழுத்துக்கள் இருக்கின்றன, ஜேர்மன் மொழியில் (Douetch) 28 எழுத்துக்களே உள்ளன. இவ்வெழுத்துக்களின்மேல் ஒவ்வொரு சிறு அடையாளங்கள் இடப்பட்டு a u o ஒலிகள் வேறுபடுத்தப்படுகின்றன. ஆனல் பார்ப்பதற்கு இவை யாவும் ஆங்கில எழுத்துக்களாகவே இருக்கின்றன. அதேவேளை சிலசில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கள் ஆங்கில உச்சரிப்பினின்றும் மருவியது போல் ஒலிப்பனவாக இருக்கும். உதாரணமாகச் சில சொற்களை நோக்கின் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும்.

| ஜேர்மன் மொழி | ஆங்கில மொழி | தமிழ்மொழி |
|---|---|---|
| Cafe | Coffee | கோப்பி |
| Rise | Rice | அரிசி |
| Charakter | Character | நடத்தை |
| Polizei | Police | ஊர்காவலர் |
| Pupille | Pupil | மாணவர் |

ஜேர்மனிய மொழியில் பெரும்பாலும் ஆங்கிலச் சொற்களின் சாயலையே அவதானிக்கலாம். ஆனல் அவை யாவும் ஆங்கிலச் சொற்களல்ல.

ஜேர்மனியக் கல்விமுறைமை எமது கல்வி முறைமையினின்றும் முற்றாக வேறுபட்டது. இலங்கையில் ஆறுவயதுக்கு முன்னரே பிள்ளைகள் பாலர் வகுப்புக்குச் செல்கின்றனர். பாலர் பாடசாலை இலங்கையிற் பெரும்பாலும் தனியார் பாடசாலைகளாகவே உள்ளன. ஜேர்மனியில் ஆறுவயதிற்குப் பின்னரே பிள்ளைகள் பாலர்வகுப்பிற்குச் (Kinder Garden) செல்கின்றனர். ஆறுவயது நிரம்பிய அத்தனைபேரும் Kinder Garden என அழைக்கப்படும் சிறுவர் பாடசாலைக்குப் போகவேண்டும். அப்படி அவர்கள் போகாமலிருப்பது சட்டவிரோதமான செய்கையாகக் கருதப்படுகின்றது குறிப்பிட்ட வயதுவந்த பிள்ளைகள் சிறுவர்பாடசாலைக்குச் செல்லாமலிருந்தால் அவர்களைத் தேடி ஊர்காவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Police) சென்று அதற்கான நடவடிக்கையை எடுப்பர். இவ்வாறாக இங்கு கட்டாயக் கல்விமுறையே நிலவுகின்றது. ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரை பிள்ளைகள் ஆரம்பக்கல்வி கற்றாலோ அல்லது கற்காவிட்டாலோ அதுபற்றி அக்கறையில்லை. உயர் கல்வியைப் பெறுவதும் இதே நிலைமைதான். பாடசாலைக்கு எல்லோரும் செல்லவேண்டும் என்ற நியதியில்லை. விரும்பியவர் கல்விகற்கலாம் அல்லது விடலாம். ஆனால் ஜேர்மனியில் பிள்ளைகள் கட்டாயம் பாடசாலை செல்லவேண்டியவர்களாக உள்ளனர். இதனால் இங்குள்ள மக்கள் அனைவரும் கல்விகற்று அறிவுள்ள சமுதாயமாக வாழ்கின்றனர். இங்கு எழுதப் படிக்கத் தெரியாதவர்களென எவரும் இல்லை. நமது நாட்டைப் பொறுத்தவரையில் எத்தனையோ மக்கள் கல்வி கற்க வசதியற்று படிப்பறிவு அற்று இருக்கும் நிலையை நோக்கும்போது வேதனைப்படவேண்டியுள்ளது. சேரிவாழ் மக்கள் பாடசாலை என்றால் என்னவென்று தெரியாதவர்களாகவும் இருக்கின்றனர். இவர்களின் பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று கல்விகற்பதற்கு வசதிகள் அற்றிருப்பதே இதற்குக் காரணமாகும்.

ஜேர்மனியில் பொருளாதார வளம் நிரம்பியிருப்பதால், இங்கு மக்களிடையே பணக்காரன், ஏழை என்ற ஏற்றத்தாழ்வு இல்லை. இதனால் பணப் பிரச்சினை இல்லை. எனவே பிள்ளைகளுக்கு என்ன படிப்புச் செலவு ஏற்பட்டாலும் அவற்றை ஈடுசெய்யக்கூடியமுறையில் மக்களிடம் பணவசதி இருக்கின்றது. இதனாற் பிள்ளைகள் யாவரும் பாடசாலை செல்கின்றார்கள். எமது நாட்டிற் சில பகுதிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளைப் படிப்பிக்கப் போதிய பணவசதியின் மையாற் பாடசாலையிற் பிள்ளைகளுக்கு அனுமதி பெற்றுக்கொடுக்கப் பெற்றோரால் முடிவதில்லை. மேலும் வறிய பெற்றோர்கள் தமக்குள்ள வருவாய் குடும்பச் செலவுக்குப் பற்றாமையினால் தமது சிறு பிள்ளைகளைக் கூலிவேலைக்கு அனுப்புகின்றனர். இன்னும் சிலர் தமது தொழிலையே பிள்ளைகளுக்குக் கற்பித்துத் தமக்கு உதவியாகச் சேர்த்துக்கொள்கின்றனர். இவற்றிலிருந்து நாம் அறிவது என்னவென்றால் இத்தகையவேறுபாட்டிக்குப் பொருளாதாரமும் காரணம் என்பதாகும். வறுமையின் நிமித்தம் சில பெற்றோர் பிள்ளைகளைக் கல்விகற்க அனுமதிப்பதில்லை. அதற்குரிய தாக்கத்தை உணர்வதற்கு அவர்களுக்குப் போதிய அறிவும் இல்லாமற்போகின்றது. ஜேர்மனியில் உள்ள பெற்றோர் பிள்ளைகளுக்குப் பணப்பிரச்சினை யின்மையால் அவர்கள் பாடசாலைக்குப்போகாது வேறு வேலைபார்க்கவேண்டிய அவசியமேயில்லை. எல்லோருக்கும் கல்விகற்கக் கூடிய வாய்ப்பு இங்குண்டு. இதற்கு நாம் எதிர் மாறாக இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

Kinder Gardenல் ஆறுவயதிற் சேர்ந்த பிள்ளைகள் பின் Kunch Schule என அழைக்கப்படும் பாடசாலைகளிற் சேர்ந்து நான்கு அல்லது ஆறு வருடங்கள் கல்விகற்பர். இதன்பின்னர் Haupt Schule என அழைக்கப்படும் பாடசாலைகளிற் பயிற்சிமுறையான கல்விகற்க அனுமதிக்கப்படுவர். அதாவது ஒவ்வொரு தொழிலுக்கும் ஏற்றமுறையில் அதே பயிற்சி நெறிக்கல்வியை முன்னிட்டு அத்துறைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியையே கற்பர். அதற்குரிய பாடங்களைமட்டுமே கற்கலாம். தமது தொழிற்கல்விக்கு ஒத்து வராத ஏனைய பாடங்களைக் கற்கவேண்டிய அவசியமில்லை. அதாவது தாம் தேர்ந்தெடுத்த தொழில் வாய்ப்பைக் கருதிய கல்வியில் விசேட திறமையைப் பெறுவதற்கே இந்த ஏற்பாடாகும், மேலும் இங்கு ஒவ்வொரு தொழில்ரீதியான முறையிலேயே கல்வி போதிக்கப்படுகின்றது. எங்கள் நாட்டைப்போல் கல்விக்கும் தாம்செய்யும் தொழிலுக்கும் பொருத்தமில்லாத முறையில் இங்கு கல்வி முறைமை இல்லை. மாணவர்கள் கற்ற கல்வி ஒருவிதமாகவும் அவர்கள் பார்க்கும் வேலை அக்கல்வியோடு சம்பந்தப்படாததாகவும் இருக்கும். உதாரணமாக எமது நாட்டில் க. பொ. த, உயர்தர வகுப்பு உயர்கல்வி கற்று அதில் தேறுவிட்டால் பெரும்பாலும் பின்னர் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுகிறார்கள். பின் அம் மாணவர்கள் தமது குலத்தொழிலான ஏதோ ஒரு தொழிலைச் செய்யவேண்டியவர்களாகின்றார்கள். அப்போது அவர்கள் கற்ற கல்வி ஓர்வகையாகவும் அவர்கள் செய்யும் வேலை வேறுவகையாகவும் இருந்தால் அவர்கள் கற்ற உயர்கல்வியில் எதிர்பார்த்த அளவுக்குப் பயனற்றுப்போகின்றது சில சந்தர்ப்பத்தில் இக்கல்வி எதுவிதத்திலும் அர்த்தமற்றதாகப் பயனற்றுப்போகின்றது. ஒரு மாணவன் ஒரு மீனவ குடும்பத்தைச் சேர்ந்தவனாக எடுத்துக்கொள்வோம். அப்போது அவன் விஞ்ஞான வகுப்பு அல்லது கலைவகுப்பு மாணவனாக இருக்கலாம். உயர்கல்விப் பரீட்சையில் இம்மாணவன் தவறி, பின் தனது குலத்தொழிலைச் செய்யும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது தொழிலுக்கு அவன்கற்ற உயர்கல்வி எந் தளவுக்கு உதவி செய்கின்றதென்பது கேள்விக்குரிய விடயமாகும். இந்நிலை எமது நாட்டிலிருப்பதால் தொழில் ரீதியான முன்னேற்றமற்று வறியநிலையில் சமுதாயம் இருக்கின்றது. ஒவ்வொரு தொழிலுக் கும் ஏற்ற முறையில் ஒவ்வொரு மாணவனையும் தெரிந்தெடுத்து அவனுக்கு அப்பாடங்களில். அத் துறையில் விசேடத்துவம் பெறச்செய்தால் அவன் குறிப்பிட்ட அத்தொழிலைச் செய்வதற்குரிய ஆற்ற லும் அறிவுமுள்ள உழைப்பாளியாகின்றான். இதே தன்மைதான் ஜேர்மனியக் கல்வியமைப்பில் உண்டு. Haupt Schule என்றழைக்கப்படும் பயிற்சிமுறைக் கல்வியின்போது தொழில்களுக்கேற்ற முறையில் அத்தொழிற் கல்வியையே போதிக்கின்றனர். வியா பாரம், வங்கி, காவலர், தபாற்கந்தோர், பாட சாலை, உணவுச்சாலை போன்ற இடங்களில் வேலை செய்வதற்கேற்ற கல்வியும் சிகையலங்காரம். வர் ணம் பூசுதல், கட்டிட வேலை, தச்சுவேலை, இரும்பு வேலை போன்ற வேலைகளுக்கு ஏற்றமுறையாக வெவ் வேறான கல்வி நெறியும் போதிக்கப்படுகின்றன. பின் வேலைக்கான கல்விகற்பிக்கப்படுகிறது,இதனால் ஒரு துறையை விரும்பிக் கற்கும் மாணவன் அதில் நிபுணத்துவம் பெற்று, தொழில்திறமை பெற்றுத் தொழில் வல்லுநராகின்றான். இந்தக் கல்வியமைப் பையே ஜேர்மனி கடைப்பிடித்துவருவதால் தொழி லில் முன்னேற்றமுற்றுப் பொருளாதார வசதி படைத்துள்ளது. சிகையலங்காரம் செய்யும் ஒரு தொழிலாளிகூட அதற்கான முறையில் விசேட பயிற்சிபெற்றே வெளியில் வருகின்றான். அதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் (Restaurant) உணவு விடுதிகளிலும் வேலை செய்வதற்கு அதற்கேற்ற முறையில் கல்விபெற்ற பின்னரே பெரும்பான்மையோர் அத்தொழிலில் ஈடுபடுகின்றனர். இவ்வாறே ஏனைய ஒவ்வொரு தொழிலுக்கும் விசேட பயிற்சி பெற்றபின்னர் அந்தந்த நெறிக்கேற்ற முறையில் வேலைசெய்யமுடியும். இத்தகைய கல்வி அமைப்பு முறையயில் உண்மையில் நாடு முன்னேறுகிறது என்பது ஆச்சரியத்துக்குரிய விடயமல்ல. இதே நிலைமை எமது நாட்டிலும் முற்ருகக் கடைப்பிடிக்கப்பட்டால் பொருளாதார ரீதியில் அது அபிவிருத்தியடையும் என்பதில் ஐயமில்லை. இன்று எமது அரசு தொழில் முன்னிலைக் கல்வியென்று பாடசாலைகள்தோறும் கற்பித்துவருகின்றது. இது பாராட்டுவதற்குரிய விடயமாகும். இருந்தும் அரசு எதிர்பார்த்த நோக்கத்தை இக்கல்வி முறைமை நிறைவேற்றுகின்றதா என்பது சந்தேகத்துக்குரியது. அந்தளவுக்கு எமது நாட்டில் நடைமுறைப் பயன் குறைவாகும். கற்ற கல்வி வேருகவும் செய்யும் தொழில் வேருகவுமிருக்கின்றது. இந்நிலை தவிர்க்கப்படவேண்டும். அப்போதுதான் எமது நாட்டில் ஒரு வளமான சமுதாயம் உருவாகும்.

Haupt Schule கல்வியின் பின்பு Ghymnasiam என்று குறிப்பிடப்படும் அதியுயர் கல்வியில் மாணவர்கள் சேர்க்கப்படுகின்ருர்கள். ஒன்பது வருடங்கள் இக்கல்வியைத் தொடர்ந்து கற்றபின்னர் பல்கலைக் கழகப் படிப்பை மேற்கொள்கிருர்கள். பல்கலைக் கழகம் சென்று உயர்கல்வி கற்ருேர் அரசாங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாக மற்றும் உயர்மட்ட அலுவல்களைச் செய் கின்றனர், இவர்களுக்கும் வேலைக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வேலைக்கு அனுமதிக்கப்படு வர். இவ்வாருக ஜேர்மனியில் ஒரு பிள்ளை நான்கு அல்லது ஐந்து வயதில் (Kinder Garden) அதாவது (Nursery) பாலர் பாடசாலைக்குச் சென்று பின் Kunch Schule என அழைக்கப்படும் சிறுவர் பாட சாலையில் ஆறு வயதிற் சேர்ந்து நான்கு வருடங்கள் படிப்பர், அதன்பின் Haupt Schuleஇல் ஐந்து வரு டங்கள் படிப்பர். அதன்பின் மூன்று வருடங்கள் வேலைப்பயிற்சிப் படிப்புக்குச் செல்வர். பின்பு Ghymnasiam (உயர்கல்வி)ல் சேர்ந்து ஒன்பது வரு டங்கள் கற்று உயர்கல்வி முடித்து வேலைக்குச் செல் வர். Ghymnasiam த்தின்பின் ஆற்றலுள்ள மாண வர்கள் பல்கலைக் கழகங்களுக்குச் சென்று கல்விகற் பர், உலகப் புகழ்பெற்ற Heidleburg University மேற்கு ஜேர்மனியில் உண்டு. இங்கு வெளிநாட்ட வர்களும் கல்வி கற்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

ஜேர்மனியப் பாடசாலைகளனைத்தும் அரசாங் கப் பாடசாலைகளாகவே இருக்கின்றன. ஆண், பெண் இருபாலாருக்கும் கலவன் பாடசாலைகளே இங்கிருக்கின்றன. இங்கு பாடசாலை நேரம் சரா சரி காலை ஐந்து மணியாகும். சாதாரணமாக ஏழு மணித்தியாலங்கள் கல்வி கற்பிக்கப்படுகின்றது. சிறுகுழந்தைகள் கல்விகற்கும் Kinder Gardenஇல் (Nursery Class) முக்கியமாகப் பழக்க வழக்கங்கள் ஒழுங்குமுறைகள், உரையாடல்கள் (Social moving)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துத் தொடர்புகள் என்பன இடம்பெறுகின்றன. எமது நாட்டில் இம்முறை அவ்வளவுக்குக் கடைப்பிடிக்கப்படுவதில்லை எனலாம். Kunch Schuleல் கற்கும் மாணவர்க்கு வாசிப்பு, எழுத்து, சமயம், கலாச்சாரத்தைப்பற்றிய அறிவுக் கல்வி என்பன முக்கிய பாடங்களாக இருக்கின்றன. அடுத்து Haupt Schule வகுப்பில் துணைப் பாடங்களாக மொழி, புவியியல், வரலாறு, விஞ்ஞானம், பொருளியல், கணிதம். இரசாயனம், பௌதிகம் என்பன அவரவர் தேர்ந்தெடுத்த தொழிற்கல்விக்கு ஏற்பப் போதிக்கப்படுகின்றன. பின் கிம்ஞசிய வகுப்பில் (Ghymnasiam) விருப்பமான பாடம்மட்டும் படிக்கலாம். இவ்வாறுக எமது கல்விமுறைமைக்கு முற்றிலும் வேறுபட்ட வகையில் இவர்களது கல்வியமைப்பு (Education System) அமைந்துள்ளது எனலாம்.

இங்கு வருடத்தில் இரண்டுகாலப் பிரிவில் கற்பித்தல், பரீட்சை என்பன நடைபெறுகின்றன. எமது நாட்டில் உள்ளதுபோல் இங்கு தவணைக்குத் தவணை லீவு இல்லை. வருடத்தில் வரும் விசேட பண்டிகைகளுக்கும், கோடைகாலத்தில் பொழுதை உல்லாசமாகக் கழிப்பதற்குமென பருவ காலங்களையொட்டிய விடுமுறைகள் உள்ளன. ஜேர்மனியில் நான்கு பருவகாலங்கள் உள்ளன. இப்பருவங்களுக்கு ஏற்றமுறையில் இவர்களது வசதிகருதியே விடுமுறைகள் வழங்கப்படுகின்றன. வருடத்தில் இலையுதிர்காலத்தின்போது ஒருகிழமை லீவு வழங்கப்படுகின்றது. கோடைகாலத்தில் ஆறுகிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீவு உண்டு. இதுவே மிக நீண்ட விடுமுறையாகும். இப்பருவ காலத்திலேயே இங்குள்ள மக்கள் வெளியில் ஊர்சுற்றிப் பார்த்துப் பொழுதைச் சந்தோஷமாகக் கழிப்பர். குளிர்காலத்தை அனுபவித்துச் சலித்த மக்களுக்குக் கோடைகாலம் மகிழ்ச்சியைக் கொடுக்கும் காலமாகும். எனவேதான் இந்த நீண்ட விடுமுறை அமைந்துள்ளது. இதைவிட (Christmas Vacation) நத்தார்ப் பண்டிகை லீவு என மூன்றுகிழமை விடுமுறை கொடுக்கப்படுகின்றது. இவற்றைவிட ஞாயிற்றுக்கிழமை லீவுகளும் உண்டு. சனிக்கிழமைகளில் சிலவேளை மாதத்தில் இரண்டு சனியாவது பாடசாலை நடைபெறும். இப்படியான விடுதலைநாட்கள் வழங்கப்படுவதால் வசதி கருதி இரண்டு தவணைகளாகப் பாடசாலை நாட்கள் பிரிக்கப்பட்டுள்ளன. எமது பாடசாலைகளில் தேர்வின்போது மாணவரது வகுப்புநிலை 1, 2, 3, என ஸ்தானம் வழங்கப்படும். ஆனால் ஜேர்மனியில் 1, 2, 6, என்ற முறையில் வகுப்புநிலை கொடுக்கப்படுகின்றது. எமக்கு மூன்றாவது நிலையைப் போன்றே இங்கு ஆறாவது நிலை அமைந்துள்ளது. ஜேர்மனிய பாடசாலைகளில் கல்வியாண்டு செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கின்றது. எமது நாட்டில் ஜனவரி மாதம் கல்வியாண்டு ஆரம்பித்து மூன்று தவணைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பருவகாலத்தை யொட்டிய பகுப்பு எம்மிடையே இல்லை. மற்றும் ஜேர்மனியில் பாலியற் கல்வி, வயோதிபர் கல்வி என்பனவும் முக்கியமானவையாகும். பாடசாலைகளிடையே பாலியல்பற்றிய அறிவு மாணவர்களுக்கு அளிக்கப்படுகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. இது முக்கியமாகக் குறிப்பிடக்கூடிய அம்ச மாகும். ஒவ்வொரு பாடசாலையிலும் ஒவ்வொரு நூல்நிலையம் அமைந்துள்ளது. பாடசாலை மாண வர் மட்டுமன்றி ஏனையோரும் இந்நூல்நிலையங்களி லிருந்து நூல்களைப் பெறலாம் பெரும்பாலும் ஒரு மாதத்தவணையில் புத்தகங்கள் (வாசகர்களுக்கு) அங்கத்தவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது மாண வரோ ஏனையோரோ புத்தகங்களை எடுக்கும்போது இங்குள்ள நாணயம் 10 பெனிக் கட்டியே எடுக்க வேண்டும். ஜேர்மனிய நாட்டினர் மட்டுமன்றி ஏனைய வெளிநாட்டவர்களும் அங்கத்தவர்களாகச் சேர்ந்துகொள்ளலாம். கல்வி அபிவிருத்திக்கு இங் குள்ள அரசாங்கம் கூடிய கவனமெடுத் துவருகின்றது எனலாம். பருவகாலங்களையொட் டிய லீவு இங்கு வழங்கப்படுவதால் காலநிலையின் செல்வாக்கினை அறிந்துகொள்ளமுடியும். அதாவது கல்வி, கலை என்பன கலாச்சாரத்தின் ஒரு அம்ச மாக விளங்குவதால் காலநிலை கலாச்சாரத்தைப் பாதிக்கின்றது என்பதை இதில் விளங்கிக்கொள்ள முடியும்.

ஐரோப்பிய நாட்டு மக்கள் பரவலாகக் கிறிஸ் தவ மதம், புரட்டஸ்தாந்து மதம் என்பவற்றைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர், இவர்கள் சம யப் பற்றும் சமய நம்பிக்கையும் உள்ளவர்கள். யேசு நாதர் கூறிய அருள்வார்த்தையான 'உன்னைப்போல் பிறரையும் நேசி' அடுத்தவர் மீது அன்புகாட்டு என் பதற்கேற்ப இவர்கள் ஒருவரோடு ஒருவர் பழகிக் கொள்கின்றார்கள். இங்குள்ள மக்கள் மதத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கைகொண்டு அதன் விதிமுறைகள், கோட்பாடுகளின்படி வாழ்க்கை நடாத்துகின்றனர். கிறித்தவ மதபிரசாரங்கள்,மதபோதனையாளர். பிரசாரகர்கள் இங்கு கிறித்தவ மத வளர்ச்சிக்கு ஆவன செய்கின்றனர். மக்களைத் தம் மதத்தின்மீது நம்பிக்கைவைக்கச் செய்கின்றனர். மதகுருமார்கள் பெரும்பாலும் சமூகத் தொண்டர்களாக இருக்கின்றனர் எனலாம். ஒவ்வொரு கிராமத்துக்குக் கிராமம் மிக நெருக்கமான முறையில் தேவாலயங்கள் அமைந்துள்ளன. ஒவ்வொருஞாயிறுதோறும்விசேட நாட்களின்போதும் பூசைகள் நடைபெறுகின்றன. நமதுநாட்டில் கிறித்தவ தேவாலயங்களில் நடைபெறும் கிரியை முறையே இங்கும் நடைபெறுகின்றது. மொழி ஒன்று பேதமே தவிர மற்றவை அனைத்திலும் பேதமில்லை, மேலைத் தேயத்தவரின் வருகையால் அவர்களின் மதமே எம்நாட்டில் இன்னும் கடைப்பிடிக்கப்படுவதால் பேதங்கள் இருப்பதற்குக் காரணம் இல்லையே.

ஐரோப்பிய ஆட்சியின் சின்னமாக இன்னும் கிறித்தவ மதம் இலங்கையில் உண்டு. ஐரோப்பிய கிறித்தவ மதமே எமது நாட்டு கிறித்தவ மதத்தின் அன்னை எனலாம், ஞானஸ்நானம் பெறுதல், திருமணம், இறப்புக் கிரியைகள் என்பன தேவாலயங்களில் விதிமுறைக்கேற்ப நிறைவேற்றப்படுகின்றன. யேசு பிறப்பு, மரணம், உயிர்த்தெழுந்த தினம் போன்ற தினங்களில் சந்தோஷமாக இறைவனைத் தியானித்துக்கொள்வர். மதநம்பிக்கை மக்களுடன் இரண்டறக் கலக்கவேண்டும் என்பதற்காக ஆரம்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையிலேயே மதக்கல்வி போதிக்கப்படுகின்றது. மதகுருமார் மக்களிடையே அமைதியையும், அன்பையும், சமரச உணர்வையும், மகிழ்ச்சியையும் பரப்பி அவர்களுக்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றவர். தேவாலயம், பூங்கா, சமாதி ஆகிய மூன்றும் இங்கு ஒன்ருகவே பெரும்பாலும் அமைந்திருப்பதைக் காணமுடியும்,

இங்குள்ள கருத்துத் தொடர்புச் சாதனங்களில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, திரைப் படம், தொலைபேசி என்பன முக்கிய இடம்பெறுகின்றன. ஒருவரையொருவர் நேரிற் சந்திக்காமலேயே உடனுக்குடன் கருத்தைப் பரிமாறிக்கொள்வதற்கு உதவும் சாதனம் தொலைபேசியாகும் ஒரு கிராமத்திலிருந்து இன்னெரு நாட்டிலோ கிராமத்திலோ, பட்டினத்திலோ இருக்கும் நண்பர்களிடம் தொடர்புகொள்ள, அலுவலகங்களிற் தொடர்புகொள்வதற்கு தொலைபேசி பேருதவியாயுள்ளது. தனிப்பட்ட நண்பர்களுக்கிடையிலான உரையாடல்,வியாபாரம் சம்பந்தமான தொடர்புகள், வேறு பல வகைக் கருத்துத் தொடர்புகளுக்கும் தொலைபேசி பயன்படுகின்றது. இதனுல் இவர்களுக்கு நேரம் மிச்சம் பிடிக்கப்படுவதோடு செலவுச்சிக்கனமும் ஏற்படுகின்றது. அதாவது இத்தொலைபேசிச் சேவை இல்லாவிட்டால் குறிப்பிட்ட ஒருவருடன் தொடர்புகொள்ள வேண்டுமாயின் பிரயாணச் செலவு செய்து அவரைச் சந்திக்கவேண்டும். அத்துடன் இதற்கென நேரமும் செலவாகின்றது. இங்குள்ள மக்கள் காலத்தைப் பொன்போல் மதிப்பவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். ஒரு நாளைக்கு என்ன வேலைகள் செய்யவேண்டுமென ஏற்கனவே திட்டமிட்டுச் செயற்படும் இவர்களுக்கு நேரம் மீதப்படுத்தப்படுகின்றது. மிகக்கூடிய பயனைத் தொலைபேசிச் சேவை இவர்களுக்கு வழங்குகின்றது. அவசர தேவைகளை, கருத்துக்களை உடனுக்குடன் அறிந்துகொள்ளும் வகையில் தொலைபேசிச் சேவை துணைபுரிவதால் அநேகமாக இங்குள்ள எல்லோர் வீட்டிலும் தொலைபேசிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இவை மக்களின் அத்தியாவசியப் பொருட்களில் ஒன்றாக உள்ளன.

ஒவ்வொரு வீடுகளிலும் மட்டுமல்ல தெருவீதிகள்தோறும் ஆங்காங்கே நெருக்கமான முறையில் தொலைபேசிப் பெட்டிகள் (Telephone Booth) அமைக்கப்பட்டிருக்கின்றன, இவை மஞ்சள் நிறமுடையன. ஒரு சிறிய அறைபோன்ற பெட்டிக்குள் ரெலிபோன் பொருத்தப்பட்டிருக்கும். வீதிகளில் உள்ள தொலைபேசிப் பெட்டிகள் பொதுமக்களின் பாவனைக்கென அவர்களுடைய நலன்கருதி அமைக்கப்பட்டுள்ளன. பிரயாணம் செய்யும் போதோ அல்லது பாதசாரியாகச் செல்லும்போதோ தனக்கு வேண்டியவர்களுடன் அவசரத் தொடர்பு கொள்வதற்கு உதவும் இப்பெட்டிகளின் உதவிக்கு நிகரில்லையெனலாம். நேரத்தைப் பயனுள்ள தொழிலுக்குப் பயன்படுத்தும் ஜேர்மனிய மக்களுக்கு நேரத்தைச் சுருக்கமான முறையிற் பயன்படுத்தி உதவுவதில் தொலைபேசிச் சேவையும் ஒன்றாகும். நமது நாட்டில் இத்தகைய முன்னேற்றகர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான நிலை இல்லையெனலாம். உயர்மட்ட வகுப்பி னர்களுடைய வீடுகளில் ஓரளவுக்கு அருமையாக தொலைபேசி உண்டு. இங்கு தொலைபேசியின் சேவைக்கு எமதுநாட்டுத் தொலைபேசிச் சேவை ஈடு கொடுக்கமுடியாது. வீதிகளில் இணைக்கப்பட் டுள்ள (Telephone Booth) தொலைபேசிப் பெட்டி காலநேரமின்றி எந்நேரமும் இயங்கிக்கொண்டே யிருக்கும். உள்நாட்டு வெளிநாட்டுத் தொடர்புக் கும் பயன்படுவதுமட்டுமன்றி உள்வீட்டுத் தொடர் புகளுக்கும் இது துணைபுரிகின்றது. அதாவது இங் குள்ள வீடுகள் மட்டுமல்ல அரசாங்க அலுவலகங் கள், காரியாலயங்களும் இப்படிப்பட்டவையே. மேல்மாடியில் உள்ள ஒருவர் இருந்த இடத்தி லிருந்து மூன்றும் நான்காம் மாடியில் உள்ளவர்க ளோடு தொடர்புகொண்டு கருத்துக்களைப் பரிமா றிக்கொள்வர். சுருங்கச் சொல்லின் ஒரு பிரதேசத் திலிருந்துகொண்டே இன்னொரு பிரதேசத்துடன் கருத்துத் தொடர்புகொள்வதற்கு இதன் சேவைக் கும் தேவைக்கும் எல்லையே இல்லை.

பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கும் சாதனங்களில் மற்றொரு சாதனம் தொலைக்காட் சிப் பெட்டியாகும், இதில் ஊர்விவகாரங்கள்முதல் அரசியல் விவகாரங்கள்வரை இருந்த இடத்திலேயே நேரிற் பார்ப்பதுபோன்று பார்த்தறியக்கூடியதாக இருக்கின்றது, தொலைபேசிச் சேவை எவ்வளவு முக்கியத்துவம் பெற்று செல்வாக்கைப் பெறுகின் றதோ அதேபோல் தொலைக்காட்சிக் கருவியும் அமைந்துள்ளது. அதேவேளை வீடுகள். அலுவலகங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். வியாபார நிலையங்கள் போன்ற எல்லா இடங்க ளிலும் தொலைக்காட்சிப் பெட்டிகள் அத்தியாவசிய பொருளாக அமைந்துள்ளன. உலகச்செய்திகள் அரசியற்செய்திகள், திரைப்படங்கள், காலநிலை அம்சங்கள், கல்விநிகழ்ச்சி, அறிவியல் அம்சங்கள், விளையாட்டு, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் என்பன ஒளிபரப்பப்படுகின்றன. சிறுவர், வயோதிபர், என்றபேதமின்றி எல்லோரும் தொலைக்காட்சிமூலம் நன்மை பெறுகின்றனர். வயோதிபர் தமது பொழு தைப் பெரும்பாலும் தொலைக்காட்சி மூலம் கழிக் கின்றனர். எமது நாட்டிலும் தொலைக்காட்சிச் சேவை மிக அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ளது. ஆனால் இங்குள்ளதைப்போன்று மக்களின் அன்றாட அத்தியாவசியப் பொருளாக இல்லை. மேலும் தொ லைக்காட்சிச் சேவை எமதுநாட்டில் திறம்படச் செயற்படுகின்றது எனக் கூறமுடியாது. அந்தள வுக்கு இச்சேவை அபிவிருத்தியடைவதற்கு ஏற்ற வாய்ப்புகள் எம்நாட்டில் இல்லை. ஒருசில பணம் படைத்தவர்கள்தான் தொலைக்காட்சிப் பெட்டியை சொந்தமாக வைத்திருக்கின்றனர். மேலும் இது அதிக விலையுள்ள பொருளாக, அவசியம் தேவை யற்ற பொருளாக எமது நாட்டில் உண்டு. தொலைக் காட்சிப் பெட்டியை விட அதற்கு மேலாக அத்தி யாவசியப் பொருட்கள் தேவையாக இருப்பதும் தொலைக்காட்சிப் பெட்டியின் உபயோகக் குறை வுக்குக் காரணம் என்று கூறலாம்,

வானொலி, பத்திரிகை, திரைப்படம் என்பன பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கும் சாதனங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகும். தொலைக்காட்சியை அடுத்து பத்திரிகை, வானொலி என்பன மக்களிடையே பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதிலும், அதற்கான தீர்வு வழங்கலிலும் முக்கியமாயுள்ளது. வானொலி, பத்திரிகைமூலம் மக்களுக்கு நாட்டின் சகலதுறைச் செய்திகளும் பரப்பப்படுகின்றன. தொலைக்காட்சிச்சேவை இச்செய்திகளைப் பரப்பிவருவதால் வானொலிக்கு வேலை குறைவாயுள்ளது. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் பொதுமக்கள் யாவரும் அறியக்கூடிய முறையில் செய்திகளைப் பரப்புவதில், மக்கள் கருத்துக்களைச் செவிமடுப்பதில் வானொலி, பத்திரிகை என்பனவேயே முக்கிய சாதனங்களாயுள்ளன. இன்று நம்நாட்டில் எல்லோரிடமும் வானொலிப் பெட்டிகள் உள்ளன. அந்தளவுக்கு அதன்சேவை மக்களிடையே பிரபல்யமடைந்துள்ளது. எல்லாவற்றையும்விட மிக மலிந்த விலையில் செய்திகளைப் பரப்பும் ஒரேயொரு சாதனம் பத்திரிகையெனலாம். ஜேர்மனிய நாட்டிலும் பத்திரிகைகள் மக்களிடையே சிறப்புப் பெற்றுச் செய்திகளை உடனுக்குடன் அறிவிக்கின்றன. எமது நாட்டைப் போலவே நாளாந்த, வாராந்த, மாதாந்த பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுகின்றன. இங்குள்ள எல்லா மக்களும் பத்திரிகை வாசிப்பதில் ஆர்வமாயுள்ளனர். சிறுவர்கள் மத்தியிலும் பத்திரிகை வாசித்தல் முக்கிய பழக்கமாயுள்ளது. இவற்றைவிட திரைப்படங்களும் இங்கு பல திரையிடப்படுகின்றன. மற்றும் இங்கு சமூகப் படங்கள், வரலாற்றுப் படங்கள் என்பனவும் வயது வந்தவர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கென நம்நாட்டில் குறிப்பிடப்படும் படங்கள் யாவும் இங்கு திரையிடப்படுகின்றன.

பாலியற் படங்களும் அதிகம் திரையிடப்படுகின்றன. இத்தகைய சாதனங்களால் தீமைகளும். குறிப்பாக சிறுவர் சமுதாயத்தில் உருவாகலாம். ஆனால் ஜேர்மனிய நாட்டில் இச்சாதனங்களின் தேவை அவசியமாயுள்ளது. இதேபோல் எமது நாட்டுக்கும் அது தேவையாக இருந்தபோதும் இவற்றின் சேவையை அனுபவிக்குமளவுக்கு எமது நாடு அரசியல் ரீதியாகவோ. பொருளாதார ரீதியாகவோ வலுப்பெற்றிருக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் ஊட்டுவதோடு தேகாரோக்கியத்தையும் பேணக்கூடிய விளையாட்டுத்துறையில் ஜேர்மனிய மக்கள் அதிக ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள். விளையாட்டுக்கு என ஒரு குறிக்கப்பட்ட நேரத்தை ஒதுக்கிவைத்துள்ளனர். சிறுவர், இளைஞர், வயதுவந்தோர் என்ற பேதமின்றி யாவரும் விளையாட்டில் ஈடுபடுவர். முக்கியமான விளையாட்டுக்களாக உதைபந்தாட்டம் பனிச்சறுக்கு விளையாட்டு, ஹொக்கி, ரெனிஸ் என்பன மிகப் பிரபல்யமானவை. இவ்விளையாட்டுகள் நாடுகளுக்கிடையே போட்டி ரீதியில் இங்கு அடிக்கடி நடைபெறுகின்றன, இதற்கெனப் பிரமாண்டமான விளையாட்டு மைதானங்கள் இங்கு இருக்கின்றன. பல புதுப்புது விளையாட்டுக்கள் இங்கு இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகின்றன. தண்ணீருக்குள் நின்று பந்துகடத்தல், சக்கரம் பூட்டிய சப்பாத்துடன் ஹொக்கி விளையாடுதல், பனிச்சறுக்கு விளையாட்டு, கராட்டி மல்யுத்தம் எனப் பலவகைப்படும் இத்தகைய முறையில் விளையாட்டுத்துறை நம்நாட்டில் முன்னேறவில்லை அத்துடன் விளையாட்டுத்துறைக்கு என்று பெரும்பணத்தை ஒதுக்கி திறம்பட செயற்படமுடியாத நிலையில் நம்நாடு வறுமையில் உள்ளது எனலாம்.

நாட்டுக்கு நாடு மக்கள் பண்பாட்டுக்கு ஏற்ப அந்நாட்டுக் காலநிலைக்கு ஏற்ப, பொருளாதார வசதிகளுக்கேற்ப மக்களின் நடையுடை பாவனை வெவ்வேறு பாணியில் அமைந்திருக்குமென்பது யாவரும் அறிந்த உண்மையாகும். ஒரு நாட்டின் கலாச்சாரம், பாரம்பரியம், காலநிலை என்பன மக்களின் உடைகளை நிர்ணயிப்பதில் முதலிடம் வகிக்கின்றன எமது சமுதாயத்தைப் பொறுத்தவரை குறிப்பாகத் தமிழரிடையே பாரம்பரியம், பண்பாடு என்பன நடையுடை பாவனையை நிர்ணயிக்கின்றன எனலாம் ஆனல் ஜேர்மனியைப் பொறுத்தவரை அவர்கள் தத்தமக்கு எது வசதியோ, தமக்கு எவ்வுடையணிவதற்கு சௌகரியமானதோ அவற்றையே அணிகின்றனர். இவர்கள் அழகுக்காக, நாகரிகத்துக்காக உடையணியவேண்டும் என ஆலாய்ப் பறப்பதில்லை. தமக்கு எந்த ஆடைவகைகள் விருப்பமோ அதை அணிவர். அதற்காக அழகுகருதி தமது சௌகரியங்களுக்கு மாருக உடையணியமாட்டார்கள், அதேநேரம் அவர்கள் அழகை ரசிப்பதில்லையென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிவிடமுடியாது. அழகை இவர்கள் அனுப விக்கும் விதத்தில் ஒவ்வொருவரும் தத்தமது ரச னைக்கு ஏற்றமுறையில் அனுபவித்துக்கொள்வர். ஒருவரைப் பார்த்துத் தாமும் உடையணியவேண்டு மென்ற நோக்கமோ மற்ற நாட்டவர் அணியும் உடைகளைப் போன்று தாமும் அணிவதுதான் நாக ரிகம் என்று கருதும் தன்மையோ ஜேர்மனிய மக்க ளிடையே இல்லை. எமதுநாட்டில் இத்தகைய நிலை முற்றும் எதிர்மாறானதாகும். மேல்நாட்டுப் பாணி யில் மோகம்கொண்டவர்களாக எமது சமுதாயத் தினர் அவர்கள் அணியும் உடையைத் தாமுமணிய விரும்புகின்றனர். அவ்வாறு அணிவதையே நாக ரிகம் எனக்கருதும் பண்புமுண்டு. எமது நாட்டுமக் களிடையேயுள்ள நடையுடை பாவனை மேல்நாட்ட வரின் நடையுடைகளின் பிரதிபலிப்பாகவே அமைந் துள்ளதைக் காணக்கூடியதாயிருக்கின்றது. இதற்கு ஒருவகையில் நம்நாட்டுக் கடந்தகால வரலாற்று நிகழ்ச்சியும் காரணியாக இருக்கின்றதென்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

மேல்நாட்டவரான போர்த்துக்கீச, ஒல்லாந்த ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றி ஒருவர்பின் ஒருவராக ஆட்சிசெய்தனர் இவர்கள் தமது ஆட் சியின்போது தமது நடையுடை பாவனை, உணவு, முறை, பொழுதுபோக்கு அம்சங்கள் என்பவற்றை யும் பரப்பினர். நமது மக்களிற் பெரும்பாலோர் இவர்களின் பண்பாட்டு நடவடிக்கை, நடையுடை பாவனைகளைத் தாமும் பின்பற்றினர். இவ்வாறாக ஆட்சிசெய்த வகுப்பினர் பொருளாதார வளம்நிரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பியவர்களாக இருந்தனர். எமது நாடு வறிய நிலை யில் மட்டுமல்ல அரசியல் ஸ்திரமற்றும் இருந்தது. எனவே தாமும் ஒரு வளமுள்ள ஒரு வாழ்க்கையைப் பெற இப்பணக்கார வர்க்கத்தினரின் ஆட்சியை விரும்பியதோடு அவர்களுடைய நடையுடை பாவ னையைப் பின்பற்றி அவர்களைப்போல வாழவிரும்பி னர் என்பதை மறுக்கமுடியாது. அந்த விருப்பத் தின் விளைவுதான் இன்றும் நிலவுகின்றதோ என்ன வோ, மேல்நாட்டு உடைகளில் எமது நாட்டினர்க்கு அதிகமோகம் உண்டு. இதனால் அவர்களுடைய உடைகளைப்போல் அணிய விரும்புவதோடு அதை யே நாகரிகம் எனக் கருதுகின்றனர். அதற்காகத் தமது உடலுக்கு ஒத்துவராத முறையிற் சில உடை கள் இருந்தாலும் அதை நாகரிகம் என்ற போர்வை யில் அணிந்து தமது உடலைச் சிரமத்துக்குள்ளாக்கு கின்றனர். இவ்வாறு தமது தேகத்துக்கு ஒத்துவ ராதமுறையில் சௌகரியமல்லாத (uncomfortable) முறையில் உள்ள ஆடைகளை நாகரிகம் என்ற போர் வையில் அணியத்தான் வேண்டுமா என்ற கேள்வி எழுகின்றது. உண்மைதான். இப்படியான பண்பு ஜேர்மனிய மக்களிடையே இல்லை தமக்கு, தமது உடலுக்கு எது சௌகரியமாக இருக்கின்றதோ அதையே அணிகின்றனர். நாகரிகம் என்று உடலுக் குப் பிடிப்பில்லாத உடைகளை அணியமாட்டார்கள் இது பாராட்டக்கூடிய விடயமென்றே சொல்ல வேண்டும்.

உண்மையில் எமது சமுதாயத்தில் நாகரிகத்துக் கும் அழகுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தடியாகவே தமது உடலமைப்புக்குத் தாமணியும் ஆடை பிடிப்பானதா, தமது காலநிலைக்கு ஏற்றதா இறுக்கமானதா என்பதைக் கவனித்துக்கொள்கின்றனர். இந்நிலை எமது சமுதாயத்திடமிருந்து நீங்கவேண்டும். அப்போதுதான் எமது பொருளாதாரத்திற்கு ஏற்றமுறையில் வாழ்க்கை நடாத்த முடியும். ஜேர்மனியில் ஆண்களுக்கான உடை. பெண்களுக்கான உடை என வேறு தன்மையான ஆடைவகைகள் இருக்கின்றன. சில உடைகளைப் பொறுத்தவரையில் ஒரே மாதிரியாகவே அணிகின்றனர். இங்குள்ள ஆண்கள் நீளக்காற்சட்டை· மேற்சட்டை, அரைக்காற்சட்டை என்பவற்றை அணிகின்றனர். பெண்களும் அதிகமாக நீளக்காற்சட்டை, சேட், மேலங்கி, (Coat) முழந்தாள் நீளமுடைய கவுண், அரைப் பாவாடை (Mini Skirt) மினி ஸ்கேட். அரைக்காற்சட்டை, ரீசேட், கையுள்ள கையற்ற மேலங்கிகள், சட்டைகள் போன்ற பலரக ஆடைகளை அணிகின்றனர். தேவாலயங்களில் நடைபெறும் பூசையின்போது மக்ஸி (Maxi) எனப்படும் கணுக்கால் நீளமுள்ள ஆடையை உடுத்துவர். இரவு வேளைகளில் ஆண்கள், பெண்கள் இரவுடையை உடுத்துவர். இவை இறுக்கமற்ற காற்ரேட்டமுள்ள சட்டைகளாகவும் நீளக்காற்சட்டைகள் போன்று கைநீளமுடையதாக இருக்கின்றன. வயதுவந்தவர்கள் மட்டுமல்ல சிறுவர் சிறுமியரும் இரவுடை தரித்தே நித்திரைக்குச் செல்வர்.

எங்கள் நாட்டிற் பொதுவாக ஆண்கள் வேட்டி சால்வை, சாரம் போன்ற உடைகளை அணிகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். தற்போதைய நாகரிக மோகத்தால் இவற்றின் உபயோகம் இன்றைய இளைஞரிடையே செல்வாக்குப் பெற்றுவருகின்றது. இவர்கள் மேல்நாட்டுப் பாணியிலமைந்த நீளக் காற்சட்டை, பெல் பொட்டம் (Bell Bottom) சேட் என்பவற்றை அணிகின்றனர். இது மேல்நாட்டவரின் உடையைப் போல் தாமும் அணியவேண்டுமென்ற மோகம் எனலாம். மேல்நாட்டவர் தமது நாட்டுச் சூழலுக்கேற்ற முறையிலேயே உடைகளைத் தெரிவுசெய்கின்றனர். இங்கு மாரிகாலத்தில் உடலை வருத்தக்கூடிய முறையில் பனிவீழ்ச்சி ஏற்பட்டுக் கடுங்குளிராக இருக்கும். இக்குளிரைத் தாங்கக்கூடிய முறையில் உடலை முழுவதும் மூடுவதற்காக நீளக் காற்சட்டை அணிகின்றனர். அத்தோடு மேலங்கிகளையும் கைநீளமுடையதாகவே பாவிக்கின்றனர். இவற்றைவிடக் குளிரைத் தாங்கக்கூடிய கம்பளி உடைகள் Over Coat, Sweater, Full Over தடித்த துணிகளால் தைக்கப்பட்ட ஆடைகள் என்பவற்றைப் பயன்படுத்துகின்றனர். மற்றும் இங்கு விஞ்ஞான வளர்ச்சி பெற்று இயந்திரமயமான முறையில் சகலவேலைகளும் நடைபெறுகின்றன. இங்குள்ள இயந்திர துரித வேலைகளுக்கு, கட்டிட வேலைகளுக்கு ஏறியிறங்கி வேலைசெய்ய இலகுவான முறையில் நீளக்காற்சட்டை உதவியாக இருப்பதாலும் அவற்றையே பெரும்பாலும் அணிகின்றனர்.

கோடைகாலத்தில் இங்கு அதிக வெப்பம் 20c சராசரியாக உள்ளது. கடும் வெயிலால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள மக்கள் ஆடைகளைக் குறைத்து அரை குறை ஆடைகளையே அணியவேண்டியவராகின் றனர். எவ்வளவுக்கு இவர்கள் உடைகளைச் சுருக்க முடியுமோ அந்தளவுக்குத் தமது தேகத்தை வெளிக் காட்டி வெப்பத்தைத் தணித்துக் குளிர்காற்றினை அனுபவிக்க முயல்கின்றனர். ஆண்பெண் பேத மின்றி இருபாலாருமே இவ்வாறு அரைகுறை ஆடைகளை அணிகின்றனர். இது இவர்களைப்பொ றுத்தவரையில் சாதாரண விடயமே. இப்பண்பு இங்குள்ள மக்களுக்கு ஒரு வித்தியாசமான செய்கை யாகவோ சலனத்தை ஏற்படுத்துவனவாகவோ இல்லையெனலாம். இத்தகைய பண்பாட்டில்ஊறிய இவர்களுக்கு மற்றவர்களைப் பற்றிய அக்கறையில்லை தமக்கு எது சௌகரியமாக, இலேசானதாக இருக் கின்றதோ அதையே செய்வார்கள். உதாரணமாக ஜேர்மன் பெண்மணி கடுமையான வெப்பத்திினின் றும் தனது உடலைப் பாதுகாக்கத் தனது உடலில் காற்றும் சூரியவெளிச்சமும் படவேண்டும் என்ற நோக்கில் மார்புக் கச்சையையும் உள்ளங்கியையும் அணிகின்றாள். இது இங்குள்ளோர்க்கு மாறுபா டான செய்கையாக இல்லை. அத்துடன் இங்கு நீச்ச லுடை தரித்து நீந்துவர், வெப்பத்தைத் தணிக்கும் பொருட்டு (Swimming Pool) நீச்சற்றடாகங்கள் இங்கு இடத்துக்கிடம் அமைந்திருக்கின்றன. மக் கள் அங்குசென்று குளிப்பர், (நீந்திச் சந்தோஷமா கப் பொழுதைக் கழிப்பர்.) நீச்சலுடை தரிக்காது வேறு ஆடைகளுடன் அந்தத் தடாகங்களிற் குளிக் கமுடியாது. மற்றும் இங்கு நீச்சலின்போது நீச்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுடை தரித்துக் குளிப்பதற்கான இடமும், உடைகளெதுவுமின்றிக் குளிப்பதற்கு வேறு இடமுமாக வெவ்வேருக இருக்கின்றன. இங்கு கோடைகாலத்தில் நெருப்புச் சுவாலைபோன்று வெயில் உடலை வாட்டும். அதற்கேற்ற முறையில் தமது ஆரோக்கியத்திற்காக இங்குள்ளவர்கள், மெல்லிய ஆடைகள், ஒற்றையாடைகள், அரைகுறையாடைகள் என்பவற்றை அணிகின்றனர். இது காலநிலையின் பாதிப்பு எனலாம்.

நமது நாட்டு ஆண்களின் உடைகள் முன்னர் குறிப்பிட்டபடி அமைய, பெண்களை நோக்கின், நம்மினத்தவர் சேலை, நீளப்பாவாடை போன்ற ஆடைகளை அணிகின்றனர். இப்பண்பு பழமையை பேணுவோரிடையேதான் சிறப்பாக உள்ளது. ஆனல் தற்போது நாகரிகம் வளர்ச்சியடைய சேலையணியும் பழக்கம் குறைந்துவருவது வேதனைக்குரிய விடயமாகும், முழங்கால் தெரியும் ஆடைகளை அணிவது எமது நாட்டுப் பண்பாட்டை உடைத்தெறிவதாக உள்ளது. சேலை அணிவதுதான் எமது இனத்தவரைப் பொறுத்தவரை சிறப்பானது. இருந்தும் தற்போது இளம்பெண்கள் இவற்றை வெறுத்துக் கட்டைக் கவுண் அரைப்பாவாடை (Mini Skirt, Tight Skirt) போன்ற ஆடைகளை அணிவதே நாகரிகமெனக் கருதுகின்றனர். இந்த உடைகள் இவர்களுடைய செயல் நடவடிக்கைகளுக்குத் தடங்கலாயிருந்த போதும் நாகரிகம் என்ற போர்வையில் இவற்றையணிந்து தம்மைத் தாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருத்திக்கொள்கின்றனர் எனலாம். மேலும் சிலர் ஆடைகளையணிந்து பஸ் வண்டிகளில் ஏறுவதற்கும் அமர்வதற்கும் எவ்வளவோ கஸ்டப்படுகின்றனர் என்பது எல்லோரும் அறிந்ததொன்றாகும். இந்த வேதனையை நாமேன் விளைகத் தேடிக்கொள்ளவேண்டும் என்று எமது சமுதாயத்தினர் சிந்திப்பதில்லை. பொதுவாகச் சில சிங்கள முஸ்லிம் பெண்மணிகளும் சேலையை விரும்பியணிகின்றனர். ஆனால் எம்மினத்து இளஞ்சமுதாயப் பெண்ணினம் இதை அவ்வளவுக்குக் கடைப்பிடிக்கத் தயங்குகின்றது ஓரளவுக்கு வயதுவந்த சராசரி 35 வயதிற்கு மேற்பட்டவர்கள் சேலைகளையே அணிகின்றனர். இதில் எவ்வித மறுப்பும் இல்லை, இவர்கள் வீட்டிலிருக்கும் போது கால் நீளமுடைய உடைகளை அணிகின்றனர் காரணம் குளிரினாலல்ல. கால் வெளியே தெரிய உடையணிவது கற்புக்கு இழுக்கு என்று போதிக்கும் எமது சமுதாயப் பாரம்பரியமே இதுவெனலாம். இங்கு இரவில் நித்திரையுடை தரித்தே நித்திரைக்குப் போகின்றனர். ஆனால் எல்லோரும் இரவுடை தரித்தா நித்திரைக்குப் போகின்றார்கள் என்பது கேள்விக்குறி. பொதுவாகப் பணம் படைத்த மத்தியதர வர்க்கத்தினர் இத்தகைய உடைமாற்றங்களிற் பெரும்பாலும் கவனம்செலுத்துகின்றனர். ஜேர்மனியைப் பொறுத்தவரை கட்டாயமாகச் சூழலையொட்டி நீளக்காற்சட்டையணிகின்றனர். எமது சமுதாயப் பெண்களும் நீளக்காற்கட்டை அணிந்துகொள்வதற்கு நாகரிகமோகமா, காலநிலையா காரணமென்பது புரியாத புதிராயுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலநிலையின் தன்மை இங்கு உடைகளை நிர்ணயிப்பதால் அதற்கு ஈடுகொடுக்கக்கூடிய முறையிலே உடைகளை அணியவேண்டியுள்ளது. எமது நாட்டிலும் காலநிலை உடைகளில் ஆதிக்கம் செலுத்தவே செய்கிறது ஜேர்மனியில்பாடசாலை மாணவர்க்குரிய சீருடை அணியும் வழக்கமில்லை. ஏனெனில் மாரி காலத்தின்போது (பனிவீழ்ச்சி) குளிரைப் பேணும் உடைகள் அணிதல் அவசியமாகின்றது. அதற்கான உடைகள் மேலங்கிகள்' கோட், ஜக்கெற் என்பன பலதரப்பட்ட நிறமுடையனவாக இருக்கின்றன. கோடையில் இன்னோர் விதமான ஆடை வகைகளை அணியவேண்டியவரா யுள்ளனர். இத்தகைய நிலையிருப்பதால் இங்கு பாடசாலைச் சீருடை இல்லையெனலாம். விளையாடும்போது அணிவதற்கு விளையாட்டுடை மற்றும் தொழில்ரீதியான உடைகளென்பன இங்கு உபயோகப்படுத்தப் படுகின்றன. நோயாளியாக இருக்கும்போது (வைத்தியசாலை உடை) வைத்தியசாலையில் இருக்கும்போது அணிவதற்கென உள்ள மேலங்கி, தொழில்நிலையச் சீருடைகள் (வங்கி, வியாபார நிலையம், கூ. சங்கங்கள்) திருமண உடைகள் எனப் பலவிதமான உடைகளுண்டு எமது நாட்டிலும் இத்தகைய முறைகள் ஓரளவுக்கு உண்டு என்பதை மறுக்கமுடியாது.

ஜேர்மனிய மக்களுக்கு உடைகள் மாத்திரமல்ல ஏனைய அணியலங்கார வகைகளும் காலநிலைக்கு இயைந்துபோகக்கூடிய வகையில் மாறுபாடா யுள்ளன. இங்கு குளிர்காலத்தில் உடல் குளிரினால் விறைத்துவிடும். எனவே உடம்பை மறைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையணியக்கூடிய முறையில் கை, கால்களுக்குக் குளிர்பிடிக்காவண்ணம் உடையணிய வேண்டியவ ராகின்றனர். கைவிரல்களில் குளிர்பிடிக்காத வகையில் கையுறைகளை (Gloves) அணிகின்றனர். கால்களுக்குத் தடித்த தோலினாலான சப்பாத்துகள் முழந்தாள் நீளமுடையதாக (கணுக்காலிலிருந்து) வும் சப்பாத்துக்களை அணிவர். கம்பளி நூலினால் நெய்யப்பட்ட கால்மேஸ் நீண்ட உள்ளங்கிகள் போன்றவற்றைப் பாவிப்பார்கள். குளிர்காலத்தில் வேறுவிதமான சப்பாத்துக்களையும் கோடைகாலத் தில் இன்னோர் வகையான சப்பாத்துகளையும் அணி வார்கள். மற்றும் ஜேர்மனிய மக்கள் காலணிகளை எப்போதும் அணிந்தபடியே இருப்பர். அதாவது கோடைகாலத்திலும் சரி மாரிகாலத்திலும்சரி தொ டர்ந்து காலணிகளைப் பாவிப்பர்: ஒருபோதும் அவர்களுடைய பாதங்கள் வெறுமையாக இராது. படுக்கைக்குப் போகும்போது மட்டுமே அவர்கள் கால்கள் வெறுமையாக இருக்கும். இதற்குக் கார ணம் குளிர்காலத்தில் வீடுகளின் தரையில் கால் வைக்க முடியாத அளவுக்கு குளிர் காணப்படும் என்பதற்காகவே பாதணிகளை யணிவர், தேகா ரோக்கியம் கருதியும் பாதணிகளை எப்போதும் உப யோகப்படுத்துவர். இங்கு எமது சமூகத்தினரை நோக்கின் குறிப்பாக மத்தியதர வகுப்பினர் வீடுக ளில் இருக்கும்போதும் காலணிகளைப் பாவிப்பர், இதற்குக் காலநிலை காரணமா? நாகரிகம் காரண மாவென்பது புரியவில்லை. ஆகவே இதை மேல்நாட் டுப் பாணியிலுள்ள மோகமென்றே எண்ணவேண் டியுள்ளது. காலணிகளைவிடத் தொப்பிகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்காவ் போன்ற அணிகளையும் இருபருவத்துக்கும் ஏற்றவகையில் வெவ்வேறு விதமாக அணிகின்றனர் இவ்வாருக இங்குள்ள மக்களின் கலாச்சாரத்திற் பெருமளவு காலநிலையே செல்வாக்குச் செலுத்து கின்றது எனலாம்.

ஜேர்மனிய சமுதாயத்தில் அழகணி. அலங்காரம், ரசனை அதன்வழி ஏற்படும் சந்தோஷத்தில் இன்பம் அனுபவிக்கும் தன்மை முதன்மையாக உண்டு. அதாவது இவர்கள் அழகுக்கு, அழகுசாதனங்களுக்கென பெரும்பகுதி பணத்தை ஒதுக்குகின்றனர். முக்கியமாகப் பெண்கள் அதுவும் நடுத்தர வயதிற்கு மேற்பட்டவர்கள் அழகு சாதனங்களைப் பயன்படுத்துவதில் அதிக அக்கறையுள்ளவராயிருக்கின்றனர். விதம்விதமான வாசனைப் பொருட்கள், தைலங்கள், கிறீம்வகைகள், கூந்தல் தைலங்கள், கூந்தலைச் சுத்தப்படுத்தும் அழுக்குநீக்கிகள் உதாரணமாக ஷம்பு (Shampoo) கண்மை, நகப்பூச்சு, வாய்ப்பூச்சு இங்குள்ள மக்களாற் பெரிதும் நுகரப்படுவதால் இவற்றிற்கு கிராக்கி அதிகம். இதனுல் சிலவகை வாசனைப் பொருட்கள் இறக்குமதிசெய்யப்படுகின்றன. ஆகவே அத்தியாவசிய அன்ருட உபயோகப் பொருட்களில் இவையுமொன்ருக இருக்கின்றன. ஆனுல் இத்தகைய பண்பு எமது சமுதாயத்தினரிடையே இந்தளவுக்கு இல்லையெனலாம். ஒரு சில பணம்படைத்த குடும்பத்தினர் இதனை உபயோகிக்கின்றனர். சாதாரணமாக அழகுசாதனப் பொருட்களுக்கு எனப் பணத்தைச் செலவழிக்கும் பண்பு மிகக்குறைவான முறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களிடையே உண்டு. நகரப்பகுதிகளில் வாழும் மக்கள்தான் இதில் கூடிய கவனமெடுக்கின்றனர். மேலும் ஜேர்மனியில் குழந்தைகள், வயதுவந்தோர் முதியவர், இளைஞர்களுக்கு ஏற்றவிதத்தில் தோல் அமைப்புக்கு ஏற்ப வாசனைப்பொருட்கள் எண்ணெய்வகைகள், தைலங்கள் என்பன வெவ்வேறு யுள்ளன என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

எமது சமுதாயத்தில் நகைகள் அணியும் வழக்கப்போல் இங்கும் நகைகளணிவதில் மக்கள் விருப்பமுடையவர்களாக இருக்கின்றனர். காப்பு, சங்கிலி, மாலை, தோடுகளை அணிகின்றனர். எங்களூரில் தங்கத்துக்குள்ள மதிப்பு இங்கில்லை. குறைந்த கரட் தங்கம், ஐம்பொன் போன்ற உலோகங்களாலான ஆபரணங்களையே இங்குள்ளோர் விரும்பிப் பூணுகின்றனர். எமது நாட்டைப்போல் தங்கத்தின் பெறுமதி விஷ்போல் ஏறுவதுமில்லை. எமதுநாட்டில் 24 கரட் தங்கத்துள்ள மதிப்பு இங்கு பெறமுடியாது. அதன் மதிப்பு எங்கள் நாட்டிற்குத்தான் பொருத்தமானதுபோல் விலை ஏறிக்கொண்டு வருகின்றது. அதேநேரம் இங்குள்ள மக்கள் அந்தரகத் தங்கத்தை விரும்பி வாங்கவும்மாட்டார்கள். விற்பனையும் இல்லை. அத்தகைய முறையில் தங்கத்தின் பெறுமதி இங்குண்டு. பெண்களே தங்கத்தில் பெரிதும் விருப்பமுடையவர்களாக இருப்பதால் பெண்களுக்குரிய ஆபரணங்கள் பல விதங்களில் உள்ளன. பெண்கள் தோடு அணிவார்கள். சிலபெண்கள் அணியவிரும்பாது காது குத்தாமலேயே இருக்கின்றனர். இன்னும் சிலர் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதில் தோடணிவர். தங்கத்திலான தோடுகள் மட்டுமன்றி முத்துக்கள், பிளாஸ்ரிக் தோடுகள், வெள்ளித்தோடுகள் இறப்பரினாற் செய்யப்பட்ட தோடுகளை அணிவர். மேலும் மூக்குத்தி, மிஞ்சி போன்ற ஆபரணங்களை அணிவதில்லை ஆனால் எமது நாட்டில் மூக்குத்தி, மிஞ்சி, தோடு என்பன எல்லாப் பெண்டிராலும் பொதுவாக அணியப்படு கின்றன. இது பழமையில் ஊறிய பண்பாடாகும். பெண்பிள்ளைகள் ஏறக்குறைய ஐந்து வயதிற்கு முன்பே காதுகுத்தித் தோடு போடுகின்றனர். ஆண் களில் பழைய கொள்கையில் நாட்டமுடைய முதி யோர் கடுக்கன் எனும் காதணியை அணிவர். மேலும் எமது நாட்டில் சில வகுப்பினர் ஆண் குழந்தைக ளுக்குக் காதுகுத்தும் சடங்கு என்னும் ஒரு விழா வை நடாத்திக் காதணியை அணிவிக்கும் பண்பு இன்று ஓரளவுக்கு மிக அருமையாக உண்டு. ஜேர்ம னியிலும் சில ஆண்கள் காதுகுத்திக் காதணி அணி யும் வழக்கம் அருமையாக இருந்துவருகிறது. அது அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது எனலாம். ஆகவே இங்குள்ள மக்கள் இங்குள்ள காலநிலைக் கேற்ப தமது அணியலங்கார வகைகளை மேற்கொள் கின்றனர். மற்றவரைப் பார்த்துத் தாமும் பின் பற்றவேண்டுமென்று விரும்பமாட்டார்கள். தமக்கு எது திருப்தியோ அவற்றையே கடைப்பிடிப்பர். ஆனால் எமது சமுதாயத்தினரிடையேமற்றவர்களைப் பார்த்துப் பின்பற்றும் பழக்கமிருப்பது கவலைக்குரிய தும் நீக்கவேண்டியதுமான விடயமாகும்.

நடையுடை பாவனை என்பதில் இரு தேசத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் ஓரளவுக்கு ஒப்பிட்டு உடைப்பாவனைகளை இது வரை நோக்கினோம். இங்கு நடையென்பது பொது வாகப் பழக்க வழக்கத்தையே குறிக்கின்றது, இனி மேற்கொண்டு இருநாட்டுப் பழக்கவழக்கங்கள் அல் லது பண்பாட்டு நடவடிக்கைகள் எந்தளவுக்கு ஒன் றுக்கொன்று வேற்றுமையாக இருக்கின்றன என்ப தைச் சிறிது பார்ப்போம். பழக்கவழக்கமெனும் அம்சத்துக்குள்ளே சடங்கு முறைகள் (பிறப்பு, திருமணம்) கொண்டாட்டங்கள், உறவுமுறை, பொ ழுதுபோக்கு அம்சங்கள், சாதிமதம், தொழில், வாழ்க்கைத்தரம், பாலுணர்வு நடவடிக்கைகள் போன்ற பண்புகள் அடங்குகின்றன.

தனிப்பட்ட ஒருவரின் சடங்குமுறை என்னும் போது அதில் பிறப்பு, திருமணம், இறப்பு என்பன முக்கியமானவையாகும். இதைவிட மகிழ்ச்சியுடன் கொண்டாடும் கொண்டாட்டங்களும் பலவுள, ஜேர்மனியரைப் பொறுத்தவரை தொழிலாளர் தினம், அறிஞர்கள் விழா, கேளிக்கைகள், கோடை காலவிழா (Summer Festival) அறுவடைகாலக்கொ ண்டாட்டம் என்பன சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. இதைவிடப் புதுவருடம் நத்தார் போன்ற சமயசம்பந்தமான பண்டிகைகளும் விம ரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. எமது நாட்டைப்போல் ஜனவரி மாதம் முதலாம் திகதி யே இங்கும் புதுவருடத் தினமாகும். டிசம்பர் மாதத்தில் நத்தார் தினம் கொண்டாடப்படுகின் றது. இதைவிட ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்க ளில் குறிப்பிடத்தக்க சமயக் கொண்டாட்டங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்வுடன் கொண்டாடுவார்கள். எமது நாட்டில் கொண்டாடப்படும் தினங்கள் சிறிது வேறுபட்டவையாக உள்ளன. பொதுப்பட நோக்கின் சில கொண்டாட்டங்கள் குறிப்பாக நத்தார் தினம், தொழிலாளர் தினம், புத்தாண்டு என்பன நமதுநாட்டினராலும் கொண்டாடப்படுகின்றன. மற்றும் எமது நாட்டில் மூன்று சாகியத்தினர் வசிப்பதால் அவரவர்களுக்குரியதனிப்பட்ட பண்டிகைகளுண்டு. அவற்றையெல்லாம் இங்கு விரிவஞ்சி இவற்றுடன் குறிப்பிட முடியவில்லை, பொதுவாக எமதுநாட்டில் எல்லாமக்களுக்கும் உரியதினமாக புதுவருடப் பிறப்பு, நத்தார்ப்பண்டிகை, தீபாவளி, தொழிலாளர் தினம், மேதினம் என்பவை விசேட தினங்களாகக் கொண்டாடப்படுவதோடு அரசினுல் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறைநாட்களாகவும் உள்ளன. மேல்நாடான ஜேர்மனியிலும் விசேட தினங்கள் சில விடுமுறைநாட்களாக உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. ஜேர்மனிய மக்கள் கோடைக்காலக் கொண்டாட்டத்தின்போது உறவினர்களுடன் ஒன்றுகூடிச் சுகதுக்கங்களைப் பரிமாறிக்கொள்வர். பிரிந்திருந்தோர்கூட இக் கொண்டாட்டத்தின் போது கலந்து கலகலப்பாகக் கொண்டாடி மகிழ்வர். வீதிகள், வீடுகள், பூஞ்சோலைகள்தோறும் சிறுவர், பெரியார் யாவரும் மெழுகுவர்த்திகளைக் கொளுத்திக் கொண்டாடுவர். இக்கொண்டாட்டம் வரலாற்று ரீதியானதல்ல. இடையிட்டு ஏற்பட்டதொன்றாகும் எனக் கூறப்படுகின்றது. இது வே மிகச்சிறப்பாக, சந்தோஷமாகக் கொண்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டப்படும் முக்கிய பண்டிகையெனலாம். மேலும் எமது நாட்டைப் போலவே கொண்டாட்டங்களின் போது பொருளாதார நடவடிக்கைகள் இடம்பெறு வது (விற்பனை நிகழ்ச்சி வியாபாரம்) முக்கியமானது வியாபாரத்திற் பலர் ஈடுபட்டு இக்கொண்டாட்டங் களில் அதிகலாபம் பெறுவர். மக்கள் அன்புடன் ஒருவரையொருவர் வாழ்த்தி மகிழ்ச்சியுடனிருப்பர். இங்குள்ளவர்களின் முக்கியமானதும் புனிதமானது மான அன்பளிப்புப் பொருளாக இருப்பது பூக்களும் பூச்செண்டுகளுமாகும். பூக்கள் இங்கு மிகவும் அத் தியாவசியமான ஒரு பொருளாகும். ஒருவர் இன் னெருவரைச் சந்திக்கப் போகும்போது பூக்களையே கொண்டுசெல்வர். இது இவர்களிடையே புனிதப் பொருளாகும்.

எமதுநாட்டு மக்களைப்போல் ஜேர்மனிய மக்க ளும் நாள் நட்சத்திரம் பார்ப்பார்கள். எமக்கு மாதத்தில் வெவ்வேறு விதமான நாட்பார்த்து சுபதினமாக எடுத்துக்கொள்வோம். ஆனல் ஜேர் மனியில் வளர்பிறை நாட்கள், பூரணை நாட்கள், சுப தினங்களாக உள்ளன. வானசாஸ்திரம், சோதி டமென்பன இங்குமுண்டு. ஒரு சிலருக்கு சோதிடத் தில் அவ்வளவு நம்பிக்கையில்லை. எமது நாட்டில் மக்கள் பெருமளவுக்கு நம்பிக்கையும் மதிப்பும் கொண்டுள்ளார்கள் என்றே கூறவேண்டும்.

தனிப்பட்ட ஒருவரின் சடங்குகளாக எமது நாட்டில் பிறப்பு, திருமணம், இறப்பு என்பன வாழ்க்கையின் முக்கிய அம்சங்களாகக் கொள்ளப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகிறன. எமது சமுதாயத்தில் குழந்தை பிறந்த வுடன் முப்பத்தோராம் நாள் அப்பிள்ளையை வாழ்த்தி, அணியலங்காரம் செய்து, மகிழ்ச்சியுடன் கொண்டாடுவார்கள். பிள்ளை பிறந்து முப்பத்தோராம் நாள்வரை தாயோ பிள்ளையோ வெளியில் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். இவர்கள் (துடக்கு) மாசுடையவர்களாகக் கருதப்படுகின்றனர். முப்பத்தோராம் நாள் பிராமணர் வந்து அந்தத் துடக்கை நீக்கியபின்புதான் இவர்கள் புனிதமுள்ளவர்களாக வெளியில் வருவர். ஆனால் மேல்நாட்டைப் பொறுத்தவரையில் இங்கு முப்பத்தோராம் நாள் சடங்கு இல்லை, பிள்ளைப்பெற்ற தாய் என்றும்போலவே எங்கும் போய்வருவாள். மிகவும் சத்தான உணவுவகைகள், குடிவகைகளை அருந்தி என்றும்போலவே சுறுசுறுப்பாக இருப்பாள். பிள்ளைப்பெற்றவள் என்ற தனிப்பராபரிப்பு இவர்களுக்கில்லை. பிள்ளை பிறந்து சிலநாட்களில் தேவாலயத்துக்குச்சென்று பெயர்சூட்டி அப்பிள்ளைக்கு ஞானஸ்நானமும் வழங்கப்படும். மேலும் கர்ப்பமாக இருக்கும்போது கர்பிணிகள் எமது நாட்டில் மிகவும் கவனமாக நடந்துகொள்வர். ஆனல் மேல்நாட்டில் கர்ப்பவதிகள் நிறைமாதத்திற்கூட மோட்டார் வண்டி, துவிசக்கரவண்டி என்பவற்றைச் செலுத்துவார்கள். தாம் கர்ப்பிணிகளென்று எமது நாட்டைப்போல் பயந்து வேலைசெய்ய முடியாது என்ற நிலையில் இருக்கமாட்டார்கள். இவர்கள் துரிதமாக, சுறுசுறுப்பாக வேலைசெய்வார்கள். இந்தளவுக்கு இவர்களுக்கு உடலை வைத்தியர் பரிசோதிப்பார். ஒவ்வொரு மாதத்துக்கும் ஏற்றவிதத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் வைத்தியர் மருந்துவகைகளைக் கொடுத்துத் தாய்மாரைக் கவனமாகப் பாதுகாப்பர். மாதா மாதம் கருவளர்ச்சிக்கேற்ற முறையில் அவர்களுக்கு உடற்பயிற்சி முறைகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும். மற்றும் மாதமொருமுறை எக்ஸ்றே (X-Ray) கதிர்மூலம் கருவளர்ச்சியைஅவதானித்து அதற்கேற்ற வைத்திய முறைகளை வழங்குவர். இவ்வாருக நல்ல வைத்தியசேவை இங்கிருப்பதால் இவர்கள் என்றும் திடகாத்திரமாக, ஆரோக்கியமாக, சுறுசுறுப்பாக இருப்பர். இவர்களுடைய இத்தன்மையை நோக்கும்போது சந்தோஷப்பட வேண்டியுள்ளது.

எமது சமுதாயத்திலே ஆண்குழந்தையையே எல்லோரும் விரும்புவர். பொதுவாகப் பெண் குழந்தை என்றவுடன் பெற்றோர்கள் மனம் வேதனையடையும். பெண்குழந்தைகள் பெற்றோருக்குப் பாரமாக இருக்கும் நிலையே எம்மிடையே உண்டு. இதனுல் ஒருதாய் கருவுற்றிருக்கும்போது தனது வயிற்றில் ஒரு ஆண்குழந்தை தோன்ருதா என ஏங்கிக்கொண்டிருப்பாள். பெண்குழந்தை யென்ருல் தனக்குச் சுமையெனவும், தம்மையொறுத்து அவர்களுக்காகச் சேமிக்கவேண்டுமெனவும் ஒருவித பயம் அவர்களைப் பற்றிவிடும். ஆண்பிள்ளையாலுற் தம்மைப் பார்ப்பார்களென்றும், அவர்களால் தமக்குப் பிரச்சினை இல்லையென்றும் தவருன அபிப்பிராயம் எம்மத்தியிலே நிலவிவருகின்றது. பெண்குழந்தையென்ருல் சீதனம் கொடுக்கவேண்டுமென்ற பயத்திஞலேயே பெண்குழந்தைகளைப் பெற்றவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் அதனைப் பாரமெனக் நினைக்கும் தரங்கெட்ட நிலை எம்மிடையே உண்டு. இது என்றுமே மாருத அளவுக்கு சமுதாயத்தில் புரையோடிப்போயிருப்பது மிகவும் வருந்தத்தக்க விடயமாகும். ஆனல் மேல்நாட்டைப் பொறுத்தவரையில் ஆண்குழந்தை பெண்குழந்தையென்ற பேதமின்றி எக்குழந்தையென்ருலும் மழலைச்செல்வம் என்று சந்தோஷமாகவே பெற்றெடுப்பர். இங்கு ஆண்கள் பெண்கள் என்ற பேதமின்றி சரிநிகர் சமானமான தன்மையே இதற்குக் காரணமெனலாம். பெண்மகவென்ருல் பெற்ருேர்க்குச் சுமையாக இருப்பதில்லை. அதாவது எமது சமுதாயத்தினரைப்போல் பெண் குழந்தையின் எதிர்காலத்துக்கெனச் சேமிக்வேண்டிய அவசியமில்லை. காரணம். இவர்களுக்குச் சீதனம் என்று நம்நாட்டில் பெண்களுக்குத் திருமணத்தின் போது வழங்கப்படும் சீர்வரிசை இல்லை. சீர்வரிசையென்ருல் இவர்களுக்கு என்னவென்றே தெரியாது. ஆண்களுக்கு என்ன அந்தஸ்து உண்டோ அதே அந்தஸ்தே பெண்களுக்கும் உண்டு. இதனுல் இவர்களுக்கு ஆணகுழந்தை பிறந்தாலும் ஒன்று தான் பெண்குழந்தை பிறந்தாலும் ஒன்றுதான். இருவரையும் சமமான கண்ணுடனேயே நோக்குவார்கள். இதில் எவ்வித வேற்றுமையும் கிடையாது.

எமது நாட்டில் ஒரு குடும்பத்தில் இரண்டு தொடக்கம் பத்துப் பிள்ளைகள்வரை சராசரியாக உள்ளனர். சிலகுடும்பத்தில் பன்னிரண்டுக்குமேலும் பிள்ளைகள் உள்ளனர். அதிகம் பிள்ளைகள்

பெற்றால் சந்தோஷமாக வாழலாம், தமக்கு உதவியாக இருக்கும் என்று கருதுகின்றனர். இவர்கள் பிள்ளைகளை ஒரு சொத்தாகக் கணிக்கின்றனர். எனவே எவ்வளவுக்குப் பிள்ளைகளை அதிகமாகப் பெறமுடியுமோ அதுவரை பிள்ளைகளைப் பெறுவர். இதனால் வரும் துன்பங்கள், கவலைகள் என்பவற்றை இவர்கள் உணர்வதற்குப் போதிய அறிவற்றவர்களாக இருக்கின்றனர். குழந்தைகள் ஒரு குடும்பத்தில் இருக்கும்போது அதனால் வரும் சிக்கல்கள் எவை என்பதை எமது சமுதாயத்தினர் சிந்திக்கத் தவறிவிடுகின்றனர். தற்போது குடும்பக் கட்டுப்பாட்டு ஆலோசனைகளை வழங்கி மக்களுக்கு அறிவூட்டி அதில் ஈடுபடச் செய்வதற்கு அரசு தீவிர முயற்சி எடுத்து வருகின்றது. படித்த மத்தியதர வகுப்பினர் இதன் அத்தியாவசியத்தை உணர்ந்து அதைக் கடைப்பிடித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எமது நாட்டில் பெரும்பாலும் மக்கள் விவசாயிகளாகவே இருக்கின்றனர். வேறு சிலர் தமது குலத்தொழில்களான ஏனைய தொழில்களைச் செய்து வருகின்றனர். மேலும் விவசாயம் செய்வதற்குப் பல உதவியாளர்கள் தேவைப்படுகின்றனர். விவசாயக் குடும்பத்தினர் தமது தொழிலைச் செய்வதற்குத் தமது பிள்ளைகளின் உதவியை எதிர்பார்க்கின்றனர். உதவியாக இருப்பார்கள் என்ற நோக்கில் பல பிள்ளைகளைப் பெற விரும்புகின்றனர். மேலும் பெற்றோர் பிள்ளைகளிற் தங்கி வாழும் நிலை இங்கு இருப்பதால் பல பிள்ளைகளைப் பெற விரும்புகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனர். மேலும் ஒவ்வொரு பிள்ளையிடமும் சென்று தமது தேவையை நிறைவேற்றலாம் என்பதற்காகவும் பல பிள்ளைகளைப் பெறுகின்றனர். ஓரிரு பிள்ளைகள் என்ருல் அவர்களுக்குத் தம்மால் பிரச்சினை அதிகமாகலாம் என்றும், பல பிள்ளைகள் என்ருல் அது ஒருவரை ஒருவர் பாதிக்காது என்றும், அவர்களிடம் உதவி பெறலாம் என்றும் கருதிப் பல குழந்தைகளைப் பெற்றெடுக்கின்றனர். ஆனுல் மேல்நாட்டினர் ஆகக் குறைந்தது இரண்டு, மூன்று பிள்ளைகளுக்கு மேல் பெற்றெடுக்க மாட்டார்கள். இரு பிள்ளைகளே போதும் என்ற அளவில் தமது வாழ்க்கையை நாடாத்துகிருர்கள். எம்மைப் போன்று பிள்ளைகளை நம்பி வாழ வேண்டும், அவர்களுடைய உதவியைப் பெறவேண்டும் என்ற எண்ணம் இல்லை. அதாவது பிள்ளைகளின் உதவியை எதிர்பார்த்து, அவர்களிடம் தங்கி வாழும் நிலை இவர்களுக்கு இல்லை. (இதற்கான காரணங்கள் முன்பு ஓரிடத்திற் கூறப்பட்டுள்ளன) மேலும் குழந்தைகள் என்ருல் கொள்ளை ஆசையுடன் இருப்பார்கள். அந்த ஆசையினுலே மட்டும் குழந்தைகளைப் பெறுகின்றனர். எனவே இரண்டு பிள்ளைகளுடன் நிறுத்திக் கொண்டு விடுவர். இவ்விரண்டு, மூன்று பிள்ளைகளையும் நல்ல ஆரோக்கியமாக வளர்த்தெடுப்பர். இதனுற் பிள்ளைகள் நோயற்றுத் திடகாத்திரமான பிள்ளைகளாக இருக்கின்ருர்கள். தாய், சேய் எவ்வளவுக்கு ஆரோக்கியமாக இருக்கவேண்டுமோ அந்த முறையில் இவர்களுக்கு வைத்திய ஆலோசனையும் பராபரிப்பும் உண்டு. மேலும் இங்குள்ள பெண்கள் சராசரியாக இருபது அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்திரண்டு வயது சென்ற பின்னரே திருமணம் செய்து கொள்வர். அதற்கு முன் பலர் திருமணம் செய்து கொள்ளவோ, பிள்ளைகளைப் பெறவோ விரும்ப மாட்டார்கள். ஒரு சிலர் அப்படி ஏற்கனவே திருமணம் செய்தாலும் பிள்ளைகளைப் பெற மாட்டார்கள். காரணம் தமது வாழ்க்கையைச் சுதந்திரமாகக் கழிப்பதற்குப் பிள்ளைகள் தடையாக இருப்பார்கள் என்ற நோக்கமாகும். திருமணம் செய்து மூன்றுநான்கு வருடங்களின்பின் பிள்ளைகளைப் பெற்று மிகவும் ஆசையுடன் வளர்ப்பர். இவற்றுக்குத் தகுந்த முறையில் குடும்பக்கட்டுப்பாட்டின் மகத்துவத்தை அறிந்து திறம்பட மேற்கொள்கின்றனர். குடும்பக் கட்டுப்பாடு பற்றிய பூரண விளக்கம் இங்கு எல்லோரிடமும் உண்டு. அதைக் கடைப்பிடிப்பதில் இவர்கள் பூரண அறிவு பெற்றுள்ளனர் எனலாம். மேலும் குடும்பக்கட்டுப்பாட்டு ஆலோசனைச் சங்கங்கள், நிலையங்கள், குடும்பக்கட்டுப்பாட்டுச் சாதனங்கள் இங்கு சிறப்பாக இருக்கின்றன. மேலும் புகழ்பெற்ற வைத்திய வசதி, வைத்திய ஆலோசனைகள் இங்கிருக்கின்றன. இதனுல் இங்கு வேண்டாத கரு ஏற்பட்டால் அச்சமோ வேதனையோ அடையமாட்டார்கள். மிகச் சுலபமான முறையிற் கருத்தடை செய்துகொள்வார்கள். அதாவது குடும்பக் கட்டுப்பாடென்பது சர்வசாதாரணமாக எல்லோராலும் பேசப்பட்டும் கருதப்பட்டும் வருகின்றது. இதை வெளியில் கதைப்பதால் அவமானமென்ருே அவமானச் செயலென்ருே கருதும் பண்பு இங்கு அறவே கிடையாது ஆனுல் எமது நாட்டைப் பொறுத்தவரையில் குடும்

பக்கட்டுப்பாடுபற்றிய பூரண விளக்கமோ, அறிவோ இல்லை. அத்துடன் அதைக் கடைப்பிடிக்கவேண்டு மென்ற ஒரு ஆர்வமோ இல்லை, மேலும் இது ஒரு பாவச்செயலென்றும், கடவுள்கொடுப்பதை ஏற்கத் தான் வேண்டுமென்ற பழமையில் ஊறிய பண்பும் எமது சமுதாயத்தில் உண்டு. அடுத்து குடும்பக் கட்டுப்பாட்டு ஆலோசனைச் சங்கங்கள், வைத்திய வசதிகள், உபகரணங்கள் யாவும் குறைவு. வளர்ச்சி யடைந்த முறையில் மேல்நாட்டு வைத்தியம் காண ப்பட எமது நாட்டில் சிறந்த வைத்திய சேவையோ அறுவைச்சிகிச்சை முறையோ மிகவும் குறைவென லாம். இதைவிட எமது அரசாங்கம் கருவழிப்பதை ஒரு குற்றச்செயலாக அமுலுக்குக் கொண்டுவந்துள் ளது. அதாவது எமது நாட்டைப் பொறுத்தவரை கருச்சிதைவு செய்தல் பாரதூரமான குற்றமாகும். இப்படியான நிலைமைகள் எமது நாட்டிலிருப்பதால் சனத்தொகை அபரிதமாக வளர்ச்சிபெற்று வரு கின்றது. சனத்தொகை அதிகரிப்பு வீதம் இங்கு வருடந்தோறும் ஏறக்குறைய 2 வீதமாகவுள்ளது. இத்தகைய சனத்தொகைப்பிரச்சினை மேல்நாட்டில் இல்லைஎனலாம்.

கீழைத்தேயத்தைப் போலவே இங்கும் பெற் றோர்கள் தமது பிள்ளைகள் நன்னடத்தையுள்ளவர் களாக இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கின்றார் கள். பிள்ளை கருவிலிருக்கும்போதே பிள்ளைகளின் வாழ்க்கைமுறை பற்றி ஒவ்வொரு தாயும் எண்ணு கின்றாள், குழந்தை பராபரிப்பில் இங்கு விசேட அக்கறை காட்டப்படுகின்றது. அதற்கென்றே அர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாங்கம் பிரத்தியேக சலுகைகளை வழங்கிவருகின்றது. குழந்தைகள் ஆரோக்கியமாகவும் திடகாத்திரமாகவும் இருக்கவேண்டுமென்று வைத்திய சேவை விரும்புகின்றது. சிலவேளைகளில் பிள்ளைகளைப் பராபரிக்கக்கூடிய வசதிகள் சில பெற்றோருக்கு இல்லாமற்போனுல் அப்பிள்ளைகளை அரசாங்கம் பொறுப்பேற்று சிறப்பான பிரசைகளாக உருவாக்கும். பிள்ளையைப் பெற்றுவிட்டோமே. எவ்வாறு வளர்த்தெடுப்பதெனப் பெற்ருேர்கள் அங்கலாய்க்கத் தேவையில்லை. இன்று குழந்தைகள் வைத்தியசாலையிலேயே பிறக்கின்றனர்: முன்னைய காலகட்டங்களில் வீடுகளிலேயே பிரசவம் நடைபெற்றது. அதாவது இந்நிலைமை எமதுநாட்டிலும் முன்பு இருந்ததெனலாம். ஏன் இப்போதும் அருமையாகச் சில பிள்ளைகள் வீடுகளிலும் பிறக்கின்ருர்கள். இது வைத்திய வசதி பெருகிக்கொண்டு வருகின்றமையால் மிகக் குறைவெனலாம். மேல்நாட்டுப்பெண்கள் தாய்ப்பாலை ஊட்டுவதில் பின்னிற்கின்ருர்கள். தமது உடல்நிலை பாதிப்படையும், அழகு கெட்டுவிடுமென்ற நோக்கமுடையவர்களாக இருக்கின்றனர். இதனுல் புட்டிப்பால், மற்றும் குழந்தையுணவு வகைகளையே ஊட்டுகின்றனர். மேலும் இங்கு குழந்தைகளுக்கென்று பலரகங்களில் உணவுவகைகள் போத்தலில் அடைக்கப்பட்டு நன்கு பரிசோதிக்கப்பட்டு சுகாதார முறையில் கடைகளில் விற்பனையாகின்றன. இத்தகைய போத்தல் உணவுகளையே வைத்தியரின் சிபார்சின்படி மாதாந்த வளர்ச்சிக்கேற்ப ஊட்டுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை பிறந்து மூன்று நான்கு மாதத்திலேயே வாழைப்பழம், அப்பிள், தோடம்பழம் என்பன திரவமுறையாக்கப்பட்டு விற்கப்படும் போத்தல் உணவைக் குழந்தைகளுக்குக் கொடுப்பர். இவற்றை விடக் கோதுமை, கொக்கோ போன்றவை அரைக்கப்பட்டு ஏனைய சத்துள்ள பொருட்களும் கலந்து தூளாகத் தகரத்தில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. நமது நாட்டில் மாச்சத்திற்காக சோறு ஊட்டுவதுபோல் இங்கு கோதுமை கலந்த குழந்தை மா இருக்கின்றது. அத்துடன் அரைக்கப்பட்ட இறைச்சியும் நான்கு மாதத்திற்குப் பின் குழந்தைக்கு ஊட்டவேண்டுமென்று வைத்தியர் சிபார்சு செய்கின்றனர். மேலும் குழந்தைக்குத் தேவையான அத்தனை பொருட்களும் ஒரே கடையிலேயே வாங்கலாம். குழந்தைப் பொருள் வியாபார நிலையமென இங்கு உண்டு. இவற்றில் குழந்தை உணவு முதல் உடைகள், விளையாட்டுப் பொருட்கள் அத்தனையும் வாங்கலாம். எமதுநாட்டில் இத்தகைய வசதிகள் இல்லையெனலாம். மேலும் எமதுசமுதாயத்தில் குழந்தைகளுக்கு மூன்றுநான்கு மாதங்களில் பழவகைகள் எதுவும் கொடுக்கமாட்டார்கள். அவை பிள்ளைகளுக்குத் தீங்கு விளைவிக்கலாமென்ற அச்சமே இதற்குக் காரணமெனலாம்.

ஜேர்மனியைப் பொறுத்தவரை இங்கு தாய்மார் குழந்தைகளுக்கு தமது பாலையூட்டுவதில் அக்கறை காட்டுவதில்லை. வைத்தியர் தாய்ப்பாலையே கொடுக்கும்படி ஆலோசனை கூறியபோதும் அதைக் கடைப்பிடிப்போர் மிக அருமை. எல்லாத் தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரும் குறைந்தது ஒரு மாதம் அல்லது மூன்று மாதம்வரைதான் பால்கொடுக்கின்றனர். ஆனால் கடந்த ஐந்துவருடங்களாகத் தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார் தொகை அதிகரித்துவருகின்றதெனலாம். தாய்ப்பால்தான் குழந்தைகளுக்கு முக்கியமானது, சத்துநிறைந்தது. நோய்களைத் தடுக்கவல்லது. எனவே தாய்ப்பாலையே ஊட்டவேண்டுமென்று போதிக்கின்றனர், தாய்ப்பாலுடன் ஏனைய உணவுகளை ஊட்டத் தேவையில்லை. இங்கு உணவுகளையே நேரத்திற்கு நேரம் தவறாமல் அவதானமாக ஊட்டுகிறார்கள். குழந்தைகள் அழுகின்றார்கள் என்பதற்காக எல்லாநேரமும் பாலூட்டுவதில்லை, உணவு கொடுப்பதில்லை. குழந்தை பிறந்து ஐந்து மாதங்களுக்கு, ஒருநாளைக்கு ஐந்துமுறை தாய்ப்பால் அல்லது புட்டிப்பால் கொடுப்பார்கள். அடுத்து தாயும் சேயும் ஒன்றாக ஒரேபடுக்கையில் படுப்பதில்லை. தாயினருகிலுள்ள தொட்டிலிற் பிள்ளை நித்திரை செய்யும். பிள்ளைக்கு இரவில் பால்கொடுக்கும் வழக்கமில்லை, அவ்வாறான முறையில் குழந்தை பிறந்த நாளிலிருந்தே குழந்தைக்குப் பழக்கிவிடுவர் ஆனால் இரவு வேளைகளில் குழந்தைக்கென்றே தயாரிக்கப்பட்ட தேநீர் அல்லது பானம் (சாறு) என்பவற்றைக் கொடுப்பர். இந்தமுறையில் ஒழுங்குரீதியாக (Systematical) குழந்தைகள் வளர்த்தெடுக்கப்படுகின்றார்கள், எமதுநாட்டுத் தாய்மார் போல், உறவினர்போல் குழந்தையை எந்நேரமும் தூக்கி அணைக்கமாட்டார்கள். காரணம் எப்போதும் பிள்ளை தன்னைத் தூக்கும்படியான பழக்கத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டுவிடும் என்பதாகும். குழந்தை அழுது ஓயும்வரை அப்படியே விட்டுவிடுவார்கள் குழந்தைமேல் வைத்துள்ள அன்பு அன்புதான். மிகப்பிரியமாக ஆசையாக, வளர்ப்பார்கள். ஆனல் அளவுக்குமீறிப் பிரியம் (செல்லம்)கொடுத்து அடங்காப்பிள்ளையாக மாற்றமாட்டார்கள். எமது தாய்மார்சிலர் மூடப்பழக்கமாகக் கண்டபடி பிள்ளையைத் தூக்கிச் செல்லங்கொடுத்து, முறைப்படி வளர்க்காது பழுதாக்கிவிடுகிறூர்கள் என்பதையும் குறிப்பிட்டாகவேண்டும்.

ஜேர்மனியில் பிள்ளைவளர்ப்பில் தாய்மாரைப் போலவே தந்தையரும் அதிக அக்கறையும் ஆர்வமும் கொண்டுள்ளனர். இங்கு பிள்ளைகளைத் தூக்கிச் சுமந்து செல்வதில்லை. பிள்ளைகளுக்கென வயதிற்கேற்ப வண்டிகள் (Baby Wagon) இருக்கின்றன, குறைந்தது பிறந்து ஐந்து மாதங்களுக்குட்பட்ட தூக்கி நிமிர்த்தமுடியாத குழந்தைகளைப் பெற்றூர் வெளியே கொண்டுசெல்லும்போது குழந்தை சௌகரியமாகப் படுத்து உறங்கக்கூடியமுறையிலுள்ள வண்டிகளைப் பாவிப்பர். குழந்தை வளர்ந்து ஒரு வயதுவந்தவுடன் ஒருவகையில் சாய்வான இருக்கைகொண்ட வண்டிகளிற் குழந்தைகளைக்கொண்டு செல்வர். குளிரைத் தாங்கக்கூடிய உடைகளைக் குளிர்காலத்தில் அணிவர். குழந்தை உடைகள் யாவும் மிகவும் விலையுயர்ந்தவை. குழந்தையுணவுகளும் ஏனைய பொருட்களைவிட விலை உயர்வானவை பொதுவாகக் கூறப்போனல் குழந்தையைப் பெற்றெடுத்து வளர்ப்பதில் ஜேர்மனிய மக்களுக்கு மிகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுதலான செலவு ஏற்படுகின்றது, காலநிலைக்கு ஏற்ப உடைமாற்றல், உணவளித்தல் போன்றவற்றால் செலவு அதிகமெனலாம். பெற்றோர் பிள்ளைகளின் வளர்ப்பில் எவ்வளவு அக்கறை காட்டுகின்றார்களோ அதேயளவு அவர்களின் அறிவுவளர்ச்சியிலும் முக்கிய கவனம் செலுத்துகிறார்கள். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு உளவியல் ரீதியான அறிவினைக் கொடுப்பதற்குக் கற்றுக்கொள்கின்றார்கள். அதாவது தம் குழந்தைகளுடன் எவ்வித தொடர்பை வைத்துக்கொள்ள வேண்டுமெனக் கற்றுக் கொண்டு அதன்படி நடந்துகொள்கின்றார்கள். குழந்தைகளுக்கு வழங்கும் விளையாட்டுப் பொருட்கள், ஏனைய பொருட்கள், நிறங்கள் என்பனவற்றில் பிள்ளைகளுக்குள்ள உணர்ச்சிகள் அதாவது நோக்குதல், தொடுதல், அதிலுள்ள ஆர்வம் என்பனவற்றில் கவனம்செலுத்தி அதன்படி குழந்தைகளுக்கு அறிவூட்டுகின்றார்கள். குழந்தைகளின் மனோநிலையைப் புரிந்து அதன் வளர்ச்சிக்கு ஆவனசெய்கின்றார்கள். விளையாட்டுப் பொருட்களில் குழந்தையின் அவதானிப்பை அறிந்து அதை மேலும் நன்முறையில் விருத்திசெய்கின்றார்கள். குழந்தைவளர வளர அதன் அறிவு வளர்ச்சிக்கேற்ப சூழ்நிலை அவதானிப்பு, செய்முறை அனுபவம், விளையாட்டுப் பொருள், அனுபவமென்பன மாறிக்கொண்டு வருகின்றன. இதேவேளை இங்கு குழந்தை பேசத் தொடங்குதல், நல்லகுரல், பாஷையின் இசை, கைகளால் விளையாடும் பாவனை என்பன அவதானிக்கப்பட்டுப் பிள்ளைகளுக்கு அறிவினை வளர்ப்பதில் அக்கறை கொள்கின்றார்கள். எமது சமுதாயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஒழுங்குமுறையான குழந்தையறிவுவளர்ச்சிப் பராபரிப்பு மிகக் குறைவெனலாம். குறிப்பாக ஐந்து வயதுக்குப் பின்னர்தான் நம்நாட்டுப் பிள்ளைகளின் அறிவு. கல்விபற்றிப் பெரும்பாலான பெற்றோர் யோசிக்கின்றார்கள். அதன்பின்புதான் செயற்படுகின்றார்கள்.

எந்தவொரு நாட்டிலும் படிப்பு மிக முக்கியமானது. ஆரம்பத்தில் பெற்றோர்களிடமிருந்து பலவித அறிவைப் பெற்றுக்கொண்ட பிள்ளை, பாடசாலைப் படிப்புக்கு (Kinder Garden) சிறுவர் பாசாலைக்கு அனுப்பப்படுகின்றது. மற்றப்பிள்ளைகளுடன் விளையாடும் அனுபவமும் ஆர்வமும் மிகமுக்கியமாக இங்கு அவதானிக்கப்படவேண்டும். பாடப் புத்தகங்கள், அதில் அவர்களின் அவதானிப்பு, அறிவுவிருத்தி உணர்வு விரிவடைதல், சமுதாயப் பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ளல்,அதைக்கற்றல் சமுதாயத்தில் ஏதாவது பழகுதல் என்பனவே சிறுவர் கல்வி நிலையங்களிற் போதிக்கப்படுகின்றன. இவற்றைவிட விளையாட்டு, ஆடல்பாடல் என்பனவும் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கப் படுகின்றன. பிள்ளைகள் மூன்று நான்கு வயதில் சிறுவர்பாடசாலைக்குச் செல்கின்றனர். ஆறுவயதுவந்த பிள்ளைகளனைவரும் பாடசாலைக்குச் செல்லவேண்டும். அவ்வாறு அவர்கள் செல்லாவிட்டால் பாரதூரமான குற்றமாகும். அதற்கான சட்டநடவடிக்கை பெற்றோர்மீது எடுக்கப்படும். காலையிற் பிள்ளைகள் பாடசாலை சென்று மாலையில் விளையாடுவார்கள். விளையாட்டுக்கென இவர்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளது. கட்டாயக் கல்வி இங்கு நடைமுறையிலிருப்பதால் ஆறு வயதுவந்த அத்தனை பிள்ளைகளும் பாடசாலை சென்றேயாகவேண்டும். எமது நாட்டில் இத்தகைய கட்டாயக் கல்விமுறை நடைமுறையில் இல்லை. பிள்ளைகள் பாடசாலைக்குப் போனாலென்ன போகாவிட்டாலென்ன என்ற நிலை பல இடங்களிலுண்டு. கட்டாயக் கல்வி முறைமை ஜேர்மனியிலிருப்பதால் இங்கு படித்த சமுதாயமே உண்டு. படியாதவர், தெரியாதவர், என்று எவருமேயில்லை. இந்நாட்டவர்க்கு இது மிகவும் பெருமைக்குரிய விடயமாக உள்ளது.

ஜேர்மனிய மக்களின் கல்விமுறைமை ஏற்கனவே கூறப்பட்டிருக்கிறது. எனவே அதைவிட்டுப் பிள்ளைகளின் பழக்கவழக்கம், நடைமுறை வாழ்க்கை, சடங்குமுறைகள் என்பனபற்றிச் சிறிதுநோக்குவோம். இங்குள்ள குடும்பம் ஒன்றிற்கு இரண்டு குழந்தைகள் மட்டுமே உள்ளனர். மிக அரிதாக மூன்று நான்கு குழந்தைகள் உள்ளனர். சிலவேளை பெற்றோருக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்காவிட்டால் விபத்தில் அல்லது நோயினால் பெற்றோர்களை இழந்த குழந்தைகளைச் சுவீகாரமெடுத்து வளர்ப்பர். அவர்களைத் தாம் பெற்ற பிள்ளைகள் போலவே கருதி வளர்ப்பார்கள் எதுவித பாரபட்சமோ, வேற்றுமையோ காட்டமாட்டார்கள், அதாவது இங்கு யார் பெற்ற குழந்தையென்பது முக்கியமல்ல பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமுள்ள அந்நியோந்நிய உறவே முக்கியமானது. பெற்றோருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு மிடையேயுள்ள பழக்கவழக்கம், இணைப்பு, தொடர்பு என்பவற்றைப் பொறுத்தே இவர்களின் அன்பு வளர்கின்றது. எல்லாம் பழகும் விதத்திலேதானுண்டு, பெற்றாலதான் பிள்ளையா? இந்த மனோபாவம் இவர்களிடையேயுண்டு. பிள்ளைகளும் பெற்றோரும் சிநேகபூர்வமான முறையில் பழகிக்கொள்கின்றார்கள். பெற்றோருக்குப் பயப்படவேண்டிய நிலையோ, ஆசிரியர்களுக்குப் பயப்படும் நிலையோ இவர்களுக்கில்லை. பெற்றோருக்குப் பயப்படவேண்டிய அவசியமில்லை. அவ்வாறு பெற்றோரது கண்டிப்பும் இவர்களுக்கில்லை. இதனால் பிள்ளைகள் தாமே (18 வயதிற்குப்பின்) இயற்கையான அதிகாரத்தையும் அனுபவங்களையும் பெற்றுக்கொள்கின்றனர். இவர்களுக்குப் பயமின்மை, துணிவு எற்பட்டுத் தாமே தமது வாழ்க்கையை நிர்ணயிக்கத் தயாராகின்றனர். இத்தகைய பண்பு எமது நாட்டில் இல்லை. பெற்றோரும் பிள்ளைகளும் ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுத்து நண்பர்கள்போல் வாழும் நிலையுண்டு. இதனால் இங்குள்ள (ஜேர்மனி) பிள்ளைகளின் மனோநிலை சுதந்திரமான அத்திபாரத்திற் கட்டியெழுப்பப்படுகின்றது. எமது நாட்டில் பெற்றோரது பாதுகாவலரது கண்டிப்புக் கூடுதலாக உள்ளது. இதனால் இங்கு பிள்ளைகளின் மனோவளர்ச்சி பயந்தநிலையில் மாற்றப்படுகின்றதெனலாம்.

மக்களின் வாழ்க்கையில் 15-16 வயதுக் காலகட்டம் மிக முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. பலபிரச்சினைகளை எதிர்நோக்கி அதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்று தமது எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிக்கும் பொறுப்பான காலப்பகுதி இதுவாகும். இந்த நிலையை அடைந்த பிள்ளைகளாற் சில பெற்றோருக்குச் சிக்கலான நிலையும் ஏற்படுவதுண்டு. (Teen age) 20 வயதுக்குட்பட்ட வயதுக்காலகட்டம் பொதுவாக எந்தச் சமுதாயப் பிள்ளைகளையும் மாற்றியமைக்கும் என்பதுண்மை. இங்குள்ள பிள்ளைகள் தாம் விரும்பியபடி நடக்கப் பெற்றோர் அனுமதி வழங்கிவிடுவர். இதனால் தாமே தமது எதிர்காலவாழ்க்கையை நிர்ணயிப்பதோடு தமக்குவிருப்பமான துணையையும் தேடிக்கொள்வார்கள். இதற்குப் பெற்றோர் தடையாக இருக்கமாட்டார்கள். 18 வயதிற்குப் பின்னர் பிள்ளைகள் எங்கும் எந்நேரமானாலும் போய்வரலாம். பெற்றோர் பிள்ளைகளைக் காணவில்லையென்று தேடிவரமாட்டார்கள். மேலும் 18 வயதினைத்தாண்டியோர், 18வயதுப் பராயமுடையோர்'வயதுவந்தோர்' என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டு எங்கும் எந்நேரமும் போய்வரலாமென்று ஒரு அனுமதிப்பத்திரம் அரசினால் வழங்கப்படுகின்றது. இதனால் ஆண்களும் பெண்களும் மிகவும் சுதந்திரமாக வாழ்வார்கள். ஆண்களும் பெண்களும் ஒருவருடனொருவர் நெருங்கிப் பழகித் தமக்குப் பிடித்துக்கொண்டால் இணைந்துகொள்வார்கள், அல்லது அந்த ஒருவரைவிட்டு வேறொருவருடன் பழகித் திருமணம் செய்துகொள்ள முயல்வார்கள், எவ்வளவுக்கு நெருங்கிப் பழகினாலும் சிலகாலம் செல்ல அவர்களின் மனப்போக்கு ஒத்துவராவிட்டால் இருவரும் சந்தோஷமாக, சிநேகபூர்வமான முறையில் விலகிக்கொள்வார்கள். இருவருக்கும் கருத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமை ஏற்பட்டால்தான் திருமணம் செய்து கொள்வார்கள். அதுவரை சிநேகபூர்வமான முறையில் நெருங்கிப்பழகுவார்கள். அபூர்வமாக சிலருக்குப் பெற்ருேர்களது மறுப்பு ஏற்பட்டால் அதைப் பொருட்படுத்தாது தாமே இணைந்து கொள்வார்கள். படிப்பு, ஏனைய தொழில்முறைகளால் இங்கு திருமணம் 20-25 வயதுக்குப் பின்னர் தான் சட்டபூர்வமாக நடைபெறுகின்றது. இதற்கு முன் ஆண் பெண் நெருங்கிப் பழகுவார்கள், ஆனல் திருமணம் செய்துகொள்ளமாட்டார்கள். 18வயதிற் திருமணம் செய்வது அறவே கிடையாதெனலாம். திருமணத்திற்கு முன்னர் அவருடன் இவர் நெருங்கிப் பழகினுர் என்ற அவதூறே, வசைமொழியோ இங்கில்லை. இந்தப் பழக்கத்தைத் துணைகள் தேடும் இணைப்பு என்றே சொல்லலாம். இதில் எவ்வித தவறுமில்லையென்றும் இப்படி இணைந்து பழகிய பின்னர்தான் ஒருவருடைய குணநலத்தை அறிய முடியுமென்ற பண்பும் நிலவுகின்றது. அதாவது முன்பின் தெரியாத ஒருவரைத் திருமணம் செய்து அவர்களிடையே ஒத்துழைப்பு இல்லாது கருத்து ஒற்றுமையில்லாது விவாகரத்துச் செய்வதிலும் பார்க்க ஏற்கனவே ஒருவருடைய நடத்தையை அறிந்து திருமணம் செய்வதே சிறப்பு என்பது இவர்களுடைய நியாயமான நம்பிக்கையும் வழமையுமாகும், ஒருவரை யொருவர் பலவிதத்திலும் புரிந்துகொள்ள, குறைந்தது மூன்றுவருடமாவது இணைந்து பழகியபின்னர்தான், திருமணம் செய்ய முற்படுவர். அதற்குமுன்னர் விருப்பமின்மை ஏற்பட்டால் தாமே விலகிவிடுவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சமுதாயத்தில் திருமணத்திற்குமுன் ஆண் பெண் கலைத்தால் அவர்களுக்குப் பின்பு திருமண மேயில்லை என்ற அளவுக்கு இல்லாத பொல்லாத கதைகள் உருவாகும். அதாவது சமுதாயமே அவர்களைத் திருமணத் தம்பதியராக எடைபோட்டு விடும். மேலும் சுதந்திரமாக ஆண்களும் பெண்களும் நெருங்கிப் பழகும் பண்பும் இல்லை. பெற்ருேர், பெரியோர் நிச்சயிக்கும் ஒருவரைத் திருமணம் செய்வதே சிறப்பு என்பதுதான் எமது பண்பாட்டின் குறிக்கோளாகும். ஆனால் நவநாகரிகம் வளர்ச்சியுற்ற இக்காலகட்டத்தில் இத்தகைய நிலை குறைவடைந்து சிலர் தாமே தமது துணையைத் தெரிவுசெய்கின்றனர். ஆனால் இது மிகக்குறைவு எனலாம். இதற்குப் பல எதிர்ப்புக்கள் இருதரப்பினரின் பெற்ருேர்களுக்குமிடையில் ஏற்பட்டு முடிவில் சிலவேளை வெற்றி கிடைக்கும், சிலவேளை தோல்வியும் ஏற்படலாம். திருமணத்திற்கு முன் ஒருவருடன் பழகிய பெண்ணுக்கு மீண்டும் திருமணம் என்பது கிடையாது. வழுக்கி விழுந்தவள் என்ற வசைப்பெயரும் அவளுக்குச் சூட்டப்பட்டு விடும். இதனுல் வாழாவெட்டியாக வாழவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுவதுண்டு. சில பெண்கள் வாழ்க்கையில் தவறுசெய்துவிட்டோம் என்ற மனே நிலையாற் பாதிப்புற்றுத் தாமே தமது வாழ்க்கையை முடித்துக்கொள்ளும் நிலையே எமது சமுதாயத்தில் நிறைய உண்டு. ஆண்களைப் பொறுத்தவரையில் இந்தநிலை இல்லையெனலாம். அவர்களில் குறை சுமத்தப்படுவதில்லை. ஆண்கள் தவறுசெய்தாலும் அதைப் பெரிய குற்றமாகப் பாராட்டுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லை. ஆனால் இந்த இடத்தில் பெண்கள் தவறு வது யாரால், கற்பிழப்பது யாரால் என்பதை எமது சமுதாயம் சிந்திக்கத் தெரியாத மூடக்கொள்கை யுடன் ஊறி நிற்கின்றது. அதாவது ஒரு பெண் தவறிழைத்தாளென்றால் அங்கே ஒரு ஆணும் தவ றித்தான் ஆகவேண்டும். ஆனால் பெண்ணிடமே சமுதாயம் குற்றப்பத்திரிகை விடுகின்றது, இவ் விடயத்தை மேல்நாட்டினருடன் ஒப்பிட்டு நோக் கும்போது மிக வித்தியாசமான தன்மைகளையே காணமுடியும். அதாவது ஒப்பீடு என்ற செயலில் இறங்குவதே முடியாத காரியம் என்றே சொல்ல வேண்டும்.

நமது சமுதாயத்தில் திருமணத்துக்கு முதல் ஆடவரும் பெண்டிரும் சுதந்திரமாகப்பழகித் தமது வருங்காலத் துணையைத் தேடும் பண்பு (மேல்நாட் டில் உள்ளது போன்று) இல்லை. விதிவசமாக ஒரு ஆண், பெண் தம்முள் விருப்பபபட்டு ஒருவரையொ ருவர் புரிந்துகொண்டு சமுதாயத்துக்கு, ஆரம்ப நிலையில் மறைந்து வாழ்கின்றனர். ஒருவாறு மறைந்துவாழும்போது பின்னர் பிரிவினை ஏற்பட் டால் அவர்கள் விலகிச் செல்லும்போது சமுதாயத் தின் கண்களிலிருந்து தப்பிவிட முடியாது, வாழ்க் கையில் தவறியோர் என்ற பெயரை அவர்களுக்குச் சூட்டிவிடும். ஆனால் ஆண்களைப் பொறுத்தவரை யில் இந்தக் குற்றச்சாட்டு அவர்களுடைய வாழ்க் கையைப் பாதிக்காது, ஆனால் பெண்களின் வாழ்வு அன்றே பொசுங்கிவிடும். இத்தகைய ஒரு பாரம் பரியத்தில் ஊறிய பண்பு, ஒருவனுக்கு ஒருத்திஎன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமன் சீதை வாழ்வுதான் எமது சமுதாயத்தின ரால் விரும்பியேற்கப்படுகின்றது, ஆனால் சிற்சில நிலைகளில் இவை இப்போது ஒரளவுக்கு மீறப்பட்டு வருகின்றன, இது மேல்நாட்டுப் பழக்கவழக்கத்தில் நம்நாட்டினர் கொண்ட மோகமா அல்லது பழைய பண்பாட்டில் ஊறி வாழ்க்கை நடாத்துவதால் எதுவித பயனுமில்லையென்ற விழிப்புணர்ச்சியாவென்பது புரியாமலுள்ளது.

பொதுவாகத் தொழில்நிலையங்கள், வியாபார நிலையங்கள், கச்சேரி, பாடசாலைபோன்ற இடங்களிலேயே ஆண் பெண் சந்திப்பு ஏற்படுகின்றது. இவர்களுக்கிடையே உடன்பாடு ஏற்பட்டுப் பின்னர் குறைந்தது இரண்டு வருடத்திற்கு மேலாகத் திருமணத்திற்காகக் காத்திருப்பர். சிலவேளை இவர்கள் தமக்கு விருப்பமான வயதிற் திருமணம் செய்துகொண்டபின்னர் ஒருவர் நடத்தை பிடிக்கவில்லையென்றால் விவாகரத்துச் செய்து இன்னொரு துணையைத் தேர்ந்தெடுத்து தேவாலயத்தில் திருமணம் செய்துகொள்வார்கள். இறைசந்நிதியில் நாம் திருமணம் செய்துகொள்வதுபோல் இவர்களும் தம் மதக்கிரியை முறைப்படி தேவாலயத்தில் மதகுருமார் ஆசீர்வாதத்துடன் திருமணம் செய்வர் எமது நாட்டுச் சமுதாயத்தைப் போலவே இங்கும் ஒருவனுக்கு ஒருத்தியென்ற பண்பு ஒரளவுக்குக் கடைப்பிடிக்கப்படுகின்றது. அதாவது திருமணத்துக்கு முன் எந்த ஆடவரும் பெண்டிரும் விரும்பியபடி பழகலாம். பின்னர் கூடிப்பிரியலாம் ஆனால் திருமணத்திற்குப் பின் ஒருவன் ஒருத்தியென்ற உறவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தொருமித்த தம்பதியினராற் கடைப்பிடிக்கப் படுகின்றது. மேலும் திருமணத்தின்பின் தம்பதியினரிடையே மனக்கசப்பு, தாம்பத்திய உறவிற் பொருத்தமின்மை, வெறுப்பு ஏற்பட்டால் மிகச் சுலபமாக இருவரும் மனமொத்து விவாகரத்துச் செய்துகொள்வதுசாதாரணநடவடிக்கையெனலாம்

எமது சமுதாயத்தில் மணமகனுக்குப் பெண்ணைக் கொடுப்பது மட்டுமன்றி சீதனம் எனும் போர்வையில் சொத்து, பணம், காணி, வீடு என்பனவும் சேர்த்துக் கொடுக்கவேண்டிய கட்டாய நிலை உண்டு. அநேகமாக இது மணமகளின் பெற்றோர் விரும்பிக்கொடுக்கும் கொடையல்ல. மாப்பிள்ளை வீட்டாரின் வற்புறுத்தலின்பேரில் இக் கொடை நடைமுறையில் பெரிய பிரச்சினையைத் தோற்றுவித்துக்கொண்டு வருகிறது. எமது முன்னைய சமுதாயத்தில் சீதனம் கொடுத்தல் எனும் முறையில் பெற்றோர் தமதுவாழ்வு முடிவுறும்போது தமது உடைமைகளைத் தம்மக்களுக்கு வெகுமதியாகக் கொடுத்தனர். இவ்வாறான கொடையே தற்போது சீதனம் எனும் பெயரில் விஸ்வரூபமெடுத்து கன்னிப்பெண்களை ஆட்டிவதைக்கின்றது. இதனால் எத்தனையோ பெண்கள் உரிய பருவத்தில் மணவாழ்க்கையின்றி காலத்தைக் கழிக்கின்றனர். எனவே சீதனம் எனும்பெயரில் சொத்து, உடைமைகள்கொடுத்து மாப்பிள்ளையைவிலைக்குவாங்குவதாக இம்முறை அமைந்துள்ளதென்பதை மறுக்கமுடியாது. அதேவேளை தனது காலில் நின்று உழைக்

கத் தெரியாத ஆண்மகன் சீதனம் வாங்கியே மனை வியை வாழவைக்கும் கோழைத்தனத்தையும் நாம் இங்கு ஊகித்துக்கொள்ளமுடியும். சிலர் தமது பெற்ருேர் சகோதரிகளுக்காகச் சீதனம் வாங்குகிருர்கள். உண்மைதான். ஆனுல் சீதனக் கொடுக்கல் வாங்கல் இன்று பல்வேறு வழிகளில் செயற்பட்டு வருகின்றது என்பது தெட்டத்தெளிவாயுள்ளது, இத்தகைய பிற்போக்கான நிலைமை மேல் நாட்டுச் சமுதாயத்திடம் இல்லவேயில்லை. மகளுக்குச் சீதனம் கொடுக்கவேண்டுமென்று பெற்ருேர் தமது உயிரைப் பாராது உணவையொறுத்து ஆடம்பரச் செலவை நீக்கிப் பணத்தைச் சேமிக்க வேண்டியவர்களாகின்றனர். தமது சந்தோஷத்தையிழந்து வாழும் நிலைமையைச் சீதனம் எனும் கொடியபேய் உருவாக்குகின்றது. பெண்குழந்தை பிறந்துவிட்டது என்றவுடன் பெற்ருேருக்கு 'நிம்மதியின்மை எனும் குழந்தையும் ஜனித்துவிட்டது எனக்கருதும் ஒரு துர்ப்பாக்கிய நிலையே எமது சமுதாயத்திடம் நிலவிவருகின்றது. எனவே பெண் மகவு என்றவுடன் தம்பதியரிடையே கவலையும் யோசனையும் அதிகரித்துவிடுகிறது. காரணம் மகளுக்குச் சீதனம் சேர்கவேண்டுமே என்பதாகும். ஆனுல் மேல்நாட்டினரைப் பொறுத்தமட்டில் இப் பிரச்சினை இல்லை. அவர்களுக்கு ஆண்மகவு பிறந்தாலும் ஒன்றுதான், பெண்மகவு பிறந்தாலும் ஒன்றுதான். இரண்டையும் ஒரேகண்கொண்டுநோக்குவர். இங்கு திருமணத்தின்போது சீதனம் கொடுக்கவேண்டிய தேவையில்லை. இவர்களுக்கு வேண்டியது பெண்தான். தமக்கு விரும்பிய முறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணைக் கேட்டோ, விரும்பியோ திருமணம் செய்துகொள்வர். மணமகள்தான் முக்கியம் என்ற கொள்கை இங்கு நிலவுகின்றது. மேலும் இவர்கள் என்றும் சந்தோஷமாகவே வாழ்கின்றனர். ஏனெனில் பிற்காலத்தில் மக்களுக்கு உதவும் என்ற நோக்கில் பணம் சேர்க்கவேண்டிய தேவையில்லை. ஆடம்பரச் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டியதில்லை. பொதுவாக இங்கு பெண்பிள்ளைகள் பெற்ரேர் யாவரும் என்றும் இன்பமாக வாழ்வதற்குக் காரணம் சீதனப்பிரச்சினை இன்மை எனலாம்.

எமது சமுதாயத்திற் சீதனப் பிரச்சினை பெற்ரேரைமட்டுமன்றி தம்பதியரிடையே பிளவையும் கருத்துவேற்றுமையையும் ஏற்படுத்துகின்றது. பொருளாதாரப் பிரச்சினை குடும்பத்தில் ஏற்படும்போது தம்பதியரிடையே மணமுறிவும் ஏற்படுகின்றது. ஆனல் இத்தகைய முறை மேல்நாட்டாரிடமில்லை. இங்கு வேறுவிதமான வழிவகைகளில் மணமுறிவு, மறுமணம் என்பன நடைமுறையிற் கடைப்பிடிக்கப்படுகின்றன. விவாகரத்து என்பது மிகச்சுலபமான முறையிற் செய்யப்படுகின்றது. திருமணம் செய்துகொண்ட சிலநாட்களில்கூட ஒருவருக்கொருவர் கருத்துவேற்றுமை ஏற்படும்போது இருவரும் மனமொத்த முறையில் விவாகரத்துச் செய்துகொள்ளப் பூரண சுதந்திரம் உண்டு. அரசும் இதற்கு அனுமதி வழங்குகின்றது. இந்தநிலைமை எமது சமுதாயத்தில் எளிதானதும், வரவேற்கக் கூடியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான விடயமல்ல. விவாகம், குடும்பவாழ்வு என்பன சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டவை என நம் மூதாதையரால் பேணப்பட்டுப் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகின்றன. இன்னாருக்கு இன்னார் என்று ஆண்டவனாலேயே நிச்சயிக்கப்பட்ட உறவு, புதுவாழ்வு, வாழ்க்கையில் ஒரு திருப்பம் என்றெல்லாம் திருமணம் எனும் பந்தம் பேசப்படுகின்றது. இத்தகைய பந்தம் பல்லோர் முன்னிலையில், பலர் சாட்சியில் இறை சந்நிதியில் சட்டரீதியாக உலகுக்கு அறிவிக்கப்படுகின்றது. இத்தகைய மகோன்னதமான உறவு எமது சமுதாயத்தில் சிலரைப் பொறுத்தவரையில் இடைநடுவில் அறுந்துவிடுகின்றது. அதாவது அவர்களின் உறவிலே ஏதோ சில காரணங்களைக்கொண்டு பிளவு ஏற்படுகின்றது. இந்தப் பிளவு காலம் செல்லச் செல்லத் தம்பதியரிடையே மனக்கசப்பை ஏற்படுத்துகின்றது. இதனால் இவர்கள் விவாகரத்து எனும் தீர்வை எதிர்நோக்க வேண்டியுள்ளது. விவாகரத்து எமது சமுதாயத்தில் அவ்வளவுக்கு எளிதான விடயமாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஆனால் மேல்நாட்டுச் சமுதாயத்தில் இது சர்வசாதாரணமெனலாம். என்ன காரணத்தைக்கொண்டும் தம்பதியரிடையே வேற்றுமை ஏற்பட்டாலும் விவாகரத்துச் செய்து கொள்ள மேல்நாட்டில் அனுமதியுண்டு. விவாகரத்து எந்தளவுக்கு இரு சமுதாயத்தினரிடையேயும் வரவேற்கப்படுகின்றது என்பதை நோக்கல் இங்கு அவசியமாகின்றது.

திருமணம் செய்துகொண்ட தம்பதியர் யாவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரும் வள்ளுவன் வழியேதான் இல்வாழ்க்கையை மேற்கொள்கின்றார்கள் எனக் கூறமுடியாது அவரவர் தலைவிதிவசத்தால் வாழ்க்கையானது அமைகின்றது. சிலருக்கு முன்செய்த ஊழ்வினையால் திருமணம் செய்து சிலவருடங்களின் பின் கணவன் மனைவியரிடையே கசப்பு, பிணக்கு அதனால் மன வெறுப்பு ஏற்படுகின்றது. இந்த நிலைமை எங்கள் நாட்டில் நிறைய உண்டு. இப்படிக் கொடூரமான நிலை தம்பதியரிடையே ஏற்பட்டுவிட்டால், அவர்கள் மீண்டும் சந்தோஷமாக வாழமுடியாது. இதற்காக விவாகரத்துச் செய்துகொள்ளுதல் என்பதை சமூகம் விரும்பி ஏற்கவும் மாட்டாது. ஆனால் மேல்நாட்டுச் சமுதாயம் இம்முறையே சிறந்ததென விரும்பி வரவேற்கின்றது. எமது பண்பாடு, பாரம்பரியம் விவாகரத்தை வெறுக்கின்றது. அதாவது விவாகரத்துச் செய்துகொண்ட ஆணையோ பெண்ணையோ சமுதாயம் மற்றவர்களைப்போல் சமகண் கொண்டு நோக்குவதில்லை. விசேடமாகப் பெண்களென்றால் எள்ளி நகையாடுகின்றது, ஆனால் அவர்கள் ஏன் விவாகரத்துச் செய்துகொண்டார்கள், இந்த நிலைமைக்கு அவர்களை ஆளாக்கிய காரணிகள் எவையென யோசிப்பதில்லை. மேலெழுந்தவாரியாகப் பார்த்துவிட்டு வாழத்தெரியாதவர்கள், குடும்பவாழ்வின் இலக்கணம் புரியாதவர்கள் என வசைமாரி பொழியக்கூடும். மேலும் விவாகரத்துப் பெற்றோர் ஒரு சபையில் வைத்து எண்ணக் கூடிய யோக்கியதை அற்றவர்களாக உள்ளனர். திருமணம் செய்து ஐந்து அல்லது பத்து வருடங்களின் பின்னர் சில தம்பதியரிடையே பிணக்குகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சச்சரவுகள் ஏற்பட்டு ஒருவருக்கொருவருள்ள அன்பில் இடைவெளி ஏற்படுவதை நடைமுறையிற் காணக்கூடியாதாயுள்ளது, இத்தகைய நிலையில் பெண்ணானவள் தனது மனதுக்குப் பிடித்தவனைக் கணவன் அமையாமல் தொந்தரவு செய்தாற்கூட அதை அவள் பேசாது வாய்மூடி மௌனியாயிருந்து ஏற்கவேண்டிய இக்கட்டான நிலைக்கு உள்ளாகின்றாள். 'கல்லானாலும் கணவன். புல்லானாலும் புருஷன்' என்ற பழமொழிக்கேற்பக் கணவரின் கொடுமைகளைச் சகித்துக்கொண்டுவாழ்கிறாள். அதாவது கணவன் யமரூபமாக நின்று கொடுமைகளைச் செய்தாலும் எம் சமுதாயப் பெண்ணினம் சமுதாயத்திற்காக, ஊராருக்காக கணவன் மனைவி என்ற போர்வையில் நரகவேதனையைத் தமக்குட் தாமே அனுபவிக்கின்றது. குறிப்பாக எமது சமுதாயத்தில் ஒருபெண் தனது விருப்பமில்லாத கணவனை விட்டுப் பிரிந்துவாழ்ந்தால் பூரண சந்தோசம், திருப்தி என்பன ஏற்படுமென அறிந்தும் அவள் அப்படி வாழமுடியாதவளாகின்றாள். காரணம் அவள் தனது இன்பத்துக்காகத் தனக்காக வாழவில்லை. சமுதாயத்திற்காகவே வாழ்கின்றாள். இதுதான் எமது பண்பாடு பெண்ணுக்கு விதித்துள்ள கட்டுப்பாடு. இவ்வாறாக அப்பெண் எதுவித நிம்மதியுமற்று மூச்சுவிடும் காலம்வரை காலாகாலமாக வேதனையை அனுபவித்து மடிந்துவிடுகின்றாள், அவள் விவாகரத்துச் செய்துகொண்டாலும் எமது சமுதாயம் அவளை ஒதுக்குகின்றது. 'வாழப் பிடிக்கவில்லை' என்றால் விவாகரத்துச் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டால் எமது பெண்ணுக்கு இழுக்குண்டாகி றது. மேலும் அப்படி விவாகரத்துச் செய்து கொண்ட ஒருபெண் மீண்டும் திருமணம் செய்து கொள்ள யோக்கியதையற்றவளாகின்றாள். ஆனால் விவாகரத்துச் செய்துகொண்ட ஆண் மீண்டும் மணக்கோலம் பூணுவதற்கு அனுமதியளிக்கும் எமது சமுதாயம், பெண்ணுக்கும் அவ்வுரிமையை அளிப்பதற்கு ஏன் தயங்குகின்றது என்பது முக்கிய மான ஒரு கேள்வியாக உள்ளது. அவளும் மறு மணம் செய்துகொண்டாலென்ன? இதற்கான பதி லும் எம்மினப் பெண்களைச் சாடுவதாகவே அமை யும்.

மேல்நாட்டாருக்கு விவாகரத்துச் செய்வதில் பூரண சுதந்திரமுண்டு. அச்சமுதாயத்தில் விவாக ரத்துப் பெற்றோர் தாழ்வாகவோ, கேலிக்குரியவர்க ளாகவோ மதிக்கப்படுவதில்லை, மனிதப்பிறப்பு ஒருமுறைதான், அனுபவிப்பனவற்றை அனுபவித் துச் சந்தோஷமாக மடியவேண்டுமென்பது இவர் களது கொள்கை, அதாவது துன்பத்தின் சாயல் கூட வாழ்க்கையில் இருக்கக்கூடாது. வாழ்வோ குறுகியது. அக்காலத்திற் சந்தோஷமாக வாழ்ந்து விட்டுப் போகவேண்டுமென்பது இவர்கள் வாழ்க் கையின் தாற்பரியம். தனக்குப் பிடிக்காத கணவ னுடன் பிடிப்பற்ற வாழ்க்கை ஏன் வாழவேண்டும், அவ்வாழ்க்கைக்கு அர்த்தமுண்டா என்பது அவர் களது கேள்வி. ஒருவரையொருவர் புரிந்து மன மொத்து வாழும் வாழ்க்கை அமையாவிடில் விவாக ரத்துச் செய்துகொள்வதுதான் சிறப்பு. அதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. ஆனல் எமது சமுதாயத்தைப்போல் சமுதாயத்திற்காகப் போலிவாழ்வு வாழும் வாழ்க்கை மேல்நாட்டுச் சமுதாயத்தில் இல்லை. மேலும் இங்கு விவாகரத்துப் பெற்றபெண் மீண்டும் திருமணம் செய்ய முடியும். அதேபோல் ஆண்களும் செய்துகொள்ளலாம், மறுமணம் செய்துகொள்ளப்படும் பெண்கள் ஏற்கனவே திருமணம் செய்து விவா ரத்துப் பெற்றுள்ளவர்களாகவும் இருக்கலாம். திருமணம் செய்யாதவர்களாகவும் இருக்கலாம். இதைப்போலவே மீண்டும் திருமணம் செய்ய ஒரு பெண்விரும்பினல் அம்மணமகன் முன்பு திருமணம் செய்து விவாகரத்துப் பெற்றவராகவோ திருமணம் செய்யாதவராகவோ இருக்கலாம். அவைபற்றி இவர்களுக்கு அக்கறையில்லை. ஆனல் தமது மனதுக்குப் பிடித்தவர்களாகப் பார்த்துத் திருமணம் செய்து சந்தோசமாக வாழ்கின்றனர், இப்படி மறுமணம் செய்வோருக்கு ஏற்கனவே பிள்ளைகளிருந்தால் மறுமணம் செய்தபின்னர் தத்தமது பிள்ளைகளாகவே கருதுகின்றனர். உதாரணமாக மீண்டும் திருமணம் செய்துகொள்ள விரும்பும் பெண்ணுக்கு குழந்தை இருந்தாலும் பாதகமில்லை. அவள் இன்னெருவரைக் கணவராகப் பெற்று வாழும் நிலையில் அக்கணவன் அவளின் குழந்தையை தனது குழந்தையாகவே ஏற்றுக்கொள்ளும் பண்பு உண்டு. இரண்டாவது தந்தையின் வம்சாவழிப் பெயரே அப்பிள்ளையின் குடும்பப் பெயராகிறது. இவ்வாருக மேல்நாட்டுச் சமுதாயம் மறுமணத்தை மனதார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கின்றது. எமது சமுதாயமோ மறுமணத்தைப் புறக்கணிக்கின்றது. விதவைப் பெண்கள் விதவை யாக வாழ்வதையே எமது சமுதாயம் விரும்புகின் றது. இதை மாற்றுவது எதிர்கால இளைஞர்கள் கையில்தான் தங்கியுள்ளது, இந்த நிலைமை எமது சமுதாயத்திலிருந்து மாற எவ்வளவு காலமெடுக்கு மென்பதும் கேள்விக்குறியாக அமைகிறது.

எமது பண்பாட்டின்படி கணவன் இறந்தபின் னர் பெண் அமங்கலியாகிச் சபைக்கு வேண்டாதவ ளாகின்றாள், இதுவும் எமது பெண்ணினத்தின் மனதைப் பொசுக்கிவிடும் செய்கையாகும். கண வன் இறந்தபின்னர் ஒரு பெண்ணுக்கு எல்லாமே இழந்ததுபோல்தான். ஆனால் இன்றைய நாகரிக யுகத்தில் இது ஓரளவுக்கு மாறிக்கொண்டு வருகின் றது. கணவனை இழந்து தனிமரமாக வாழ்வதிலும் பார்க்க மீண்டும் திருமணம் செய்து அப்பெண் தன்வாழ்வைப் பூரணப்படுத்திக் கொள்வதில் எது வித தவறுமில்லையே. இதற்கு எமது சமுதாயம் அனுமதியளிக்கத் தயங்குகின்றது. சில பெண்கள் விதிவிலக்காக மறுமணம் புரிய மனமற்றவராயுமுள் ளனர். விதவையான இளம் பெண்களிற் சிலர் மறுமணம் செய்து புதுவாழ்வு வாழ்வதற்கு விருப்ப மிருந்தும் மற்றவர்கள் தம்மை மதிக்கமாட்டார் கள், சமுதாயம் கேவலக்கண்கொண்டு நோக்கும் என்ற நினைவில் மறுமணம் செய்யாது தமது இள மையை வீணே கழித்து வாழ்வை முடிக்கின்றனர். தாம் மறுமணம் செய்ய விருப்பமிருந்தும் தமது விருப்பத்தைச் சமுதாயத்திற்காகச் சாகடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாபாசங்களைத் தமக்குள்ளேயே பொசுக்கி ஒண்டிக்கட்டையாக வாழ்கின்றனர். இத்தகைய நிலை மேல்நாட்டுச் சமுதாயத்திடையே இல்லை. மேல்நாட்டுப் பெண்கள் கணவன்மார் இறந்தபின்னர் மறுமணம் செய்துகொள்வார்கள். சமுதாயமே முன்னின்று அவர்களுக்கு மறுதிருமணம் செய்து வைக்கின்றது. கணவன் இறந்தபின்னர் தமக்கு இனியும் ஒரு துணை அவசியமென்ற ரீதியில் தாம் விரும்பியவர்களை மீண்டும் திருமணம்செய்து வாழ்கின்றார்கள். மேல்நாட்டுப் பெண்கள் சமுதாயத்தைப்போல் எமது பெண்சமுதாயமும் சீரடைய வேண்டும். அப்போதுதான் எம் சமூகத்தில்காணப் படும் சில அடிப்படைக் குறைபாடுகள் நீக்கப் படும்.

எம்நாட்டில் விவாகரத்து என்பது குடும்பங்களிடையே பல்வேறு காரணங்களால் தோற்றம் பெறுகின்றது. எமது சமுதாயத்தில் விசேடமாக பொருளாதாரம், வறுமை, கொடுக்கல் வாங்கற் பிரச்சினைகள் என்பவற்றால் தம்பதியரிடையே கருத்துப் பேதங்கள் ஏற்பட்டு, நாளடைவில் அவை அவர்களை விவாகரத்து எனும் எல்லைக்குக் கொண்டு போய்விடுகின்றது. பெரும்பாலும் ஒருசிலர்தான் விவாகரத்தை மேற்கொள்கின்றனர். பிரச்சினைகளை எவ்வளவுக்குச் சகிக்கமுடியுமோ அந்தளவுக்குச் சகித்துப் பெண்கள் வாழநினைப்பார்களே தவிர வரிந்துகட்டிக்கொண்டு விவாகரத்துக்கோரி சட்டத்தின்முன் தொந்தரவு செய்யமாட்டார்கள், காரணம் விவாகரத்துச் செய்துகொண்ட பெண்களைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயம் கேலிக்கண்கொண்டு பார்ப்பதேயாம். தமது பொறுமையின் எல்லையை மீறினால்குறிப்பாக (பெரும்பாலும்) மத்தியதரவகுப்பினர் விவாகரத்துச் செய்துகொள்வர். இவர்களில் எவ்வளவு வீதத்தினர் மறுமணம் செய்கின்றனர் என்பதும் கேள்விக்குரியதே. இந்நிலைமைகளுக்கெல்லாம் காரணம் எமது சமுதாயக் கட்டுக்கோப்புக்களே:

மேல்நாட்டுச் சமுதாயத்தில் தம்பதியரிடையே தாம்பத்திய உறவில் அதிருப்தி ஏற்படும் பட்சத்தில் உடனே விவாரத்துச் செய்துகொள்வார்கள். இது இவர்களுக்குச் சர்வ சாதாரண விடயமாகும். இங்கு பாலியல் உணர்வுகள் முக்கியமாக மதிக்கப்படுகின்றன, ஆனால் எமது சமுதாயத்தில் இவ்வாறான முறையில் விவாகரத்து கோருவது அரிதிலும் அரிது மேல்நாட்டுப் பெண்கள் பாலியல் நடத்தையிலும் (சமஉரிமை) ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானம் என்ற நிலையில் வாழும் பண்புடையவர்கள். இங்குள்ள பெண்களிற் சிலர் தங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் பாலியல் ரீதியாக அதிருப்தியடையும் பட்சத்தில் பிற ஆடவர்களை நாடுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இது மிகவும் இலேசான காரியமாக இச்சமுதாயத்தில் மேற்கொள்ளப் படுகிறது. இவ்வாறு விவாகரத்துச் செய்து பிரிவுற்ற தம்பதிகள் சிலகாலம் செல்ல ஒருவரையொருவர் சந்திக்கநேரிட்டால் குரோத மனப்பான்மையின்றி நண்பர்களாகக் கலந்துரையாடிவிட்டுச் செல்வர், பாலியல் உணர்வில் மட்டுமல்ல எந்த விதத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதை நிவர்த்திசெய்து கொள்வார்களேயன்றிப் போலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை வாழமாட்டார்கள். அவ்வாறன்றித் தொடர்ந்தும் பிரச்சினைகள் ஏற்படாவண்ணம் வாழ்க்கை நடாத்துவர். இதனால் இவர்களின் குடும்பவாழ்வில் பிரச்சினைகள் என்று இருப்பதில்லை அதாவது விவாகரத்துச் செய்து மறுமணம் செய்து கொள்வதற்குப் போதிய சுதந்திரம் இவர்களுக்கு இருக்கும்போது குடும்ப வாழ்க்கையில் பிரச்சினைகளைத்தவிர்த்து இவர்கள் வாழ்க்கையை நடாத்துகின்றார்கள்.

எமது சமுதாயத்தைப் போல் இங்கு கற்புக்கு முக்கிய இடமில்லை. கற்பென்றால் என்ன என்ற நிலையைத்தான் இங்கு காணக்கூடியதாயுள்ளது. பெண்களைத் தாயாகக் கருதும் பண்பு எமது சமுதாயத்திடமே உண்டு இங்கு ஆண்களுக்குப் பெண்கள் சமமென்ற ரீதியில் வாழ்க்கை நடாத்துவதால் தாய்மைக்குரிய மகத்துவம் இவர்களிடம் இல்லையெனலாம், கற்பை மதிக்கும் சமுதாயத்தில் நாம் வாழ்கின்றோமென்பது எமக்குப் பெருமைக்குரிய விடயமாகும். அதேவேளை மேல்நாட்டவர்களில் கற்புள்ளவர்களாக ஒழுக்க நடத்தையுடையவர்களாக சிலர் வாழ விரும்புகின்றார்கள் என்பதையும் மறுக்கமுடியாது. ஆனால் அது மிகக் குறைவென்று கூறலாம். மேல்நாட்டுச் சமூகத்தில் பெண்கடத்தல், கற்பழித்தல் போன்ற குற்றச்செயல்கள் எதுவுமேயில்லை. ஒருபெண், அதுவும் இளம்பெண் எந்த நேரத்திலும் எந்தச் சாமத்திலும் தனியே எங்கும் போய்வரலாம். ஆண்களுக்கு அஞ்சவேண்டிய தேவையில்லை. ஏனெனில் இங்கு 18–22 வயதுக்குட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டோர் தாம் விரும்பியபடி (ஆணும்பெண்ணும்) பழகுவார்கள். இதனுல் மற்றப் பெண்களைக் காமக்கண் கொண்டு நோக்கவேண்டிய அவசியம் அவர்களுக்கில்லை. அதாவது ஒரு பெண்ணைக் கண்டால் அவளும் தம்மைப்போன்ற ஒரு ஆண்என்பது போலத் தாமே விலகிவிடுவார்களேயன்றிக் காம இச்சையுடன் நோக்கமாட்டாள். இதற்குக் காரணமும் இல்லாமலில்லை' ஒன்று சிறுவயதிலேயே தமக்குப் பிடித்தமானவர்களுடன் பழகிக்கொள்கிருர்கள், மற்றது இங்கு இடத்துக்கிடம் அரசாங்க அனுமதிபெற்ற விபசார விடுதிகள் நிறைய உண்டு. அந்த இடங்களை அவர்கள் பயன்படுத்தமுடியும். இவ்வாருன நிலையிருக்கும்போது பிறபெண்களைக் கெடுத்தல், நாடல் போன்ற செய்கைகள் தோன்ற வேண்டிய அவசியமில்லை, இத்தகைய நிலைமைகளாலேயே எந்தப் பெண்ணும் பயமின்றி எங்கேயும் போய்வரலாம். மேலும் ஒரு ஆடவனுக்கு ஒரு பெண்மீது விருப்பமேற்பட்டால் (திருமணம்செய்ய அல்ல) அவளிடம் தனது ஆவலை வெளியிடுவான். அதற்கு அப்பெண் சம்மதம் தெரிவித்தால் தமது விருப்பத்தைத் தடையின்றி நிறைவேற்றலாம். மாருக அப்பெண் மறுத்துவிட்டால் அவ்வாடவன் பலாத்காரம் பண்ணுது தன்வழியே சென்றுவிடுவான். ஆனல் இங்கு கறைப்பட்ட பெண்ணென்று யாருமே எப்போதுமே இல்லை. இவையெல்லாம் சமூகத்துடன் ஒன்றிப்போன பழக்கமெனலாம். இப்படிப் பெண்கள் முறைதவறி நடந்தாலும் இவர்கள் என்றும் ஒரு அந்தஸ்துடன்தான் சமுதாயத்தில் வாழ்கிருர்கள். இச்சமுதாயம் இதற்கு விட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கின்றது. எமது சமுதாயத்தை இந்த அம்சத்தில் மேல்நாட்டுச் சமுதாயத்துடன் ஒப்பிட நினைத்தலே முடியாத காரியமாகும், அவ்வளவிற்கு எதுவிதத்திலும் ஒத்துவராத பண்புகளைக் கொண்டுள்ளது. எமது சமுதாயத்தில் கற்பு உயிரிலும் மேலாகக் கருதப்படுகின்றது. போற்றப்படுகின்றது. எவரும் மீற விரும்பமாட்டார்கள். கற்பிழந்த பெண்கள் சமுதாயத்தில் ஒதுக்கப்படுகின்றார்கள். திருமணம் செய்ய அவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது. திருமணத்திற்கு முன் ஆணும் பெண்ணும் பழகமாட்டார்கள். நவநாகரிக வளர்ச்சியுற்ற இக்காலத்தில் இது ஓரளவு தளர்த்தப்பட்டுச் சிலர் சமுதாயத்துக்கு மறைந்து வாழ்ந்து பின் திருமணம் செய்து சமுதாயத்தில் வெளிப்படுவார்கள். ஆனால் உடலிச்சைகளைத் தீர்த்துக்கொள்ளாத முறையில் பெரும்பாலானோர் வாழ்வர். சிலர் தவறிவிடுகின்றார்கள். இவ்வாறு தவறியோருக்கு சமுதாயத்தில் உரிய இடமில்லை. குறிப்பாகப் பெண்கள் உயிரை மாய்த்துக்கொள்வதும் உண்டு, ஆண்கள் தப்பித்துக்கொள்வார்கள். இப்படியான இறுகிய கட்டுப்பாடுகளை எமது சமுதாயம் கடைப்பிடித்து வருகின்றது. வாழ்க்கையில் இவர்கள் தவறுவதற்குக் காரணம் என்னவென்று மேல்நாட்டோடு ஒப்பிடும்போது புரிந்து கொள்ளலாம்.

எமது சமுதாயத்தில் (sex) பாலியல் என்பது வெளியில் பேசப்படாததும் அவ்வாறு பேசுவோரைத் துர்நடத்தைக் காரர் எனக் கணிக்கப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான இயல்புண்டு, பாலியல்பற்றி மற்றவர்களுடன் கலந்து கதைப்பதை அவமானமாகக் கொள்ளும் பண்பு எம்மிடையே உண்டு. அதாவது அநாகரிகமான செயல் என்றே கருதுகின்றனர். மேலும் பதினைந்து வயதிற்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் நெருக்கமான முறையில் பழகமாட்டார்கள். எமது சமுதாயத்தில் பாலியலில் அதிக அறிவு, ஆர்வம் என்பன இல்லை. எமது சமுதாயத்தில் பாலியல் ஒரு மறைபொருளாகவே இருக்கின்றது. அத்துடன் எம்மிடையே உடலிச்சையைத் தீர்க்கும் பொருட்டு வேண்டிய விபசார விடுதிகளோ ஏனைய அம்சங்களோ இல்லை. இதன் காரணமாகவே எமது சமூகத்தில் கற்பழிப்பு, பெண்கடத்தல் என்பன மலிந்துகிடக்கின்றன.

இதனால்தான் எமதுபெண்கள் தாம் விரும்பாமலே கற்பிழக்கவேண்டிய நிலைக்குள்ளாகின்றார்கள். பெண்கடத்தல் முயற்சிகளும் நடைபெறுகின்றன. மேலும் பாலியல் மறைபொருளாக எமது சமுதாயத்தில் பேசப்படுவதால் அதை அனுபவிக்கவேண்டுமென்ற ஆர்வம் எழுகின்றது, மேல்நாட்டினர் போல் அது பிரபல்யமாக இருக்குமேயானால் இத்தகைய குற்றச்செயல்கள் ஏற்பட இடமில்லை, மேல்நாட்டில் பாலியல் ஒரு சர்வசாதாரண பேச்சாகவும் நடத்தையாகவும் இருப்பதால் அதில் எதுவித புது உந்துதலும் அவர்களுக்கில்லை. இதனாற்றான் இங்கு கற்பழிப்பு, பெண்கடத்தல் முயற்சிகள் இல்லையெனலாம். இங்கு ஆண்களும் பெண்களும் நெருங்கிப் பழகி தமக்குள் ஒருவரையொருவர் பிடித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கொண்டாற் திருமணம் செய்வார்கள். அத்துடன் திருமணத்திற்கு முன் கணவன் மனைவியாக நடந்துகொள்ளும் பண்புமுண்டு. இவ்வாறு வாழ்ந்து சிறிதுகாலம் செல்ல ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் தன்மையில் வேற்றுமை ஏற்படும் போது அவர்கள் விலகிக்கொள்கிறூர்கள். அதாவது திருமணத்திற்கு முன் ஆண் பெண் நன்ருகப் பழகி குறைநிறைகளை அறிந்து திருமணம் செய்வர். திருமணத்திற்கு முன் கணவன் மனைவியாக வாழ்ந்தவர்களென்ற வசைமொழி இன்ஞேர் திருமணம்செய்ய முற்படும்போது இவர்களுக்கு ஏற்படுவதில்லை என்பது குறிப்பிடவேண்டிய விடயமாகும்.

ஒட்டுமொத்தமாக மேல்நாட்டவரின் பாலியல் நடத்தையை நாம் நோக்கும்போது கற்புக்கு, ஒழுக்கத்துக்கு முக்கிய இடம் கொடுக்கப்படுவதில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாயுள்ளது. இதைப் பார்க்கும்போது உண்மையில் எமது சமுதாயக்கட்டுக்கோப்புகள் மிகச்சிறந்தவையெனப் பெருமைப் படலாம். தூய்மையான ஒழுக்கநெறிகளைக் கொண்ட எமது சமுதாயத்தில் வரவேற்கக்கூடிய பல அம்சங்கள் இருந்தபோதும் கண்மூடித்தனமான சில கொள்கைகளும் இருக்கின்றன, இவை ஒரளவுக்குச் சீரடைந்தால் எமது சமுதாயம் நம் நாட்டுக்குச் சிறப்பான ஒரு முன்னேற்றத்தின் அறிகுறியாக அமையும். அதாவது எமது கலாச்சாரம் மேல்நாட்டைப்போல் மாறவேண்டுமென்பதில்லை. காலத்துக்கு ஏற்றவகையில் மாறவேண்டிய இடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறினால் எமது சமுதாயம் சீரடையும். மேல்நாட்டுக் கலாச்சாரம் எமது கலாச்சாரத்துக்கு முற்றும் விரோதமானது. எனினும் அவற்றில் நாம் கொள்வன கொண்டு தள்ளுவன தள்ளி எமது கலாச்சாரத்தை மேம்படுத்தும்போது எமது சமுதாயம் வளர்ச்சிபெறும்,

தனிமனித சடங்குகளாக, கிரியைகளாக பிறப்பு, திருமணம், திருமணத்தோடு தொடர்புடைய பாலியல் நடவடிக்கைகள் என்பனபற்றி இது வரை பார்த்தோம். மேற்கொண்டு இறப்புஎனும் அம்சத்துக்கு வருவோம். மேல்நாட்டுக் கலாச்சாரத்தில் ஒருவர் இறந்தால் எம்மைப்போல் கூடிக் குழுமியிருந்து அழுது குழறும் பழக்கமில்லை. இறந்து முப்பத்தோராம் நாள் சடங்கு என்பதுமில்லை. ஒருவரின் தாய் அல்லது தந்தை இறந்தால் இறந்தன்று உறவினர் யாவரும் சேர்ந்து துக்கம் கொண்டாடுவர். மறுநாள் தத்தமது கடமைகளுக்காகச் சென்றுவிடுவார்கள். அதாவது இறந்தவருக்காக அஞ்சலிசெய்து அவரின் ஈமக்கடனை முடித்தபின்னர் தத்தமது அன்றாட அலுவல்களுக்குச் சென்றுவரும் பழக்கம் இங்குண்டு. இதனால் இவர்கள் இறந்தவர்கள்மேல் அன்பு, பாசம் இல்லையெனக் கூறமுடியாது அதாவது எமது பண்பாட்டைப்போல் முப்பத்தோராம் நாள்வரை துக்கம் கொண்டாடி உணவுசமைக்காதிருக்கும் நிலையில்லை, மேலும்இவர்களுக்கு நேரம் வேலை என்பன மிக முக்கியமானவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தவர் தமது தந்தையாக இருந்தாற்கூட இருந்து துக்கங் கொண்டாடினுல் இறந்தவர் மீண்டும் வரப்போகின்ருரா, எனவும் தமக்கு வேலை முக்கியம், பணம் முக்கியம் இவற்றை உறவினர் தருவார்களா அல்லது இறந்தவர் பெற்றுத்தர முடியுமா எனவும் எண்ணித் தமது மனதைத் தேற்றிக்கொண்டு வாழ்வர். இங்கு எம்மைப்போன்று இறந்தவர்க்குச் சமாதிகட்டுவதும், தகனம்செய்வதுமான வழமையுண்டு. பெரும்பாலும் சமாதிகட்டிப் பூச்செடி வளர்த்து நீருற்றிப் பேணி வளர்த்துத் தினத்துக்குத் தினம் சமாதிக்குச் சென்று இறந்தவர்க்காக அஞ்சலி செய்வர். சமாதிகள் என்றும் துப்பரவாக பூஞ்சோலையாகவே காட்சியளிக்கும். சமாதிகள் ஒவ்வொரு குடும்பத்துக்கு ஒன்ருக வம்வம்சாவழி உரிமைபெற்றுவருகின்றன. மேலும் இறந்தவர்களின் சிரார்த்த தினத்துக்குத் தேவாலயங்களில் அக்குடும்பத்தினர் விசேட பூசைசெய்து பின் மலர்வளையம் சாத்தி அஞ்சலி செய்வர். எமது சமுதாயத்தில் இறந்தவர்க்காக வருந்தி வேதனைப்படும் வழக்கம் மிகக்கூடுதலாகவே உண்டு. அத்துடன் இறந்தவர்களுக்காகத் தம்மைத் தியாகம் செய்து தம்மையே ஒறுத்துச் சிலர் பற்றற்ற நிலையில் வாழும் பண்பும் எமது நாட்டில் உண்டு.

கீழைத்தேயப் பண்பாட்டிற்கும் மேலைத்தேயப் பண்பாட்டிற்கும் இடையேயுள்ள இன்னெரு முக்கிய அம்சம் மேலைத்தேயத்தில் மக்களின் தொடர்புமுறை, உறவுமுறை குறைவு எனலாம், மேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் குறிப்பாகஇயந்திரமயமான சூழ்நிலைக்குள் மக்கள் வாழ்வதால் ஒருவர்க்கொருவர் இடையே யுள்ள தொடர்பு முறைகள் குறைவாயுள்ளது. இங்கு பொருளாதாரம் சிறப்புற்று மக்கள் வாழ்க் கைத்தரம் முன்னேற்றமாயுள்ளது. இதனால் ஒருவ ரிலொருவர் தங்கியோ, இன்னொருவரின் உதவியை எதிர்பார்த்தோ வாழவேண்டிய அவசியமில்லை, ஆசிய மக்களின் கலாச்சாரத்தில் அன்புமிகமுக்கியத் துவம்பெறுகிறது. ஒருவரைநம்பி இன்னொருவர் வா ழும் முறை அதாவது தங்கிவாழும் தன்மை எமது சமூகத்தில் உண்டு என்றும், அதுபெரும் பிரச்சினை யைக் கொடுக்கிறதென்றும் சனத்தொகைக் கட்டுப் பாட்டு நிபுணர்கள் கருத்துத்தெரிவிக்கின்றனர் இத்தகைய நிலைமையில் மக்களிடையே அதிக தொ டர்பு ஏற்படுகின்றது. உற்றார், உறவினர், அன்பு பாசம், கொடுக்கல் வாங்கல்கள் என்பன எமது சமு தாயத்திலேயே சிறப்பாகக் காணப்படுகின்றன. பெற்றோர் பிள்ளைகளுக்குள்ள அன்பு, பாசப்பிணைப் பென்பவை இறுக்கமானவை. பிள்ளைகளுக்காக உயிரையே கொடுக்கும் முறையில் இங்குள்ள பெற் றோரின் அன்பு உள்ளது. பிள்ளைகள்கூட தமக்கு ஏதாவது துன்பம் ஏற்படும்போது ஐயோ, அம்மா என்றுதான் அவர்களையறியாமலேயே அவர்களின் வாய் உச்சரிக்கின்றது. ஐயோ. கடவுளே அடுத்த வார்த்தையாகத்தான் வெளிவருகின்றது. இங்கு இவர்கள் கருவிலிருக்கும்போது இறுக்கமான அன் பும் இவர்களின் இரத்தத்தில் ஊறிவிட்டதென லாம் ஆனால் இத்தகை அன்பை மேல்நாட்டுப்

பெற்றோர் பிள்ளைகளிடையே காணமுடியாது. இவ்வகையில் நோக்கும்போது எமது சமுதாய மக்கள் உறவுமுறை மிகச் சிறப்பானது எனலாம். அடுத்து ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பண்பும் எம்மிடையே உண்டு.

மேல்நாட்டவரிடம் சகலதேவைகளையும், சகல துறைகளிலும் பெரும்பாலும் இயந்திரங்களே நிறைவேற்றுகின்றன. இதனுல் ஒருவருக்கொருவர் தொடர்புகள் குறைகின்றன. மேலும் பொருளாதாரப் பிரச்சினைகள் இவர்களுக்கில்லை. இவர்களுக்கு அரசாங்கத்தால் வயோதிபர் நிதி, வேலையிழப்பு நிதி, ஒய்வூதியம் எனப்பலவழிகளில் அவரவர் தகைமைகளுக்கேற்ப கிடைத்துக்கொண்டிருக்கும். எனவே இவர்களுக்குப் பணப்பிரச்சினை இல்லை அவ்வாறிருந்தாலும் வங்கியில் கடன்பெறுவர். உணவு சமைத்தல் முதல் உடைகள் சுத்தமாக்கல்வரை மின்சார உதவியுடன் செய்து முடிக்கின்றனர். இதனுல் இவர்களுக்கு ஏதாவது உதவியைப் பெற மற்றவர் துணை தேவைப்படுவதில்லை இதனுலேதான் மக்களுக்கிடையேயுள்ள தொடர்புகள் குறைகின்றன. வயோதிபர்கூட தமது மக்களையோ உறவினரையோ நம்பி அவர்களை எதிர்பார்த்து வாழவேண்டிய அவசியமில்லை. அவர்களுக்குச் சகல உதவிகளையும் வயோதிபர் நிலையம் செய்துவரும். எனவே இவர்களுக்கு எதுவித பிரச்சினையும் இல்லை. எமது சமுதாயத்தில் வயோதிபர் பிள்ளைகளை நம்பி வாழ்கிருர்கள், இதனுல் அவர்களிடையேயுள்ள அன்புணர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிபெறுகின்றது. உண்மையில் இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் பொருளாதாரந்தான் என்ற முடிவுக்கு நாம் வரவேண்டியுள்ளது.

பொருளாதாரம் எங்ஙனம் மக்கள் அன்புறவை நிர்ணயிக்கும் என நினைக்கலாம். அதாவது பெற்றோர் பிரதிபலனை எதிர்பார்க்காது தமது பிள்ளைகள் மேல் அன்புசெலுத்துகிறார்கள் என எல்லோரும் கூறுவர். ஆனால் உண்மையாக ஆழமாகச் சிந்தித்தால் மறைமுகமாகப் பொருளாதாரம் தொழிற்படுகின்றது என்பதை ஒப்புக்கொள்ளத்தான்வேண்டும் பொருளாதார வசதியிருந்தால் ஒருவருக்கொருவர் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையிராது, இவ்வாறு கொடுக்கல் வாங்கல் பணஉதவி இல்லாதிருந்தால் அவர்களிடையே அன்புத்தொடர்பு வளர இடமில்லை. ஆனால் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை இருக்கும்போது கொடுத்தவர்மீது ஒரு இனம் புரியா அன்பும் பாசமும் ஏற்படுகின்றது. ஒருவருக்கு ஏதாவது ஓரு பொருள் இல்லாத நிலையில் வாழும்போது இன்னொருவர் அப்பொருளைக் கொடுத்தால் பொருளைப் பெற்றுக்கொண்டவருக்கு பொருள்கொடுத்தவர்மீது அன்பு, நன்றியுணர்வு ஏற்படுகின்றது. இதேபோல் பெற்றோர் பிள்ளைகளுக்குள்ளேயுள்ள கொடுக்கல் வாங்கல் உதவி தேவையை நிறைவேற்றுதல் என்பன அன்புத்தொடர்பைவளர்க்கின்றன என்று கூறலாம். இத்தகைய நிலைமை எமது சமுதாயத்திலே உண்டு. அதாவது பொருள், பணம் இல்லாத் தன்மையாலே மற்றவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிடம் உதவியைக் கோருகின்றனர். இவ்வாறு கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை ஏற்படும்போது அவர்களையறியாமலேயே அன்பு வளர்ந்து உறுதி பெறுகின்றது. ஆனால் வெளிநாட்டவரைப் பொறுத்தவரை 'இல்லை' என்ற சொல்லே இல்லை. பிள்ளைகளிடமோ, மற்றவர்களிடமோ உதவி கோரவேண்டிய நிலை இல்லை. கொடுக்கல் வாங்கல்நடவடிக்கையிருக்கவேண்டியவமசியமில்லை இதனால் இவர்களிடையே அன்புத்தொடர்புகுறைவு. பெற்றோர் பிள்ளையென்றஉறவு பிள்ளைகளுக்குப் பதினெட்டு வயதுவரையும்தானுண்டு, அதன்பின் அவர்கள் தமது விருப்பப்படி வாழ்வை அமைத்துக்கொள்வார்கள். பெற்றோரைப் பிள்ளைகள் பிரிந்துசென்றபோது பெற்றோர் எதுவித பாதிப்பும் அடையமாட்டார்கள். காரணம் அவர்களுக்குச் சகல வசதிகளும் உண்டு. மேலும் குறிப்பிட்ட சிலநாட்களில் பிள்ளைகள் பெற்றோரைச் சந்தித்துப் பேசிமகிழ்வர். மேலும் பிற்கால வாழ்க்கைக்கு அவர்களை நம்பியிருந்தாற்றானே அவர்களது பிரிவால் வேதனையும் யோசனையுமடையவேண்டும்? ஆனால் இத்தகைய நிலைமை இவர்களுக்கு இன்மையால் அப்படியான முறையிற் சிந்திப்பதில்லை. ஆனால் தேவை ஏற்படும்போது பிள்ளைகள் பெற்றோரைவந்து பார்த்து குசலம் விசாரித்து மகிழ்வார்கள். அதேபோற் பெற்றோரும் பிள்ளைகளைப் பார்க்கவேண்டும். கதைக்கவேண்டும் என்று விருப்பம் ஏற்பட்டால் அவர்களை நாடி உறவுகொண்டாடுவர், இத்தகைய தன்மைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிருப்பதால் அன்பு, நெருக்கம் வளரமுடியாம லுள்ளது.

எமது கலாச்சாரத்தை நோக்கின் பல்வேறு விதங்களில் அது வளர்ச்சிபெற்று மக்களிடையே உறவை வளர்த்துவருகின்றது. பெற்றோர் குழந்தையன்பு, சகோதர அன்பு, கணவன் மனைவியன்பு எனப் பலவகையில் தொழிற்படுகின்றது. இவை எம்மோடு ஊறிய பண்பாகும் இதற்கு மூலகாரணம் பொருளாதாரம்தான் என எப்படிக் கூறமுடி முடியும் எனப் பலர் சந்தேகப்படலாம். அதாவது ஏன் எம்மிடையே பொருள்படைத்த, பணம் படைத்த மத்திய வகுப்பினர் முதலாளி வகுப்பினர் இல்லையா? அவர்களிடம் அன்புக்குப் பஞ்சமுண்டா என்ற கேள்விகளை எழுப்பலாம். ஆனால் தற்போதைய முதலாளி வகுப்பினர், மத்தியதர வகுப்பினர் சகல வசதிபெற்றிருந்தபோதும் இவர்களின் மூதாதையர்களும் இதே நிலையில்தான் இருந்தார்களெனக் கூறமுடியாது. ஏனெனில் பொதுவாக எமது நாடு ஒரு வறியநாடு என்பது பொருளாதார நிபுணர்களின் கணிப்பாகும். இந்நிலையில் வறுமையும் எம்மோடு பின்னிப் பிணைந்ததுதான். எனவே அந்த மூதாதையர் பொருளாதா வசதியின்றி ஒருவர்க்கொருவர் துணையாக இருந்து அன்பு செலுத்தி வந்தனர். அவர்களின் அந்த அன்பு வளர்ச்சி இனம் புரியாமலேயே அவர்களின் சந்ததிகளில் இடம்பெற்றிருக்கலாம். அவ்வாறான சந்ததியினர் தற்போது பணம் படைத்தவரா யிருக்கும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புணர்வில் எதுவித மாற்றமும் ஏற்படக் காரண மில்லையே, இவை எம்மைப் பொறுத்தவரையில் பணம்படைத்தவர், பணமற்றவர் என்ற எதுவித பேதமுமின்றி இரத்தத்துடன் ஊறிய பண்பாக அமைந்துள்ளது. மேலும் தற்போது நகரங்களில் பணம்படைத்தவர்களை ஒரு சிறு கண்ணோட்டமிடும் போது தாமும் தமது வேலையுமாகப் பக்கத்து வீட்டில் என்ன நடக்கிறது என்பதுகூடத் தெரியாத நிலையில் வாழ்க்கை நடாத்துவதையும் காணக்கூடிய தாயுள்ளது. இதற்குக் காரணம் என்ன? பொருளாதாரந்தானே. தமக்குத் தேவையானவற்றை நிறைவேற்றிக்கொள்ளும் நிலையில் மற்றவர்கள் பற்றி அக்கறையோ, அவர்களின் உதவியை நாடவேண்டிய தேவையோ ஏற்படாது. இந்த நிலைக்குப் பொருளாதாரமே அடிப்படையாக அமைந்து உறவுகள் குறைவதற்கும் கூடுவதற்கும் காரணமாக அமைந்துள்ளது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது.

கீழைத் தேயத்தில் அன்புணர்வு உண்மையில் வைராக்கியமானது. இத்தகைய நிலையை மேல் நாட்டில் காணமுடியாது. ஒருவர் வருந்துவதைக் கண்டு மற்றவர் கண்ணீர் வடிக்குமியல்பு எம்மிடையே உண்டு. தான்வாழ்ந்தால்மட்டும் போதும் என்ற நிலை நெருங்கிய உறவுக்கூட்டங்களில் இல்லை பிள்ளைகளை நம்பிப் பெற்றோர்கள் இருக்கின்றார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை அன்புடன் ஆதரித்துத் தமது கடமையை செய்யவேண்டுமென்ற கொள்கை எம்மிடையே உண்டு. ஆகவே வாழ்க்கையின் அடிப்படையான அன்பு எமது சமுதாயத்தில் நிறைய இருக்கிறது. ஒருவருக்கொருவர் துணையாக, ஆறுதலாக வாழ் வார்கள். இது எமக்கு கருவிலேயே உருவாகின் றது. இத்தகைய அன்பு நிலையை மேல்நாட்டுச் சமூகத்திற் காணமுடியாதெனெ அடித்துக்கூறலாம். இதற்கு முழுக்காரணம் பொருளாதாரமாகும். அத் துடன் பல பக்கக்காரணிகளும் உள்ளனவென்ப தையும் மறுக்கமுடியாது. அத்துடன் தானுண்டு தன் வேலையுண்டு என்ற நிலையில் மேலைநாட்டவர் ஏனையோரின் விடயங்களிற் தலையிடாமல் வாழ்வர். மற்றவர்களுடன் சம்பாஷணைகள் குறைவாயுள்ளது மற்றவர்களுடன் கதைத்து அவர்களின் கதைகளில் மகிழ்ச்சிகொள்வதோ, வம்பளப்பதோ இவர்களிட மில்லை. காரணம் தமது நேரத்தை வீணை வழி களில் செலவளிக்கமாட்டார்கள். ஏதேனும் பய னுள்ள முறையிலேயே கழிக்கவிரும்புவர். நேரம், வேலை என்பவற்றை இவர்கள் முக்கியமாக மதிக் கின்றனர். இதனாற்றான் இந்நாடு பொருளாதாரத் தில் முன்னேற்றம் பெற்றுள்ளது. மற்ற வர்களுடன் உரையாடிப் பொழுதைக் கழிக்காது நல்ல பயனுள்ள வகையில் பொழுதைக் கழிப்பர். உதாரணமாகப் புகைவண்டி, பஸ்வண்டிப் பயணத் தின்போது இங்குள்ள மக்கள் சிலர் றேந்தை பின் னல்வேலை போன்ற வேலைகளைச் செய்துகொண்டு பிரயாணம் செய்வர், சிலர் பத்திரிகைகள் சஞ்சிகை கள் வாசிப்பர். இவ்வாறு பயனுள்ள வேலைகளைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வார்களேயன்றி வீண்பராக்கிற் பொழுதைக் கழிக்கமாட்டார்கள், எந்நேரமும் சுறுசுறுப்பாகவே காணப்படுவர். ஒருவரையொருவர் கேலியாகப் பார்க்கும் பண்பு, வசைமொழி கூறும் பண்பு இவர்களிடமில்லை. இதைநோக்கும்போது நாம் தலைகுனியவேண்டியுள்ளது.

மேல்நாட்டவரின் வாழ்க்கைமுறை ஒரு இயந்திரவாழ்க்கைமுறை எனக்கூறலாம். அதாவது சாப்பாடு, வேலை, நித்திரை என்று இப்படியே இவர்களின் வாழ்க்கை உள்ளது, மற்றும் இங்கு வேலையில்லாப் பிரச்சினை இல்லை. குடும்பத்தில் வேலை செய்யக்கூடிய வயதினர் யாவரும் வேலைசெய்கின்றனர். வேலைமுடிந்து வீடு வந்து தந்தையோ தாயோ மக்களோ தத்தமக்கு விரும்பிய உணவைத் தாமே தயாரித்து உண்பர். கூடியிருந்து சாப்பிடும் வழக்கம் இங்கு குறைவெனலாம். காரணம் வேலைக்குப்போய் எல்லோரும் ஒரே நேரத்தில் வீடுவந்து சேரமாட்டார்கள். அடுத்து கணவன் வரும்வரை மனைவி உணவருந்தாது காத்திருக்கும் பண்பும் இங்கில்லை. மனைவி தனக்கு விரும்பிய உணவை (வேலை முடிந்துவந்து) தயாரித்துச் சாப்பிடுவாள். கணவனும் வேலைமுடிந்துவந்ததும் அவருக்குப் பிடித்தமான உணவைத் தயாரித்துக் கொடுப்பாள். பின் மனைவி ஏதேனும் வீட்டு வேலையில் ஈடுபடுவாள். இப்படியான ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானமான நிலை இங்கு காணப்படுகிறது. பெண்களுக்கு ஆண்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட வேலைகள் இங்கு இல்லை. ஆண்கள்கூட சமையல்வேலை. பிள்ளைபரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிப்புவேலை செய்வார்கள். இது இவர்களின் வசதியைப் பொறுத்தது. ஆகவே இங்குள்ள மக்கள் பிரச்சினையில்லாதவர்கள், மகிழ்ச்சி நிறைந்தவர்கள் எனக்கூறமுடியும். மற்றவர்களுக்காக வாழும் பண்பு இவர்களுக்கில்லை. தமக்கு எதுவசதியோ அப்படியே வாழ்க்கை நடத்துவர். இதுவே இவர்களுக்கும் எமக்குமுள்ள முக்கியமான வேற்றுமையெனலாம், நேரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து உரிய உரிய நேரத்தில் அந்தந்த வேலையைச் செய்யும் வழக்கமுண்டு. இதனுல் இவர்களுடைய வாழ்க்கைத்தரம் முன்னேற்ற நிலையிலுள்ளது. அத்துடன் இவர்களுக்கு மற்றவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற கொள்கை கிடையாது. எல்லோர்க்கும் எல்லாமுண்டு, இவற்றுடஷ் பணத்தில் கண்ணுங் கருத்துமாக இருப்பர். ஒரு பெனிக்(ஜெர்மனியநாணயம்) கூடயோசித்துத்தான் செலவழிப்பர். இவ்வாறு பணத்தில் கவனமும் உழைப்பில் சுறுசுறுப்பும் உடையவர்களாக இருக்கின்றுர்கள். ஒருவருக்கொருவர் சொந்தங்கொண்டாட இவர்களுக்கு ஓய்வு நேரம் கிடைப்பது அரிது, இவற்றையெல்லாம் பார்க்கும்போது எமது கலாச்சாரம் ஜேர்மனியர்களுடன் சற்றேனும் ஒற்றுமைப்படாதென்பதை உணரக்கூடியதாயுள்ளது.

மேல்நாட்டை நோக்கின் குறிப்பாக ஜேர்மனியைப் பார்க்கும்போது இது முக்கியமாக ஒரு கைத்தொழில் நாடாகும். யந்திரங்களுடன் மக்கள் பழகுகிருர்கள். வேலைமுடிந்ததும் பொழுதுபோக்கு அம்சமாகத் தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்தல் என்பவற்றில் ஈடுபடுகின்றார்கள். இதனாலும் ஒருவருக்கொருவர் தொடர்பு குறைவாகவே காணப்படுகிறது. யந்திரங்கள், மின்சாரக் கருவிகள் போன்றவற்றால் பல நன்மைகள் இங்கு ஏற்பட்டு நாடு செழிப்புடன் வளர்ந்துள்ளது. மற்றும் யந்திர உதவியுடன் எலக்ரோனிக் முறையில் இங்குள்ள மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதால் உடலில் எதுவித பாதிப்பும் தாக்கமும் ஏற்படாது. அதாவது உடலை நெளித்தோ வளைத்தோ வருத்தியோ வேலை செய்வதில்லை, இப்படியான நிலையில் இவர்களுக்கு உடற்பயிற்சி கட்டாயம் தேவைப்படுகின்றது. எமது சமுதாயத்தில் இந்நிலையில்லை. எங்கள் நாட்டில் பெரும்பான்மையோர் கடும் உழைப்பாளிகள். யந்திரமயமான வாழ்க்கையில்லை, அதனால் விசேடமாக உடற்பயிற்சி கிரமமாகச் செய்யவேண்டிய தேவையில்லை. மே.ஜேர்மனியில்எந்தவொரு துறையிலும்கல்குலேற்றர் எனும்கருவியால் கணக்குகளைச் சுலபமாகத் துரிதமாகக் கணிக்கக்கூடியதாயுள்ளது. இது நன்மையாக இருந்தபோதும் மறுபக்கம் இங்குள்ளவர்களது மூளைவளர்ச்சிக்குள்ள வேலையைக் குறைக்கிறது எனலாம். அன்பு, பாசம் உணர்ச்சித் துடிப்பகள்ஆசிய மக்களுடன் ஒப்பிடும்போது மிகமிகக் குறைவு என்ற முடிவை நாம் கொள்ளலாம். ஜேர்மனிய மக்களிற் சிலர் தமது அன்பு, வாழ்க்கையில் குன்றியிருப்பதை வெறுத்து ஆசிய மக்களின் வாழ்க்கையில் நாட்டம்கொள்கின்றனர். தங்கள் வாழ்க்கையில் ஒருவித வெறுப்பும் ஏற்படுகின்றது என்பதை ஒப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்கொள்கின்றனர். இதை எண்ணும்போது நாம் பெருமைப்படவேண்டியுள்ளது.

பொழுதுபோக்கு அம்சங்கள் மேல்நாட்டுக் கலாச்சாரத்தில் முக்கியமானதொன்ருகக் கருதப் படுகின்றன. பொழுது போக்குக்கென்றே நேரங் களை ஒதுக்குகிருர்கள். இதை இவர்கள் கட்டாய மாக அன்ருட கடமைகளில் ஒன்ருகக் கருதுகின்ற னர். முக்கியமாகத் தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகை வாசித்தல், வானெலி கேட்டல், இரவு விடுதிகளுக்குச் செல்லல், கேளிக்கை நிலையங்கள் (Clubs) சினிமா பார்த்தல் போன்றவை முக்கியமா னவை. எமது கலாச்சாரத்தில் இத்தகைய அம்சங் களில் சில உண்டு எல்லோரும் இவற்றைக் கையா ளமாட்டார்கள், சிலரைப் பொறுத்தமட்டில் பொ ழுதுபோக்கு என்று சொல்லமுடியாத அளவுக்கு எந்நேரமும் கடும் உழைப்பாளிகளாக, விவசாயிக ளாக உள்ளர். மற்றும்சிலர் எந்நேரமும் வீணை முறையில் பொழுதைக்கழிக்கும் வழமையும் அதிக முண்டு. ஆனல் மேல்நாட்டவர் பொழுது போக்கு என்று நேரத்தை ஒதுக்குவார்கள், என்ன தாமத தங்களேற்பட்டாலும் தொலைக்காட்சி பார்க்கத்தவ றமாட்டார்கள். பத்திரிகை வாசிப்பர், சிலர் இந்த ஓய்வுநேரத்தில் விளையாட்டு அல்லது ஏனைய பயன் தரும் விடயங்களில் ஈடுபடுவர். ஏனெனில் தொ லைக்காட்சி, வானெலிபோன்ற சாதனப் பொருட்க ளுடனும், மெஷின்களுடனும் காலத்தைப் போக்கு வதால்நல்லசிந்தனைகள் கலந்துரையாடல்கள்யாவும் மழுங்கிப்போய்விடுகின்றன என்றும் கருதுகிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மையாகச் சிறுவர் முதியோர் என்ற பேதமின்றி எல்லோரும் தொலைக்காட்சி பார்க்கின்றனர். தொலைக் காட்சியில் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி, அறிவியல் அம்சங்கள், வைத்திய ஆலோசனைகள், பாலியற்கல்வி என்பன ஒளிபரப்பப்படுகின்றன.

பொழுதுபோக்கு அம்சங்களில் மக்கள் முக்கியமாக இரவு விடுதிகள், விபச்சார விடுதிகள் Disco நாட்டிய நிகழ்ச்சிகளில் ஆர்வமுள்ளவர்களாக உள்ளனர். பெரும்பான்மையோர் இவ்விடங்களுக்குச் சென்று பொழுதைக் கழிக்கின்றனர், இதற்கென்றே பெருந்தொகையான பணத்தைச் செலவழிப்பர் இவற்றோடு மதுபானம் அருந்துதலும் முக்கியமானதாக உள்ளது. இங்குள்ள காலநிலைத் தன்மைக்கு ஏற்ப பலவகையான குடிவகைகளை மக்கள் அருந்துகின்றனர். பியர் (Beer) போன்ற சாதாரண குடிவகைகளையும், காரத்தன்மையானதும் (Strong) சக்தி கூடியதுமான பலரக குடிவகைகளையும் இங்கு ஆண்பெண்ணென்ற பேதமின்றி எல்லோரும் அருந்துகின்றனர், இப்படியான முறைமை எங்கள் நாட்டில் இல்லை. காரணம் ஜேர்மனியில் குளிரை தாங்கும் பொருட்டுச் சிலவகையான குடிவகைகளைக் கட்டாயம் அருந்தவேண்டியவராகின்றனர். மேலும் மதுவருந்துதல் கூடாத பழக்கமாக இங்கு கருதப்படுவதில்லை. சாதாரணமாக எல்லோரும் உடற்தேவை கருதி அருந்துவர். போதை, வெறி என்று கூறுமளவுக்கு இங்கு மது அருந்தப்படுவது கிடையாது ஆண்கள்பெண்கள் அளவான முறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்துக்கு நேரம் ஏற்றவிதத்தில்தான் இங்கு குடிவகைகளை உட்கொள்கின்றனர், பல்வேறு ரகங்களில் மதுபானங்கள் இங்கு விற்பனையாகின்றன, இது அன்றாட பாவனைப் பொருட்களில் ஒன்றாக உள்ளது எமதுநாட்டில் மதுவருந்துதல் ஒரு தீயபழக்கமாகக் கருதப்படுகின்றது. மேலும் அளவுக்குமீறிக்குடித்து மதுபோதை தலைக்கேறித் தலைகால் தெரியாது நடக்கும் வழக்கம் எம்நாட்டில் உண்டு, குடிவெறியால் குடும்பத்தகராறு. உறவினருடன் தேவையற்ற பேச்சுவார்த்தை, வீணான கைகலப்பு - என்பன எம் மத்தியில் ஏற்படுவதைக் காணலாம். இந்நிலைமை ஒரு அநாகரிகமானதும் வருந்தத்தக்கதுமானசெயல் எனலாம், மேல்நாட்டவர் போதையூட்டும் அளவுக்கு மது அருந்துவதே கிடையாது. நிதானமான முறையில் பெரும்பான்மையோர் மதுவருந்திச் சந்தோஷமாக வாழ்வர். அதைவிட ஆண்களும் பெண்களும் ஏதாவது நிகழ்ச்சிகளில் அல்லது வீட்டிலோ சரிசமமாக இருந்து மதுவருந்தும் வழமையுண்டு. இந்நிலைமையை நோக்கும்போது எமது சமுதாயப் பெண்ணினம் சிறப்புடையதெனலாம். ஆனால் இங்கு குளிர் அதிகமென்றும் அதைத்தாங்கவே குடிவகைகளும், புகைபிடித்தல் முறையும் இவர்களின் வழமையாக உள்ளது எனக்கூறுவது முற்றிலும் உண்மையெனலாம்.

எமது நாட்டுக் கலாச்சாரத்தில் மதுவருந்தல் ஒரு தீய பழக்கமாகக் கருதப்பட்டபோதும் நடைமுறையிற் பெரும்பான்மை மக்கள் அருந்திவருகின்றனரென்பதை மறுக்கமுடியாது. மற்றவர்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து தாமும் அதைக் கடைப்பிடிக்கவேண்டும் என்ற முறையிலும் தமது மனச்சுமைகளைச் சிலநேரம் மறந்திருக்கலாம் என்ற வகையிலும் விசேட நிகழ்ச்சிகள் (Functions) கொண்டாட்டங்கள் என்பவற்றில் சம்பிரதாயத்துக்காக அருந்துதல் என்ற நிலையிலும் வாழ்க்கையின் நோக்கமே இதுதான் என்ற நினைப்பிலும் மதுவுக்கு அடிமையாகும் தன்மைகளை எமது சமுதாயத்திற் காணக்கூடியதாயுள்ளது. சிலர் மருந்துத் தேவை கருதியும் உடற்களைப்பைப் போக்கவும் ஒரு எல்லையுடன் மது பாவிப்பதையும் நாம் கூறுமல் இருக்கமுடியாது. மற்றும் எமது நாட்டுக் காலநிலையைப் பொறுத்தமட்டில் குடிவகைகளைக் கட்டாயம் பாவிக்கவேண்டுமென்பதில்லை. மேல்நாட்டைப் போன்று பலரகக் குடிவகைகளும் இங்கிருப்பது குறைவு. அத்துடன் யாவும் விலையுயர்ந்தனவாகவும் இருக்கின்றன. இவ்வாறுன நிலையிலுள்ள எமது சமுதாயத்தில் குடிப்பழக்கம் வேண்டப்படாத ஒரு அநாகரிகச் செயல் என்றே கருதப்படுகின்றது.

பொழுதுபோக்கு அம்சங்கள் மேல்நாட்டுச் சமுதாயத்தினர்க்கு மிக அத்தியாவசியமான ஒன்றுகக் கருதப்படுகின்றன. விபச்சார விடுதி, ஏனைய கிளப் சங்கங்கள் என்பவற்றிற்குச் சென்று பொழுதைக் கழிப்பர். இடத்துக்கிடம் அரசாங்க அனுமதிபெற்ற விபச்சார விடுதிகள் இருக்கின்றன. இதைவிட (Night Clubs) இரவு நாட்டிய விடுதி (Disco) டிஸ்கோ போன்ற மேல்நாட்டு நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெறும் நிலையங்கள் என்பன இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைட்கிளப் எனும் சங்கத்திற் பெண்கள் நிர்வாண மாக நின்று மேல்நாட்டு நடனங்களில் ஈடுபடுவர். அத்துடன் வந்திருக்கும் விருந்தினர்க்கு மதுவளித்து உபசரித்து அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டுவர். இந்த நடனத்தைவிட டிஸ்கோ எனப்படும் இசை நாட்டிய நிகழ்ச்சிகள் மக்களின் கவனத்தைக் கவருகின்றன. இங்கு முன்பின் தெரியாத ஆண் பெண்கள் சந்தித்துத் தற்காலிகச் சோடிகளாக இணைந்து கைகோர்த்து நடனமாடுவர். அத்துடன் மது அருந்துதலும் நடைபெறும். ஆடலும் பாடலும் ஒருங்கே அமைந்துள்ள இப்பொழுதுபோக்குக்குப் பணம் அதிகம் செலவிடுவர். இந்த முறை எமது பண்பாட்டிற்கு முற்றிலும் மாறானது. இவை சமூக விரோதச் செயல்களாகக் கருதப்பட்டு எம்மிடையே ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனல் எமது நாட்டில் அரச அனுமதியின்றி விபச்சாரவிடுதிகள் சில சமுதாயத்துக்கு மறைந்து இயங்கிவருகின்றன, பெரும்பாலும் நகரப் பகுதிகளில் இவை இரகசியமாக இயங்கிவருகின்றன. ஆனல் ஒப்பீட்டு ரீதியில் அவை மிகவும் குறைவே. எமது நாட்டில் விபச்சார விடுதிகள் இல்லாமலேயே சில இடங்களில் விபச்சாரம் நடைபெறுகின்றது. இருந்தாலும் மேற்கூறிய சமூக விரோதச் செயல்கள் எமது கலாச்சாரத்தில் வெளிப்படையான முறையில் இல்லையென்பதை மறுக்கமுடியாது. மேலைநாட்டுச் சமுதாயத்தினர் சகலவளமும் பெற்றவர்கள். அவர்களுக்கு வறுமையின் அடிச்சுவடே தெரியக் காரணமில்லை. எனவே வாழ்க்கையை எந்தெந்த முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிற் சந்தோஷமாக அனுபவிக்க முடியுமோ அந் தந்த வகையில் அனுபவிக்கின்ருர்கள். உழைப்பது உண்பது, உடுப்பது, சந்தோஷமாகப் பொழுதைக் கழிப்பதுதான் இவர்களது வாழ்க்கை. தமக்குப் பிற்காலத்தில் சேமிக்கவேண்டுமென்பதோ பிள்ளை களுக்குச் சீதனம் என்று தம்மை ஒறுத்துப் பொருள் பணம் சேர்ப்பதுபோன்ற தொல்லைகளோ இவர்க ளுக்கில்லை. எனவே வாழ்க்கையை இன்பமாக அனுபவிக்கின்றனர் எனக் கூறலாம்.

மக்கள் எல்லோரும் சமம். நான் பெரிது நீ பெரிதென்ற வாக்குவாதம் மேல்நாட்டு மக்க ளிடையே காணமுடியாது. உயர்ந்த சாதி தாழ்ந்த சாதியென்ற சாதிப் பாகுபாடுகளோ, மதப்பாகு பாடுகளோ இல்லை. எல்லோரும் மனிதர்கள்என்ற கொள்கை இவர்களிடையே உண்டு. ஒரே மேசை யில் வைத்தியர், பொறியியலாளர், மலசலகூடத் தொழிலாளி ஆகியோர் ஒன்ருக இருந்து உணவருந் துவர். இவர்களிடையே செய்யும் தொழிலை வைத் துப் பாரபட்சம் காட்டும் தன்மையே இல்லை. சகோ தரர்கள், நண்பர்கள்போல சந்தோஷமாகவே பழ கிக்கொள்வார்கள். இவற்றை எமது சமுதாயத் தோடு ஒப்பிடும்போது எவ்வளவுக்கு மேலாக அவர் கள் உயர்ந்து நிற்கின்ருர்கள் என்பதைக் கூறவேண் டிய தேவையில்லை. சாதிப்பாகுபாடுகள், அதனுல் ஏற்படும் பூசல்கள், உயர்வு தாழ்வென்ற பேதம் முதலிய எதுவுமே மேல்நாட்டுக் கலாச்சாரத்திற் காணமுடியாது. சாதிக்கொடுமை, தீண்டாமை என்பன எமது கலாச்சாரத்தில் சமூகத்தை அரித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துத் தின்னும் புழுக்களாக இருக்கின்றன. இது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சமுதாயம் தோன்றிய காலம்தொட்டே தோன்றியிருக்கவேண்டும். பாரதியார்கூட சாதிக்கொடுமைகளை ஒழிப்பதற்கு அரும்பாடுபட்டுக் கவிமழை பொழிந்தும் ஏதும் பயன் இன்றுவரை இல்லையே. இது என்றுமே தீர்க்க முடியாத பிரச்சினையாக எமது சமுதாயத்தில் புரையோடிக்கிடக்கின்றது. இந்நிலைமை எமது சமுதாயத்தில் அகற்றப்படாதிருப்பது எமது கலாச்சாரத்துக்கு, சமுதாய வளர்ச்சிக்கு ஒரு இழுக்கு என்று கூறலாமே தவிர நன்மை எதுவுமேயில்லை. இந்த ரீதியில் மேல்நாட்டுக் கலாச்சாரம் எவ்வளவுக்குச் சிறந்ததென அறியமுடிகிறதல்லவா! உண்மையில் சாதிமதப் பூசல்களற்ற சமுதாயம் இருந்தாற்றான் நாடு முன்னேற முடியும். இது எம்மிடம் அறவேயில்லை. பெயரளவிலேதான் உண்டு. மேல்நாட்டவரிடம் இத்தன்மையிருப்பது கண்டு நாம் பொறுமைப்பட வேண்டியுள்ளது.

சாதிமதம் மட்டுமல்ல தொழில் அடிப்படையிலும் இங்கு வேற்றுமையோ, புறநீங்கலோ இல்லை; என்ன தொழிலை எவர்செய்தாலும் எல்லோரும் ஒரே ஸ்தானத்திலேயே மதிக்கப்படுகின்றனர். கூலிவேலை, அரசாங்க உத்தியோகம் என்ற பேதமில்லை. இங்குள்ளவர்கள் செய்யும் தொழிலையே தெய்வமாகக் கருதுகின்றனர். என்ன தாமதங்கள், பிரச்சினைகள் ஏற்பட்டாலும் இவர்கள் தத்தம் அலுவல்களில் கவனமாக இருப்பர். கூலிக்கு மாரடித்தோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளியை அல்லது அரசை ஏமாற்றியோ வேலை செய்யமாட்டார்கள். அதாவது அவர்கள் தாம் வாங்கும் ஒவ்வொரு சம்பளத் தொகைக்கேற்ப வேலை செய்வார்கள். காலத்தை வீணே கடத்தும் பழக்கமோ, வேலையிற் கவனமின்றி மற்ற ஊழியர்களுடன் அரட்டையடிக்கும் வழமையோ இங்கில்லை நேர்மையாக உழைத்துத் தமது ஊதியத்தைப்பெறுகின்றனர். இதைவிட வேறு செய்கையும் வேண்டுமா? பணம் சம்பாதிப்பதையே நோக்கமாகக் கொண்டு வேலைகளைத் திறம்படச் செய்யாது சமூகமளித்தாற் போதுமென்ற மனப்பான்மை இங்கில்லை. ஜேர்மனியில் மணித்தியாலத்திற்கு எவ்வளவு மார்க் (ஜேர்மனிய பணம்) என்ற அடிப்படையிலேயே சம்பளம் வழங்கப்படுகின்றது. அத்துடன் இவ்வளவு மணித்தியாலத்திற்குள் இவ்வளவு வேலை செய்துமுடிக்கவேண்டுமென்ற நிபந்தனைகள், (Contract) ஒப்பந்த முறைகள் என்பனவும் இங்கு கையாளப்படுகின்றன. எனவே உண்மையாகவே தமது மெய்வருத்தம் பாராது தொழில் செய்கின்றனர். கூடிய மணித்தியாலம் வேலைசெய்தால் கூடியபணம் பெறலாம் என்ற முறையிலும் அதிகநேரம் வேலை செய்யப் பலர் விரும்புவர். மற்றும் வேலை செய்வோருக்கு வேலைக்கு ஏற்ப வேலைசெய்யுமிடங்களில் விஷேட சலுகைகளும் வழங்கப்படும். ஆண்களுக்கும் பெண்களுக்குமென வேறுவேறு தொழில்கள் இல்லை. ஆண்கள் செய்யும் அதே வேலையைப் பெண்களும் செய்வார்கள். ஊதியங்கள் சில சில வேலைகளைப்பொறுத்துப் பெண்களுக்குக் குறைவான அளவில் வழங்கப்படும். வேலைக்கும் நேரத்

துக்கும் முக்கியத்துவம் கொடுத்து அவற்றைக் கண் போலப் போற்றுகின்றனர். உரிய நேரத்திற்கு வேலைத்தலங்களுக்குச் சென்றுவிடுவர். ஒரு நேரத்தைக் குறிப்பிட்டுச் சொன்னால் அந்த நேரத்துக்குக் கடமைகளைச் செய்வதில் தவறமாட்டார்கள். இது இவர்களிடமுள்ள போற்றற்குரிய பண்பாகும். தொழிலில் ஏற்றத்தாழ்வு இங்கில்லை. ஆனால் எமது சமுதாயத்தில் தெருவீதி துப்பரவாக்குவோர், உயர் பதவியிலிருக்கும் ஒருவரோடு நெருங்கிப்பழக முடியாது. இந்தக் கூலியாட்கள் தமக்கு மேற்பட்ட பகுதியில் இருப்போர்க்கு அல்லது முதலாளிமார்களுக்குக் கைகட்டி வாய்புதைத்து அவர்கள்முன் கூனிக்குறுகி, தாம் மனித இனத்தில் கொஞ்சம் தாழ்ந்தவர்கள் போல் நிற்கும் தரங்கெட்டதன்மை எம்மத்தியிலே உண்டு. இன்னும் சில தொழிலாளரைக் கண்டால் சகுனம் சரியில்லையென்று அவர்கள் மீது வெறுப்பும் ஆத்திரமும்கொள்ளும் பண்பை எமது கலாச்சாரத்திடமிருந்து மாற்றமுடியாது. அத்துடன் கூலியாளரை மிருகங்கள்போல் மதித்து வேலைவாங்கும் கொடுமையும் எமது சமுதாயத்தில் உண்டு. பெண்களுக்கு வேறுவேலை, ஆண்களுக்கு வேறுவேலை என்று ஓரளவு பாகுபாடு எமது நாட்டிலுண்டு,

சம்பளத்தொகை நாள்வீதம் நாளாந்தக்கூலி, மாதாந்தாக் கூலியென வழங்கப்படுகிறது. எமது நாட்டில் பெற்றோர் என்ன தொழிலைச் செய்துவந்தார்களோ அதையே அவர்களது சந்ததியினரும் கடைப்பிடிக்கும் தன்மை பெரும்பாலும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே ஒரு தொழிலைச் செய்துவருவோர்க்கு மறு தொழிலைச் செய்வதற்குப் பெரும்பாலும் தெரியாது. உதாரணமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட ஒருவனுக்கு மேசன்வேலையோ, தச்சுவேலையோ, இரும்புவேலையோ, விவசாயமோ தெரிந்திருக்க நியாயமில்லை. தத்தமது தொழில்களிலேயே அக்கறையாயிருந்து அத்தொழில்களிலேயே வல்லுநராக இருக்கின்றனரே தவிர ஏனைய தொழில்கள்பற்றிப் பெரும்பாலும் அறியமாட்டார்கள். இதனுல் ஒவ்வொருவருடைய ஒவ்வொரு தேவையும் வெவ்வேறு மனிதர்களின் உழைப்பாலேயே நிறைவேற்றப் படுகின்றன. ஆனுல் மேல்நாட்டை நோக்கின் ஒவ்வொருவரும் குறைந்தது நான்கு ஐந்து தொழில்களுக்கு மேற்படத் தெரிந்து வைத்துக்கொண்டு தனது தேவைகளைத் தானே நிறைவேற்றிக்கொள்கின்றனர். உதாரணமாக வங்கி ஊழியர் ஒருவரே தனது வீட்டைத் திருத்தும் வேலையையும் பார்க்கின்ருர். மின்சார இணைப்புக்களைச் செய்கின்ருர். தளபாடங்களில் முறிவு ஏற்பட்டால் அதைச் சீர்செய்வார். வாகனம் பழுதுபட்டால் வாகனத்தைத் திருத்தும் வேலையையும் தானே செய்வார். வசதியிருந்தால் வீட்டுத் தோட்டமும் செய்யும் தன்மையும் உண்டு. கோழிப்பண்ணையை மேற்பார்வை செய்வர். தேவையானபோது சமையலையும் மேற்கொள்கின்ருர். இவ்வாறு ஒருவரே பல தொழில்களைச் செய்யக்கூடிய திறமையுள்ளவராகத் திகழும் முன்னேற்றகரமான வழக்கம் மேல்நாட்டவரிடம் உண்டு. இத்தகைய நிலைமைகளினுலேயே இந்நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களனைத்தும் பொருளாதார வளர்ச்சியிற் கொடி கட்டிப்பறக்கின்றன. தன்னிறைவு என்ற பாதை யில் இந்நாடுகள் அனைத்தும் வீறுநடை போடு கின்றன,

எமது கலாச்சார முறையின்படி ஒரு வகுப்பி னர்க்குரிய தொழிலை இன்னொரு வகுப்பினர் செய் தால் அது தரக்குறைவாக, கேலிக்குரிய விடயமாக, பழிப்புக்குரிய செய்கையாகக் கருதப்படுகின்றது. அப்படித் தத்தமது தேவைக்கேற்ப மறுதொழிலைச் செய்யும் ஒருவனுக்கு வருமானத்துக்காகக் குலத் தொழிலை மறந்துவிட்டான் என்ற அவச்சொல் ஏற்படும். அரசாங்க உயர்பதவியில் இருப்போர் மண்வெட்டி பிடித்து தரையில் இறங்கினுல் பாதம் கொப்பளிக்குமோ என்னவோ, இத்தொழில்களை ஏறெடுத்தும் பார்க்காத தன்மை பெருமளவில் எம் நாட்டிலுண்டு. பெருமளவுக்கு ஒருவருக்குரிய ஒவ் வொரு தேவையை ஒவ்வொரு வகுப்பினராகப் பிரிந்து நிறைவேற்றும் தன்மையே எம்மிடமுண்டு, குறிப்பாகப் பயிர்ச்செய்கையை ஒருவரும், கட்டிட வேலை, மீன்பிடிவேலை சலவைத் தொழிலை ஒவ் வொருவருமாகப் பிரிந்து தாம் சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுகின்ற னர். ஆனுல் நாகரிகம் வளர்ச்சியுற்றுவரும் இக் காலகட்டத்தில் பொருளாதாரக் கெடுபிடிகள் மலிந்த இந்த நேரத்தில் சில இடங்களில் ஒருவர் தனக்குத் தேவையானவற்றை வேற்றுத் தொழி லெனப் பாராது தானே நிறைவேற்றி வருவதை யும் அருமையாகக் காணக்கூடியதாயுள்ளது. விவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயம் செய்வோர், தச்சுவேலை, மேசன்வேலை, மீன் பிடி ஆகிய வேலைகளில் தமது தேவையைமட்டும் கருதிச் செய்கின்றனர். உழைப்புக்கருதியல்ல. தற் காலச் சூழ்நிலையில் இப்படிச் செய்யும்போதுதான் எமது பொருளாதாரப் பிரச்சினையை நாம் ஓரள வுக்கு எதிர்க்கமுடியும், அன்றாடம் விஷம்போல் ஏறிவரும் பொருட்களின் விலைகளுக்குத் தம்மால் ஈடுகொடுக்க முடியாமல் தமக்குத் தேவையான வற்றைத் தாமே உற்பத்தி செய்யவேண்டும். அத் துடன் பெருகிவரும் சனத்தொகைக்கு எமது பொ ருளாதாரம் போஷிக்க முடியாத வறுமையில் உள் ளது. இத்தகைய தன்மைகளால் தத்தமது தேவை களை ஓரளவுக்கேனும் நிறைவுசெய்வதற்கு முயற்சி செய்துவரவேண்டும்.

தொழிற்பகுப்பு, அதனால் ஏற்படும் வர்க்கபே தங்கள் எதுவுமே மேல்நாட்டவரிடம் இல்லை. 'எல் லோரும் ஏதோ வேலைகளைச் செய்துகொண்டிருக் கின்றனர். வேலையில்லாப் பிரச்சினை என்பது இங்கு குறைவு. தொழிலை அடிப்படையாகக் கொண்டு மக்களை வகைப்படுத்தல், அவர்களை ஒதுக்கி உறவு கொண்டாடாமல் விடுதல் என்பன இங்கு இல்லை. அத்துடன் சாதி பார்க்கும் பழக்கமும் இல்லை. குறைந்த சாதியினர்க்கு உணவு அல்லது பானங்கள் கொடுப்பதற்கு எமது நாட்டில் உள்ளதுபோன்று புறம்பானபாத்திரங்கள் வைத்திருப்பதில்லை, எமது நாட்டில் புறம்பான பாத்திரங்களில் உணவளிப்பது மட்டுமன்றி வீட்டுக்குள் உட்பிரவேசிக்கவும் விட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டார்கள், இவ்வாறு மக்களை ஒதுக்கி அவர்களைப் பிறிதோர் ஜன்மம் எனப் புறக்கணிக்கும் பண்பற்ற செய்கை, பயனற்ற வீண் கொள்கைகள்தான் எமது சமுதாயத்தின் உயிர்நாடியாவென யோசிக்கவேண்டியுள்ளது. எந்தவகையிலும் பயனற்ற சில மூடக் கொள்கைகளும் காரணம் புரியாது அவற்றை இன்றுவரை கடைப்பிடிக்கும் பழக்கமும் எமது சமுதாயத்தில் இருக்கும்வரை எந்தவொரு காரணியாலும் கலாச்சாரத்தில் புதுப்பொலிவை ஏற்படுத்தமுடியாது. மேல்நாட்டுக் கலாச்சாரத்தைப் போன்று எமது சமுதாயத்தில் விழிப்புணர்ச்சி ஏற்படும் போதுதான் ஒரளவுக்கேனும் எமது கலாச்சாரத்திற் சில திருப்பங்களை நாம் எதிர்பார்க்கலாம்.

எங்கள் கலாச்சாரத்தில் நீக்கமுடியாத பல மூடக்கொள்கைகள் புரையோடிக் கிடக்கின்றன. இவற்றை நீக்க எத்தனையோ பல அறிஞர்கள், புலவர்கள், சீர்திருத்தவாதிகள் முயன்றபோதும் முடிவில் தோல்வியையே எதிர்நோக்குகின்றனர். இதே நிலைமையில் நம்நாடு பொருளாதாரப் பிரச்சினையால் அல்லலுறும்போது எமது சமூகத்தின் முன்னேற்றம்பற்றிக் கூறவேண்டிய தேவையில்லை. எனவேதான் எமது வாழ்க்கைத்தரம் கீழ்நிலையில் இருக்கின்றது. உயர்ந்த விலைவாசி, சனத்தொகைப் பிரச்சினை, வேலையில்லாப் பிரச்சினை, சாதிப்பாகுபாடு, பிற்போக்கான தொழிற்பிரிப்பு என்பன எமது சமூகத்தில் இருக்கும்போது நாம் மீட்சிபெற முடியாதெனலாம். இதன் தாக்கங்கள் கலாச்சாரத்தைப் பற்றிப் பிடிக்கும்போது எம் கலாச்சாரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கு ஒரு வளமான எதிர்காலத்தைக் காணமுடி யாமல் இருக்கின்றது, இவையே எமது நாட்டுக்கும் மேலைநாட்டுக்கும் இடையேயுள்ள வெளிப்படை யான வேறுபாடுகளாகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஒன்ருன எமது நாடு ஒரு வளமான பாதையில் அடியெடுத்து வைக்கவேண்டும். அப் போது கலாச்சாரமும் ஓரளவுக்கு மாற்றமடையும் என்பதில் ஐயமில்லை. கலாச்சாரம் என்பது திடீ ரென மாற்றக்கூடிய அம்சமல்ல. எனினும் கால தேச வர்த்தமானத்துக்கு ஏற்பச் சிற்சில கொள்கை களில் மாற்றம் பெறமுடியும். கலாச்சாரம் என்பது ஒரு நாட்டின் அபிவிருத்தியில் செல்வாக்குச்செலுத் தக்கூடியது. அதேபோல் ஒரு நாட்டு அபிவிருத்தி யும்அந்நாட்டுக்கலாச்சாரத்தில்செல்வாக்குச்செலுத் தும்என்பதை மறுக்கமுடியாது. அதாவது கலாச்சார மும்அபிவிருத்தியும்ஒன்றையொன்று பின்னிப்பிணைந் துதனிப்பட வேறுபடுத்திக் கூறமுடியாத நிலையிலுள் ளன. ஆகவே ஒரு நாட்டின் அபிவிருத்தியெனும் போது அங்கு கலாச்சாரத்தின் அபிவிருத்தியும் அடங்குகின்றது. அதேபோன்று கலாச்சாரத்தில் அபிவிருத்தியடைந்த நாடு எனும்போது அந்நாடு பொருளாதார அபிவிருத்தியடைந்த நிலையிலேயே கலாச்சார அபிவிருத்திபெறுகிறது என்று கூறலாம். எனவே நம்நாட்டு அபிவிருத்திக்கு ஏற்றமுறையில் எமது பாரம்பரியமான கலாச்சாரத்தில் சில மாற் றங்களை ஏற்படுத்தி அதன்மூலம் ஒரு துரித வளர்ச் சியை ஏற்படுத்த நாம் அனைவரும் முயல்வோமாக.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்ப்புகளும் அவற்றின் விளைவுகளும்

வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளில் ஒன்றான ஜேர்மனியின் கலாச்சாரத்தை நிர்ணயிக்கும் அம்சங்களையும், அதன் பண்பு, செயல் நடவடிக்கைகளையும் ஓரளவுக்கு அறிந்துகொண்டோம். இனி எமது கலாச்சாரத்தில் இல்லாததும், ஜேர்மனிய கலாச்சாரத்தில் உள்ளதும், அபிவிருத்திக்கு உதவிபுரிந்து வருவதுமான சில கலாச்சாரப் பண்புகளை நாம் ஏற்றுஅதைக் கடைப்பிடிப்பதன்மூலம் என்னென்ன விளைவுகளை எதிர்நோக்கலாம் அல்லது அவை எத்தகைய நன்மை தீமைகளைத் தோற்றுவிக்கும் என்பதனை எதிர்பார்ப்புகளும் அவற்றின் விளைவுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற தலைப்பின்கீழ் சிறிது சிந்திப்பது எதிர்கால வளத்துக்கு ஒரு கொள்கைரீதியான அத்திவாரம் இடுவதற்கு ஒப்பானதாகும். மேல்நாட்டுக் கலாச் சாரத்தையும் எமது கலாச்சாரத்தையும் ஒப்பிட்டு அதன் ஒற்றுமை வேற்றுமைகளை அறிந்து அதன் வழி எமது நாட்டுக் கலாச்சாரத்தை எம்மால் முடிந்தளவுக்கு மாற்றியமைத்தாலென்ன என்று நாம் பலதடவை சிந்தித்ததுண்டு. ஆனல் மேலே நாட்டின் வளர்ச்சிபெற்ற சமுதாயக் கலாச்சாரத் தின் அம்சங்களை எமது கலாச்சாரத்தில் எவ்வாறு புகுத்துவதென்பது பிரச்சினைக்குரிய ஒரு விடயமா கும், எனினும் தற்போதைய நிலைமைகளே எமது கலாச்சாரத்தில் இன்னும் இருப்பதற்கு நாம் அனு மதிக்காது தேவைக்கேற்ப விட்டுக்கொடுக்கவேண் டிய இடத்தில் விட்டுக்கொடுத்து, எமது சமூகக் கட் டுக்கோப்பை ஓரளவுக்கேனும் தளரச்செய்வதன் மூலம் சில பலாபலன்களைப் பெற்றுக்கொள்ளமுடி யும். கண்மூடித்தனமாகக் கடைப்பிடித்துவரும் சில மூடக்கொள்கைகளை அப்படியே ஏற்காது அவை ஏன் இன்றுவரை கடைப்பிடிக்கப்படுகின்றன? அத ஞல் எமது வாழ்க்கைக்கு ஏற்படும் நன்மை தீமை கள் எவை போன்ற கேள்விகளுக்கு விடை கண்டு கொள்ளுவன கொண்டு தள்ளுவன தள்ளி வளமான ஒரு பாரம்பரியத்தைத் தோற்றுவிக்கவேண்டும்.

எதிர்பார்ப்புகளும் அவற்றின் விளைவுகளும் எனும் விடயத்தில் உட்பிரவேசித்ததும் முன்பு கூறப்படாத அம்சங்களைத்தான் எதிர்நோக்குவோ மென எதிர்பார்க்கமுடியாது. ஏனெனில் விளைவுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளென இங்கு கூறப்படுவதுமுற்கூறப்பட்ட சில அம் சங்களோடு சம்பந்தப்பட்டவற்றின் எதிர்பார்ப்பு களால் உதயமாவதாகும். பழமையில் ஊறிப் போன சில பண்புகளை எமது சமுதாயத்தில் உள்ள முதியவர் குழாம் கைவிட விரும்பமாட்டார்கள். அவர்கள் தாம்தாம் கடைப்பிடிக்கும் கொள்கையே தமது வாழ்க்கைப் பண்பாடே சிறந்தது எனவும் கூறிப் புதுமைக்கோலம் கொண்டுவரும் இளஞ்சமு தாயப் பழக்கவழக்கங்களைப் பார்த்து கேட்டு மனம் கொதிக்கின்றனர். தமது வாழ்க்கைப் பண்பாட் டின் தன்மைகள் என்ன? தற்போதைய இளஞ்சமு தாயத்தினரின் வாழ்வுமுறைகள் என்னவெனப்பெரு மூச்சுவிட்டு இப்போதுள்ள மாற்றங்களை எதிர்க்கின் றனர். இப்படியான பழமைவாதிகளை இன்றைய நாகரிக நிலைக்கு ஏற்றமாதிரி அவ்வழிக்குத் திருப்பி அவர்களின் ஒத்துழைப்பையும் பெற்று கலாச்சாரத் தில் சில பல மாற்றங்களைச் செய்யவேண்டும். நாக ரிகம்வளர்ச்சிபெற்றுவரும் இந்நாளில் மேல்நாட்டுப் பாணியில் ஓரளவு மோகம் ஏற்பட்டுள்ளதென் பதை மறுக்க முடியாது. ஆனால் அவை அத்தியா வசிய தேவைகளிலன்றி ஆடம்பர தேவையில் ஏற் பட்டுவருவது உண்மையில் வருந்தத்தக்கதொன்று கும். எமது நாடு சுயபூர்த்தி நிலையை அடையாது மற்ற நாடுகளிடம் கையேந்தி நிற்கும்போது ஆடம் பர முறையில் சில பழக்கங்களை, பண்புகளை மேல் நாட்டவரிடமிருந்து கற்றுக்கொள்வது எம்மைப் பொறுத்தவரை பயனற்ற செய்கையெனலாம். ஆனால் எம்மிடையே இல்லாத நல்ல பழக்கவழக்கங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் கலாச்சாரப் பண்புகளையும் நாம் ஓரளவுக் காயினும் நமது கலாச்சாரத்துக்கு ஒத்துப்போகும் வகையில் கடைப்பிடிக்கவேண்டும்.

ஒரு நாட்டுக் கலாச்சாரத்தை நிர்ணயிப்பதில் மதமும் ஒரு முக்கிய காரணி எனலாம். எமது நாட்டில் கிறிஸ்தவம், இந்து, பௌத்தம், இஸ்லாம் போன்ற மதங்கள் வழக்கிலிருக்கின்றன. இந்த வெவ்வேறுபட்ட மதக்கோட்பாடுகள், போதனைகள் என்பன அந்தந்த மதத்தினரின் பண்பாட்டில் சில மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இதனால் மதப் பிரிவினைகளும் பூசல்களும் ஏற்பட ஏதுவாகின்றன. இந்தியாவில் இன்றும் மதப்பூசல்கள் அடிக்கடி ஏற் பட்டுப் பலர் பலியாகிவருகின்றனர். இவை அரசி யல், சமூக பொருளாதாரச் செயற்பாடுகளுக்குத் தடையாக இருக்கின்றன. பூசல்கள், பிரச்சினைகள் மதங்களிடையே ஏற்படக் காரணம் ஒவ்வொரு மதத்தினரின் பழக்க வழக்கங்களிடையேயும் வேறு பாடுகள் அதிகமாக இருப்பதுவேயாகும். அவர்க ளிடையேயுள்ள சில முரண்பட்ட கொள்கைகள் கல வரங்களைத் தூண்டுகின்றன. உதாரணமாக மாமி சம் சாப்பிடுவது இந்துக்களுக்குப் பிடிக்காது. ஆனல் அது கிறிஸ்தவ, முஸ்லிம் மக்களுக்குப் பிடிக்கும். இதுபோல் பல வேறுபாடுகள், முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன. ஆனல் ஜேர்மனியில் ஒரு மொழி, ஒரு மதம் என்ற முறையிருப்பதால் இங்கு மதப் பிரிவினைகளோ, போட்டிகளோ இல்லை. ஒரே மதக் கொள்கைரீதியான செயற்பாடுகளாகவே இருக்கின்றன. இத்தகைய நிலை சிறப்பானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரையில் இதை என்றுமே எதிர்பார்க்கமுடியாது. மற்றும் இன்றைய மக்களின் ஓய்விலாச் சூழ்நிலை காரணமாகவும் விஞ்ஞான வளர்ச்சி, கண்டுபிடிப்புகள், தொழில் நுணுக்கங்கள் என்பவற்றால் பொதுவாக எல்லோரிடமும் மதநம்பிக்கை குறைந்துவருகின்றது. எப்படி அபிவிருத்தி ஏற்பட்டபோதும் இத்தகைய மனநிலை ஏற்படாமலிருக்கவேண்டும். அத்துடன் மதப்பிரிவினைகள் இல்லாத சமரச சன்மார்க்கநெறி எங்கும் நிலவவேண்டும். இத்தகைய நிலைமைகளினூடாகவே நாமும் எமது நாட்டில் சுமுகமாக வாழமுடியும்.

''சாதிகளில்லையடி பாப்பா உயர் தாழ்ச்சி இகழ்ச்சி சொல்லல் பாபம்'', ''விடுதலை விடுதலை, பறையருக்கும் புலையருக்கும் விடுதலை'' என வரகவி பாரதியார் கவி முழங்கியதற்கும், ''சாதி இரண்டொழிய வேறில்லை'' என ஔவைப் பிராட்டியார் கூறியதற்கும் என்ன காரணம்? பாரதியாரோ, பாரதிதாசனோ, ஔவையாரோ, வள்ளுவனோ சங்ககாலத்தில் உள்ளதுபோன்ற காதலையோ வீரத்தையோ பாடியிருக்கலாமே. அவ்வாறு பாடுவதற்கு இவர்கள் வாழ்ந்த காலச் சூழ்நிலை இடங்கொடுக்கவில்லை. சாதிக்கொடுமை, தீண்டாமை என்பவற்றால் மக்கள் அல்லலுறுவதைக் கண்டு அவை சமூகத்திலிருந்து அகற்றப்படவேண்டும் என்ற துடிப்பால் மறுமலர்ச்சிக் கவிஞர்களான பாரதி, பாரதிதாசன் ஆகியோர் பாடியுள்ளனர். சாதிப்பாகுபாடு சமுதாயக் கூட்டிணைப்பைப் பிளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படச்செய்யும் என்றே சொல்லலாம். எமது நாட்டில் சாதிப்பாகுபாடு மிகவும் பின்பற்றப்படுகிறது. கவிஞர்கள், அறிஞர்கள் இவற்றை நீக்கவேண்டுமென எத்தனையோ நூல்கள் எழுதியபோதும்இவை நீங்காத நோய்போன்று எம்மத்தியில் இருக்கின்றன சாதி பாராட்டும் நிலை ஒழிந்து யாவரும் சமமானவர்கள் என்றநிலை அதாவது ஒன்றே குலம் ஒருவனே தேவன், நாம் எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்ற நிலை தோன்றவேண்டும். சாதிப்பிரச்சினையால் மக்களிடையே பூசல்கள் எழுவதுமட்டுமன்றிப் பொருளாதார அபிவிருத்திக்கும் அது முட்டுக்கட்டையாக இருக்கின்றது. அதேநேரம் இனக்கலவரத்தைத் தோற்றுவிப்பதன்மூலம் அரசியலையும் இது பாதிக்கின்றது. சாதிப் பகுப்பு முறையே தீண்டாமைக்குக் காரணம். மேலும் சாதிப் பாகுபாடு ஒருவருடைய மனோவளர்ச்சியைத் தடைசெய்கின்றது எனக்கூறமுடியும், சாதியும் தொழிலும் ஒன்றில ஒன்று பின்னிப்பிணைந்துள்ளன, இன்ன தொழிலைச் செய்பவர் இன்ன சாதியெனப் பெயர் சூட்டி மக்களே மக்களை வேறுபடுத்தி நோக்கும் பண்பு எமது சமுதாயத்திலேதான் உண்டு. மனிதனை மனிதன் தாழ்வாகவோ உயர்வாகவோ கருதும் தரங்கெட்ட நிலைமை எம்மினத்திற்தானுண்டு.

மேல்நாட்டவரின் சமுதாயத்தை நாம் நோக்கும்போது நாம் சாதிமுறையால்எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணரமுடிகின்றது. குறிப்பாக ஜேர்மனியை எடுத்துக்கொண்டால் அங்கு சாதிப்பிரிவு கிடையாது. உயர்ந்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்ந்தவர் என்ற ஏற்றத்தாழ்வு இல்லை. நான் பெரிது நீ பெரிதென்ற போட்டி மனப்பான்மை யில்லை. தொழில் அடிப்படையான ஏற்றத்தாழ்வு கள் இல்லை. முதலாளி தொழிலாளியென்ற பேதம் பாராட்டப்படுவதில்லை. எல்லோரும் எல்லாத் தொழிலையும் செய்கின்றார்கள். ''செய்யும் தொழி லேதெய்வம்'' என்ற கொள்கையை ஜேர்மனிய மக்க ளிடையேதான் நேரடியாகக் காணமுடிகின்றது. இவர் கள் தொழிலுக்கு முக்கியம் கொடுத்து வருமானம் தரத்தக்க என்ன தொழிலென்றாலும் பொன்போற் செய்வர். மற்றும் இன்னார் இன்னதொழில்தான் செய்யவேண்டுமென்ற நிபந்தனை எதுவுமே இல்லை. இவர்களது சமுதாயத்தில் தொழிற்சுதந்திரம் போ தியளவு உண்டு இதனால்தான் இந்நாடு பொரு ளாதார வளர்ச்சியில் முன்னணியில் உள்ளது. மற் றும் மக்களை மக்கள் குறைவாக எண்ணி அவர்களை ஒதுக்கிவைக்கும் பண்பு எமது சமுதாயத்தில் காண படுவதுபோன்று இங்கு இல்லை. எல்லோரும் மானி டர்தானென்ற கொள்கையுடன் இவர்கள் வாழ்கின் றார்கள். இத்தகைய நிலையை நாம் நோக்கும் போது எமது சமுதாயத்தின் சாதிக் கெடுபிடிகளை யும் அதனால் ஏற்படும் தாக்கங்களையும் இனங்கண்டு கொள்ளக்கூடியதாயுள்ளது. சாதி பேதங்களற்ற சமரச நிலை எமது நாட்டில் உருவாகுமேயானால் எமது நாட்டின் இன ஒற்றுமை, பொருளியல் மறு மலர்ச்சி என்பவைபற்றிக் கூறத்தேவையில்லை. எமது சமுதாயத்திலிருந்து சாதிக்கொடுமை என்று விலகுமோ அன்றுதான் விடிவுகாலம் பிறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது நாட்டில் இன்று கூடுதலாகக் கிராமப் புறங்களில் இரு வேறுபட்ட சாதிகளைச் சேர்ந்தோர் சமமாக அமர்ந்து உணவருந்தமுடியாது. ஆனால் ஜேர்மனியில் அவ்வாறன்றி எல்லோரும்சமமாகவே இருந்து உரையாடி உணவருந்துவர். எமது நாட்டில் மனிதரை மனிதரே ஒதுக்கி இல்லங்களுக்கு ஆலயங்களுக்குச் செல்ல அனுமதிக்காத நிலையுண்டு. மேலும் எமது சமுதாயத்தில் குறிப்பாகக் கிராமங்களில் ஒரு மனிதனுக்குத் தேவையான எல்லாவற்றையும் ஒவ்வொரு சாதி வர்க்கத்தினர் நிறைவேற்றும் தன்மைதான் உண்டு. விவசாயி ஒருவனுக்கு மீன் தேவைப்பட்டால் மீனவன் அத்தேவையை நிறைவேற்றுகின்றான். இதேபோன்று கட்டிடவேலைத் தேவையை இன்னொரு வர்க்கத்தினர் நிறைவேற்றுகின்றனர். இவ்வாறு ஒரு தேவையை நிறைவேற்ற மற்றவர்களை நம்பியிருக்காமல் எல்லாத் தொழிலையும் தெரிந்து தத்தமது தேவையை நிறைவேற்றிக்கொள்ளவேண்டும். இவ்வாறு செய்தால் தான் தனியொருவரின் குடும்பம் பொருளாதாரத்தில் வளர்ச்சிபெறும். அதனால் நாட்டின் பொருளாதாரம் வளரும். ஆனால் இவ்வாறு செய்வதற்கும் எமதுசமுதாயம் அனுமதியளிக்க மறுக்கின்றது கிராமங்களில் விவசாயத் தொழிலாளி ஒருவர் தனது தேவையை நிறைவேற்றுவதற்கு மட்டுமன்றி மற்றையோர்க்கும் வேலைசெய்து ஊதியம் பெறலாமென்ற நோக்குடன் தச்சுத்தொழிலைச் செய்ய முற்பட்டாரானால் சமுதாயம் எள்ளி நகையாடுகின்றது அதாவது வருமானத்துக்காக தன்சாதிவிட்டு விலகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டானென்ற பெயரைச் சூட்டிவிடும். இப்படியான பிற்போக்கு மனப்பான்மை எமது சமுதாயத்தில் இருக்கும்போது எப்படி அபிவிருத்தியைக்காண முடியும்? இந்நிலை ஒழிந்து எல்லோரும் எல்லாத் தொழிலையும் செய்து தத்தமது தேவைகளை நிறைவேற்றவேண்டும். சமுதாயத்துக்காகப் பயந்து கொண்டு வாழ்ந்தால் வர்க்கபேதங்கள் வளர்ந்து கொண்டேயிருக்கும். எனவே சீர்திருத்தவாதிகள் பொதுநலவாதிகள், சமூகநல விரும்பிகள் யாவரும் அணிதிரண்டு சாதிபேதமின்றி மக்களுடன் கலந்து எல்லோரும் சமமென்ற கொள்கையைப் பரவச் செய்யவேண்டும். படித்த மக்கள் எல்லோரும் சாதிபேதம் பாராட்டக்கூடாது. அவ்வாறு அவர்கள் வாழ்ந்துகாட்டும்போதுதான் அறிவு விழிப்பு இல்லாத மக்கள் அவர்களைப் பின்பற்றி வாழமுற்படுவர். எனவே இவை யாவும் படித்தவர்கள் கையிலும் பல்கலைக்கழக இளைஞர்கள், சனசமூக நிலையங்கள், சமூக நலன்புரிச் சங்கங்கள் என்பவற்றிலும்தான் தங்கியுள்ளது. சாதிமுறை நீக்கப்படவேண்டுமென்று இளஞ்சமூதாயத்தினர் முன்னின்று ஒத்துழைக்கவேண்டும். அத்துடன் இவற்றுக்கு அரசியல் ஒத்துழைப்பு வேண்டும். இவ்வாறிருந்தால்தான் ஒரு சிறிதளவேனும் மேல்நாட்டுச் சாதிப்பாகுபாடற்ற சமுதாயம்போல் நாமும் மாற முடியும், அபிவிருத்தியும் பேணப்படும்.

ஜேர்மனிய மக்கள் சட்டத்துக்கு மதிப்பளித்து அதன்படி நடக்கின்றூர்கள். சட்டம் என்ன சொல்கின்றதோ அதன்படியே நடப்பார்கள். இதனுல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு பிரச்சினைகள் குற்றங்கள் ஏற்படுவதற்கு நியாயங்கள் எதுவுமில்லை. இதனால் ஊர்காவலர்க்கு, பாதுகாப்புப் படையினர்க்கு அதிகவேலைகொடுக்காமல் அவர்களுடன் ஒத்துழைக்கின்றார்கள். கூடியவரை நேர்மையாகவும் இவர்கள் வாழ்கின்றார்கள். களவு, கொலை செய்வதற்கு மனச்சாட்சிக்குத்தான் முதலிற் பயப்படுகின்றார்கள், மற்றும் அரசியல் வாதங்களில் ஈடுபட்டுக் குழப்பத்தைக் கருத்துப் பேதத்தை உருவாக்கமாட்டார்கள். தாமும் தமது வேலையும் என்ற மாதிரியே வாழும் நிலையுண்டு. ஆனால் எமதுநாட்டில்இத்தகைய நிலையில்லை. சட்டத்தை மீறி நடந்து நீதித்துறையினருக்குப் பெரிய தொந்தரவு கொடுக்கின்றார்கள். இதைவிடுத்து நாமெல்லோரும் சட்டத்துக்குப் பணிந்துநடக்கவேண்டும். அப்போதுதான் நாடு அமைதியுடன் இருக்கமுடியும். நாமும் மேல்நாட்டினரைப்போல் சட்டத்துக்குப் பணிந்து நடப்பதன்மூலம் குற்ற நடவடிக்கைகளை நீக்கி வாழமுடியும்.

மேல்நாட்டில் நீதித்துறை திறம்பட இயங்குகிறது எனக் கூறப்படுகிறது. ஒருவர் குற்றவாளி எனக் கண்டுபிடிக்கப்பட்டால் தகுந்த தண்டனையைப் பெறுவர். ஜேர்மனியில் நீதிச்சேவை ஏறக்குறைய 97% சிறப்பாக நடைபெறுகின்றது என மதிப்பிடப்பட்டுள்ளது. இங்கு எவரும் சட்டத்தின் பிடியினின்று தப்பிவிடமுடியாது. குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கக்கூடிய முறையில் பொலிசாரின் உளவு நடவடிக்கை, புலன்விசாரணை, நிழற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம், கைவிரல் அடையாளம் எடுத்தல், ஒலிப் பதிவு முறைகள், ஒளிப்பதிவு செய்தல் போன்ற நுணுக்கமான செயல் நடவடிக்கைகளால் குற்றவாளிகள் எங்கிருந்தபோதும் கண்டுபிடிக்கப்பட்டுவிடுவர். மற்றும் கம்பியில்லாத் தந்தி, தொலைபேசிச் சாதனங்களால் குற்றம் நடந்த மறுகணம் பொலிசார் ஸ்தலத்துக்கு வந்துவிடுவர். அதற்கேற்றமுறையில் அபாய ஒலியுடன் வாகனங்களில் வந்துசேர்வர். இந்த அபாய ஒலியின் காரணம் ஏனைய வாகனங்கள் வழிவிட்டுக் கொடுப்பதற்காகும். அதாவது விலகுவதற்கு முன்னறிவுப்பு ஒலியாகும். இப்படியான முறையினுல்தான் குறிப்பிட்ட இடத்திற்கு விரைவாகப் போய்ச்சேரக்கூடியதாயுள்ளது. விபத்துகள், சச்சரவுகள் ஏற்பட்டால் பொலிசார் வந்து அந்த ஸ்தலத்திலேயே பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வர். இங்கு பெரும்பாலும் தண்டனையாகப் பண அபராதமே விதிக்கப்படுகிறது. கார்விபத்தாலோ ஏனைய விபத்தாலோ, கைகலப்பினுலோ ஒருவரின் உடல் பாதிக்கப்பட்டால் அதற்கான குற்றவாளியெனக் கண்டுபிடிக்கப்பட்டவர்க்குச் சிறைவாசம் அளிப்பதன்மூலம் பாதிக்கப்பட்டவர்க்கு எதுவித பயனும் இல்லை என்ற காரணத்தால் பண அபராதம் விதிக்கப்படுகின்றது. அத்துடன் பாதிக்கப்பட்டவரின் வைத்தியச் செலவையும் குற்றவாளியே பொறுப்பேற்று அவரின் பாதிப்புக்குஏற்ற வகையில் பணம் கட்டியே தீரவேண்டும். குறைந்த வருமானமுள்ளவரென்ருல் இப்பணத்தைக் கட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிக்கப் பலவருடங்கள் செல்லலாம். எனவே இங்குள்ள மக்கள் ஒருவருக்கொருவர் குற்றம்புரிவதில் அஞ்சிப் பின்னிற்கின்றனர். இலங்கையை நோக்கின் குற்றம் செய்தவர்கள்கூடச் சட்டத்தினின்று தப்பிவிடும் நிலையுண்டு. அத்துடன் இங்கு உள்ளது போன்று உளவறியும் நடவடிக்கை எமது நாட்டில் குறைவு எனவே எமது நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. அத்துடன் பொலிசாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே அந்நியோன்னியமான உறவு இல்லை. எமது நாட்டிலும் ஜேர்மனியைப்போன்று ஒரு சிறப்பான நீதிச் சேவை வரவேண்டும். அதற்குப் பொதுமக்கள் அரசாங்கம் நீதித்துறையினர் யாவரும் ஒருமித்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எமது சமுதாயத்தில் வறுமை காரணமாக மற்றவர்களிடம் கையேந்துதலும், தெருவீதியில் பிச்சையெடுத்தலும், பிறர்பொருளை அபகரித்தலும் சாதாரண செய்கை எனலாம். அத்துடன் களவெடுத்தலுக்காக கொலைசெய்யும் தரங்கெட்ட மானிடர் எம்மத்தியில் உண்டு. ஆனல் மேல்நாட்டில் களவென்றால் என்னவென்று தெரியாத நிலையேயுண்டு. இதற்குக் காரணம் சட்டத்திற்கு மதிப்பளிப்பவர்கள் எனக்கூறியபோதும் ஆழ்ந்து நோக்கின் வறுமையின்மையே முக்கிய காரணி எனலாம். வறுமையோ பொருளாதாரப் பிரச்சினையோ இவர்களிடமின்மையால் தமக்குத் தேவையானவற்றைத் தாமே நிறைவேற்றிக்கொள்கின்றனர். அத்துடன் பிறர் பொருட்கள்மேல் இவர்களுக்கு மோகம் ஏற்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுவதில்லை. ஆயினும் பொருளாதாரநிலைமையை ஒரு மறைமுகக் காரணியெனக் கொள்ளலாமே யன்றி உண்மையில் அவர்களின் நேர்மையான பண்பே இப்படியான இழிதொழிலில் ஈடுபடாமற் தடுக்கின்றது. இந்த நிலையை நாம் அடையவேண்டும். பிறர் பொருட்களில் ஆசைப்படுவதையோ அபகரிப்பதையோ மனதாலும் எண்ணுத நிலை எம் மத்தியில் உருவாகவேண்டும். உதாரணமாக ஒரு மோட்டார் வண்டியை தெருவோரத்தில் ஒரு கிழமையோ அதற்கு மேலாகவோ நிறுத்திவிட்டு தூரத்திலிருக்கும் தமதில்லத்தில் நிம்மதியாக இருக்கலாம். அந்த மோட்டார்வண்டி எதுவித பாதிப்புமின்றி அந்த இடத்திலேயே இருக்கும். ஆனால் எமது சமுதாயத்தில் அப்படி ஒரு மோட்டார் வண்டியையோ துவிசக்கர வண்டியையோ நிறுத்திவைத்தால் அவை என்ன நிலையிலிருக்குமென்று சொல்லமுடியாது. சிலவேளை அவ்வாகனங்களே காணுமற் போய்விடும் இந்த நிலைமை ஏன் எமது சமுதாயத்திலிருக்க வேண்டும்? இப்படியான இழிதொழில்கள் எம் மத்தியில் இருக்கும்வரை எப்படி நாம் சமுதாயத்தில் முன்னேற்றத்தைக் காணமுடியும்? மேல்நாட்டினரைப்போல் நாமும் ஒழுக்கமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும். அப்போதுதான் எமது சமுதாயத்தில் ஒரு மலர்ச்சி காணமுடியும்.

களவு, கொலை, கொள்ளை என்பன நமது நாட்டில் மலிந்து காணப்படும் அவமானச் செயல்களாகும். இதனுல் இரவில் மக்கள் சுதந்திரமாக உறங்கவோ, உலவவோ முடியாது. கள்வர் பயம் வழிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறி என ஒதுங்கி வாழவேண்டும். ஊர்காவலர்களுக்கும் இரவு ரோந்து வேலைகள் அதிகம். மேல் நாட்டில் எந்த நடுநிசியிலும்கூட எவ்வித பயமுமின்றி மக்கள் நடமாடலாம், பெண்கள் இரவில் எந்நேரமென்றாலும் மோட்டார் வண்டிகளில் மிக்க சுதந்திரமாக நிம்மதியாகப் பயணம் செய்வார்கள். எமது சமுதாயத்தில் அருமையாகப் பெண்கள் மோட்டார் வண்டி செலுத்துவார்கள், ஆனால் அவர்கள் நடுநிசி வேளைகளில் பயணம் செய்ய மாட்டார்கள். ஏனெனில் எமது சமுதாயத்தில் மனித உருவையே மனிதன் கண்டு மிருகமென அஞ்சவேண்டிய நிலையுண்டு. மனித உருவில் மிருகமாக நடந்து, அப்பெண்ணுடன் மோட்டார் வண்டியையும் கடத்திச்செல்லும் நிலையுண்டு. இந்நிலை சிலவேளை உயிருக்கே ஆபத்தைத் தோற்றுவிக்கலாம். இவ்வாறான நிலைமைகளைப் பூண்டோடு களைந்தெறியவேண்டும். இந்த நிலையை இன்னும் எமது சமுதாயத்தில் அனுமதிக்கவிட்டால் எமக்கு விமோசனமே கிடையாது.

எமது சமுதாயத்தில் திருமணம் என்றவுடன் முன்னிற்பது சீதனப் பேச்சே. சீதனப் பிரச்சினையால் பெற்றோருக்கு நிம்மதியற்ற வாழ்வும் உரிய பருவத்தில் பெண்கள் திருமணம் செய்யாது வாழாவெட்டியாகப் பெருமூச்சு விடுதலும் எம்மிடையே சர்வ சாதாரணமாக உள்ளது. மேல்நாட்டில் இத்தகைய நிலை இல்லை. கருத்தொருமித்த முறையில் துணைகளைத் தாமே தேடி மணமுடிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையை நாமும் எதிர்நோக்கவேண்டும். சீதனப் பிரச்சினையின்றி திருமணங்கள் இனிதே நடைபெறும் நிலையை நாம் உருவாக்கவேண்டும். அதாவது சீதனம் கொடுப்பாரும் அதை ஏற்பாரும் அற்ற ஒரு சுமுகமான நிலை ஏற்படல் அவசியம். தேவை, விருப்பம் ஏற்படின் பெற்ருேர் தமது உடைமைகளைச் சொத்துக்களைப் பிள்ளைகளுக்கு விரும்பியபடி வெகுமதியாகத் திருமணத்தின் போது அளிக்கலாம். ஆனுல் கட்டாயப்படுத்திப் பெண்வீட்டாரிடம் சீதனம் என்ற போர்வையில் பொருட்களை அபகரிக்கும் நிலை என்று மாறுமோ அன்றுதான் எமது கலாச்சாரத்தில் புதுப் பொலிவு தோன்றி வளமான சமுதாயம் உருவாகும். இது எல்லோர் மனதிலும் ஒரு எழுச்சி மனப்பான்மையைத் தோற்றுவிக்கும்போது தான் உண்மையான மாறுதலை ஏற்படுத்த முடியும். இதை ஓரிருவர் நடைமுறைப்படுத்திஞல் மட்டும் போதாது. பேச்சளவில் எழுத்தளவில் நிற்காது செயலில் ஈடுபடும்போதுதான் சீதனப்பேயை ஒழிக்கமுடியும். வளரும் சமுதாயத்தில் இப்பிரச்சினையை ஒழித்துக்கட்டுவதன் மூலமே கன்னிப்பெண்களுக்கு உரியபருவத்தில் வாழ்வளித்து வளம்பெறச் செய்யலாம்.

சீதனக்கொடுமையை எவ்வாறு தீர்த்துக்கட்டமுடியுமெனக் கேள்விகள் எழலாம். உண்மையில் இதற்கான விடைகளை அளிப்பது கடினம். இருந்தும் ஓரளவுக்கு விடைகளை நாமே செயல்ரீதியாகக் கண்டுபிடித்து ஆவன செய்யவேண்டும். அது இன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைய இளஞ்சமுதாயத்தினரிடந்தான் முக்கியமாகத் தங்கியுள்ளது. இளைஞரிடையே ஒரு விழிப்புணர்வு தோன்றவேண்டும். "சீதனத்துடன்வரும் பெண்ணை நாம் திருமணம் செய்யமாட்டோம்" என்ற வைராக்கிய மனம் அவர்களுக்கு இருக்குமேயானால் சீதனப்பேயை எப்பவோ விரட்டியிருக்கலாம். நாம் திருமணம் செய்வது பெண்ணைத்தான்; சீதனத்தையல்ல என்ற கொள்கை மனதில் ஆழப் பதியவேண்டும் சீதனம் இல்லாது ஒரு பெண்ணைத் திருமணம் முடித்து எனது உழைப்பால் அவளைக் காப்பாற்றவேண்டும் என்ற தன்மான உணர்வு தோன்றவேண்டும். இன்றைய இளைஞர் அணி திரண்டு இதற்கான முயற்சியில் இறங்கினுல் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.மாதர் சங்கம்,இளைஞர் சங்கம், பல்கலைக்கழகங்கள் போன்ற உயர்மட்ட நிலையங்களில் இக்கொள்கை தோற்றம்பெற்று செயல் நடவடிக்கைகளில் இறங்குவது அவசியம். ஆண் வர்க்கத்தினரிடந்தான் இதன் பொறுப்பு முழுமையாகத் தங்கியுள்ளது. ஆனுல் படித்த இளம் பெண்களின் மனநிலையும் மாற்றம் பெறவேண்டும். அதாவது சீதனம் கொடுத்து ஒருவரை விலைக்கு வாங்கி மாப்பிள்ளையாக ஏற்கமாட்டோம். அப்படி வருபவர் சீதனமெனும் பெண்ணை விரும்பித்தான் மாப்பிள்ளையாகிருர் என்பதை மனதிற்கொண்டு அவ்வாறு திருமணம் செய்வதை மறுக்கவேண்டும். பெண்கள் மனம்மாறுவதில் சில பிரச்சினைகளைச் சமுதாயம் தோற்றுவிக்கும். ஆனுல் ஆண்களைப் பொறுத்தவரையில் சமுதாயம் மெச்சி புகழ்மாலை சூட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது சீதனம் கொடுத்துத் திருமணம் செய்ய மாட்டோமென்று படியாத பெண்கள் பிடிவாதம் பிடித்தால் பெற்றோர்கள் தமது நலன் கருதி அவளை அறியாது அவள் விருப்பம் இன்றியே திருமணம் செய்து கொடுத்துவிடுவர். இதற்குக் காரணம் பெண்குலத்துக்கு எமது சமுதாயம் விதித்துள்ள கட்டுப்பாடெனலாம். ஆனால் ஆண்கள் படித்தாலும் சரி படியாதுவிட்டாலும்சரி அவர்களுடைய விருப்பு வெறுப்புக்குப் பெற்றோர் தடையாக இருக்கமாட்டார்கள். அப்படித்தான் தடையாக இருந்தாலும் மீறிப்போகும் ஆற்றலும் வலுவும் அவர்களுக்குண்டு. ஆனால் மேல்நாட்டுப் பெண்களைப் போல் சட்டதிட்டங்களை, ஒழுங்கு விதிகளை மீறிப் போகும் தன்மை எமது சமுதாயத்தில் பெண்களுக்கு இல்லையே. அப்படித்தான் ஒரு பெண் மீறி வெளியுலக வாழ்க்கையில் ஈடுபட்டாளானால் அவளுக்கு சமுதாயத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் இருந்து எதிர்ப்புகளும் கண்டனங்களும் பிறக்கும். ஆண்கள் மாறினால் பெண்கள் தாமாகவே மாற்றம் அடைவார்கள். எவ்வாறெனில் சீதனமில்லாத ஒரு பெண்ணைத்தான் திருமணம் செய்வேனென்று ஒரு ஆண்மகன் ஒற்றைக்காலில் நிற்பாராயின் மணமகளாக வருபவள் சீதனமில்லாத பெண்ணாகத் தானிருப்பாள். அப்படி அந்தப்பெண்ணின் விருப்பமான ''சீதனம் கேட்காத ஒருவரையே திருமணம் செய்வேன்'' என்ற கொள்கையும் இங்கு நிறைவேறுகின்றது.

இன்றைய நிலையை நோக்கும்போது திரையி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டப்படும் படங்கள் சமுதாய மறுமலர்ச்சிக்கு வழி வகுப்பனவான கருவையே ஓரளவுக்குக் கொண்டிருக்கின்றன. இதேபோன்று சீதனப் பிரச்சினை, சாதிக்கொடுமைபோன்ற பிரச்சினைகளை மக்களுக்குச் சுட்டிக்காட்டி அவற்றை மக்களுக்கு விளங்கப் படுத்தவேண்டும். இதன்மூலமும் ஓரளவுக்குத் தீர்வுகாணலாம். இவற்றைவிட நூல்கள், கவிதைகள்மூலம் மக்களுக்கு சீதனப் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம், அற்கான வழிமுறைகள் என்ன என்ற முறையில் அறிவூட்டவேண்டும். பெண்களும் படித்துப் பட்டம்பெற்று வாழும் இந்நாட்களில் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது அவ்வளவு கடினமான காரியமல்ல. மேலும் இன்றைய காலகட்டத்தை நோக்கும்போது எமது நாட்டிலுள்ள படித்தவர்களும் படிப்பற்றவர்களும் வெளிநாடுகளில் வாழ்ந்து பணம் சம்பாதிக்கின்றார்கள். அவர்கள் வெளிநாட்டு மக்களின் வாழ்க்கையை நேரடியாகப் பார்க்கின்றார்கள். சீதனம் உட்பட எதுவித பிரச்சனையுமின்றி அவர்கள் நிம்மதியாக வாழ்வதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது. எனவே இவர்களை அறியாமலேயே தாமும் சீதனமில்லாத ஒரு வாழ்க்கையைத் தோற்றுவிக்கவேண்டுமென்ற எண்ணம் அவர்களிடையே தோற்றம் பெறுகின்றது. எனவே இன்றுள்ள இளைஞர்களிடையே ஒரு உத்வேகம் தோன்றியுள்ளது. இவர்கள் இங்கிருந்து தமது சகோதரிகளுக்காகவே சீதனத்தின் பொருட்டு குளிர், பனி என்பதையும் பொருட்படுத்தாது உழைத்து அனுப்புகின்றனர். இவற்றையெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கியே இவர்களிடம் இந்த உத்வேகம் எழுந் துள்ளதெனக் கூறலாம். மற்றும் இன்றைய இளை ஞர்களிற் சிலர் நாம் சீதனம் வாங்கவில்லை, எமது பெற்றோர்கள்தான் வாங்குகிறார்கள் என்று கூறித் தப்பித்துக்கொள்ளும் நிலையுமுண்டு. அப்படிச் சொல்பவர்கள் தம்மைக் காரணங் காட்டித்தானே சீதனம் வாங்கப்படுகிறதென்பதை உணர்வதில்லை. அதாவது பெற்றோர்கள் தமது பராயம் வராத மகனையோ மகளையோ சீதனச் சந்தையில் முன்னி றுத்தவில்லையே. எனவே இப்படியாகச் சொல்லித் தப்பித்துக்கொள்ளாது சீதனம் வாங்குவதை அறவே ஒழிக்கவேண்டும்.

சீதனம் வாங்கித் திருமணம் செய்வதையே பெரிய கௌரவமாகக் கருதும் பலர் எம்மத்தியி லுள்ளனர். இதைவிடச் சீதனம் வாங்கினால்தான் தாய் சகோதரிகளைக் கவனிக்கலாம் என்று எண்ணு பவர்களும் உள்ளனர். இவர்கள் சீதனம் ஒழிக்கப் படுவதை விரும்பமாட்டார்கள். அதாவது சீதனம் கொடுக்கப்படவேண்டுமென்றும், அல்லாவிடில் தீய தாக்கங்கள் ஏற்படுமெனவும் கூறுகின்றனர் சீதனம் என்ற முறை இருப்பதனால் பின்வரும் நன்மைகள் ஏற்பட முடியுமென அவர்கள் கூறுகின்றனர். சீத னம் இல்லாத நிலையில் திருமணம் செய்யும் குடும் பத்தில் பொருளாதாரப் பிரச்சினை ஏற்படுகின்றது. இதனால் மணமுறிவு ஏற்படுவதற்கும் சந்தர்ப்பங் கள் ஏற்படுகின்றன. எங்கள் நாட்டில் மணமுறிவு செய்துகொள்வதை சமுதாயம் வரவேற்காது அதாவது விவாகரத்துப்பெற்ற பெண்ணுக்குஏனைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பப் பெண்களுக்குள்ள அந்தஸ்துக் கிடையாது. இதனால் 'குடும்பம்' என்ற போர்வையில் வெளியுல குக்காகக் கணவன் மனைவி என்று வாழ்ந்துகாட்டும் போலிவாழ்க்கை வாழவேண்டியுள்ளது. அதாவது கணவனைப் பிடிக்காவிட்டால் விவாகரத்துச்செய்து இன்னொருவரைத் திருமணம் செய்வதற்கு எமது சமுதாயம் அனுமதி வழங்கத் தயங்குகின்றது. ஆனால் மேல்நாட்டைப் பொறுத்தவரையில் பெண் கள் விவாகரத்துச் செய்து மீண்டும் திருமணம்செய் துகொள்ளப் போதிய சுதந்திரம் உண்டு. ஆனால் எமது நாட்டில் அவ்வாறு இல்லை. எனவே சீதனம் கொடுத்துத்தான் திருமணம் செய்யவேண்டுமென் பது சீதனத்தை ஆதரிப்போரின் வாதமாகும். மேலும் சீதனம் கொடுத்துத் திருமணம் செய்வதி னால் பெண்களும் ஆண்களும் காலம் கடந்து கூடிய வயதில் திருமணம் செய்கின்றனர். இதனால் குறைந்த பிள்ளைகளைப் பெற்று வாழமுடியும், இது வீட்டிற்கும் நாட்டிற்கும் நன்மைதரும், என்றும் சீதனமுறை இல்லாவிட்டால் இளைய வயதில் திரு மணங்கள் நடைபெற்று அது சனத்தொகைப்பெ ருக்கத்திற்கு வழிகோலும் என்றும் சீதனத்தை ஆத ரிப்போர் கூறமுடியும். சனத்தொகைப் பிரச்சி னையைக் கருத்திற்கொண்டு இவர்கள் இவ்வாதத் தை முன்வைக்கலாம். சீதனத்தை ஆதரிக் கலாம்.

குடும்பங்களிடையே அனுபவக்குறைவு காரண மாக பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மற்றும் போ திய அனுபவமோ, அறிவோ இன்மையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தடை பற்றிய அறிவு எமது சமுதாயத்திடம் இல்லை. எனவே பிறப்பு வீதம் கூடிக்கொண்டே போகும். ஆனால் மேல்நாட்டவர்க்கு பாடசாலை மாணவர்வரை குடும்பக் கட்டுப்பாட்டு அறிவு நிறைய உண்டு. அத்துடன் இங்கு மருந்து வசதி வைத்திய ஆலோசனைகள் சிறப்பாக இருக்கின்றன. எனவே இங்கு சனத்தொகை அதிகரிக்குமென அஞ்ச வேண்டியதில்லை. மற்றும் சீதனம் கொடுக்கும் வழமை இருக்கின்றபடியால் பணம் ஒருவரிடம் குவிந்து இருக்காமல் பலரிடம் பரவுதற்கு உதவி செய்கின்றது. அதாவது பணக்கார வர்க்கத்தின ரிடமே பணம் மேலும் குவிந்து கிடக்காமல் சீதனம் கொடுப்பதால் மற்றவரிடமும் பணம் சென்று சமத்துவ நிலை ஏற்படுவதற்கு உதவி புரிகிறது. இவ்வாறில்லாவிட்டால் ஒரு இடத்திலேயே பணம்வளர்ந்து வருவதற்கு இடமளிக்கும். இவற்றைவிட சீதனம் கொடுக்கும் நிலையிருப்பதால்தான் சேமிப்பு, உழைக்கும் சக்தி, உற்பத்திப் பெருக்கம் என்பன ஏற்படுகின்றன. சீதனம் இல்லையெனும் நிலை வரும்போது மக்கள் சோம்பேறியாக இருக்கவேண்டிய நிலை வரலாம் எனவும் சீதனத்தை ஆதரிப்போர் கூறுகின்றனர். சீதனம் இல்லை எனும் நிலை வந்தால் இவ்வாறான தீமைகள் ஏற்படலாம் என அவர்கள் கருதுகின்றனர்.

சீதனம் கொடுத்தல் வேண்டும் எனும் நிலை இருப்பதால் படித்த பெண்கள் தாமே சேமிப்பை உருவாக்கித் திருமணம் செய்துகொள்ளும் விழிப்புணர்வு தோன்றுகின்றது. இதனால் உழைப்பு, வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயத்தில் ஆணுக்குப் பெண் போட்டித் தன்மையை உருவாக்கி, ஆணுக்குப் பெண் சமமான நிலையைத் தோற்றுவிக்கின்றது சீதனம். ஆனல் சீதனம் இல்லை எனும் நிலை வந்தால் சோம்பேறிப் பெண்ணுக, ஆணுக்கு அடங்கிய பெண்ணுக வாழ்க்கை நடாத்தும் நிலை உருவாகும். ஆனல், தானே உழைத்துச் சீதனம் கொடுத்த பெண்ணைத் திருமணம் செய்யும்போது ஒரு ஆண் அவளை அடிமைகொள்ளும் வாய்ப்பே இல்லை. அத்துடன் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைத் தோற்றுவிக்கின்றது என்பதும் சீதனத்தை ஆதரிப்போரின் வாதமாகும். மற்றும் சீதனம் எனும் வழமை எம்மத்தியில் இறுக்கமானதாக தீவிரம்பெற்றுள்ளது. இதனல் சீதனம் கொடுக்கவேண்டுமென்ற கட்டாயத்தின்பேரில் பல இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பணம் சேகரிக்கின்றூர்கள். அத்துடன் வெளிநாட்டுப் பொருட்கள் இங்குவந்து குவிகின்றன. இதனல் பெருந்தொகையான வெளிநாட்டுப் பணம் தாய் நாட்டுக்கு வந்து சேருகின்றது. இது தனி ஒருவருடைய குடும்பத்தின் பணவருவாயாக இருந்த போதும் அது நாட்டின் அந்நிய செலாவணி வருமானத்தை விருத்திசெய்கின்றது. பொதுவாக ஜெர்மனிய நாட்டில் துருக்கி, கிரேக்கம், இத்தாலி, ஸ்பெயின், ஒஸ்திரியா போன்ற பல வெளிநாட்டினரும் உழைக்கின்றனர். அவர்களுடைய பணம் யாவற்றையும் இங்கேயே செலவழித்து விடுகின்றனர். ஆனல் எமது நாட்டினர் உழைக்கும் பணத்தில் பெரும்பகுதி நம்நாட்டுக்கே வந்துசேருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கெல்லாம் காரணம் என்ன? சீதனம்கொடுக்கவேண்டுமென்ற நிலை இருப்பதால்தான் என சீதனத்தை ஆதரிப்போர் கூறலாம். சீதனமுறை இல்லாவிட்டால் இத்தகைய நன்மைகள் கிடைக்காதென்றும் எனவே சீதனமுறை இருக்கவேண்டுமென்றும் அவர்கள் வாதாடக்கூடும். ஆயினும் அடிப்படையில் சீதனமுறை ஒழிக்கப்படவேண்டிய ஒன்று. எல்லோரும் சேர்ந்து சீதனத்தைப் பகிஷ்கரித்தால் இம்முறையை அடியோடு ஒழிக்கலாம். இதனால் சீதனம் வாங்கத்தான்வேண்டும் என்ற நிலையையும் மாற்றலாம்.

முக்கியமாக எமது நாட்டில் சனத்தொகை அபரிதமான முறையில் வளர்ச்சிபெற்று வருகின்றது. சனத்தொகைக் கட்டுப்பாடு பற்றிய அறிவு எமது சமுதாயத்தில் மிக அருமை. குடும்பக் கட்டுப்பாடு, அளவான குடும்பம் என்பனவற்றை எமது சமுதாயத்தில் பலர் ஏற்றுக்கொள்வதில்லை. இயற்கையாகக் கடவுளால் அளிக்கப்படும் செல்வங்களான குழந்தைகளை அழிப்பது பாவமான செயலென்றும் பெற்று வளர்க்கவேண்டுமென்ற கொள்கையுடனும் வாழ்ந்து வருகின்றனர். மேல்நாட்டினர்போல் குடும்பத்துக்கு இரண்டு மூன்று பிள்ளைகளைப் பெறும் வழக்கத்தை நாமும் கடைப்பிடிக்க வேண்டும். ஆனல் இங்கே அளவுக்கு மீறி அதாவது தமது வருவாய்க்கு மீறிப் பிள்ளைகளைப் பெற்றுத் தாமும் வருந்திப் பிள்ளைகளையும் ஆரோக்கியமற்ற முறையில் வளர்த்தெடுக்கின்றனர். இதை விடுத்துத் திடகாத்திரமான குழந்தைகளைப் பெற்று நாட்டுக்கு நற்பிரசைகளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுவிப்பது பெற்றோர்களின் நோக்கமாக இருக்கவேண்டும். கடவுள் அருளும் வரப்பிரசாதம் என்று எண்ணிக்கொண்டு இருந்தால் நாடு உருப்படாது. சமுதாயத்தில் எதுவித முன்னேற்றத்தையும் காணமுடியாது. தங்கிவாழும் தன்மை எம் நாட்டிலிருப்பதால் சனத்தொகையைக் கட்டுப்படுத்தல் அவசியமாகின்றது. அடுத்து மேல்நாட்டவரைப் பொறுத்த மட்டில் இங்குகட்டாயக் கல்வி நடைமுறையிலிருப்பதால் எல்லாப் பிள்ளைகளும் கல்விகற்க வாய்ப்பு ஏற்பட்டு ஒரு படித்த சமுதாயமாகத் திகழ்கின்றது. ஏழை பணக்காரனென்ற பேதமின்றி எல்லோரும் கல்வி கற்கின்றனர். எமது சமுதாயத்தில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் இன்றும் இருக்கின்றார்கள். எமது நாட்டில் இலவசக் கல்வி இருந்தபோதும் அது கட்டாயக் கல்வியாக இல்லை. விரும்பியவர் படிக்கலாம், வசதியின்றிச் சிலர் படிக்காமலும் விடலாம். இதனால் எமது சமுதாயத்தை முழுக்க முழுக்கப் படித்த சமுதாயமெனக் கூறிவிட முடியாது. பழைய கொள்கைகளில் ஊறியவர்கள், தமது தொழில், வருமானத்தை முக்கியமாகக் கொள்கின்றனரே தவிர பிள்ளைகளின் கல்வியில் அக்கறையெடுப்பது குறைவு இதனால் எமது கலாச்சாரத்தில் முழுமையான சில திருத்தங்களை எதிர்பார்க்க முடியாமலுள்ளது. மேல்நாட்டினர்போல் எமது நாட்டிலும் கல்வி கட்டாயக் கல்வியாக இருந்து எல்லோரும் கல்வியறிவு பெற வாய்ப்பளிக்க வேண்டும். அப்போதுதான் சீர்திருத்த எண்ணங்களும், விழிப்புணர்ச்சியும் மக்களிடையே தோற்றம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரைப் பார்த்து அதைப்போல் மற்றவர்களும் கடைப்பிடிப்பதுதான் இன்றைய நவ நாகரிக மோகமென்பதை எமது கலாச்சாரத்திற் காணக்கூடியதாயுள்ளது. இத்தகைய பழக்கம் மேல்நாட்டவரிடமில்லை. தனக்குத் தனக்கு எது வசதியாகத் தெரிகின்றதோ அதையே செய்வார்கள், அவற்றையே தமது வழக்கமாக்கிக்கொள்வர். மற்றவர்களைப் பார்த்து அவர்களைப்போல் தாமும் நடக்க வேண்டுமென்று எண்ண மாட்டார்கள். தமக்கு எது சரியோ அதையே செய்வர். ஆனால் எமது சமுதாயத்தில் மற்றவர்களுக்குப் பயந்து சமுதாயத்துக்காக வாழும் நிலைமையுண்டு. தமக்கு விருப்பமில்லாத செய்கையாக இருந்தாலும் அதை சமுதாயத்துக்குப் பயந்து செய்யவேண்டிய நிலையுண்டு. உதாரணமாக கணவனையிழந்த பெண், விவாகரத்துப் பெற்ற பெண், மீண்டும் திருமணம் செய்து சுமங்கலியாக வாழ்வதற்கு ஒரளவுக்கு விருப்பமிருந்தாலும் மற்றவர்கள் தன்னைப்பற்றித் தவருக எண்ணுவார்கள் என்று மறுமணம் செய்யாதிருக்கின்ருர்கள். அதாவது அவள் இங்கு தனக்காக வாழவில்லை, சமுதாயத்திற்காகவே வாழ்கின்ருள் என்ற முடிவையே எடுக்கவேண்டியுள்ளது. இவ்வாருக ஒரு பெண் வாழாவெட்டியாக, விதவையாக இருப்பதற்கு இடமளிக்கும் எமது சமுதாயம், கணவனையிழந்து தவிக்கும் அவளுக்கு எந்த விதத்தில் உதவிசெய்யத் தயாராக இருக்குமோ தெரியாது. ஏன் ஒருநேரச்சோறுபோடுமா என்பது விடையற்ற வினவாகும். நமது சமுதாயத்தில் ஏன் பெண்கள் மறுமணம் செய்யக்கூடாது? விதவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணம் விரும்பி வரவேற்கப்படவேண்டும். பாரதியார், பாரதிதாசன் ஆகிய கவிஞர்கள் மறுமணம், விதவாமணம் என்பவற்றை நன்கு வலியுறுத்திக் கவிமழை பொழிந்துள்ளார்கள். "கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே வேரிற் பழுத்த பலா" என விதவையின் நிலையைப் பாரதிதாசன் திறம்பட, கேட்பவர் மனமுருகக் கவிதை புனைந்துள்ளார். எனவே சமுதாயம் பெண்களுக்குள்ள கட்டுப்பாடுகளை நீக்கி அவளையும் சமூகத்தில் உரிய அந்தஸ்துப் பெற்று வாழ வழிசெய்யவேண்டும். விதவையான ஒரு பெண்ணை மீண்டும் பொட்டோடும் பூவோடும் சமுதாயம் பார்க்கவேண்டும். அதாவது மேல்நாட்டினரைப்போன்று மறுமணம், விதவைமணம் என்பவற்றை நாமும் எமது சமுதாயத்தில் புகுத்தி அதனை அங்கீகரிக்கவேண்டும். விதவையாக இருந்து வாழ்நாளை ஒண்டிக்கட்டையாக, மற்றவர்க்குப் பாரமாக இருந்து காலம் கழிப்பதைவிட இன்னொருவரைத் திருமணம் செய்து வாழ்க்கை நடத்துவதில் எதுவித தப்பும் இல்லையே. அதற்குவேண்டிய முறையில் எமது சமுதாயத்தை நாம் சீர்படுத்த வேண்டும். மற்றநாட்டவர் எமது சமுதாயத்தில் கலாச்சாரத்தில் வளர்ச்சியையோ மாற்றத்தையோ ஏற்படுத்தமாட்டார்கள். நாமே நமது கலாச்சாரத்தை அபிவிருத்தியடையச் செய்யவேண்டும்.

பெண்களைத் தாயாகப்போற்றி மதிப்பளிக்கும் தன்மை எம்மிடையேதானுண்டு. ஆனல் மேல்நாட்டில் இத்தன்மையைக் காணமுடியாது. மேலும் குறிப்பிட்ட ஒருவயதுவரைக்கும்தான் தாய், பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு, பெற்றோர் பாசம் மேல்நாட்டில் இருக்கின்றது. குறிப்பாகப் பதினெட்டு வயதுவரைக்குந் தான் அந்த உறவு பலமாக அமைந்திருக்கின்றது. ஆனால் எமது கலாச்சாரத்தில் பெற்றோர் இறக்கும் வரையும் பிள்ளைகளிடையே பாசமும் தங்கிவாழும் தன்மையும் உண்டு. இதன் காரணமாகப் பெற்றோரும் தமது பிற்கால வாழ்வுக்கு மக்களையே நம்பியிருக்கின்றனர். அவர்களின் நம்பிக்கையைச் சிலர் மதிக்கின்றார்கள், சிலர் மறுக்கின்றார்கள். மற்றும் பிள்ளைகள் பெற்றோரைப் பராமரிக்காவிட்டால் அவர்களுக்கு வேறு புகலிடமில்லை. இதனால் முதியோர் விரக்தியான மனோபாவத்துடன் இறுதிக்கால கட்டத்தை வாழ்ந்து முடிக்கின்றனர். நோய், வறுமையாலும் வருந்தி இறப்புக்காக ஏங்கிநிற்கும் பரிதாபநிலைமை எமதுசமுதாயத்தில் உண்டு. ஆனால் மேல்நாட்டுச் சமூகத்தில் முதியோர் நன்கு மதிக்கப் படுகின்றனர். பொருளாதார ரீதியாக அவர்களுக்குச் சமூகத்தில் எவ்விதக் குறைவும் இல்லை. வயோதிபர் விடுதிகள், முதியோர் நிலையங்கள் எனப் பல வகைப்பட்ட நிறுவனங்கள் முதியோர்க்குப் புகலிடமளிக்கின்றன. அவர்களுக்கு வேண்டிய சகலதேவைகளும் நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் இவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் உள்ள அன்பு மிகவும் குறைவானதெனலாம். பிள்ளைகளின் அன்பு,ஆதரவு இங்குள்ள முதியோர்க்கு மிகவும் வறியதாகவே உள்ளது. உளவியல் அடிப்படையில் நோக்கின் இவர்களுக்கு பொருளியற் தேவைகள்தான் நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் அன்பு பாசமென்ற மனோவியற் தேவைகள் நிறைவேற்றப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைஎமது கலாச்சாரத்தில் நாம் காணமுடியாது. பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே நெருங்கிய அன்பு உண்டு. ஆனால் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக முதியோரின் தேவைகளனைத்தும் நிறைவேற்றப்படுவதில்லை. இந்நிலைமைக்கு நாம் ஓரளவு என்றாலும் தீர்வுகாணவேண்டும். அதாவது முதியோர் மனம் கோணாதபடி அவர்களுக்கு வேண்டிய ஆதரவையும் கொடுத்து அவர்கள் தேவைகளை நிறைவேற்றவேண்டும். சமுதாயத்தில் அவர்களும் அங்கத்தவர்களே என்ற முறையில் அவர்களின் கருத்துக்களுக்குச் செவிமடுத்து அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து சந்தோஷமாக வாழவைப்பது எமது நோக்கமாக இருக்கவேண்டும். வயோதிபர் விடுதிகள் இங்கும் அபிவிருத்தியடையவேண்டும்.

எமது நாட்டின் அரசியற் பொருளாதார நிலைமைகளால் விரைவான மாற்றங்களை மறுமலர்ச்சியை நாம் எதிர்நோக்கமுடியாமல் உள்ளது. மேல் நாட்டு நாகரிகத்திலே எவ்வளவு மோகம் இருக்கின்றதோ அதேயளவுக்கு ஆக்கபூர்வமான விடயங்களிலும், வளர்ச்சிக்குரிய நடவடிக்கைகளிலும் ஆர்வங் கொண்டு அவற்றைச் செயலுருவிற் கொண்டுவர வேண்டும். மேல்நாட்டுப் பாணியிலமைந்த உடை வகைகள், அணியலங்காரங்கள், பழக்கவழக்கங்கள் என்பவற்றை நாகரிகம் என்ற போர்வையில் அப்படியே ஏற்காது எமக்கு இவை தேவைதானா? எமது பண்பாட்டுக்கு ஒத்துவருமா? அல்லது அவற்றை ஏற்பதால் எமது பண்பாட்டில் வளர்ச்சியுண்டா? எனத் தீர ஆலோசனை செய்து அவற்றைக் கடைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கவேண்டும். மேல்நாட்டார் கடைப்பிடிக்கின்றார்கள்; எனவே அவர்களைப்போல் நாமும் கடைப்பிடிப்போம் என்ற நிலையில் வாழக்கூடாது. இதுவே முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டும். மேல்நாட்டார் தமது நாட்டுக் காலநிலைக்கு ஏற்ப உடைகள், அணியலங்காரங்கள் என்பனவற்றைப் பயன்படுத்துவர். எனவே அவர்களின் நாகரிகம் தான் சிறந்தது என்று எமது நாட்டுக்காலநிலை பண்பாட்டு நிலைக்கு ஒத்துவராத நடையுடை பாவனையைக் கைக்கொள்ளக்கூடாது. குறிப்பாக மேல் நாட்டில் குளிர் மக்களை அதிகமாகப் பாதிக்கின்றது. எனவே பனிக்குளிரைத் தாங்குவதற்கு ஏற்ப பெண்களும் ஆண்களும் குழந்தைகள் யாவரும் நீளக்காற்சட்டைகள் அணியவேண்டியவராகின்றனர். அத்துடன் வாய் உதடுகளில் வெடிப்புகள்,தோல்உரிதல் போன்றவையும், குளிரின் தாக்கத்தால் ஏற்படுகின்றன. இவற்றை நீக்குவதற்கு இங்குள்ள மக்கள் உதடுகளில் ஒருவித மருந்தைத் தடவுகின்றனர். அது மற்றவர் கண்ணுக்கு அழகாக இருக்கவேண்டுமென்பதற்காக சிவப்பு நிறத்தையும் சேர்த்து அம்மருந்துப் பூச்சைப் பூசுகின்றனர். இதைப் போன்று கண்ணுக்குப் பாதுகாப்பளிக்கவே கண் மையையும், நகத்துக்கு நகப்பூச்சையும் பாவிக்கத் தொடங்கினர். இவற்றையெல்லாம் அவதானித்த கீழ்த்திசை நாடுகளில் ஒன்றான எமது நாட்டு மக்களும் அது மேல்நாட்டு நாகரிகம் எனக்கருதி அவற்றைக் கடைப்பிடிக்கத் தொடங்கினர். உண்மையில் எமது நாட்டுக் காலநிலைக்கு மேற்கூறியவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றிலும் அவசியமற்றவை. ஆனால் அதைப் பொருட்படுத்தாது மேல்நாட்டு மோகத்தில் மூழ்கியுள்ள தன்மை எமது சமுதாயத்தில் உண்டு இதனால் எமக்கு எதுவித நன்மையுமே இல்லையென்பதை எமது சமுதாயத்தினர் உணர்வதில்லை. மேலும் எமது பண்பாட்டுக் காலநிலைக்கு ஏற்றவிதத்தில் நாம் உடையணியவேண்டும். ஏன் எம்மைப்போலவே மேல்நாட்டவர்களும் எம்மைப் பார்த்து வேட்டி, சால்வை, சேலை அணியலாமே என்ற கேள்வியை நாம் எடுத்தால், இந்த உடைகள் இங்குள்ள காலநிலைக்கு ஒத்துவராதவை என்பதைச் சொல்லத் தேவையில்லை. எனவே நாம் ஏற்படுத்தவேண்டிய இடத்தில் மேல்நாட்டுப் பாணியை ஓரளவுக்குப் பின்பற்றலாமேயொழிய எமக்குப் பயனற்ற அம்சங்களை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வது கண்மூடித்தனமான செய்கையெனலாம்.

எம்மிடையே இல்லாத போற்றற்குரிய சிலபண்புகளை ஜேர்மனிய கலாச்சாரத்திடமிருந்து நாமும் பின்பற்றி அதன்வழி எம்மையும் மாற்றிக்கொள்ள வேண்டும். ஜேர்மனிய மக்களிடையே மெச்சக் கூடிய விடயமென்னவெனில் ஒருவரையொருவர் காணும்போது முதலில் வந்தனம் கூறி பின்னர் உரையாடலை ஆரம்பிப்பர். அல்லது வந்தனம்கூறி விட்டு தத்தமது வழியே சென்றுவிடுவர். என்ன வேலைகள் செய்துகொண்டிருந்தாலும் ஒருவரைக் கண்டால் உடனே வந்தனம் கூறுவர். பதிலுக்கு வந்தனம் பெற்றவரும் கூறுவர். காலை வந்தனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை வந்தனம், இரவு வந்தனம் என நேரத்தைப் பொறுத்து கூறி ஆசீர்வதிப்பர். இதைவிட நெருங்கியவர்கள், முன்பு தெரிந்தவர்கள் யாரும் சந்தித்தால் வந்தனம் கூறுவது மட்டுமன்றி சுகமாக இருக்கக் கடவுள் அருள் பாலிக்கட்டும் என்றும் சொல்லிக்கொண்டே தமது வேலையில் அல்லது தமது பயணத்தில் சென்றுவிடுவர், இவற்றைவிட என்ன பொருள் கொடுத்தாலும், ஏதும் சிறிய உதவி செய்தாலும் பதிலுக்கு நன்றிகூற மறக்கமாட்டார்கள், உதாரணமாக தபாற்காரன் தபால்கொடுத்தாற்கூட நன்றிசொல்லிவிட்டுத்தான் கடிதம் வாசிப்பர். இன்னும் நுணுகிக் கூறப்போனால் வைத்தியர் ஒரு நோயாளிக்கு ஊசி ஏற்றிப் படுக்கவைத்துச் செல்லும்போதுகூட அந்நோயாளி நன்றிடாக்டர் என்று சொல்லியபடியே தனது வேதனையை அனுபவிப்பர். இன்னும் ஒருவரைப் பார்த்து "இன்று நீங்கள் அழகாக இருக்கிறீர்கள்" என்று சொன்னால் அந்த அழகானவர் பதிலுக்கு நன்றிகூறி மற்றவரை மகிழ்விக்கும் பண்பு சிறப்பானதாயுள்ளது. இதைப் பார்க்கும்போது ஒருவரையொருவர் மதித்து ஒற்றுமையுடன் வாழ்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது. அதேமாதிரி நாமும் கடைப்பிடிக்கிறோமா என்றால் இல்லையென்பதுதான் விடையாகும் படித்த சில மட்டத்தினர், மத்தியதர வகுப்பினர் ஓரளவுக்குக் கடைப்பிடிக்கின்றார்கள். ஆனால் இது எம்முடன் ஊறிப்போனதல்ல, ஜேர்மனிய மக்களிடம் இது அவர்களையறியாமலேயே வெளிவருகின்றதெனலாம். இந்தமாதிரிப் பண்பை நாமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடித்து மற்றவர்களிடம் நேசமாகப் பழகி வந்தனம்கூறி வாழ்த்தவேண்டும். "எந்நன்றிகொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச் செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு" என்று வள்ளுவன் செய்நன்றி மறப்பவர்க்கு ஏற்படும் இறுதிநிலையை ஆணித்தரமான விளக்கத்துடன் கூறியுள்ளார். உண்மைதான் ஜேர்மனியர் செய்நன்றியின் மகோன்னதம் அறிந்துமுதலில் வாயாரப் பதில்நன்றிகூறுகின்றனர் போலும். நாமும் இத்தகைய வள்ளுவன் கூற்றை உணர்ந்து செய்நன்றி மறக்காது உதவிசெய்தவர்க்கு மனம்திருப்திப்பட நன்றிகூறும் பழக்கத்தை சிறுவயது முதல் பழகிக்கொள்ளவேண்டும். இதனால் மக்களிடையே ஒற்றுமை, சிநேக மனப்பான்மையேற்பட ஏதுவாகின்றது.

மக்களிடையே உள்ள பழக்கவழக்கந்தான் அந்நாட்டு அரசியலையும் ஓரளவு நிர்ணயிக்க உதவுகின்றதெனலாம். இதை ஜெர்மனியர் உணர்ந்திருக்கின்றனர் என எண்ணவேண்டியுள்ளது. ஜேர்மனியில் ஒருவரின் வீட்டுக்கு உறவினர், விருந்தினர் வந்தால் அவரை அவ்வீட்டிலுள்ளவர் கைகொடுத்து உபசரிப்பர். வந்தனம் கூறி அமரச்செய்வர். சிறுவர், பெரியவர், ஆண் பெண் இளையோர் என்ற பேதமின்றிக் கைகொடுத்து உபசரிப்பர். இம்முறை எம்நாட்டில் மிக அருமையாக உள்ளது. அதுவும் படித்த மட்டத்தினரிடையேயும் மத்தியதர வர்க்கத்தினரிடையேயுந்தான் உண்டு. படித்த மக்கள் எல்லோரிடமும் இப்பண்பு இருக்கின்றது எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறமுடியாது.இதற்கு எமதுகலாச்சாரம் முக்கியகாரணிஎனலாம்.அதாவது பிறிதோர் ஆடவர்கரத்தை மாதர் தீண்டுவது கற்புக்கு இழுக்கு என்ற பண்பு எம்மத்தியிலே நிலைபெற்றுள்ளதால் ஒரு ஆணின் கரத்தைப் பெண் தொட்டு உபசரிக்க விரும்புவதில்லை. மிக அருமையாக உயர்பதவி, அரசியற் பதவியிலுள்ளவர்கள் இம்முறையைக் கடைப்பிடிக்கின்றனர். ஆனல் ஜேர்மனியில் எதுவிதபேதமுமின்றி, மனதிற் சலனமின்றிக் கைகொடுத்து உபசரிக்கின்றனர். ஆணுக்குப் பெண் சமம் என்ற கொள்கையால் இதில் தவறுகள் ஏதும் காணமுடியாது. எமது சமுதாய ஒழுங்கின்படி இது முரணை செய்கையாகும். கைகொடுத்து உபசரிக்கத்தான்வேண்டுமா? உள்ளார்த்தமான அன்புடன் உபசரித்தாற் போதுமே என்ற கொள்கை எம்மிடம் நிலவுகின்றது, உண்மைதான். உபசரணை மனதளவில் அன்புடன் இருந்தாற்போதும், எமது சமுதாயத்திலுள்ள இத்தகைய பண்பு பாராட்டக் கூடியது. பிற ஆடவர் கைதீண்டாமை எமது சமுதாயத்தில் ஊறிப்போன ஒழுக்கமுடைமை. எனவே இவ்வுபசரணை விடயத்திலும் அதைக் கடைப்பிடிப்பதில் தவறு ஏதும் இல்லையெனக் கூறமுடியும்.

ஜேர்மனிய மக்களின் பழக்கவழக்கத்தில் மற்றொரு அம்சம் ஒருவரின் அழைப்பின்றி வீடுகளுக்குச் செல்லமாட்டார்கள். ஏற்கனவே அழைப்பு வந்திருந்தால் மட்டும் குறிப்பிட்ட வீடுகளுக்கு விருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினர்களாகச் செல்வர். அப்படிச் செல்லும்போது புனிதப்பொருளான பூச்செண்டுகளையே கையிற் கொண்டுசெல்வர். வேறு கையுறைகள் ஏதும் கொண்டுசெல்வதில்லை. அப்படியான பண்பாடு இல்லை. ஆனால் எமது சமுதாயத்தில் பெரும்பாலும் கிராமப் பகுதிகளில் அழைப்பின்றியே உறவினர், நண்பர் வீடுகளுக்குச் சென்று குசலம் விசாரித்து உணவருந்துவது, சிற்றுண்டிகள் உண்ணுவது வழக்கம். அழைப்பின்றியே சென்று உணவருந்திகலந்துரையாடுவது அன்பின் தீவிரத்தை வெளிப்படுத்துகின்றது. ஆனால் ஜேர்மனியர் அழைப்பின்றி உணவருந்தச் செல்லமாட்டார்கள். அழைப்பின்றிச் செல்வது நாகரிகமற்ற செய்கையெனக் கருதுகின்றனர். அத்துடன் தாங்கள் அழைம்பின்றித் தற்செயலாக ஒரு நண்டார்வீட்க்டுக்குச் சென்றால் தங்களால் அவர்களுக்கு அசெளகரியம் ஏற்படலாம் சிலவேளை அக்குறிப்பிட்ட நேரத்தில் விருந்தளிக்குக் கொடுக்கக்கூடிய உணவுவகை இல்லாதிருக்கலாம் என்ற காரணத்தினலேயே உணவருந்தமாட்டாகள். எனவே தமது வருகையை எர்பார்த்துத் தயாராக இருக்கும் சூழ்நிலையில்தான் மகிழ்வுடன் உணவருந்துவர். உணவின்போது சிறிதளவு மதுபானம் எல்லோரும் ஒருமித்து (ஆண் பெ உட்ண்பட) அருந்தியபின்னர் சாப்பிட ஆயத்தமாவர். அவர்கள் எம்மைப்போன்று கைகளாற் சாப்பிடுவதில்லை. கரண்டி, முள்ளுக்கரண்டி சிறுகத்தி என்பவற்றுடன் சாப்பிடத் தயாராவர். இதற்குப்பல காரணங்களுண்டு தண்ணீர் உடம்பில் பட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிரின் வேதனை உடலை வருத்தும். எனவே கை யால் உணவு உண்டால் தண்ணீரில் கழுவநேரிடும். அதை நீக்கும் பொருட்டுக் கரண்டி வகைகளால் உணவருந்தினால் கைகழுவ வேண்டிய அவசிய மில்லை. இரண்டாவதாக இவர்கள் உணவருந்துவ தற்கென குறிப்பிட்ட நேரம் ஒதுக்குவதில்லை. வேலைசெய்துகொண்டே சாப்பிடும் வழக்கமுடைய வர்கள். அதாவது நேரமின்மையால் வேலைசெய்து கொண்டே சாப்பிடுவர். மேலும் மற்றவர் பார்த் திருக்க உண்ணும் பழக்கம் இவர்களிடையேயுண்டு. சாப்பிடப்போகின்றோம் எனக்கூறி விருந்தினர் மறு பக்கம் இருக்கும்போதும் சாப்பிடுவர். அழைப்பு விடுத்திருந்தால்மட்டுமே அவர்களுக்கும் உணவ ளித்து ஒருமித்துச் சாப்பிடுவர். இவற்றைவிடச் சமையலுக்கென்று அதிக நேரம் ஒதுக்கமாட்டார் கள். பச்சைக் காய்கறியாகவே பெரும்பாலும் உண்பர்.

போலித்தனமான கௌரவம் ஜேர்மன் மக்க ளிடையே இல்லை. அதாவது மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற நோக்கத்தினால் தமது விருப் பங்களைப் பொசுக்குவது இவர்களுடைய பண்பு அல்ல. தமக்கு எது விருப்பமோ அதைக் கேட்டு வாங்கி உண்பர். மற்றும் உணவுவகை மேசையில் விருந்தாக அளிக்கப்பட்டால் விரும்பியமட்டும் சொந்த வீடுபோல் எடுத்து எடுத்து உண்பர். அதி கம் சாப்பிட்டால் "சாப்பாட்டு இராமன்" என நினைக்கப்போகிறார்கள் என்று எண்ணமாட்டார்கள் தமக்குத் தேவையென்றால் எடுத்துச் சாப்பிடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் எமது சமுதாயத்தில் இத்தகைய பண்பு இல்லை. அதாவது விருப்பமிருந்தும் மற்றவர்கள் தம்மைத் தவறாக நினைப்பார்கள் என்ற காரணத்தினால் நாகரிகமாக ஒன்றை இரண்டை எடுத்துவிட்டுப் போதும் போதுமென இருந்துவிடுவர். ஆனால் அவர்களுக்கு உண்மையில் பசி வயிற்றைக் கிள்ளலாம், இது வெறும் பயனற்ற போலித்தன்மை என்றே சொல்லவேண்டும். இப்பண்பை நாம் நீக்கவேண்டும்; அதாவது விருப்பம் இருக்கும் போது கேட்டுவாங்கி உண்பதில் அன்பின் உரிமை நட்பின் உரிமை மேலோங்குகின்றது. எமது பழக்க வழக்கத்தின்படி தேநீர் வேளையின்போது தேநீர் தயாரித்து வந்தவர்க்குத் தாகம் தீர்க்கின்றோம். அதுவும் விருந்தாளியைக் கேட்காமலேயே தேநீர் தயாரித்து அவர்கள் அருந்தும்படி கூற அவர்கள் அன்புடன் அருந்துகின்றனர். மேலும் நாம் தேநீர் தயாரிக்கும்போது தேயிலை அல்லது கோப்பி, சீனி என்பவற்றை ஒன்றாகக் கலந்து கொடுப்பது வழக்கம். ஆனால் ஜேர்மனிய மக்கள் யாரும் விருந்தினர் வந்தால் தேநீர் கோப்பி குடிக்கப்போகிறீர்களா? என்ன சாப்பிடப்போகிறீர்கள் என்று கேட்டு தேநீர் வேண்டுமென்று சொன்னதின்பின்னரே தேநீர் கொடுப்பர். அப்படித் தேநீர் கொடுக்கும்போது சீனி பால் என்பவற்றை ஒன்றாகக் கலக்கமாட்டார்கள். ஒரு பாத்திரத்தில் தேநீரும் சிறுகொள்கலத்தில் பாலும் தனித்தனியே கொண்டுவந்து வைப்பர். விரும்பியவர் பால் எடுக்கலாம். விடலாம். அதேபோல் விரும்பியளவுக்கு சீனியைத் தாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கலந்துகொள்ளலாம். வேண்டியளவு தேநீரைத் தாமே வார்த்து எடுத்து அருந்தக்கூடிய முறையில் அதிகமாக வைத்துவிடுவர். இம் முறையில் அர்த்தம் இருக்கின்றது. அதாவது சிலருக்குச் சீனி அதிகம் பிடிக்காமலிருக்கலாம் சிலருக்குப் பால் பிடிக்காதிருக்கலாம் என்றபடியால் இப்படியான முறையைக் கையாள்கின்றார்கள். நாம் இம்முறைப்படி தேநீர் கொடுப்பதில்லை ஆயினும் ஏதோ தேநீர் தந்துவிட்டார்கள். சீனி அதிகம் என்று சொல்லி அல்லது சீனி பற்றாது என்று சொல்லி மற்றவரைத் தொந்தரவு செய்யக் கூடாது என்ற நோக்கில் விருப்பமில்லாதிருந்தும் அருந்துவர். இத்தகை பண்பு எம்மிடையே இருப்தால் எமது முறைப்படியே தேநீரை ஒரேமுறையில் கலந்துகொடுக்கவேண்டியுள்ளது. இத்தகைய பழக்கம் எமது சமுதாயத்தைப் பொறுத்தவரையில் மாற்றம்பெறவேண்டு மென்பதல்ல· ஆனால் இரு நாட்டினதும் தேநீர் வேளை, தயாரிக்கும் தன்மை என்பவற்றை அறிந்திருப்பது நல்லது என்றமுறையில் தவிர்க்கமுடியாமல் இங்கே இது கூறப்பட்டுள்ளது, ஜேர்மனிய மக்கள் யாவரும் புதுவிருந்தாளிகளென்றால் என்ன, பக்கத்துவீட்டினரென்றால் என்ன வந்துபோகும்போது போய்வருகிறேனென்று கூறிச்செல்வர். இதே வழமை எம்மத்தியிலும் உண்டு. ஆனால் இங்கு குறிப்பிடக்கூடியதொன்றாக சிறப்பானதாயுள்ளது.

ஜேர்மன் மக்களிடையே வீட்டு வசதிகள் சிறப்பாக இருந்தபோதும் ஒரு கட்டிடத்திலேயே பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் மாடிகளைக் கட்டி பல குடும்பங்கள் வாழ்கின் றன. மற்றும் ஒருவர் வீட்டுக்கு மற்றவர் திடீரென உட்பிரவேசிக்கமாட்டார்கள், அழைப்பு மணியை அமுக்கி வீட்டுக்காரர் வந்தபின்னரே உட்செல்வர். அல்லது அவர்களுடைய இல்லத்துக்குள் பிரவே சித்துவிட்டார்களாயின் குறிப்பிட்ட நபரின் வீட்டு அறைக்கதவைத் தட்டி அவர்கள் தாங்களாகத் திறக்கமாட்டார்கள், வந்து திறக்கும்வரை காத்து நிற்பர். உள்ளிருப்போர் பதிலுக்குக்கதவு தட்டினு லேயே உட்செல்வர். பிள்ளைகள் அறையிலிருந் தாலே பெற்ரோர் கதவுதட்டி அவர்கள் திறந்தபின் னரே உட்செல்வார்கள். அதேபோல் பெற்ரோர் அறையிலிருந்தால் பிள்ளைகள் கதவு தட்டித்தான் உட்செல்வது வழமை. சகோதரர்கள் என்ருலும் இப்படியேதான் செய்வார்கள். இத்தகைய தன் மையால் மனைவி வீட்டிலிருந்தாலும் கதவு தட்டி யே கணவன் உட்செல்லும் பண்பைக் காணலாம். இவ்வாருன பழக்க வழக்கங்கள் எம்மிடையே குறைவு. திடீரென வீட்டுக்குள் பிரவேசிக்கும் பண்பு பெரும்பான்மையோரிடம் உள்ளதை அவதா னிக்கமுடியும். இந்த நிலைமை முற்ருக நீக் கப்படவேண்டியதாகும். ஆயினும் உலக வழமை தெரிந்த சிலர் நன்ருக நடந்துகொள்கின்றனர் என் பதையும் மறுக்கமுடியாது. எங்கள் நாட்டில் கண வன் மனைவி தனித்து இருக்கும் அறையைத் திடீ ரெனத் திறக்கும் வழக்கமில்லை. ஆனுல் ஜேர்மனி யில் அறையினுள்ளே யார் இருந்தாலென்ன, திடீ ரெனத் திறக்கமாட்டார்கள். மற்றும் எங்கள் நாட்டு வீட்டமைப்பு வேறு. மேலைநாட்டு வீட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை வந்தனம், இரவு வந்தனம் என நேரத்தைப் பொறுத்து கூறி ஆசீர்வதிப்பர். இதைவிட நெருங்கியவர்கள், முன்பு தெரிந்தவர்கள் யாரும் சந்தித்தால் வந்தனம் கூறுவது மட்டுமன்றி சுகமாக இருக்கக் கடவுள் அருள் பாலிக்கட்டும் என்றும் சொல்லிக்கொண்டே தமது வேலையில் அல்லது தமது பயணத்தில் சென்றுவிடுவர், இவற்றைவிட என்ன பொருள் கொடுத்தாலும், ஏதும் சிறிய உதவி செய்தாலும் பதிலுக்கு நன்றிகூற மறக்கமாட்டார்கள், உதாரணமாக தபாற்காரன் தபால்கொடுத்தாற் கூட நன்றிசொல்லிவிட்டுத்தான் கடிதம் வாசிப்பர். இன்னும் நுணுகிக் கூறப்போனல் வைத்தியர் ஒரு நோயாளிக்கு ஊசி ஏற்றிப் படுக்கவைத்துச் செல்லும்போதுகூட அந்நோயாளி நன்றிடாக்டர் என்று சொல்லியபடியே தனது வேதனையை அனுபவிப்பர். இன்னும் ஒருவரைப் பார்த்து "இன்று நீங்கள் அழகாக இருக்கிறீர்கள்" என்று சொன்னல் அந்த அழகானவர் பதிலுக்கு நன்றிகூறி மற்றவரை மகிழ்விக்கும் பண்பு சிறப்பானதாயுள்ளது. இதைப் பார்க்கும்போது ஒருவரையொருவர் மதித்து ஒற்றுமையுடன் வாழ்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது. அதேமாதிரி நாமும் கடைப்பிடிக்கிறோமா என்றால் இல்லையென்பதுதான் விடையாகும் படித்த சில மட்டத்தினர், மத்தியதர வகுப்பினர் ஓரளவுக்குக் கடைப்பிடிக்கின்றார்கள். ஆனல் இது எம்முடன் ஊறிப்போனதல்ல, ஜேர்மனிய மக்களிடம் இது அவர்களையறியாமலேயே வெளிவருகின்றதெனலாம். இந்தமாதிரிப் பண்பை நாமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடித்து மற்றவர்களிடம் நேசமாகப் பழகி வந்தனம்கூறி வாழ்த்தவேண்டும். "எந்நன்றிகொன் றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச் செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு" என்று வள்ளுவன் செய்நன்றி மறப்பவர்க்கு ஏற்படும் இறுதிநிலையை ஆணித்தர மான விளக்கத்துடன் கூறியுள்ளார். உண்மை தான் ஜேர்மனியர் செய்நன்றியின் மகோன்னதம் அறிந்துமுதலில் வாயாரப் பதில்நன்றிகூறுகின்றனர் போலும். நாமும் இத்தகைய வள்ளுவன் கூற்றை உணர்ந்து செய்நன்றி மறக்காது உதவிசெய்த வர்க்கு மனம்திருப்திப்பட நன்றிகூறும் பழக்கத்தை சிறுவயது முதல் பழகிக்கொள்ளவேண்டும். இத ஞல் மக்களிடையே ஒற்றுமை, சிநேக மனப்பான் மையேற்பட ஏதுவாகின்றது.

மக்களிடையே உள்ள பழக்கவழக்கந்தான் அந் நாட்டு அரசியலையும் ஓரளவு நிர்ணயிக்க உதவுகின் றதெனலாம். இதை ஜெர்மனியர் உணர்ந்திருக் கின்றனர் என எண்ணவேண்டியுள்ளது. ஜேர்மனி யில் ஒருவரின் வீட்டுக்கு உறவினர், விருந்தினர் வந் தால் அவரை அவ்வீட்டிலுள்ளவர் கைகொடுத்து உபசரிப்பர். வந்தனம் கூறி அமரச்செய்வர். சிறு வர், பெரியவர், ஆண் பெண் இளையோர் என்ற பேதமின்றிக் கைகொடுத்து உபசரிப்பர். இம்முறை எம்நாட்டில் மிக அருமையாக உள்ளது. அதுவும் படித்த மட்டத்தினரிடையேயும் மத்தியதர வர்க் கத்தினரிடையேயுந்தான் உண்டு. படித்த மக்கள் எல்லோரிடமும் இப்பண்பு இருக்கின்றது எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறமுடியாது. இதற்கு எமதுகலாச்சாரம் முக்கியகாரணிஎனலாம். அதாவது பிறிதோர் ஆடவர்கரத்தை மாதர் தீண்டுவது கற்புக்கு இழுக்கு என்ற பண்பு எம்மத்தியிலே நிலைபெற்றுள்ளதால் ஒரு ஆணின் கரத்தைப் பெண் தொட்டு உபசரிக்க விரும்புவதில்லை. மிக அருமையாக உயர்பதவி, அரசியற் பதவியிலுள்ளவர்கள் இம்முறையைக் கடைப்பிடிக்கின்றனர். ஆனல் ஜேர்மனியில் எதுவிதபேதமுமின்றி, மனதிற் சலனமின்றிக் கைகொடுத்து உபசரிக்கின்றனர். ஆணுக்குப் பெண் சமம் என்ற கொள்கையால் இதில் தவறுகள் ஏதும் காணமுடியாது. எமது சமுதாய ஒழுங்கின்படி இது முரணை செய்கையாகும். கைகொடுத்து உபசரிக்கத் தான்வேண்டுமா? உள்ளார்த்தமான அன்புடன் உபசரித்தாற் போதுமே என்ற கொள்கை எம்மிடம் நிலவுகின்றது, உண்மைதான். உபசரணை மனதளவில் அன்புடன் இருந்தாற்போதும், எமது சமுதாயத்திலுள்ள இத்தகைய பண்பு பாராட்டக் கூடியது. பிற ஆடவர் கைதீண்டாமை எமது சமுதாயத்தில் ஊறிப்போன ஒழுக்கமுடைமை. எனவே இவ்வுபசரணை விடயத்திலும் அதைக் கடைப்பிடிப்பதில் தவறு ஏதும் இல்லையெனக் கூறமுடியும்.

ஜேர்மனிய மக்களின் பழக்கவழக்கத்தில் மற்றொரு அம்சம் ஒருவரின் அழைப்பின்றி வீடுகளுக்குச் செல்லமாட்டார்கள். ஏற்கனவே அழைப்பு வந்திருந்தால் மட்டும் குறிப்பிட்ட வீடுகளுக்கு விருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினர்களாகச் செல்வர். அப்படிச் செல்லும்போது புனிதப்பொருளான பூச்செண்டுகளையே கையிற் கொண்டுசெல்வர். வேறு கையுறைகள் ஏதும் கொண்டுசெல்வதில்லை. அப்படியான பண்பாடு இல்லை. ஆனால் எமது சமுதாயத்தில் பெரும்பாலும் கிராமப் பகுதிகளில் அழைப்பின்றியே உறவினர், நண்பர் வீடுகளுக்குச் சென்று குசலம் விசாரித்து உணவருந்துவது, சிற்றுண்டிகள் உண்ணுவது வழக்கம். அழைப்பின்றியே சென்று உணவருந்தி கலந்துரையாடுவது அன்பின் தீவிரத்தை வெளிப்படுத்துகின்றது. ஆனால் ஜேர்மனியர் அழைப்பின்றி உணவருந்தச் செல்லமாட்டார்கள். அழைப்பின்றிச் செல்வது நாகரிகமற்ற செய்கையெனக் கருதுகின்றனர். அத்துடன் தாங்கள் அழைம்பின்றித் தற்செயலாக ஒரு நண்டர்வீட்க்டுக்குச் சென்றால் தங்களால் அவர்களுக்கு அசௌகரியம் ஏற்படலாம் சிலவேளை அக்குறிப்பிட்ட நேரத்தில் விருந்தளிக்குக் கொடுக்கக்கூடிய உணவுவகை இல்லாதிருக்கலாம் என்ற காரணத்தினாலேயே உணவருந்தமாட்டா கள். எனவே தமது வருகையை எர்பார்த்துத் தயாராக இருக்கும் சூழ்நிலையில்தான் மகிழ்வுடன் உணவருந்துவர். உணவின்போது சிறிதளவு மதுபானம் எல்லோரும் ஒருமித்து (ஆண் பெ உட்ண பட) அருந்தியபின்னர் சாப்பிட ஆயத்தமாவர். அவர்கள் எம்மைப்போன்று கைகளாற் சாப்பிடுவதில்லை. கரண்டி, முள்ளுக்கரண்டி சிறுகத்தி என்பவற்றுடன் சாப்பிடத் தயாராவர். இதற்குப்பல காரணங்களுண்டு .தண்ணீர் உடம்பில் பட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிரின் வேதனை உடலை வருத்தும். எனவே கை யால் உணவு உண்டால் தண்ணீரில் கழுவநேரிடும். அதை நீக்கும் பொருட்டுக் கரண்டி வகைகளால் உணவருந்தினுல் கைகழுவ வேண்டிய அவசிய மில்லை. இரண்டாவதாக இவர்கள் உணவருந்துவ தற்கென குறிப்பிட்ட நேரம் ஒதுக்குவதில்லை. வேலைசெய்துகொண்டே சாப்பிடும் வழக்கமுடைய வர்கள். அதாவது நேரமின்மையால் வேலைசெய்து கொண்டே சாப்பிடுவர். மேலும் மற்றவர் பார்த் திருக்க உண்ணும் பழக்கம் இவர்களிடையேயுண்டு. சாப்பிடப்போகின்றேம் எனக்கூறி விருந்தினர் மறு பக்கம் இருக்கும்போதும் சாப்பிடுவர். அழைப்பு விடுத்திருந்தால்மட்டுமே அவர்களுக்கும் உணவ ளித்து ஒருமித்துச் சாப்பிடுவர். இவற்றைவிடச் சமையலுக்கென்று அதிக நேரம் ஒதுக்கமாட்டார் கள். பச்சைக் காய்கறியாகவே பெரும்பாலும் உண்பர்.

போலித்தனமான கௌரவம் ஜேர்மன் மக்க ளிடையே இல்லை. அதாவது மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற நோக்கத்தினுல் தமது விருப் பங்களைப் பொசுக்குவது இவர்களுடைய பண்பு அல்ல. தமக்கு எது விருப்பமோ அதைக் கேட்டு வாங்கி உண்பர். மற்றும் உணவுவகை மேசையில் விருந்தாக அளிக்கப்பட்டால் விரும்பியமட்டும் சொந்த வீடுபோல் எடுத்து எடுத்து உண்பர். அதி கம் சாப்பிட்டால் "சாப்பாட்டு இராமன்" என நினைக்கப்போகிறுர்கள் என்று எண்ணமாட்டார்கள் தமக்குத் தேவையென்றுல் எடுத்துச் சாப்பிடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் எமது சமுதாயத்தில் இத்தகைய பண்பு இல்லை. அதாவது விருப்பமிருந்தும் மற்றவர்கள் தம்மைத் தவறாக நினைப்பார்கள் என்ற காரணத்தினால் நாகரிகமாக ஒன்றை இரண்டை எடுத்துவிட்டுப் போதும் போதுமென இருந்துவிடுவர். ஆனால் அவர்களுக்கு உண்மையில் பசி வயிற்றைக் கிள்ளலாம், இது வெறும் பயனற்ற போலித்தன்மை என்றே சொல்லவேண்டும். இப்பண்பை நாம் நீக்கவேண்டும்; அதாவது விருப்பம் இருக்கும் போது கேட்டுவாங்கி உண்பதில் அன்பின் உரிமை நட்பின் உரிமை மேலோங்குகின்றது. எமது பழக்க வழக்கத்தின்படி தேநீர் வேளையின்போது தேநீர் தயாரித்து வந்தவர்க்குத் தாகம் தீர்க்கின்றோம். அதுவும் விருந்தாளியைக் கேட்காமலேயே தேநீர் தயாரித்து அவர்கள் அருந்தும்படி கூற அவர்கள் அன்புடன் அருந்துகின்றனர். மேலும் நாம் தேநீர் தயாரிக்கும்போது தேயிலை அல்லது கோப்பி, சீனி என்பவற்றை ஒன்றாகக் கலந்து கொடுப்பது வழக்கம். ஆனால் ஜேர்மனிய மக்கள் யாரும் விருந்தினர் வந்தால் தேநீர் கோப்பி குடிக்கப்போகிறீர்களா? என்ன சாப்பிடப்போகிறீர்கள் என்று கேட்டு தேநீர் வேண்டுமென்று சொன்னதின்பின்னரே தேநீர் கொடுப்பர். அப்படித் தேநீர் கொடுக்கும்போது சீனி பால் என்பவற்றை ஒன்றாகக் கலக்கமாட்டார்கள். ஒரு பாத்திரத்தில் தேநீரும் சிறுகொள்கலத்தில் பாலும் தனித்தனியே கொண்டுவந்து வைப்பர். விரும்பியவர் பால் எடுக்கலாம். விடலாம். அதேபோல் விரும்பியளவுக்கு சீனியைத் தாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கலந்துகொள்ளலாம். வேண்டியளவு தேநீரைத் தாமே வார்த்து எடுத்து அருந்தக்கூடிய முறையில் அதிகமாக வைத்துவிடுவர். இம் முறையில் அர்த்தம் இருக்கின்றது. அதாவது சிலருக்குச் சீனி அதிகம் பிடிக்காமலிருக்கலாம் சிலருக்குப் பால் பிடிக்காதிருக்கலாம் என்றபடியால் இப்படியான முறையைக் கையாள்கின்றார்கள். நாம் இம்முறைப்படி தேநீர் கொடுப்பதில்லை ஆயினும் ஏதோ தேநீர் தந்துவிட்டார்கள். சீனி அதிகம் என்று சொல்லி அல்லது சீனி பற்றாது என்று சொல்லி மற்றவரைத் தொந்தரவு செய்யக் கூடாது என்ற நோக்கில் விருப்பமில்லாதிருந்தும் அருந்துவர். இத்தகை பண்பு எம்மிடையே இருப்தால் எமது முறைப்படியே தேநீரை ஒரேமுறையில் கலந்துகொடுக்கவேண்டியுள்ளது. இத்தகைய பழக்கம் எமது சமுதாயத்தைப் பொறுத்தவரையில் மாற்றம்பெறவேண்டு மென்பதல்ல' ஆனால் இரு நாட்டினதும் தேநீர் வேளை, தயாரிக்கும் தன்மை என்பவற்றை அறிந்திருப்பது நல்லது என்றமுறையில் தவிர்க்கமுடியாமல் இங்கே இது கூறப்பட்டுள்ளது. ஜேர்மனிய மக்கள் யாவரும் புதுவிருந்தாளிகளென்றால் என்ன, பக்கத்துவீட்டினரென்றால் என்ன வந்துபோகும்போது போய்வருகிறேனென்று கூறிச்செல்வர். இதே வழமை எம்மத்தியிலும் உண்டு. ஆனால் இங்கு குறிப்பிடக்கூடியதொன்றாக சிறப்பானதாயுள்ளது.

ஜேர்மன் மக்களிடையே வீட்டு வசதிகள் சிறப்பாக இருந்தபோதும் ஒரு கட்டிடத்திலேயே பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் மாடிகளைக் கட்டி பல குடும்பங்கள் வாழ்கின்றன. மற்றும் ஒருவர் வீட்டுக்கு மற்றவர் திடீரென உட்பிரவேசிக்கமாட்டார்கள், அழைப்பு மணியை அமுக்கி வீட்டுக்காரர் வந்தபின்னரே உட்செல்வர். அல்லது அவர்களுடைய இல்லத்துக்குள் பிரவேசித்துவிட்டார்களாயின் குறிப்பிட்ட நபரின் வீட்டு அறைக்கதவைத் தட்டி அவர்கள் தாங்களாகத் திறக்கமாட்டார்கள், வந்து திறக்கும்வரை காத்து நிற்பர். உள்ளிருப்போர் பதிலுக்குக்கதவு தட்டினு லேயே உட்செல்வர். பிள்ளைகள் அறையிலிருந் தாலே பெற்றோர் கதவுதட்டி அவர்கள் திறந்தபின் னரே உட்செல்வார்கள். அதேபோல் பெற்றோர் அறையிலிருந்தால் பிள்ளைகள் கதவு தட்டித்தான் உட்செல்வது வழமை. சகோதரர்கள் என்றாலும் இப்படியேதான் செய்வார்கள். இத்தகைய தன் மையால் மனைவி வீட்டிலிருந்தாலும் கதவு தட்டி யே கணவன் உட்செல்லும் பண்பைக் காணலாம். இவ்வாறான பழக்க வழக்கங்கள் எம்மிடையே குறைவு. திடீரென வீட்டுக்குள் பிரவேசிக்கும் பண்பு பெரும்பான்மையோரிடம் உள்ளதை அவதா னிக்கமுடியும். இந்த நிலைமை முற்றாக நீக் கப்படவேண்டியதாகும். ஆயினும் உலக வழமை தெரிந்த சிலர் நன்றாக நடந்துகொள்கின்றனர் என் பதையும் மறுக்கமுடியாது. எங்கள் நாட்டில் கண வன் மனைவி தனித்து இருக்கும் அறையைத் திடீ ரெனத் திறக்கும் வழக்கமில்லை. ஆனல் ஜேர்மனி யில் அறையினுள்ளே யார் இருந்தாலென்ன, திடீ ரெனத் திறக்கமாட்டார்கள். மற்றும் எங்கள் நாட்டு வீட்டமைப்பு வேறு, மேலைநாட்டு வீட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைப்பு வேறு. குளிரின் தாக்கத்தினால் இங்கு வீட்டு மண்டபக் கதவுகள், அறைக்கதவுகள் எந்நேரமும் பூட்டப்பப்பட்டேயிருக்கும். எனவே கதவைத் தட்டியேதிறக்கவேண்டிய அவசியமுண்டு.

எமதுநாட்டில் திறந்தவெளி வீடுகள் கூடுதலாக உண்டு. இங்கு கதவு இருந்தாற்றானே தட்டிச் செல்லமுடியும். இதனால் இப்பழக்கம் எம்மிமிடம் ஏற்படக் காரணமில்லையென்று முன்னோர் வாழ்வை அடிப்படையாகக்கொண்டு கூறலாம். ஆனால் இன்றைய சமூகத்தில் பொதுவாகக் கூறப் போனால் முன்னறிவித்தலாக கதவு தட்டி அல்லது அழைப்புமணி அனுமதியுடன் உட்செல்வதுதான் பெருந்தன்மையான குணமெனலாம். எனவே நாமும் இந்தப் பண்பைக் கடைப்பிடிக்கவேண்டும். வீட்டுக்காரர் வரமுன் நாம் உட்பிரவேசித்து வரவைத் தெரிவித்தால் என்னவென்று சிலர் யோசிக்கலாம். அப்படிச் செய்வதால் சில மனத்தாங்கல்கள் ஏற்பட இடமளிக்கக்கூடும். ஏற்கனவே ஒரு நபர் அவ்வீட்டிலுள்ள ஏதோ ஒரு பொருளைத் திருடிச் சென்றுவிட்டால் பின்னர் போகும் விருந்தாளியையோ நண்பரையோ களவெடுத்துவிட்டதாக வீட்டுக்காரர் தப்பாக நினைக்கக்கூடும். மற்றது தம்முடைய சொந்தத் தனிப்பட்ட உரையாடல்களில் வீட்டுக்காரர் ஈடுபட்டுக்கொண்டிருக்கலாம். அவர்களுக்குத் திடீரென ஒரு நபர் பிரவேசிப்பது இடையூறாக இருக்கலாம். எனவே முன்னறிவித்தல் கொடுத்து வீடுகளுக்குச் செல்லும் நல்ல பழக்கத்தை எல்லோரும் கைக்கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மனியைப் பொறுத்தவரையில் ஜேர்மனிய மக்களென்றால் என்ன ஏனைய வெளிநாட்டவர்களாக இருந்தாலென்ன ஒரு வதிவிடம் சொந்தப்பெயரில் கட்டாயம் இருக்கவேண்டும். அப்படி இல்லாமல் இங்கு வசிப்பதற்குக் கச்சேரி அனுமதி வழங்காது. மற்றவர்களின் வீட்டில் ஒரு நபரோ, ஒரு குடும்பமோ வசதியிருந்தோ இல்லாமலோ வீட்டுப் பதிவின்றி இருத்தல் முடியாது. அப்படி ஒருவர் உறவினருடன் கொஞ்சக்காலம் இருக்கவேண்டும் என்று விரும்பினாலும் அவருக்கும் ஏதோ ஒரு இடத்தில் பதிவுபெற்ற வதிவிடம் (Anmelding) இருத்தல் வேண்டும். இது கட்டாயம் எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டிய அம்சம் ஆகும். இவ்வம்சம் குடிசன மதிப்பு எடுப்பதற்கு உதவியாயிருப்பதோடு கச்சேரிக்கும் பொலிஸ் நிலையத்துக்கும் மக்களுக்குமிடையே ஒரு நெருங்கிய தொடர்பு முறையை ஏற்படுத்தவும் உதவுகிறது. குற்றத்தடுப்புகளுக்கும் இவ்வமைப்புமுறை உதவுகிறது.

ஜேர்மனிய மக்கள் பொருளாதாரச் செழிப்புடன் வாழும் காரணத்தினால் தமது உணவு உடை என்பவற்றிற்குப் பெருந் தொகையாகப் பணத்தைச் செலவழித்து உண்டு, உடுத்து மகிழ்வர். எதிர்காலத்தில் பிள்ளைகளுக்காகச் சேர்க்கவேண்டும் என்ற கொள்கை இல்லை. எனவே உழைப்பது, உண்பது இன்பமாக வாழ்வது இவைகள்தான் இவர்களின் இலட்சியம். இதுபற்றி முன்னைய அதிகாரங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. நமது நாட்டு மக்களின் நிலைவேறு. வறுமைப்பிணியால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடுவதுமட்டுமன்றி எதிர்காலத்தில் பிள்ளைகளுக்காக சேமிக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தமும் உண்டு. இது தவிர்க்க முடியாததாய் நடைமுறையில் இருந்துவருகின்றது. பொருளாதார வளர்ச்சி பெறாத நாட்டில் இது சாத்தியமாகாததொன்று. ஆனால் செல்வவளம் மிக்க ஜேர்மனிய நாட்டில் நிலைமை வேறாகவுள்ளது. சேமிப்புப்பற்றிய கவலையின்றி அவர்கள் வாழ்கிறார்கள். ஜேர்மனிய மக்கள் தமது பாவனைப்பொருட்களில் ஒரு வருடம் அல்லது இரண்டுவருடம் அதனாற் பயனைப் பெற்றுவிட்டுப் பின்னர் எறிந்துவிடுவர். அதாவது ஒரு விலையுயர்ந்த ஆடையை வாங்கினால் இரண்டு வருடம் அல்லது ஒரு வருடம் பாவித்துவிட்டுப் பின்னர் அதை அணியமாட்டார்கள். ஒரு வருடத்தில் அந்த ஆடையால் உச்சப்பயனைப் பெற்றுவிட்டதாகவும் சிலவேளை அதன் வடிவமைப்பு (Design) மாறிவிட்டது என்ற நிலையிலும் அவ்வாடைகளை விட்டுப் புதிய ஆடைகளை வாங்குவர். கைவிட்ட ஆடைகளை நாம் நோக்கும்போது அவை புத்தம் புதியதாகவே இருக்கும். இவர்கள் ஒவ்வொரு வருடமும் புதிய புதிய ஆடைகளை வாங்கி அணிவர். மறுவருடம் தொடங்க பழையவற்றை ஒதுக்கிவிடுவார்கள். இவ்வாறு ஒதுக்கியவற்றையெல்லாம் சேர்த்து வைத்துக் குறிப்பிட்ட ஒருநாளில் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பொதியாகக் கட்டித் தெருவீதிகளில் வைப்பர். இதற்கென்ற வாகனம் அந்நாளில் வந்து யாவற்றையும் சேகரித்து அப்புறப்படுத்தி விடும். இவற்றை இங்கு வாழும் ஏனைய வெளி நாட்டவர்கள் எடுத்து (சிலவேளைகளில்) உபயோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிப்பர். ஆடைகள் மட்டுமல்ல நான்கு ஐந்து வருடங்கள் பாவித்த மின்சாரக் கருவிகள், உதாரணமாகத் தொலைக்காட்சிப் பெட்டி, குளிர்சாதனப் பெட்டி, தானியம் அரைக்கும் யந்திரம் (Grinders) மின்சார அடுப்பு, (Hot Plate) வெப்பமூட்டும் கருவி (Heater) என்பனவும் இவ்வாறு எறியப்படுகின்றன. இவற்றுடன் சில இடங்களில் பாவித்த எல்லாப் பொருட்களையும் ஒன்றுசேர்த்து மற்றவர்களிடமும் வாங்கி ஒவ்வொரு மாதமுதல் சனிக்கிழமைகளில் கூடும் சந்தையில் விற்பனைக்கு விடுவார்கள். மிகக் குறைந்த விலைக்கே அங்கு விற்பார்கள். ஜேர்மனி நாணயப்படி 50 பெனிக், 75 பெனிக், 1 மார்க் வரை பொருட்களை இங்கு பெற்றுக்கொள்ளலாம். இப்பொருட்கள் யாவும் பார்வைக்குப் புத்தம் புதியனவாக இருக்கும். ஜேர்மனியரின் பாவனை துப்பரவானதும் அவதானமானதுமாக இருப்பதனல் பழைய பொருட்கள் யாவும் புதியனபோல் காட்சியளிக்கும்இவற்றைப் பார்க்கும்போது உயர்ந்த விலையுள்ள பொருட்களை எல்லாம் வீசுகிறுர்களேயென்று ஆச்சரியப்படவேண்டியுள்ளது. நமது நாட்டில் சிலர் உடைகளுக்கும் ஏனைய பொருட்களுக்கும் கஸ்டப்பட்டு வீடுதோறும் திரிந்து கேட்டுவாங்கும் நிலையும் உண்டு. இங்கு நல்ல உடைகளைக்கூட வீசுகிறுர்கள் எனும்போது இங்குள்ள செல்வச் செழிப்பை அளவிட்டுக்கொள்ள முடிகின்றது. ஆனல் எம்மக்கள் ஒரு பொருளை இலகுவில் வீசி எறியமாட்டார்கள். பரம்பரை பரம்பரையாகப் பாவித்துவரும் எத்தனையோ பொருட்கள் உண்டு. குறிப்பாகத் தளபாடங்களைச் சந்ததி சந்ததியாகப் பாவித்துவருகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனர். அவற்றை இறுதிவரை பயன்படுத்துவர். இதற்குக் காரணம் ஒன்று வறுமை, அடுத்தது ஏன் வீணாக்கவேண்டுமென்ற கொள்கை. இதற்கெல்லாம் அடிப்படைக்காரணி பொருளாதார நிலைமை தான் என்பதை மறுக்கமுடியாது. அத்துடன் தமது பெற்றோர் பாவித்த பொருட்களை அழிப்பது எறிவது கூடாது, அவர்களின் நினைவாக இருக்க வேண்டுமென்ற அன்பு நிமித்தமும் ஒருபக்கக் காரணியாக இருக்கலாம்.

சுத்தம் சுகம்தரும், கந்தையானாலும் கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக்குடி, சனிநீராடு, தூய்மையே ஆரோக்கியத்திற்கு வழி, என்பவையெல்லாம் சுத்தத்தின் அத்தியாவசியத்தை எமக்கு எடுத்தியம்புகின்றன. இவற்றையுணர்ந்து எமது சமுதாயத்தினர் நடக்கிறார்களாவென்றால் இல்லையென்றே சொல்லலாம். இதனால்தான் நீங்காத நோய்களால் எமது மக்கள் அவதிப்பட்டு இறக்க நேரிடுகின்றது. ஆனால் ஜேர்மனிய மக்கள் தூய்மைக்காகவே பிறந்தவர்களென்று கூறுமளவுக்குச் சுத்தமாகவே இருப்பார்கள். உணவு, உடை, ஏனைய நடவடிக்கைகள் அனைத்திற்கும் சுத்தம் ஒழுங்கு என்பவற்றை நன்கு கடைப்பிடிக்கின்றார்கள். இவர்களுடைய இல்லங்கள் எந்நேரமும் ஒரு தூசுமின்றிப் புத்தம் புதிய கட்டிடங்கள்மாதிரி இருக்கின்றன. சமையல் அறை, குளியல் அறை, மலசலகூடமென்பன 'பளிச்' சென்று கண்ணைக் கவரக் கூடியமுறையில் வசீகரமாக அமைந்திருக்கும். ஒரு சிறு கரும்புள்ளி, தூசி துணிக்கைகள் என்பவற்றைக் கூட இவர்களின் இல்லங்களிற் காண முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்காரணத்தால் வீடுகள் அழகாக இருப்பதுடன் நோய் நொடிகளினின்றும் தம்மைப் பாதுகாத்துக் கொள்கின்றார்கள். சமையல் அறையை நோக்கின் எதுவித சமையல் மணமுமின்றி, அங்குள்ள பாத்திரங்கள் விற்பனைக்கெனக் கடைகளில் உள்ள பாத்திரங்கள்போல் பளபளப்பாக இருக்கும். அத்துடன் பாத்திரங்களின் எண்ணெய்த் தன்மை, அழுக்குகளை நீக்கும் பொருட்டு விசேட அழுக்கு நீக்கிகள் இவர்களுக்கு அன்றாடம் உதவிசெய்கின்றன. மற்றும் இங்கு விறகுவைத்து நெருப்புமூட்டிச் சமையல் வேலை செய்வதில்லை. எனவே பாத்திரங்களில் கரி பிடிப்பதற்கான காரணங்கள் எதுவும் இல்லை. எனவே இவர்கள் சுத்தமாக. தூய்மையாக இருப்பதற்கு இங்குள்ள வாய்ப்புகளும் சூழ்நிலைகளும் ஓரளவுக்குக் காரணமாயுள்ளன என்பதை மறுக்கமுடியாது. இதேபோன்று மலசலகூடத்தைச் சுத்தப்படுத்தும் விசேட மருந்துவகைகளும் இங்கு உபயோகத்தில் உள்ளன. இவற்றின் உதவியுடன் தமது இல்லங்களை எந்நேரமும் சுத்தமாக வைத்திருப்பர். நாள்தோறும் தளங்களைத் துடைத்து நீரினால் கழுவி ஒருவித வாசனைத் திரவியங்களைத் தெளித்துவிடுவர் இவ்வாறாக எந்நேரமும் சுத்தம், தூய்மை என்பவற்றை நன்கு கடைப்பிடிப்பதனால் இங்கு நோய்க்கிருமிகள் அணுகுவது குறைவு. எனவே எதுவித நோய்களும் அற்று ஆரோக்கியமாக இருக்கும் நிலையைச் சுத்தம் உருவாக்குகின்றது. ஆனால் எமது நாட்டில் இத்தகைய வாய்ப்புகள் குறைவாக இருப்பதினாலும் தூய்மையைக் கடைப்பிடிக்கவேண்டுமென்ற அறிவு பெரும்பான்மையான மக்களிடத்தில் இன்மையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் சுத்தமாக இருக்கத்தவறிவிடுகின்றார்கள். தூய்மையின் மகத்துவத்தை எமது முன்னோர்கள் எடுத்துக்கூறிச் சென்றபோதும், அதை நம்மவர் கடைப்பிடிப்பதில்லை. எமது நாட்டில் சில பகுதி மக்களின் வீடுகள் நோய்க் கிருமிகளின் வாசஸ்தலமாக உள்ளன. இவற்றை அவர்கள் உணராது தமது வாழ்க்கையைக் குறுகிய காலத்தில் வாழ்ந்து முடிக்கின்றனர். அதுமட்டுமல்ல ஏனைய பகுதிகளுக்கும் நோய்கள் பரவக் காரணமாயிருக்கின்றனர். இதற்கு வறுமை மிக முக்கிய காரணி எனலாம். சுத்தமாக இருக்க யாவரும் பழகிக்கொள்ள வேண்டும். இதற்கு அரசாங்க ஒத்துழைப்பும் அவசியமாகும்.

வைத்தியசாலைகள், வீடுகள் யாவும் துப்புரவாக இருக்க வேண்டும். குப்பை கூளங்களை அப்புறப்படுத்திச் சுத்தமான காற்றைப் பெற்றுச் சுகமாக வாழ்வது சிறப்பானதாகும். நாட்டு மக்களின் சுகமான வாழ்வு நாட்டின் அபிவிருத்திக்கும் வழி வகுக்கின்றது. நோயுற்ற மக்களுக்கு என செலவு செய்யும் வைத்தியச் செலவை உணவு உற்பத்தி, கைத்தொழில் உற்பத்தி போன்ற துறைகளுக்குச் செலவிடுவதன் மூலம் பொருளாதாரத்தில் வளர்ச்சியை எதிர்நோக்க முடியும். எனவே நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதனை யுணர்ந்து, சுகதேகிகளாக இருப்பதற்குத் தூய்மையாக இருப்பது அவசியம். இப்பழக்கத்தை நாம் சிறு வயதிலேயே பழகிக்கொள்ளச் சிறுவர்களுக்குப் பாடசாலைகளில் இவற்றைப் பற்றி நன்கு போதிக்க வேண்டும். இதனால் நாம் ஒரு ஆரோக்கியமான வாழ்வை எதிர்பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார முறைகளைப் பேணுவது மட்டுமன்றித் தனக்கு விதித்துள்ள ஒழுங்கு, விதிமுறை என்பவற்றையும் மதித்து நடப்பதில் மேல்நாட்டினர் குறிப்பிடத்தக்கவர்கள். எந்த ஒரு விடயத்திலும் ஒரு ஒழுங்கை அவர்களாகவே அமைத்து அதன்படி நடந்துகொள்கின்றார்கள். மற்றவர்கள் சொல்லித்தான் செய்ய வேண்டும் என்பதில்லை. சாதாரண வாழ்க்கையிலும் ஒரு ஒழுங்கு விதிப்படி வாழ்வார்கள் கடைகள், வைத்தியசாலைகளுக்குச் சென்றால் தாம் வந்த ஒழுங்கின்படியே பொருட்கள் வாங்க, சிகிச்சை பெற எத்தனிப்பார்கள். அதாவது யார் முதலில் வந்தார்களோ அவர்களையே முன்னே நிறுத்துவர். சிலவேளை அந்நபர் அக்கண நேரம் இல்லாவிட்டால் பின்னுக்கு நிற்பவர் முந்தியடித்துச் செல்லாது, அக்குறிப்பிட்ட நபருக்காகக் காத்திருப்பர். மற்றும் வேலையாட்கள், ஊழியர்கள் கடைகளில் பொருள்கள் வாங்க நிற்கும்போது, அங்கு ஏற்கனவே நின்றவர்கள் இடம்கொடுத்து அவர்களை முன்னிறுத்திக் குறிப்பிட்ட நேரத்துக்கு அவர்கள் தமது வேலைக்குச் செல்வதற்கு உதவி செய்வார்கள் இவ்வாறு ஒரு ஒழுங்கமைப்பைத் தாமே மனச்சாட்சிக்கு ஏற்பக்கைக்கொள்வர். இதே போன்ற செய்கைகள் போற்றத்தக்கவை எனலாம். எமது நாட்டைப் பொறுத்தவரை இப்படியான தன்மை முற்றிலும் இல்லை. தாம் முதலில் விடயத்தை முடிக்கவேண்டும் என்பதற்காக முண்டியடித்து, நெரிபட்டு மற்றவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடிய முறையில் நடந்து கொள்ளும் பண்பே பெரும்பாலும் உண்டு. அத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு மேலான ஒருவர் அவர்களது நடத்தைகளையும் கூச்சல்களையும் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. மற்றவர்களும் மனிதர்களே தம்மைப் போன்றவர்கள் தான் என்று எண்ணத் தவறுதலே இவற்றுக்கெல்லாம் காரணம் எனலாம். இந்நிலை நம் நாட்டிலிருந்து நீக்கப்படவேண்டும். அதாவது நல்ல பழக்க வழக்கத்தை நாம் மேல்நாட்டினரிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டும்.

எமது நாட்டுப் பண்பாட்டின்படி பெரியோரைக் கனம் பண்ண வேண்டும், மதித்து நடக்க வேண்டும் என விதிமுறைகள் பல விதிக்கப்பட்டுள்ளன. பெற்றோர். ஆசிரியர், மத குருமார், மூத்த சகோதரர்கள், அறிஞர் ஆகியோருக்கு எழுந்து நின்று மரியாதை வழங்குவது எம்மிடம் இன்றும் உள்ள ஒரு சிறந்த பழக்கமாகும். அதாவது வயதில், அறிவில் குறைந்தவர்கள் தமக்கு மேலான நிலையில் உள்ளவர்களுக்கு இருக்கையை விட்டெழுந்து மரியாதை கொடுக்கின்றார்கள். ஆனால் மேல்நாட்டவரைப் பொறுத்தவரையில் இத்தகைய பண்பு இல்லை. அல்லது மிகவும் குறைவு என்றே கூறலாம். அவர்கள் எல்லோரும் ஒரே மனித ஜாதிதான் என்ற கொள்கையில் ஊறி, யாவரும் சமமானவர்கள் உயர்வு தாழ்வு என்பது இல்லை என்று வாழ்கின்றார்கள். ஆனால் பணிவுடைமை என்பது சிறந்த ஒரு பண்பாகும். பணிவு எதையும் சாதித்து புகழையும் தேடித்தரும். அதே நேரம் பணிந்து நடப்பவர்களை நாம் கோழைகள் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதிவிடக்கூடாது. எனவே நாம் பணிவுடன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

மேல்நாட்டினரில் இவ்வாறான எமது பண்பாட்டிற்கு ஒவ்வாத சில பழக்க வழக்கங்கள் உள்ளன. அவற்றை நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்பதல்ல. எமது பண்பாடு பழமை வாய்ந்தது. பல இடங்களில் அது நெகிழ்ச்சியற்ற தன்மையைக் கொண்டுள்ளது. அத்துடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ அவை ஏதோ ஒரு சில உண்மைத் தத்துவங்களைக் கொண்டிருக்கின்றன. ஆனால் விஞ்ஞான அறிவு வளர்ச்சி பெற்றிராத கால கட்டத்தில் வாழ்ந்த ஆன்றோர்கள் இப்படியான உண்மைத் தத்துவங்களைப் பாமரமக்களுக்கு விளக்க முடியாதவர்களாயிருந்தனர். இந்நிலையில் அவர்கள் அவற்றை விளக்க வேறு வழிகளைக் கையாண்டனர். உதாரணமாக விபூதி ஒரு தொற்றுநீக்கி. அதனைத் தொற்று நீக்கியாகப் பாவிக்கும்படி கூறினால் பலருக்குப் புரியாமல் இருந்திருக்கலாம். நடைமுறைப் படுத்துவதும் கடினமாக இருந்திருக்கலாம். எனவே விபூதி அணிவதை ஆன்றோர்கள் ஒரு சமயக் கடமையாக அன்று வலியுறுத்தினர். அதனால் தான் மக்கள் அனைவரும் அதனைப் பின்பற்றினர்கள் என்று கூறமுடியும். இங்கு சமயம் என்ற விடயம் ஒரு வகையில் மறைமுகமாக மக்களைப் பயமுறுத்தும் சாதனமாக விளங்கியிருக்கிறது. அவர்களை வழி நடத்தியிருக்கிறது. ஆனால் விஞ்ஞானம் வளர்ச்சியுற்ற இன்றைய நிலையில் பல நவீன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொற்று நீக்கிகள் பாவனையில் உள்ளபோது திருநீறு அணியவும் வேண்டுமா என்பது பகுத்தறிவுவாதிகளின் கேள்வியாகும். ஆனாலும் சைவ சமயத்தில் நம்பிக்கை கொண்ட மக்கள் தமது முக்கிய சமயக் கடமையாகக் கருதி அதனை இன்றும் அணிந்து வருகின்றனர்.

இதேபோல வேறு சில நடவடிக்கைகளும் இன்று மூடநம்பிக்கைகள் என நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றுக்கு வெவ்வேறு காரணங்கள் கூறப்பட்டிருந்தன. அப்போது அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. உதாரணமாக இரவில் ஏதாவது உணவு வகைகளைக்கொண்டு செல்லும்போது அதற்குள்ளே ஒரு கரித்துண்டைப் போடுவது பொதுவாக எம்மிடையே உள்ள ஒரு வழக்கம். அக்கரித்துண்டானது நச்சு வாயுக்களை உறிஞ்சி வைத்திருக்கும் என்பதுதான் விஞ்ஞான ரீதியான காரணம். ஆனால் எமது ஆன்றோர்கள் இதை மக்களுக்கு எப்படி விளங்க வைப்பது, சொன்னாலும் புரியாது, என்ற அடிப்படையில் சிந்தித்து இப்படிச்செய்யாவிட்டால் பேய் பிடிக்கும் பேய் எச்சிற்படுத்திவிடும் எனப் பயமுறுத்தி, ஒரு எச்சரிக்கையை விடுத்தால்தான் எல்லோரும் அதற்குப் பயந்து அந்நடவடிக்கையைக் கடைப்பிடிப்பார்கள் என்று நம்பி அவ்வாறு செய்திருக்கலாம் இதேபோன்று இரவில் குப்பை கூழங்களைக் கூட்டி வெளியே தள்ளக்கூடாது. அவ்வாறு செய்தால் மூதேவி குடிகொள்வாள், தரித்திரம் பிடிக்கும் என்பார்கள். இதுவும் ஒருவகைப் பயமுறுத்தல்தான். உண்மையை ஆராய்ந்தால் மின்சார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்குகள் இல்லாத அக்கால கட்டத்தில் வாழ்ந்த மக்களின் இல்லங்கள் மங்கலான ஒளியுடனேயே இரவில் இருந்தன. அப்போது கூட்டப்படும் குப்பைக்குள் சில வேளை ஊசிகள் ஆணிகள் என்பன இருக்கலாம் பயனுள்ள சிறிய பொருள்கள் ஏதும் குப்பையுடன் சென்றுவிடலாம். ஆனால் குப்பையைக் கூட்டி ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, மறுநாட்காலை அவற்றை வெளியேற்றும்போது அவதானமாக நடந்துகொள்ளலாம். இழப்புக்களைத் தவிர்க்கலாம். இதன் காரணமாகவே முன்னோர்கள் இரவில் குப்பை கூட்டி வெளியேற்றுவதைத் தடுத்திருக்கவேண்டும். ஆனால் மின்சார விளக்குகள் பிரகாசிக்கும் இக்கால கட்டத்திலும் இம்முறையைக் கைக்கொள்ளுவது பயனற்றதாக அமைந்து விடுகிறது.

மேலும் வீட்டுக்கு விலக்கான பெண்கள் மூன்று நாட்களுக்கு வெளியே போகக்கூடாது என்று ஒதுக்கமான இடத்திலிருக்கும் பண்பு முன்னர் தீவிரமாக எமது சமுதாயத்தில் இருந்தது. ஆனால் இன்று அவை ஓரளவுக்கு மீறப்பட்டு வருகின்றன. அறிவு வளர்ச்சி பெற்றுப்படித்த சமுதாயம் உருவாகிப் பெண்களும் வெளியுலக நடவடிக்கைகளிலீடுபட்டு வேலை செய்யும் நிலை வந்தபோது அவை மீறப்படுகின்றன. மீறத்தான் வேண்டியுள்ளது. வசதியைப் பொறுத்து இவ்விடயத்தில் மீறுவதற்கு அனுமதியளிக்கும் எமது சமுதாயம் மற்றைய பயனற்ற பாரம்பரிய நடவடிக்கைகளிலும் ஒரு திருத்தத்தை, ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லென்ன? சந்தர்ப்பம் சூழ்நிலை நெருங்கிவரும்போது ஒரு கட்டுப்பாட்டை மீறுவதை ஏற்றுக்கொள்ள லாம். ஆனால் இப்படிச் செய்வதால் பயன் எதுவும் இல்லை எனத் திட்டவட்டமாகத் தெரிந்துகொண் டும் கண்மூடித்தனமான நடவடிக்கைகளில் மாற் றத்தை ஏற்படுத்தாமல் தமக்குத்தாமே ஒரு கட் டுப்பாட்டினை ஏற்படுத்திக் கொண்டிருப்பதுதான் எமது சமுதாயக் கட்டுக்கோப்பா என்பது புரியாத புதிராக உள்ளது.

முன்னர் கூறிய விடயத்திற்கு மீண்டும் வரு வோமாயின் அக்காலத்தில் பெண்கள் தமது குடும்ப வருமானம் கருதி விவசாயம் போன்ற கடின வேலைகளில் ஈடுபட்டனர். அவர்களுக்கு மாதத்தில் மூன்று நாட்களாவது ஓய்வு தேவைப்பட்டது. குறிப் பாக மாதவிலக்குக் காலத்தில் உடலை நன்கு ஓய் வில் வைத்திருக்கவேண்டிய அவசியத்தினால் அவ் வாறு மூன்று நாட்கள் ஒதுங்கி இருந்தனர் எனக் கூறலாம். ஆனால் இன்றைய நவீன யுகத்தில் பெண் கள் பெருமளவுக்கு இலகுவான வேலைகளையே செய் வதனால் இத்தகைய ஓய்வு தேவை இல்லை என்று கூறலாம். எனவே அவர்கள் ஒதுங்கியிருக்கத் தேவையில்லை. மேலும் அக்காலத்தில் அவர்களிட முள்ள நோய்க்கிருமிகள் மாதவிலக்குக் காலத்தில் மற்றவர்கள்மீது தொற்றலாம் எனவும் நம்பப்பட் டது. அதனால் மூன்று நாட்கள் ஒதுங்கி இருந்து பிறர்கண்படாமல் புறம்பான பாத்திரங்களில் உணவு உட்கொண்டு வந்தனர். இதன் உண்மைத் தன்மை இன்று உணரப்பட்டுப் பெண்கள் அன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருடம் தொழிலில் ஈடுபடும் முன்னேற்றகரமான போக்கு மெல்ல மெல்ல வளர்ந்துவிட்டது. நவீன சாதனங்களின் உதவியுடன் கிருமிகளின் தொற்று தலைத் தவிர்க்க முடிவதும் இங்கு குறிப்பிடத்தக் கது. இதேபோன்றே பிரசவித்த பெண்ணும் அக் காலத்தில் முப்பத்தொரு நாட்கள் வீட்டுக்குள்ளே வெளியுலகத்தைக் காணுது இருந்தாள். இவையெல் லாம் இன்று மீறப்பட்டு வருகின்றன.

மற்றும் ஒருவரைப் பறி கொடுத்தவர் (இறப் பின்மூலம்) முப்பத்தொருநாட்கள் முடிந்த பின் னர்தான் கோவிலுக்குப் போகவேண்டும் என்ற வழமை உண்டு. இவர்கள் குற்றமுடையவர்களாக (துடக்கு). தீண்டப்படாதவர்களாகக் கருதப்படு கின்ருர்கள். இவர்கள் மற்றவர் வீட்டிலும் உட் பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். இவ் வாறு கோயில்களுக்கும் மற்றவருடைய வீடுகளுக் கும் அவர்களை அனுமதிக்காத காரணம் இறந்த வர் ஏதாவது கொடிய நோயால் இறந்திருக்கலாம். எனவே அவ்வீட்டிலுள்ளவர்களுடன் பழகினுல் கொடிய நோய்க்கிருமிகள் தம்மை அணுகிவிடும் என்ற பயத்தினுலாகும். முற்காலத்தில் தொற்று நோய்களைத் தடுக்கும் நவீன மருந்து வகைகளும் கிடைப்பதில்லை. எனவேதான் ஒருவரையொருவர் நோய் பாதிக்காத முறையில் துடக்கு என்று பெயரிட்டு இவ்வாறு ஒதுக்கி வைத்தனர். ஆனுல் இன்று அவ்வாறு ஒதுக்கி வைக்கத்தேவையில்லை.

மேலும் ஒருவர் இறந்தவுடன் அவ்வீட்டிற்கு வந்துஅழுதுவிட்டுப் போகும்போது "நான் போகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றேன்'' என்று சொல்லிவிட்டுப்போகும் வழக்கம் எமது சமூகத்தில் கிராமப்புறங்களில் இன்றும் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் இப்படியான கூடாத சம்பவங்கள் இனிமேல் வரக்கூடாது, இன்றுடன் போகவேண்டும் என்பதாகும். இதே போன்று திருமணம்போன்ற நல்ல காரியங்களுக்கு சென்று திரும்பும்போது ''போய் வருகிறேன்'' எனக் கூறுவதன் பொருள் தொடர்ந்தும் நல்ல காரியங்கள் நடக்கவேண்டும் என்பதாலாகும் எனக் காலம் சென்ற கவிஞர் கண்ணதாசன் விளக்கம் கொடுத்துள்ளார். இவ்வாருக பல உண்மைப் பொருள் பொதிந்து சில விதிமுறைகள் எம்மிடையே இருந்தபோதும் அவற்றின் உண்மைத் தத்துவத்தை அறிந்து அதன்படி நடப்பது தான் நல்லது. அதற்காக எல்லாவற்றிலும் உண்மைத்தன்மை உண்டு என எண்ணக்கூடாது. அப்படி நினைத்து வாழ்ந்த காலம் இப்போது மாறிக் கொண்டு வருகிறது. இனிவரும் காலகட்டத்திலும் அப்படித்தான் வாழவேண்டும் என எண்ணக்கூடாது. உதாரணமாக உடல் வளர அதற்கேற்ப நாம் உடைகளை வெவ்வேறு அளவுகளில் மாற்றி மாற்றிப் போடுவதுபோல உடல் என்ற கலாச்சாரம் மாற மாற உடையாகிய சமூகம் அதற்கேற்ப மாறவேண்டும் இல்லாவிடில் முரண்பாடுகள் ஏற்படவே செய்யும். அவை பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

மேலும் எமது சமுதாயத்தில் காரணம் புரியாத நிலையில் பல நடவடிக்கைகளை நம் முன்னோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடித்து வந்தார்கள். எனவே நாமும் அவற்றைக் கடைப்பிடித்து வரவேண்டும் என இன்றும் மக்கள் அவற்றைக் கடைப்பிடிக்கும் பண்புகள் உண்டு. உதாரணமாக ஒருவருக்கு ஒரு பாத்திரத்தில் குடிப்பதற்கு நீர் கொடுத்தால் அதை அருந்துபவர் சிறிது நீரை நிலத்தில் ஊற்றிய பிற்பாடே அருந்தும் பழக்கம் இன்றும் எமது சமுதாயத்தில் கூடுதலாகக் கிராமப்பகுதிகளில் காணப்படுகிறது. பாத்திரத்தில் நீர் இருக்கும் போது மேல் நீரில் தூசிகள் படித்திருக்கலாம் என்றும் மேல்நீரை ஊற்றினுல் அவை போய்விடும் என்பதற்காக அவ்வாறு செய்கின்றனர் என்றும் எம் முன்னேர் இதற்குக் காரணம் கூறினர். ஆனுல் அதை இன்னும் கடைப்பிடிக்கவேண்டுமென்பது அவசியமில்லை. காரணம் அறிவு வளர்ச்சிபெற்ற இன்றைய மக்கள் சுகாதாரத்தை ஓரளவுக்கு அறிந்து சுத்தமான பாத்திரங்களில் நீரை மூடிப்பாதுகாத்து வைத்திருக்கும் நிலை உண்டு. எனவே இன்றும் தூசிகள் நீரில் படியலாம் என எண்ணுவது மடமைத்தனமாகும். எனினும் இன்றும் இது ஒரு அர்த்தமற்ற செய்கையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. மற்றும் இரவில் பணம் ஒருவருக்கும் கொடுக்கக்கூடாது எனும் கொள்கையும் இன்றும் எம்மத்தியில் பெரும்பாலோரிடம் காணப்படுகின்றது. இது இன்றும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை. விஞ்ஞான அறிவு வளர்ச்சி பெற்ற இருபதாம் நூற்றுண்டில் இதுவும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனற்ற மூடக்கொள்கை என்றே சொல்ல வேண்டும். பணத்தை இரவில் கொடுத்தால் சீதேவி வீட்டைவிட்டுப் போய்விடுவாள் என்று மக்களுக்கு நம் முன்னோர் போதிக்க, அவர்களும் அதைக் கடைப்பிடித்தனர். உண்மையை நோக்கின், தனிமனித பாதுகாப்புக் குறைந்த அக்காலத்தில் கள்வர்களால் தொந்தரவு ஏற்படலாம் என்ற காரணத்தினாலும், இரவில் பணம் கொடுக்கல் வாங்கலின்போது அளவு கூடவோ குறையவோ அமைந்துவிடலாம் என்ற பயம் காரணமாகவும்தான் அக்காலத்தில் இரவில் பணம் கொடுக்கக்கூடாது என்ற கொள்கையில் முன்னோர் ஊறி வாழ்ந்தனர். இன்று இவை கடைப்பிடிக்கப்படவேண்டும் என்ற அவசியம் இல்லை. இவ்வாறான பல கண்மூடித்தனமான கட்டுக்கோப்புக்கள் இன்றும் எம்மிடையே உண்டு. அவற்றையெல்லாம் நாம் அப்படியே ஏற்காது, சூழ்நிலைக்கேற்ப ஓரளவு திருப்பத்தை ஏற்படுத்த வேண்டும். அவற்றால் நமக்கு நன்மையே விளையும்.

பொருளாதார நடவடிக்கைகளிலும் எமது மக்கள் சில மூடநம்பிக்கைகளைக் கைக்கொண்டு வருகின்றார்கள். மிகப் பழமையான மரபுரீதியான விவசாய முறைகளை அவர்கள் பின்பற்றி வருகின்றனர். ஓரளவுக்கு நவீன உபகரணங்களை, உர வகைகளை, புதிய விவசாய முறைகளைப் பின்பற்றத் தொடங்கியுள்ள போதிலும், பழைய முறைகளையும் அவர்கள் கைவிடுவதாயில்லை. துரித தொழில்நுட்ப அம்சங்களும் விவசாயத் துறையில் புகுத்தப்படவேண்டியுள்ளது. புதிய இரசாயனப் பொருட்கள், நவீன இயந்திரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், புதிய இனப் பசளை வகைகள் ஆகியனவற்றை உபயோகித்தல், ஊசிகள்மூலம் மிருகங்களைச் சினைப் படுத்தல் போன்ற அம்சங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் விளைச்சலைப் பெருக்கி நன்மையடையலாம். அதேபோல சிறு கைத்தொழில், பாரிய கைத்தொழில் போன்ற துறைகளிலும் நாம் கவனஞ் செலுத்த வேண்டும். இத்தகைய தொழில்கள் வளர்ச்சியடையும்போது படிப்படியாக எமது சமுதாயத்தின் மரபுவழிக் கலாச்சாரத்திலும் மாற்றம் ஏற்பட்டே தீரும். இன்றைய அரசாங்கத்தின் திறந்த பொருளாதாரக் கொள்கையினுல் இலங்கையின் கலாச்சார அம்சங்களில் படிப்படியான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன என்பதை மறுக்க முடியாது. இலங்கையின் கலாச்சாரத்தின் தனித்துவத்திற்கு அச்சுறுத்தலாகவும் ஒரு சில நடவடிக்கைகள் அமைந்துள்ளன. ஆனுல் வளர்ந்து வரும் நாடுகளுடன் போட்டியிட்டு பொருளாதார வளர்ச்சியினைப் பெற முயலும்போது அத்தகைய மாற்றங்களுக்கு இடங்கொடுக்க வேண்டியது அவசியமாகின்றது. தொடர்ந்தும் பழைய நம்பிக்கைகளில் ஊறி வாழவேண்டுமா என்ற கேள்வியும் எழுகின்றது

ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் பல தென்கிழக்காசிய நாடுகள் நீண்டகால கலாச்சாரப் பாரம்பரியத்தைக் கொண்டவை. ஆனுலும் இன்று அவை மேற்கத்தைய நாடுகளோடு போட்டி போட்டு வளர்ந்து கொண்டிருக்கின்றன. பொருளாதார வளர்ச்சியை இவ்வாறு பெறும்போது மேற்கத்தைய கலாச்சாரத்தின் அம்சங்களையும் தம்முடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்துக்கொண்டு இந்நாடுகள் வளர்கின்றன. இந் நாடுகளின் அன்ருட அரசியல் சமூக பொருளாதார நடவடிக்கைகள் யாவும் பெருமளவுக்கு மேற்கத் தைய பாணியிலேயே நடைபெற்று வருகின்றன. அதேவேளை மேற்கத்தைய கலாச்சாரத்தின் தாக் கத்தினுல் பல தீய விளைவுகள் சமூக ரீதியாக ஏற் படாமலுமில்லை. ஆனுலும் பொருளாதார வளர்ச்சி யுடன் ஒப்பிட்டுச் சமூக ரீதியான பாதிப்புக்களை அந்நாடுகள் பெரிதாக எடுப்பதில்லை. இலங்கையும் இன்று சிங்கப்பூரைப் போல மாறிக்கொண்டிருக் கிறது. இப்பொழுதே அதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன. இன்னும் சிறிது காலத்தில் மாற்றங்கள் பெரிதாகத் தென்படும் என்பதில் ஐயமில்லை.

மேலைநாட்டுச் சமுதாயக் கலாச்சாரத்தில் எத்தனையோ பல முன்னேற்றமான அம்சங்கள் நிறைந்திருக்கின்றன. அதேவேளை அவற்றில் குறைப்படக்கூடிய அம்சங்களும் இல்லாமல் இல்லை. மேலைநாட்டைப்போல எமது நாடு பொரு ளாதார வலுவோ அரசியல் வலுவோ இல் லாத ஒரு ஸ்திரமற்ற நிலையில் இருக்கின்றது. எனவே மேலைநாட்டைப் போன்ற பண்பாடு எம் மிடையே தோன்றவேண்டுமென்று நாம் கனவு காண முடியாது. எனினும் ஓரளவு எமக்குப் பயன் மிக்க விடயத்தில் சில பண்புகளை மேல்நாட்டவரி டமிருந்து கற்க முடியுமானுல் கற்றுக்கொள்ளவேண் டும். ஒரு நாட்டுக் கலாச்சாரத்தை அந்நாட்டு அர சியல் சமூக பொருளாதார நிலைமைகள் பெரிதும் பாதிக்கின்றன. அதாவது இவை யாவும் ஒன்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொன்று பின்னிப் பிணைந்தனவாக ஒன்றன்மீது ஒன்று தாக்கத்தை ஏற்படுத்துவனவாக விளங்கு கின்றன. எனவே அரசியல் பொருளாதார நிலைமை கள் ஸ்திரமானதாக இருக்க வேண்டும். இந்த நிலை மையை நாம் உருவாக்க வேண்டும் இவ்வாறான ஒரு சுமுகமான நிலை உருவானால் கலாச்சாரம் தானாக வளர்ச்சியடையும் எனக் கூற முடியும். ஜேர்மனியில் ஸ்திரமான அரசியல், பொருளாதார நிலைமை இருப்பதனால் மக்கள் வாழ்க்கை முறையும் முன்னேற்றகரமானதாக அமைந்துள்ளது. இத்த கைய வளர்ச்சி மட்டுமன்றி, விஞ்ஞான வளர்ச்சி, தொழில் நுணுக்கங்கள் என்பனவும் சிறப்பாக இயங் குகின்றன. இப்படியான வாழ்க்கை என்றும் ஜேர் மனியில் இருப்பதால் உலக நாடுகளில் அது முன் னணியில் நிற்கின்றது எனலாம். அதேவேளை ஜேர் மனிய கலாச்சாரம்தான் முற்றும் சிறந்தது எனக் கூற முடியாது. இருந்தும் அவர்களுடைய நடத்தை கள், பழக்கவழக்கங்கள் யாவும் அர்த்தமற்றன வாக அன்றிப் பொருளுற்பத்தி, வருமானப் பெருக் கம் என்பவற்றைச் சார்ந்தனவாக இருக்கின்றன. அர்த்தமுடையனவாகவும் உள்ளன.

இரண்டு நாடுகளினதும் கலாச்சார அம்சங்களை ஒப்பிட்டுப் பார்த்ததுடன், எமது கலாச்சாரத்தில் செய்யப்படலாம் என்று நாம் கருதுகின்ற சில மாற்றங்கள் பற்றி இக்கடைசி அத்தியாயத்தில் விவாதித்தோம். இனி இக்கட்டுரையை முடிக்கும் வகையில் தற்போதைய ஜேர்மனியின் சில அம்சங் களைப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மனியில் இன்றைய சூழ்நிலையில் அங்கிருக்கும் வெளிநாட்டவரை வெளியேற்றுவதில் ஜேர்மன் அரசாங்கம் முக்கிய கவனம் எடுக்கின்றது. முன்னைய காலகட்டங்களில் வெளிநாட்டவரின் வருகை இந் நாட்டிற்கு நன்மையைக் கொடுத்தது. ஆனால் இப் போதைய நிலையில் பெரும் நெருக்கடியைக் கொடுக்கின்றது. குறிப்பாக அங்கிருக்கும் துருக்கிய மக்களை அரசாங்கம் அதிகம் வெளியேற்றி வருகின்றது. இவ்வாறான வெளிநாட்டவரின் வெளியேற்றம் இந் நாட்டின் கைத்தொழில் நடவடிக்கைக்கும் ஏனைய நடவடிக்கைகளுக்கும் ஓரளவு பாதிப்பைக் கொடுக்கலாம் என எதிர்பார்க்கலாம். வெளிநாட்டவர்கள் இங்கு வந்து கைத்தொழிற்சாலைகளிலும், ஏனைய சேவைத் துறைகளிலும் வேலை செய்து இவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு அதிக பங்கைச் செலுத்தியவர்களாவார்கள்.

இப்போது ஜேர்மன் நாட்டில் மூன்று மில்லியன் மக்கள் வேலையின்றிக் காணப்படுகிறார்கள். இந்நாடு மேலும் புதிய தொழில்நுட்ப முறைகளைக் கைக்கொண்டு வருகிறது. இதனால் மேலும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்க வழிவகுக்கப்படுகின்றது. அதேவேளையில் இங்குள்ள இளம் சந்ததியினர் முன்னையவர்களைப்போல் முயற்சிகளில் கவனம் எடுப்பது குறைவாக இருக்கும் நிலையில் பொருளாதார வளர்ச்சியினைப் பேணி வருவதில் சிக்கல்கள் உள்ளன. இன்று இங்குள்ள மக்கள் சண்டை சச்சரவின்றி உலகம் வாழ வேண்டும்; சர்வதேச ரீதியாக அமைதி நிலவ வேண்டும் என்ற சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில்தான் இப்போது அணுகுண்டுத் தயாரிப்பு, ஏவு கணைகள் தயாரிப்பு, மற்றும் நுட்பமான போர்க் கருவிகளின் தயாரிப்பு போன்ற விடயங்களை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். இப்போது அமைதிதான் வேண்டும் என்கிறார்கள். இது ஜேர் மனியின் வரலாற்றுச் சம்பவங்களின் தாக்கம்தான் என்று கூறலாம்.

மேலும் இன்றைய இளம் ஜேர்மனியர்கள் இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கையை விரும்பு பவர்களாக மாறி வருகின்றனர். அதனை "ஹிப்பி மோகம்" என்று கூறலாம். நகரத்தில் வதியும் மக்கள் அமைதியை நாடிக் கிராமத்தை நோக்கி நகர்கின்றனர். நகரத்தில் சனசந்தடி, இயந்திரங்க ளின் இரைச்சல், தொழிற்சாலைகளின் அசுத்தமான சூழல் போன்ற காரணங்களினால் இவர்கள் கிரா மங்களை நோக்கி நகர்கின்றனர். ஜேர்மனிய மக்கள் என்றும் இயந்திரத்துடனேயே போராடிக் கொண் டிருக்கின்றனர். அதாவது அவர்களுடைய தேவை அனைத்தையும் மின்சார உபகரணங்கள், கொம்பி யூட்டர், எலக்ரோனிக் சாதனங்கள் போன்றவை நிறைவேற்றி வருவதால் மக்களுடன் மக்கள் உற வாடுவது குறைவாயுள்ளது. இத்தகைய இயந்திர மயமான வாழ்க்கையால் மனிதனுடைய மனோ நிலை பாதிக்கப்படுகின்றது எனலாம். அன்புணர்வு இதனால் குறைந்துகொண்டே போகும் என எதிர் பார்க்க வேண்டிய நிலையிலுள்ளது.

மேலும் ஜேர்மனியர்கள் விஞ்ஞான வளர்ச்சி காரணமாக அதிசயிக்கத்தக்க, வியத்தகு நடவடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளைச் செய்து வருகின்றனர். இதனால் கடவுள் நம்பிக்கை மக்களிடையே குறைந்து வருகின்றது. மேலும் இந்நம்பிக்கையின்மை வளர்ச்சியடையலாம் எனவும் அஞ்சப்படுகின்றது. அத்துடன் கைத்தொழில் வளர்ச்சியால் நிலம், நீர், காற்று என்பன மாசுபட்டு வருகின்றன. இதனை நீக்கப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றபோதும் அவை தாக்கமானதாக இருக்கும் எனக் கூற முடியாது. எனவே சூழல் மாசுபடுதல், கைத்தொழில் முன்னேற்றம், விஞ்ஞான வளர்ச்சி என்பன இங்குள்ள மக்களின் வாழ்க்கை முறையைப் பண்பாட்டைப் பெரிதும் மாற்றி யமைத்திருக்கின்றன எனலாம். மேற்குறிப்பிட்ட அம்சங்கள் எல்லாம் மேற்கு ஜேர்மனியானது வளர்ச்சியடைந்த நாடாக உலக அரங்கில் விளங்கினாலும் அங்கும் பல பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றன. மேலைத்தேயக் கலாச்சாரத்தினால் எந்தளவுக்கு ஒரு பக்கத்தில் அபிவிருத்தி, நன்மை இருக்கின்றதோ மறுபக்கத்தில் அவற்றால் சில பல தீய தாக்கங்களும் இல்லாமலில்லை என்பதை இந்த அம்சங்கள் சுட்டிக் காட்டுகின்றன. இவை எதிர்காலத்தில் நெருக்கடியான நிலையை உருவாக்கலாம் என அஞ்சப்படுகிறது. மக்களுக்கிடையேயுள்ள உறவுகள் பாதிக்கப்பட்டு இயந்திரங்களுடன் போராடி அவர்கள் வாழ்வதால் அவர்களின் மனநிலையும் இயந்திரமாக மாறுவது வரவேற்கக்கூடிய விடயம் அல்ல. ஆனால் எமது சமுதாய மக்கள் பொருளாதார அபிவிருத்தியில் குறைவான ஒரு நிலையில் இருந்தாலும் மேலே குறிப்பிட்ட தீய விளைவுகளிலிருந்து பாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கப்பட்டு இருக்கின்றார்கள். எமது நாட்டிலும் பொருளாதாரம் அபிவிருத்தி அடையும்போது அத்தகைய தீய விளைவுகளை நாமும் எதிர்நோக்க வேண்டியே இருக்கும். எனவே இங்கு ஒன்றுக்காக இன்னொன்றை விட்டுக் கொடுக்க வேண்டிய நிலையே காணப்படுகின்றது. சுருக்கமாகக் கூறினுல் பொருளாதார அபிவிருத்தியை நோக்கமாகக் கொள்ளும் போது கலாச்சாரத்தின் தனித்துவத்தை நாம் விட்டுக் கொடுக்கவேண்டி உள்ளது. ஆனுல் கலாச்சாரத்தின் தனித்துவத்தை நாம் பேண முற்படும் போது அங்கே பொருளாதார அபிவிருத்தி நோக்கத்தை விட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது. இத்தகையஒரு நிலையில் இரண்டு விடயங்களுக்குமிடையில் ஒரு சமநிலையைப் பேணக்கூடிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்தான் எதிர்கால சுபீட்சத்திற்கு வழிவகுக்கும் என்று கூறலாம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

வளர்ச்சிபெற்ற நாடான ஜேர்மனியின் கலாச்சார அம்சங்களைக் கண்ணேட்டமிடும்போது நாம் எவ்வளவு தூரம் பின்னிற்கிறேம் என்ற எண்ணமும், நமது கலாச்சரத்தின் அம்சங்களை ஓரளவுக்கு வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்ற ஒரு எண்ணமும் உருவாகின்றது. முற்று முழுதாக அப்படியே ஜேர்மனியர்களைப் போல வாழ வேண்டும் என்று நாம் இதன்மூலம் கூறவில்லை. காரணம், அவர்களது கலாச்சாரத்திலும் சர்ச்சைக் குரிய சில அம்சங்கள் இருக்கத்தான் செய்கின்றன. இருப்பினும் ஜேர்மன் கலாச்சாரத்தில் காணப்படும் அம்சங்கள் யதார்த்த ரீதியான காரணங்களையும், நல்லபண்புகளையும் கொண்டு விளங்குகின்றன. அதே நேரம் எமது கலாச்சாரத்திலும் பெருமளவுக்கு அர்த்தமுள்ள விடயங்கள் பல இருக்கின்றன என்பதையும் மறுக்க முடியாது. இந்நிலையில் ஜேர்மனியர்களது பழக்கவழக்கத்தில், பண்பாட்டில் எமது நாட்டிற்கு ஒத்துவரக்கூடியவை எவை, அவற்றிஞல் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கோ அல்லது ஏனைய துறைகளின் வளர்ச்சிக்கோ ஏதும் பயன் ஏற்படுமா என்பவற்றை ஆராய்ந்து, அத்தகைய பண்பாட்டு அம்சங்களை நாம் பின்பற்ற வேண்டும். மேலும் இதுபற்றி எமது மக்களிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாகக் கிராமிய மக்களிடையே எடுத்துக்கூறி அவர்களின் சிந்தனையைத் தட்டி எழுப்பிவிட வேண்டும். அதேவேளையில் ஆடம்பரமானதும், போலித்தனமானதுமான பழக்கவழக்கங்களினுல் பிரயோசனம் ஒன்றும் இல்லை. எனவே, அத்தகைய அம்சங்களைப் பின்பற்ருது, எமது கலாச்சாரத்துக்குக் கூடிய வகையில் ஒத்துப்போகக்கூடியதும், யதார்த்தப் பண்புகளைக் கொண்டதுமான அம்சங்களை அபிவிருத்தி நோக்குடன் கடைப்பிடித்து, ஒரு வளமான கலாச்சாரத்தை உருவாக்குவதில் ஒன்று சேர்ந்து முனைவோமாக.

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்கத் தூண்டுகின்றோம்

பொருளாதார ரீதியில் ஜேர்மனி எவ்வளவு தான் வளர்ச்சியடைந்திருந்தாலும் அங்கு வாழும் மக்களின் நடவடிக்கைகளைக் கூர்ந்து நோக்கும் போது, ஒருவருக்கொருவர் அவர்கள் காட்டுகின்ற அன்பு, இரக்க உணர்ச்சி என்பன கீழைத்தேய நாடுகளான இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் வாழும் மக்களுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது என்று கூறலாம். தாய் பிள்ளையில் வைத்திருக்கும் அன்பு, கணவன் மனைவிக்கிடையே உள்ள அன்பு, மற்றும் உறவினர்க்கு இடையேயுள்ள அன்பு என்பன கீழைத்தேய நாடுகளுடன் ஒப்பிடும்போது குறைவாகவே இருப்பதாக எமக்குத் தோற்றமளிக்கின்றது. அவர்களது நடவடிக்கைகள்மூலம் இதனை அறியக்கூடியதாக உள்ளது. ஆனல் கீழைத்தேய நாடுகளை, குறிப்பாக இலங்கை இந்தியாவைச் சேர்ந்த மக்கள் அன்புக்கு அதிகம் மதிப்புக் கொடுக்கின்றார்கள். அன்பே தெய்வம் என்கிறார்கள். நமது முன்னோர்களும் அறிஞர்களும் அன்புடமை பற்றி அதிகம் வலியுறுத்தியிருக்கிறார்கள். மக்களும் பெருமளவுக்கு அவ்வன்பு வழியிலேயே நடந்து வருகிறார்கள். மேலைத்தேயங்களிலும் அன்புடமை பற்றிய சிறந்த கருத்துக்கள் பலரால் கூறப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் மக்கள் அவற்றைக் கடைப்பிடித்து நடப்பது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. இப்படி அமைந்திருப்பதற்குக் காரணம் என்ன என்று ஆராய்வோமானல், அந்நாட்டு மக்களின் பொருளாதார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமைதான் என்ற முடிவுக்கு நாம் வரவேண்டி யுள்ளது. தத்தமது தேவைகளைத் தாமே பூர்த்தி செய்துகொள்ளும் தன்மை, மற்றவர்களை எதிர் பார்த்து, அவர்களில் தங்கி வாழும் நிலைமை இல் லாமை ஆகிய நிலைமைகளே இத்தகைய அன்புணர்வு குறைவதற்குக் காரணம்போலத் தோற்றமளிக்கின் றன இன்னொரு வகையில் கூறுவதானால் கீழைத் தேய நாடுகளில் தமது முழுத் தேவைகளையும் தாமே பூர்த்தி செய்ய முடியாமை, மற்றவர்களில் தங்கி வாழும் தன்மை என்பன அதிகளவு இருப்ப தால்தான் மக்களிடையேயான அன்புணர்வு அதிக மாக உள்ளது என்ற முடிவுக்கு நாம் வரவேண்டி யுள்ளது. ஆனால் இவ்வாறான முடிவுதான் சரி யானதா? - அதாவது பொருளாதாரந்தான் அன்பு ணர்வை நிர்ணயிக்கின்றதா? - அல்லது ஆசிய நாட்டு மக்களுடன் அன்பு என்ற அந்த உணர்வு ஒட்டிப் பிறந்ததா? உறுதியான முடிவு கூற முடி யாத ஒரு சர்ச்சைக்குரிய விடயம் இதுவாகும். எனினும் இங்கே கூறப்பட்ட இவ்விடயம் உங்களை யும் நிச்சயம் சிந்திக்கத் தூண்டியிருக்கும் என நாம் நம்புகிறோம். இதுபற்றிய உங்கள் கருத்துக் களை வரவேற்கிறோம். எழுதி அனுப்புங்கள்.

முகவரி:
**S. Packiyanathan**
Untere Hirschgasse - 3
7157, Murrhardt,
West Germany.

முகவரி:
**S. Packiyanathan**
Maniar pathy Road,
Kokuvil west, Kokuvil.
Sri Lanka (Ceylon)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Think for yourselves

Taking into consideration the life patterns and activities of the Germans, it is quite clear that even though Germany economically sound. Germans are not comparable to the people of South Asian Countries like India and Sri Lanka in respect of Love, affection and kindness they have towards each other. When compared to the Asian Countries, love and affection are laeking in the German Soiciety Affection between mother and child, love between husband and wife, affection towards the kith and kin seem to be very low.

In Asia particulary India and Sri Lanka, people give importance to love. They say that "God is Love" Learnedmen had given special importance to Love. People also had lived in that way. In western countries even though they have emphasised the importance of love, they never upheld these noble characteristics. When We analyse the reason why this has been ignored we are forced to arrive at the conclusion that the main factor is the economic stability of West Germany. The main reason. why the Germans are able to lead a detached life is that they can care for themseleves and cater to their own needs without depending on others.

On the contrary, Asians are unable to be independent because the children depend on Their parents, wives depend on their husbands. We are baffled with these question - why are the Asains unable to lead an independent life? It is because of their unsound economics or it is because love and affection play an important role in their life? We cannot find an answer - We are sure that this will make you think. You are kindly requested to send your observations to us.


ADDRESS:

**S Packiyanathan**

Untere Hirschgasse-3
7157 Murrharrdt
West Germany.

ADDRESS:

**S. Packiyanathan**

Maniarpathy Road,
Kokuvil west, Kokuvil,
Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Reference Books — In English

1. **Merit Students Encyclopaedia** (Volume-4)
   by — D. Wiliam D. Halsey (Editorlal Director)
   — Lows Shores (Senior Library Advisor)

2. **Merit Student Encyclopaedia** (Volume-8)
   by — William D. Halsey (Editorial Director)
   — Lows Shores (Senior Library Advisor)

## Reference Books — In Deutsch

1. **Mayers Staatendererde**
   by — Dr. Adolf Hanley

2. **Die Grunderjahre der Bundes Republik**
   Deutschland Zwischen 1945 und 1955
   — Hoffmann und Campe

3. **Aubstieg Ausdem Nichts**
   Deutschland, Von. 1945 Bis 1953
   Eine Soziographie in Zwei banden
   — Kurtzentner

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

எமக்குக் குருவாக இருந்து இந்நூலை எழுது வதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வழிநடத்திய வர் திரு D. நொய்மன் (Detlef Neumann) ஆவார். இவர் ஒரு சிறந்த ஆசிரியரும் ஜேர்மன் நாட்டில் முஹாட் (Murrharrdt - 7157) என்ற இடத்தைச் சேர்ந்தவருமாவார். அவருக்கு நாம் என்றும் நன்றி யுடையோம்.

மேலும் ஜேர்மனிய கலாச்சாரம் பற்றிய எமது ஆய்வில் பல பயனுள்ள கருத்துக்களை வழங்கி எமக்கு உதவிய வண. பிதா றிஜேல்ட் கன்ரர் (Rev. Fr. Reinold Ganter) என்பவருக்கும் எமது மன மார்ந்த நன்றிகள். இவரும் மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்தவராவார்.

மேலும், இந்நூலினை அச்சேற்றும் பொறுப் பினை மேற்கொண்டு உரிய காலத்தில் இந்நூல் வெளிவர உதவியாக இருந்தவர் எங்கள் நண்பன் A. சௌந்தரலிங்கம் B. A. (Hons) அவருக்கும் எமது நன்றிகள். அத்துடன் இந்நூலை நாம் எழுது வதற்கும், இது சம்பந்தமான ஆய்வுகளை மேற் கொள்வதற்கும், ஆலோசனைகளும் ஊக்கமும் வழங் கிய அத்தனை நண்பர்களுக்கும் நாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இறுதியாக இந்நூலை நல்ல முறையில் அச்சிட் டுத் தந்த யாழ்ப்பாணம், சித்திரா அச்சகத்தின் உரிமையாளர், ஊழியர்கள் ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

வணக்கம்

Untere Hirschgasse - 3,
7157, Murrhardt,
West Germany, 22-12-83.

இங்ஙனம்
ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ACKNOWLEDGEMENTS

The authors wish to express their deep sense of gratitude to Mr. Detlef Neumann who was their teacher guide and philosopher. He is a great teacher. He hails from Murrharradt 7157 in West Germany. The authors are thankful to him for the valuable advice and guidance. They are also greatly indebted to Rev. Father Reinold Ganter for having given them useful infomation and guidance about the study.

The Authors' sincere thanks are due to their good friend A. Soundaralingam B. A. (Hons.) for having undertaken the task of publication of the book.

The authors also wish to extend their grateful thanks to all their friends for their constant encouragement and valuable advice. Finally they thank most sincerely the proprietor and staff of the Chitra Press, Jaffna, Sri Lanka for having done a good job.

Authors



Untere Hirschgasse - 3.
7157, Murrhardt,
West Germany, *22-12-1983*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 14. | 8 | 1954 | 1945 |
| 15. | 18 | 3-மில்லியன் | 3-லட்சம் |
| 66. | 24 | காலை 5- மணி | காலை 7- மணி |
| 184 | 12 | ஏற்படுத்தவேண்டிய | தேவையான |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வளர்ந்தால் நாம் வளர்வோம்

எதிர்கால வளர்ச்சிக்கு ஏற்ற சிந்தனைகளைத் தொகுத்து நிகழ்கால வாழ்க்கையை நிறைவுபடுத்தும் முயற்சியாகவும், வாழ்க்கைப் பிரச்சனையை எதிர்கொள்வதற்கு வேண்டிய சாமர்த்தியத்தை, மனப்பக்குவத்தைத் தரும் ஊடகமாகவும் இந்நூலை வெளியிடுவதில் மகிழ்வடைகின்றோம்.

சு. பாக்கியநாதனும் அவரது பாரியாரும் இணைந்து எழுதிய "சிந்திக்கத் தூண்டிய ஜேர்மனிய கலாச்சாரம்" என்ற இந்நூலை எமது 2-வது வெளியீடாகத் தருவதில் பெருமையடைகின்றோம். கண்மூடித்தனமாகப் பழமைவாதத்தில் ஊறிப்போயிருக்கும் எமது தமிழ் நெஞ்சங்களுக்கு புத்துணர்வை இந்நூல் ஊட்டும் என்பது எமது நம்பிக்கை.

எனவே, எமது சமுதாயத்தில் புதிய சிந்தனைகளைத் தூவச் செய்து, புதிய உலகினைப் படைப்பதற்கு நான் வெளியீடுகள் ஒவ்வொன்றும் துணைநிற்கும் என்பதைத் துணிவோடு கூறி விடை பெறுகின்றோம்.

நான் வெளியீடு

NAAN PUBLICATIONS

அமலமரி தியாகிகள் சபை

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org